# ***Rust as a Witness*** (Tamil)

*Copyright 2009 - Tamil World Soul Winning Campaign ®*

First Impression : May 2009
Copies : 3000

Translated By : **EZS. Rajanayagam**
(Director - Ekklesia Bible College)

Assisted By : **B. Benny Martin**
(Lecturer - Ekklesia Bible College)

For Copies :

**Tamil World Soul Winning Campaign**
86-A, Dharapuram Road,
Kangayam - 638 701.
Tamilnadu. INDIA.
Ph : 04257 - 230030 Cell : 98427 30382


# துருவின் சாட்சி

# RUST AS A WITNESS




WORLD LITERATURE PUBLICATION
86-A, Dharapuram Road, KANGAYAM - 638 701. INDIA.

# Dedicated to the Gospel Pioneers



**J.C. Choate (USA)**

*Gospel to the World* through ***World Evangelism***



**E.Z. Selvanayagam (INDIA)**

*Gospel to the Tamil World* through ***Tamil World Soul Winning Campaign***

# ஆசிரியர் உரை

இந்நூலில் கொடுக்கப்பட்டிருக்கும் காணிக்கை சம்பந்தமான கருத்துக்கள் அனைத்தும் என்னுடையவைகள் அல்ல. இதிலுள்ள பெரும்பகுதி உங்களுக்குப் பரிச்சயமானதாக இருக்கலாம். ஏனென்றால், இவைகளெல்லாம் பல வருடங்களாக பல இனங்களிலிருந்து வெளிவந்த புத்தகங்கள் மற்றும் விளக்கவுரைகளைத் தொகுத்து, கவனமாகப் பொறுக்கி யெடுக்கப்பட்ட கருத்துக்களே. காணிக்கை பற்றிய இம்முக்கியமான பாடத்தை, படிப்பவர்களுக்கு மிகச் சிறந்த முறையில் போதிக்க வேண்டுமென்ற முயற்சிக்கு உதவிய கிறிஸ்தவர்களுக்கும் மற்றும் மார்க்க சம்பந்தப்பட்ட இலக்கிய ஆதாரங்களுக்கும் தாராளமாகவும், முழுமையாகவும் கொடுக்க வேண்டிய கனத்தைக் கொடுப்பதென்பது (அது எவ்வளவு விரும்பத்தக்கதாக இருந்தாலும்) இங்கே சாத்தியமில்லை.

இந்நூலை கவனமாகவும், முறையாகவும் படித்துப் பயன்படுத்துவதன் மூலம் அதிக நன்மைகள் வருமென்றும், கர்த்தருக்குக் கொடுத்தல் காரியத்தில் சாதிக்கப்பட வேண்டியது சாதிக்கப்பட முடியுமென்றும் மனதார நம்புகிறேன்.

சகோ. V.P. பிளேக்

**V.P. BLACK**
P.O. Box-35
Plateau, Alabama,
U.S.A.



# பதிப்பாசிரியர் உரை

தமிழ் பேசும் நல்லுலகமெங்கும் உள்ள எல்லா ஆத்துமாக்களுக்கும், சிலுவைக்குப் பின்னால் வாழும் நம்மை ஆவிக்குரிய ரீதியில் கட்டுப்படுத்தும், கிறிஸ்துவின் போதனைகள் அடங்கிய புதிய ஏற்பாட்டு உபதேசம் சென்றடைய வேண்டுமென்ற பெருநோக்கில் மறைந்த என் தகப்பனாரும், புதிய ஏற்பாட்டு உபதேசப் பற்றாளருமான **சகோ. E.Z. செல்வநாயகம்** அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட **"தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டத்தின்"** கீழ் பல நூல்களை வெளியிட்டிருக்கிறோம். அவைகள் அனைத்தையும் வெளியிட்டதில் நான் கண்ட மகிழ்ச்சியை விட, **துருவின் சாட்சி** என்ற இந்நூலை வெளியிடுவதில் நான் பேருவகை அடைகிறேன்.

கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசத்தில் நம்பிக்கையும், இயேசு ஆண்டவர் மத்தேயு 28:18-20 ல் கொடுத்த பிரதான கட்டளை எப்படியாகிலும் நிறைவேற்றப்பட வேண்டுமென்பதில் வாஞ்சையும், வைராக்கியமும் கொண்ட ஒவ்வொருவர் கையிலும் இருக்க வேண்டிய மாபெரும் பொக்கிஷம் இந்நூல். இந்தியாவில் உள்ள திருச்சபைகள், பல காரியங்களில் போற்றத்தக்க அளவில் செயல்பட்டாலும், "கர்த்தருக்குக் கொடுத்தல்" காரியத்தில் மிகவும் பின்தங்கி உள்ளதென்பதை நான் சொல்லித் தான் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற அவசியமில்லை.

யாக்கோபு நிருபத்தில் ஆவியானவரால் வெளிப்படுத்தப்பட்டிருக்கும், "எப்படியெனில், ஒருவன் நியாயப்பிரமாணம் முழுவதையும் கைக் கொண்டிருந்தும், ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பான்" (யாக். 2:10) என்ற வசனம் பல நேரங்களில் எனக்குப் பயத்தைக் கொடுக்கும். எல்லாவற்றையும் சிறப்பாகச் செய்து, ஒன்றிலே தவறி குற்றவாளியாகிவிட்டால், நித்தியத்தை நரகத்திலே கழிக்க வேண்டிய துர்ப்பாக்கியம் நேர்ந்து விடும் என்பதை நினைத்தாலே குலை நடுங்கும்.

யாக்கோபு ஆசிரியரைக் கொண்டு ஆவியானவர் சொல்லும், 'ஒன்றிலே தவறினால்' என்பது, இந்தியக் கிறிஸ்துவின் சபைகளைப் பொறுத்தளவில், கர்த்தருக்குக் கொடுத்தலில் நமக்குள்ள குறையை, மற்றெல்லாக் காரியங்களைக் காட்டிலும் சுட்டிக் காட்டுவதாகவே தெரிகிறது. "வரவுக்குத்தக்கதாகக் கொடுப்பதிலும்" (Iகொரி.16:2), "உற்சாகமாய்க் கொடுப்பதிலும்" (IIகொரி.9:7) நாம் வேதாகமத்தின் எதிர்பார்ப்பை இன்னும் எட்டவில்லை. சொல்லப்போனால், எட்டுவதற்கான முயற்சியே இன்னும் ஆரம்பிக்கப்படவேண்டிய அளவில் ஆரம்பிக்கப்படவில்லை. அடியேனின் இக்கருத்து ஒன்றும் மிகைப்படுத்தப்பட்ட ஒன்றல்ல என்பதை எல்லோருமே ஒத்துக் கொண்டுதானாக வேண்டும்.

உலகமெங்கும், குறைந்தபட்சம் தமிழ் பேசும் நல்லுலகம் எங்கும் இயேசுவின் பிரதான கட்டளையின்படி, கிறிஸ்துவின் நற்செய்தி அறிவிக்கப்பட்டு, கிறிஸ்துவானவர் வாக்களித்து (மத்தேயு 16:18), இரத்தம் சிந்தி சம்பாதித்த (அப்.20:28). புதிய ஏற்பாடு சொல்லும் ஒன்றான மெய்ச் சபை ஆரம்பிக்கப்பட்டு, "சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்குச் சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாக வேண்டுமென்ற" (I கொரி.9:14) கிறிஸ்துவின் கட்டளை நிறைவேற்றப்படுவதற்கும், "திக்கற்ற பிள்ளைகளும், விதவைகளும் படுகிற உபத்திரவத்தில் அவர்களைத் தாங்கி" (யாக்.1:27) நம்மை மாசில்லாத சுத்தமான பக்தியுள்ளவர்களாகக் காத்துக் கொண்டு, நம்முடைய பரலோக பாக்கியத்தைப் பிரகாசமாக்கிக் கொள்வதற்கும் இந்நூல் எல்லாவகையிலும் உதவியாயிருக்குமென்பதில் எனக்கு எள்ளளவும் சந்தேகமில்லை. இந்நூலைப் படித்து, இதன் பொருளை ஏற்று, நீங்களும் உங்களோடு சேர்ந்து பரலோகத்தின் தேவனை ஆராதிக்கும் சபையாரும் தங்கள் பக்தி வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தி, பரலோக வாசிகளாக மாற மனமார வாழ்த்துகிறேன்.

இன்னும், இந்நூலின் பயனாக இந்தியத் திருச்சபைகள் பொருளாதாரத்தில் பெருகி, பிறர் கையை எதிர்பார்க்காமல் தன்னிறைவு பெற்ற சபைகளாக மாற பாரத்தோடு ஜெபிக்கிறேன்.

பெரும் முயற்சி எடுத்து இந்நூலை வெளிக் கொணர்ந்த ஆசிரியர் சகோ. **V.P.பிளேக்** (V.P. Black) அவர்கள் மிகுந்த பாராட்டுக்குரியவர்.

இலக்கியப் பணியில் என்னை வெகுவாய் ஊக்குவித்து என் மனதில் நீங்கா இடம் பிடித்து கர்த்தருக்குள் மரித்த **சகோ. J.C. சோட்** (J.C. Choate) அவர்களின் துணைவியார் அன்புச் **சகோதரி. பெட்டி சோட்** (Betty Choate) அவர்களுக்கு நான் மிகவும் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், இந்நூல் வெளிவருவதற்கு, மொழியாக்கப் பணியில் எனக்குத் துணை நின்ற சகோ. B.பென்னி மார்ட்டின் அவர்களுக்கும், தேவையான போது உதவிகள் செய்த சகோ. J.பிக்கின்ஸ் அவர்களுக்கும், அழகாக அச்சிட்டுக் கொடுத்த "சன் ஆப்செட்" அச்சகத்தாருக்கும் என் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேவ சமாதானம் உங்களுடனிருப்பதாக ! ஆமென்.

**E.Z.S. ராஜநாயகம்**



# துருவின் சாட்சி

காணிக்கைப் பெட்டியின் உள்ளே ...


பக்க எண்

பாடம் ஒன்று
கொடுப்பது சம்பந்தமான மனப்பான்மைகள் 9

பாடம் இரண்டு
வேதாகமம் கொடுத்தலைப் பற்றிய புத்தகம் 18

பாடம் மூன்று
கொடுத்தல் ஒரு வேதாகம பாடம் 26

பாடம் நான்கு
பரலோகத்தில் பொக்கிஷங்களைச் சேர்த்து வைத்தல் 35

பாடம் ஐந்து
வசன அடிப்படையிலான கொடுத்தலுக்கு பலன் 43

பாடம் ஆறு
துருவின் சாட்சி 51

பாடம் ஏழு
தசமபாகம் பற்றிய காரியங்கள் 58

பாடம் எட்டு
உறுதி எடுத்துக் கொடுப்பதில் உங்களுக்கு நம்பிக்கையில்லையா? 66

பாடம் ஒன்பது
கொடுத்தல் திராவகப் பரிசோதனை போன்றது 74

பாடம் பத்து
மனிதன் தேவனை வஞ்சிக்கலாமா? 82

பாடம் பதினொன்று
கொடுத்தலும், வாங்குதலும் 90

பாடம் பன்னிரெண்டு
ஏழை விதவையின் காணிக்கை 98

பாடம் பதிமூன்று
ஒரு நல்ல உக்கிராணக்காரன் 105

கேள்வி பதில் பகுதி

# பாடம் – ஒன்று

# கொடுப்பது சம்பந்தமான மனப்பான்மைகள்

## Attitude Toward Giving

### தங்க வசனப்பகுதி

**உன் இருதயத்தை எல்லாக் காவலோடும் காத்துக் கொள். அதினிடத்தினின்று ஜீவ ஊற்று புறப்படும். (நீதி. 4:23)**

### நோக்கம்

ஒருவருடைய குணாதிசயம் அவருடைய மனப்பான்மையால் மதிப்பிடப் படுகிறது என்பதையும், ஒரு மனிதருடைய மனப்பான்மை அவருடைய இருதயத்தின் ஜன்னலாயிருக்கிறது என்பதையும் காட்டுவது.

### உங்கள் சிந்தனைக்கு

செல்வம் என்பது பயன்படுத்துவதற்கான ஒரு கருவி தான். மற்றபடி ஆராதிப்ப தற்கான ஒரு தெய்வம் அல்ல.

### முன்னுரை

எந்த ஒரு பாடத்தினுடைய முழு உண்மையையும் அறிய வேண்டுமென்பது ஒவ்வொருவருடைய ஆசையாக இருக்க வேண்டும். **சகோ. ஹார்டுமேன்** (N.B. HARDMAN) பல முறை இப்படியாகச் சொல்லியிருக்கிறார். " ஒருவர் எந்த ஓர் உண்மையையும் ஏற்றுக் கொள்வதென்பது, அதன் மீது அவர் கொண்டிருக்கும் மனப்பான்மையைச் சார்ந்திருக்கிறது " என்று. நம்முடைய நண்பர்களும், மற்றவர்களும் ஞானஸ்நானம், கர்த்தருடைய பந்தி, சபை, ஆராதனை போன்றவை சம்பந்தமான வேதாகமத்தின் உண்மைகளை சரியாகப் புரிந்து கொள்வதில்லை என நாம் அடிக்கடி சொல்லுகிறோம். ஏனெனில், இந்தப் பாடங்களை சரியாகப் புரிந்து கொள்வதற்கு, தேவனுடைய வார்த்தைகள் பற்றிய சரியான மனநிலையை அவர்கள் வெளிப்படுத்துவதில்லை. அதுபோலவே, எண்ணற்ற சபை அங்கத்தினர்கள் தாங்கள் கொண்டிருக்கும் தவறான மனப்பான்மையால், கர்த்தருக்குக் கொடுத்தல் பற்றி தேவன் சொல்லியிருக்கி றவைகளுக்கு தங்கள் செவிகளை அடைத்திருக்கிறார்கள். மற்ற அங்கத்தினர்களோ கர்த்தருக்குக் கொடுத்தல் பற்றி மிக மோசமான மனப்பான்மை கொண்டிருக்கிறார்கள்.

கொடுத்தல் பற்றி தேவன் சொல்லியிருக்கிறவைகளுக்கு மனிதன் தன் தவறான மனப்பான்மையால் என்ன சொல்லுகிறான் என்பதை நாம் இப்படியாகக் கேட்க முடிகிறது. " கொடுத்தல் பற்றிய பிரசங்கங்களால் நான் சலித்துப்போனேன் ", " பணத்தை தவிர அந்த பிரசங்கியாருக்கு வேறு எதுவும் பேசத் தெரியாதா? ", " மனுஷர் பார்க்க வேண்டும் என்பதற்காக அவர் கொடுக்கிறார் " என்றெல்லாம். இத்தகைய மனப்பான் மைகள் கொடுத்தல் சம்பந்தமான மனிதனுடைய எண்ணங்களையே வெளிப்படுத்து

கிறது. இந்த ஜனங்கள் கொடுத்தல் பற்றிய தங்கள் மனதின் எண்ணங்களை உண்மையாகச் சொல்லியிருந்தால் இப்படியாகச் சொல்லியிருக்கமுடியும். " நான் பணத்தை தேவைக்கு அதிகமாக செலவழிப்பதால் என்னால் கொடுக்க முடிவதில்லை ". " நான் பணத்தை முட்டாள்தனமாக செலவழிப்பதால் கொடுப்பதற்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை "; " நான் கர்த்தரை நேசிப்பதை விட ஆடம்பரங்களை அதிகமாக நேசிக்கிறேன் " " நான் சந்தோஷத்திற்காகவும், பொழுது போக்கிற்காகவும் பணத்தை வைத்துக் கொள்கிறேன் " அல்லது " இந்த உலகில் நான் விரும்பியதெல்லாம் எனக்குக் கிடைத்த பிறகு ஏதாவது மிச்சம் மீதமிருந்தால் அதில் கொஞ்சத்தை கர்த்தருக்குக் கொடுப்பேன் " என்று.

கர்த்தருக்குக் கொடுத்தல் சம்பந்தமாக, நம்முடைய சரியான மனப்பான்மையை நாம் வெளிப்படுத்துவது அவசியம். மற்ற வேதாகம பாடங்களை விட, இந்த பாடம் பற்றி பெரும்பாலான கிறிஸ்தவர்கள் தவறான மனப்பான்மை கொண்டிருப்பதால், எந்தவித சந்தேகமுமின்றி சபையின் அங்கத்தினர்கள் அநேகர் நரகத்திற்குச் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது.

ஒரு தேவ மனிதர், இப்படியாகச் சொல்லியுள்ளார். " மனப்பான்மையானது சத்தியத்தைப் போன்று முக்கியமானது ". ஏனென்றால், சத்தியமானது ஒருபோதும் தவறான மனப்பான்மையால் புரிந்து கொள்ள முடிவதில்லை. நாம் பவுலின் மனப்பான்மையை வெளிப்படுத்துகிறவர்களாய்க் காணப்பட வேண்டும். " தேவனே சத்தியபரர் என்றும், எந்த மனுஷனும் பொய்யர் என்றும் சொல்லுவோமாக ". (ரோமர். 3:4).

## I சிலர் அந்த பணக்கார வாலிபனின் மனப்பான்மையைக் கொண்டுள்ளனர்

" பின்பு அவர் புறப்பட்டு வழியிலே போகையில் ஒருவன் ஓடிவந்து, அவருக்கு முன்பாக முழங்கால்படியிட்டு, நல்ல போதகரே, நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்ளும்படி நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டான். அதற்கு இயேசு; நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவருமில்லையே. விபச்சாரஞ் செய்யாதிருப்பாயாக, கொலை செய்யாதிருப்பாயாக, பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக, வஞ்சனை செய்யாதிருப்பாயாக, உன் தகப்பனையும், உன் தாயையும் கனம் பண்ணுவாயாக என்கிற கற்பனைகளை அறிந்திருக்கிறாயே என்றான். அதற்கு அவன்: போதகரே, இவைகளையெல்லாம் என் சிறுவயது முதல் கைக்கொண்டிருக்கிறேன் என்றான். இயேசு அவனைப் பார்த்து அவனிடத்தில் அன்பு கூர்ந்து: உன்னிடத்தில் ஒரு குறைவு உண்டு. நீ போய், உனக்கு உண்டானவைகளையெல்லாம் விற்று, தரித்திரருக்குக் கொடு, அப்பொழுது பரலோகத்திலே உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்; பின்பு சிலுவையை எடுத்துக் கொண்டு, என்னைப் பின்பற்றி வா என்றார். அவன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனாயிருந்த படியால், இந்த வார்த்தையைக் கேட்டு, மனமடிந்து துக்கத்தோடே போய் விட்டான் ". (மாற். 10:17-22).

இந்த பணக்கார வாலிபன் பரலோகம் போக விரும்பினான். இவன் ஒரு நல்ல, செம்மையான, ஒழுக்கமான வாழ்க்கையை வாழ்ந்திருக்கிறான். இது போன்ற ஒரு

செம்மையான வாழ்க்கையை ஒரு சிலர் தான் வாழ்ந்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அவனுக்குக் கிறிஸ்துவைப் பின்பற்ற ஆசை இருந்திருக்கிறது. அதற்காக, அவன் எந்த ஒரு நிலைப்பாட்டுக்கும் தயாராக இருந்தான் என்பதிலும் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால், பணம் ஒரு மனிதனை குருடாக்குவதால், அந்த பணம், தான் கிறிஸ்துவைப் பின்பற்றுவதற்கு ஒரு தடையாக இருந்தது என்பதை அவன் புரிந்து கொள்ளவேயில்லை. ஒரு குடிகாரன் தன்னுடைய குடிப்பழக்கத்தை ஒத்துக் கொள்வான். ஒரு திருடன் தான் திருடியதை ஒத்துக் கொள்வான். ஆனால், தன்னுடைய பொருளாசையை ஒத்துக்கொள்கிற ஒரு மனிதனைக் கண்டுபிடித்து விடுங்கள் பார்க்கலாம்! இயேசு இந்த பணக்கார வாலிபனைப் பார்த்து, கற்பனைகளை கைக்கொள் என்று சொன்ன போது, இவைகளையெல்லாம் என் சிறுவயது முதல் கைக் கொண்டிருக்கிறேன் என்று சொன்னான். இன்னும் என்னிடத்தில் குறைவு என்ன? என்றான். அதாவது, கர்த்தாவே, நான் இன்னும் கவனிக்கத் தவறிய காரியம் ஏதேனும் உண்டோ? என்று கேட்பது போல் தெரிகிறது.

இயேசு அவனைப் பார்த்து, உனக்கு உண்டானவைகளை விற்று தரித்திரருக்குக் கொடு என்றார். இயேசு ஏன் அப்படிச் சொன்னார்? ஏனென்றால், அந்த வாலிபன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனாயிருந்தான், இந்த வார்த்தைகளைக் கேட்ட பொழுது, துக்கமடைந்தவனாய்ப் போய் விட்டான். இந்தச் சம்பவம் எவ்வளவு துக்கமானது. பணத்தின் மீது அவனுக்கிருந்த மனநிலையானது, கிறிஸ்துவுடன் கூட தனக்கு பங்கு இருப்பதைக் காட்டிலும், பணத்துடன் கூட தனக்கு பங்கு இருக்கும்படியான நிலைக்குத் தள்ளியது. எனவே பணத்தைக் குறித்தான நம்முடைய மனப்பான்மை குறித்து நாம் மிகவும் ஜாக்கிரதையுள்ளவர்களாக இருக்க வேண்டும். இயேசு அந்த வாலிபனிடம் அவனுக்கு உண்டானவைகளை விற்கச் சொன்னதன் காரணம், அந்த வாலிபனுக்கு பணத்தின் மீது இருந்த மனப்பான்மை அவனுடைய ஆத்துமாவை ஆக்கினைக்குள்ளாக்கும் அளவிற்கு இருந்ததே. சகோதரனே, இந்த பூமிக்குரிய பொருள்கள் மீது உனக்கும் இப்படிப்பட்ட தவறான மனப்பான்மை இருக்குமானால் நீங்கள் உங்கள் ஆத்துமாக்களை இழந்து போவீர்கள். எனவே, இப்படிப்பட்ட தவறான மனப்பான்மையிலிருந்து நீங்கள் விடுபட்டால் நலமாயிருக்கும். நீங்கள் உங்களுக்குண்டானவைகளை தேவனை மகிமைப்படுத்த பயன்படுத்துங்கள். தேவன் அப்பொழுது உங்களைத் தொடர்ந்து ஆசீர்வதிப்பார்.

**II சிலருக்கு யூதாசின் மனப்பான்மை இருக்கிறது**

" அப்பொழுது மரியாள் விலையேறப்பெற்ற களங்கமில்லாத நளதம் என்னும் தைலத்தில் ஒரு இராத்தல் கொண்டு வந்து, அதை இயேசுவின் பாதங்களில் பூசி, தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தாள்; அந்த வீடு முழுவதும் தைலத்தின் பரிமளத்தினால் நிறைந்தது. அப்பொழுது அவருடைய சீஷரில் ஒருவனும் அவரைக் காட்டிக் கொடுக்கப் போகிறவனுமாகிய சீமோனுடைய குமாரனுமாகிய யூதாஸ் காரியோத்து, இந்தத் தைலத்தை முந்நூறு பணத்துக்கு விற்று, தரித்திரருக்கு கொடாமல் போனதென்ன என்றான். அவன் தரித்திரரைக் குறித்து கவலைப்பட்டு இப்படிச் சொல்லாமல், அவன் திருடனானபடியினாலும், பணப் பையை வைத்துக்

கொண்டு அதிலே போடப்பட்டதைச் சுமக்கிறவனானபடியினாலும் இப்படிச் சொன்னான்" (யோவான் 12:3−6).

வெஸ்ட் காட் (West cott) என்பவருடைய வியாக்கியானப் புத்தகம், சோதனை என்பது, "இயற்கையாகவே ஒருவன் எதை அதிகமாக நேசிக்கிறானோ அதன் மூலமாகவே" வரும் என்று விளக்கம் கொடுக்கிறது. ஒரு மனிதன் பணத்தைக் கையாளு வதற்கு ஏற்றவராக இருந்தால், பணம் இந்த உலகில் உள்ள எல்லாவற்றைக் காட்டிலும் முக்கியமானதென்று கருதும் சோதனை வந்து சேரும். எவ்வித சந்தேகமுமின்றி, யூதாஸ் பணத்தை கையாளும் தாலந்தைப் பெற்றிருந்தான். இந்த காரணத்தினால் தான், சீடர்கள் பன்னிருவரில் பணப்பையை வைத்திருக்கும் பொறுப்புக்கு தெரிந்து கொள்ளப்பட்டிருக்கலாம். யூதாஸ் பணத்தின் மீது விருப்பமுடையவனாகி, திருடனாக மாறி, அதன் பின்பு பணத்திற்காக துரோகியாகவும் மாறிவிட்டான். இங்கே, ஒன்றைப் பற்றிய ஒருவனுடைய மனோபாவம், அவனை எப்படியெல்லாம் மாற்றிவிடுகிறதென்று பார்க்கிறோம்.

மரியாள் இயேசு மீது கொண்ட அளவற்ற, அபரிமிதமான அன்பின் நிமித்தமாக நளதம் என்னும் தைலத்தை இயேசுவின் பாதங்களில் பூசினாள், இத்தியாகச் செயலை யூதாஸ் வீணான ஒன்றாகப் பார்த்தான். யூதாஸ் பணத்தைக் குறித்து சீர்கேடான மனப் பான்மை கொண்டிருந்ததோடு, செய்யப்பட்ட தியாகச் செயலைக் குறித்தும் சீர்கேடான பார்வையும் கொண்டிருந்தான்.

ஒன்றைப் பற்றிய ஒரு மனிதனுடைய பார்வை, அவன் இருதயத்துக்குள் என்ன இருக்கிறதோ அதைச் சார்ந்தே இருக்கிறது. நம்முடைய பார்வையும் இருதயத்தின் நிலையைச் சார்ந்தே இருக்கும். உதாரணமாக, நமக்கு ஒருவரைப் பிடித்து விட்ட தென்றால் நம்மால் அவரிடம் எந்த குற்றத்தையும் காண முடியாது. நமக்கு ஒருவரைப் பிடிக்கவில்லையென்றால், அவருடைய அருமையான செயல்பாடுகள் குறித்துக் கூட தவறான விளக்கம் கொடுப்போம். ஒருவன் குறை காணும் மனமுடையவராயிருந்தால், பிறர் மீது மலிவான குற்றங்களைச் சுமத்துகிறவனாயிருப்பான். இங்கே யூதாஸ் ஏழை களைப் பற்றி கவலைப்படவில்லை. அவன் ஒரு திருடன். சில வேளைகளில், சபையின் பொருளாதார அலுவல் கூட்டங்களில், ஒருவர் எதற்கெடுத்தாலும் அதிகமாக செல வாகிறது என்று சொல்லி நல்ல வேலையை எதிர்த்தால், நான் யூதாசைப் பற்றி தான் நினைத்துக் கொள்வேன். நாம் இந்த பணத்தை ஒரு சிறந்த காரியத்திற்காகப் பயன் படுத்தியிருக்கலாமே என்று யாராவது ஒரு சகோதரன் அடிக்கடி சொல்வதைக் கேட்டிருக்கிறீர்களா? இப்படிக் கேட்பவரின், பணம் பற்றிய மனப்பான்மையை கவனி யுங்கள். அப்பொழுது அவர் ஏன் இவ்விதமாகப் பேசுகிறார் என்று நீங்கள் புரிந்து கொள்வீர்கள்.

### III சிலர் அனனியா, சப்பீராளுடைய மனப்பான்மை கொண்டிருக்கிறார்கள்

"அனனியா என்னும் பேருள்ள ஒருவனும், அவனுடைய மனைவியாகிய சப்பீராளும் தங்கள் காணியாட்சியை விற்றார்கள். தன் மனைவி அறிய அவன் கிரயத்திலே ஒரு பங்கை வஞ்சித்து வைத்து ஒரு பங்கைக் கொண்டுவந்து, அப்போஸ் தலருடைய பாதத்திலே வைத்தான்" (அப். 5:1−2).

இந்த இருவரும் கர்த்தருக்கு கொடுப்பதில் சொன்ன பொய் எவ்வித சந்தேகமுமின்றி பணத்தைப் பற்றி இவர்களுக்கு தவறான மனப்பான்மை இருந்ததையே நமக்கு தெளிவுபடுத்துகிறது. ஒவ்வொரு முறையும் ஒருவர் தன்னுடைய வரவுக்குத் தக்கதாக கொடுப்பது போல் ஒரு எண்ணத்தை ஏற்படுத்தி விட்டு, அதன் பின்பு உதாரத்துவமாய்க் கொடுக்க மறுத்தால், இந்த அனனியா, சப்பீராளைப் போன்று குற்றமுள்ளவர்களாகவே காணப்படுவர். கர்த்தருக்குக் கொடுக்கிற காரியத்தில் நாம் பொய் சொல்லுகிறவர்களாய் இருந்து கொண்டு அனனியா, சப்பீராள் சொன்ன பொய் மிக மோசமானது என்று ஏன் நாம் நினைக்க வேண்டும்?. ஒருவர் இப்படியாகச் சொல்கிறார், கர்த்தருக்கு கொடுப்பதில் நான் பொய் சொல்வதில்லை, ஆனால், நான் உதாரத்துவமாய்க் கொடுப்பதில்லை அவ்வளவு தான் என்று. இப்படிச் சொல்லுவது, தேவனிடத்தில் பொய் சொல்வது மோசமானதா அல்லது தேவனை வஞ்சிப்பது மோசமானதா? என்று கேட்பது போலல்லவா உள்ளது (மல்கியா 3:8).

## IV சிலருக்கு பர்னபாவின் மனப்பான்மை இருக்கிறது

" சீப்புருதீவானும் லேவியனும் அப்போஸ்தலராலே ஆறுதலின் மகன் என்று அர்த்தங்கொள்ளும் பர்னபா என்னும் மறுபேர் பெற்றவனுமாகிய யோசே என்பவன், தனக்கு உண்டாயிருந்த நிலத்தை விற்று, அதின் கிரயத்தைக் கொண்டு வந்து, அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தான்". (அப் 4:36-37).

பர்னபா நல்லவன் என்று ஏன் அழைக்கப்பட்டான் என்பதைப் புரிந்து கொள்வது கடினமானதல்ல (அப் 11:24) இவ்வகையான அல்லது இதுபோன்ற மனிதனை நாம் பின்பற்ற முயற்சிக்க வேண்டும். பர்னபாவைப் போன்று சபையில் உள்ளவர்கள் திறந்த மனதுடன் காணப்பட்டு, உதாரத்துவமாய்க் கொடுத்தால் எத்தனை நன்மையான காரியங்கள் நடந்திருக்கும் என்பதை நினைத்துப் பாருங்கள். யூதாஸ், பணக்கார வாலிபன் மற்றும் அனனியா, சப்பீராள் போன்றவர்களிடமிருந்து பர்னபா எப்படியாக வித்தியாசப்படுகிறார் என்பதை கவனியுங்கள்.

பர்னபா ஏன் இப்படிப்பட்ட நற்கிரியையை செய்தார்? ஏனெனில், அவருக்கு கொடுத்தல் பற்றி அருமையான மனப்பான்மை இருந்தது. இந்த நல்ல மனிதன், கொடுப்பது பற்றிய பிரசங்கங்களைக் கேட்டு, கேட்டு நான் அலுத்துப் போய் விட்டேன் என்று சொல்லுவார் என்பதை நீங்கள் கற்பனை செய்து பார்க்க முடியுமா?.

இந்த நல்ல மனிதனிடம், ஒரு சுவிசேஷப் பிரசங்கியார், சுவிசேஷம் கேள்விப்படாதவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க காணிக்கை கேட்டிருந்தால், இவர் கோபப்பட்டிருப்பார் என்று நினைக்கிறீர்களா? பர்னபா போன்ற நல்ல மனிதர்கள் குறித்து வாசிக்கும் போதெல்லாம் அதிகமாக கொடுக்க வேண்டும் என்கிற உறுதியான ஆசை தானாக வருகிறது. ஒவ்வொரு நேரமும் பர்னபா, கர்த்தருக்குக் கொடுத்தல் பற்றி ஒரு பிரசங்கியார் பிரசங்கிக்க கேட்டிருப்பார். அவருக்கு சரியான மனப்பான்மை இருந்தபடியால் அந்தப் பிரசங்கத்தை கேட்கும் போது பர்னபா புன்னகையுடன் அங்கே அமர்ந்திருப்பார். கர்த்தருக்குக் காணிக்கை கொடுப்பது பற்றிப் பேசும் போது, அதைக் கேட்டு உங்களுக்கு மகிழ்ச்சி வரவில்லையென்றால், உங்கள் இருதயம் இயேசுவோடு இசைவாக இல்லை என்பது திட்டமானது.

## V சிலருக்கு ஏழை விதவையின் மனப்பான்மை இருக்கிறது

இயேசு போதித்த மாபெரும் பாடங்களுள் ஒன்று மாற்கு பன்னிரெண்டாம் அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இச்சந்தர்ப்பத்தில், நாம் ஏராளமானோர் காணிக்கை போடுகிறதைக் காண்கிறோம். தங்களைப் பற்றி எப்படி ஒரு எண்ணத்தை ஏற்படுத்த சிலர் முயற்சி செய்திருப்பார்களோ தெரியவில்லை. ஏனெனில், இயேசு காணிக்கைப் பெட்டிக்கு எதிராக உட்கார்ந்து, ஜனங்கள் காணிக்கைப் பெட்டியில் பணம் போடுகிறதைப் பார்த்துக் கொண்டிருந்தார். இன்று இயேசு உங்கள் அருகில் நின்று நீங்கள் காணிக்கை போடுகிறதைப் பார்த்தால், உங்கள் காணிக்கை எப்படிப்பட்டதாயிருக்கும்? இயேசு நாம் காணிக்கைப் போடுகிற ஒவ்வொரு முறையும் நம்மை பார்த்துக் கொண்டிருக்கிறார் என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும். கர்த்தருடைய நாளன்று சபைக்கு முன்பாக நீங்கள் நடந்து சென்று எல்லோரும் பார்க்க நீங்கள் காணிக்கைப் பெட்டியில் காணிக்கை போடும்போது, நீங்கள் வெட்கப்படுவீர்களா? ஒருவரோ நான் வெட்கப்பட்டுப் போவேன் என்று சொல்கிறார். ஆனால், நீங்கள் உதாரத்துவமாய்க் கொடுத்தால் வெட்கப்பட்டுப் போவதில்லை. அந்த ஏழை விதவை தான் தியாகமாய்க் கொடுத்ததை தன்னுடைய மனதிலே அறிந்திருந்தபடியால் அவள் வெட்கப்படவில்லை. மாறாக, அவள் இன்றளவும் போற்றப்படுகிறாள்.

நாம் எல்லோரும் நம்முடைய வரவுக்குத்தக்கதாக காணிக்கை கொடுத்தால் கர்த்தருடைய சபைகளில் காணிக்கை ஒரு வருடத்திற்கு பல கோடி ரூபாய் சேரும். கடந்த வருடக் காணிக்கையை விட இந்த வருடம் காணிக்கை சில கோடி ரூபாய்க்கு மேல் இருந்தால், இந்தியாவில் உள்ள கிறிஸ்துவின் சபைகள் என்னவெல்லாம் செய்ய முடியும் என்று நினைத்துப் பாருங்கள். இந்த பணத்தைக் கொண்டு ஊழியர்களுக்கு மாதாந்திர உதவித்தொகை கொடுத்தது போக மீதமிருக்கும் லட்சக்கணக்கான ரூபாய்களை கொண்டு எல்லா முக்கியமான வானொலிகளிலும், தொலைக்காட்சிகளிலும் சுவிசேஷத்தை பிரசங்கிக்க முடியும். அநாதைப் பிள்ளைகள் மற்றும் விதவைகளைப் போஷிக்க முடியும், இந்தியக் கிறிஸ்துவின் சபைகளின் உதவிகளைக் கொண்டே வேதாகமக் கல்லூரிகளை நாம் நடத்த முடியும்.

சகோதரரே, இந்தக் காரியங்களை நம்மால் செய்ய முடியும், இவைகள் செய்யப்பட வேண்டும். சபை அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் உதாரத்துவமாய்க் கொடுக்கும் போது இதை சாதிக்க முடியும். சபை அங்கத்தினரின் காணிக்கை சராசரியாக அவர்கள் எவ்வளவு கொடுக்க வேண்டுமோ அந்த தொகைக்கு சரிபாதி கூட இன்னும் தேறவில்லை. பல்லாயிரம் கிறிஸ்துவின் சபை அங்கத்தினர்கள், இப்போது அவர்கள் கொடுக்கிற காணிக்கையை விட குறைந்தது வாரத்திற்கு இருபது ரூபாய் அதிகரித்து விட்டார்கள் என்று வைத்துக் கொள்வோம், இது ஒரு வருடத்திற்கான 52 வாரங்களில் பல கோடிகளாகப் பெருகிவிடும். ஆகையால், ஒவ்வொருவரையும் வாரத்திற்கு தங்கள் காணிக்கையில் இருபது ரூபாயாகிலும் அதிகரிக்க உற்சாகப் படுத்துவோம். நாம் நம்முடைய பணத்தைக் குறித்தும், நாம் காணிக்கை கொடுக்கும் விதத்தைக் குறித்தும் உணர்வடைந்தால் அது ஊழிய காரியங்களுக்குப் பேருதவியாக இருக்கும். ஒரு பிரசங்கியர் இப்படியாகச் சொன்னார். " நன்றாக ஆடைகள் அணிந்தி

ருக்கிற சபை அங்கத்தினர்களைப் பார்க்கும் போது ஏழைகள் எங்கே? என்று கேட்கிறேன். ஆனால் காணிக்கைப் பெட்டியை பார்க்கும் போது பணக்காரர்கள் எங்கே? என்று கேட்கிறேன் ".

ஒரு தோற்றுப் போன பிரசங்கியார் காவல்துறை வேலையில் சேர முயற்சி செய்து கொண்டிருந்தார். காவல் துறை அதிகாரி அந்த பிரசங்கியாரிடம், நேர்காணல் தேர்வு நடத்தினார், மேலும், வழக்கமான சில கேள்விகள் கேட்டு விட்டு, ஒரு கேள்வி இப்படியாகக் கேட்டார். " கலகக் கூட்டத்தை கலைக்க நீங்கள் என்ன செய்வீர்கள்? " என்று. பிரசங்கியார் ஒரு நிமிடம் யோசித்து, " எல்லோரும் பணம் கொடுங்கள் என்று வசூலில் இறங்குவேன் " என்று பதில் சொன்னார். இது எப்படியிருக்கிறது? பணம் கைவிட்டுப் போவதில் மனிதர்களுக்கிருக்கும் மனநிலைக்கு இது ஓர் உதாரணம்.

### VI தாவீதின் மனப்பான்மை

" நான் இலவசமாய் வாங்கி என் தேவனாகிய கர்த்தருக்கு சர்வாங்க தகன பலி களைச் செலுத்தாமல், அதை உன் கையிலே விலைக் கிரயமாய் வாங்குவேன் " (II சாமுவேல் 23:24).

நாம் எத்தனை முறை இலவசமாய் பெற்றுக் கொண்டவைகளை கர்த்தருக்கென்று காணிக்கையாகக் கொடுக்கிறோம்? மல்கியா தீர்க்கன் ஜனங்கள் கர்த்தருக்கு குருடான, ஊனமான, நோய்வாய்ப்பட்ட மிருகங்களை பலியாகக் கொடுத்ததை கடுமையாக கண்டிக்கிறார். அவைகளின் மேல் அதிபதி கூட பிரியமாயிருக்கமாட்டானே என்று சாடுகிறார். அப்படிப்பட்ட குருடான, ஊனமான பலிகள் அன்றும் தேவனால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை இன்றும், என்றும் ஏற்றுக்கொள்ளப்படாது.

நாம் எல்லோரும் சேர்ந்து நம்முடைய காணிக்கை பற்றி இப்படிச் சொல்லுவோமாக. " நான் இலவசமாக வாங்கி, என் தேவனாகிய கர்த்தருக்குச் செலுத்தமாட்டேன் " என்று. தாவீது கொடுத்தலைப் பற்றி சரியான மனநிலை உடையவராக இருந்தார். நாமும் அப்படி இருப்போம். நம்மிடத்தில் மிச்ச மீதமுள்ளவைகளை நாம் கர்த்தருக்குக் கொடுத்து, ஒரு போதும் குற்றவாளிகளாக வேண்டாம். மக்கெதோனியர்களின் உதாரணத்தைப் படித்து அதை உங்கள் வாழ்க்கையில் கடைப்பிடியுங்கள். II கொரி 2:8–ல் மக்கெதோனிய மக்கள் கொடிய தரித்திரத்தில் இருந்தாலும் உதாரத்துவமாய் கர்த்தருக்குக் கொடுத்தார்கள் என்று பார்க்கிறோம்.

புதிய ஏற்பாட்டு கர்த்தருக்குக் காணிக்கை கொடுத்தல் உபதேசம், தேவ திட்டத்தின்படியாகவும், தேவனுடைய எதிர்பார்ப்பின்படி யாகவும் மாற நீங்கள் உதவி செய்வீர்களா?

### கேள்விகள்

1. இப்பாடத் தலைப்பு என்ன?
2. தங்க வசனப்பகுதி எது?

3. இந்தப் பாடத்தின் நோக்கம் என்ன?

4. உங்கள் சிந்தனைக்கான கருத்து என்ன?

முன்னுரை

1. ஒவ்வொருவருடைய ஆசை எதுவாக இருக்க வேண்டும்?

2. சகோ. ஹார்டுமேன் என்ன சொன்னார்? இதை விவரி.

3. நம்முடைய நண்பர்களிடத்தில் ஞானஸ்நானம் பற்றி நாம் அடிக்கடி என்ன சொல்லுகிறோம்?

4. எந்த காரியத்திற்கு அநேக சபை அங்கத்தினர்கள் தங்கள் கண்களை மூடிக் கொண்டனர்?

5. நாம் அடிக்கடி கேள்விப்படும் குறிப்புகள் என்ன?

6. இந்தக் குறிப்புகள் எதை அடையாளப்படுத்துகின்றன?

7. எது அவசியமானது?

8. எந்த வித்தில் மனநிலையானது சத்தியத்தைப் போன்று முக்கியமானது?

பணக்கார வாலிபனின் மனப்பான்மை

1. மாற்கு 10:17–22 வசனங்களை வாசித்து விவாதி?

2. அந்த வாலிபன் பரலோகம் போக விரும்பினானா?

3. அவன் மனதிற்குள் நுழையாத காரியம் என்ன?

4. மனிதன் பொருளாசையை ஒத்துக் கொள்கிறானா?

5. இந்த மனிதன் எதைப் போன்று இருக்கிறான்?

6. இயேசு அவனிடம் அவனுக்கு உண்டானவற்றையெல்லாம் விற்க ஏன் சொன்னார்?

7. அந்த மனிதன் என்ன செய்தான்? ஏன்?

8. இந்த பூமிக்குரிய ஐசுவரியங்களிலிருந்து யார் விடுபட அல்லது விலகி ஓட வேண்டும்?

9. நாம் நம்முடைய பணத்தை எப்படியாக பயன்படுத்த வேண்டும்?

யூதாஸின் மனப்பான்மை

1. யோவான் 12:3–6 வசனங்களை வாசித்து விவாதியுங்கள்?

2. "வெஸ்ட் காட்" என்ன சொல்கிறார்?

3. யூதாஸ் பணப்பையை வைத்திருப்பவனாக தெரிந்தெடுக்கப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் யாவை?

4. யூதாஸின் சீர்கேடான மனநிலையை விளக்குக?

5. ஜனங்களின் விருப்பு, வெறுப்புகள் யாவை?

6. நற்கிரியைகளை அங்கீகரிக்கும் சகோதரர் பற்றி எழுதுக?

### அனனியா மற்றும் சப்பீராளின் மனப்பான்மை

1. அப் 5 :1–2 வசனங்களை வாசித்து விவாதி?
2. இவர்கள் இருவரும் ஏன் பொய் சொன்னார்கள்?
3. இன்று ஒருவர் அனனியா, சப்பீராள் போல எப்போது குற்றவாளியாகிறார்?
4. நம்முடைய வரவுக்குத்தக்கதாக நாம் கர்த்தருக்குக் கொடுக்க மறுத்தால் அவர்களைப் போலவே நாமும் குற்றவாளிகளாயிருக்கிறோமா?
5. பொய் சொல்வது மோசமான பாவமா? திருடுவது மோசமான பாவமா?
6. மல்கியா 3:8–10 வசனங்களை விவாதி?

### பர்னபாவின் மனப்பான்மை

1. அப். 4: 36–37 வசனங்களை வாசித்து விவாதி?
2. பர்னபா எவ்வாறு அழைக்கப்பட்டான்?
3. யூதாஸிடமிருந்து பர்னபாவை வித்தியாசப்படுத்திக் காட்டுக?
4. பர்னபா ஏன் இதைச் செய்தான்?
5. கொடுத்தல் குறித்த பாடத்தைக் கேட்டபோது பர்னபா கோபப்பட்டார் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?
6. கொடுத்தல் பற்றிய செய்தியைக் கேட்டதினாலோ, கொடுப்பதினாலோ சந்தோஷத்தைப் பெறாத மனிதனின் நிலை என்ன?

### ஏழை விதவையின் மனப்பான்மை

1. மாற்கு 12: 41–42 வசனங்களை வாசித்து விவாதி?
2. இயேசு எங்கே அமர்ந்திருந்தார்? ஏன்?
3. நாம் கொடுப்பதை இயேசு பார்க்கிறாரா?
4. கொடுப்பதில் யார் வெட்கப்படுத்தப்படுவர்?
5. ஒவ்வொருவரும் உதாரத்துவமாய்க் கொடுத்தால் சகோதரத்துவத்தை எவ்வளவு அதிகரிக்கும்?
6. இந்த பணத்தை நாம் எப்படி பயன்படுத்த முடியும் என்பதை விவாதி?
7. ஒரு பிரசங்கியார் தன்னுடைய சபையைப் பற்றி என்ன சொன்னார்?
8. இந்த கலகங்களை நாம் எப்படி கலைக்க முடியும்?

### தாவீதின் மனப்பான்மை

1. II சாமுவேல் 24:24–ஐ வாசித்து விவாதி?
2. நாம் எதினால் அடிக்கடி குற்றவாளிகள் ஆகிறோம்?
3. மல்கியா தீர்க்கன் எப்படி ஜனங்களை கடிந்து கொண்டார்?
4. ஜனங்கள் எவைகளை தேவனுக்கு பலியாகச் செலுத்தினார்கள்?

# பாடம் – இரண்டு

# வேதாகமம் கொடுத்தலைப் பற்றிய புத்தகம்

## The Bible, a Book on Giving

### தங்க வசனப்பகுதி

**" பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தை விட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக்குத்திக் கொண்டிருக்கிறார்கள் " (I தீமோ. 6:10).**

### நோக்கம்

பரிசுத்த வேதாகமம், விசுவாசம், மனந்திரும்புதல், அறிக்கை செய்தல் ஞானஸ்நானம், கர்த்தரின் பந்தி மற்றும் சபை ஆளுகை அமைப்பு பற்றி பேசுவதைக் காட்டிலும் அதிகமாக கர்த்தருக்குக் கொடுத்தல் பற்றி பேசுகிறது என்ற உண்மையை ஏற்றுக் கொள்ளச் செய்வது.

### உங்கள் சிந்தனைக்கு

நாம் எதை கொடுத்தோமோ, அதை நாம் பெற்றிருக்கிறோம்; நாம் எதை செலவழித்தோமோ, அதை நாம் பெற்றிருந்தோம்; எது நம்மிடம் மீந்திருக்கிறதோ அதை நாம் இழந்துவிட்டோம்;

### முன்னுரை

மத்தேயு நற்செய்தி நூலில், கொடுத்தல் பற்றி முப்பத்தி மூன்று முறை குறிப்பிடப்பட்டிருக்கிறது. மாற்கு நூலில், கர்த்தருக்குக் கொடுத்தல் பற்றி இருபது முறையும், லூக்கா நூலில், ஐம்பத்து மூன்று முறையும், யோவான் நூலில் கொடுத்தல் பதினேழு முறையும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. கொடுத்தல் பற்றி திரும்ப திரும்ப விவாதிக்கப்படாத நூல் புதிய ஏற்பாட்டில் எதுவும் இல்லை. ஓர் அதிகாரம் கொண்ட நான்கு புத்தகங்களிலும் கூட கொடுத்தல் பற்றி சொல்லப்பட்டுள்ளது. அந்த நூல்கள் பிலேமோன், 2 யோவான், 3 யோவான், மற்றும் யூதா ஆகியவை. பரிசுத்த வேதாகமம் வேறு எந்த ஒரு காரியத்தைக் காட்டிலும் கர்த்தருக்குக் கொடுத்தல் பற்றி அதிகமாகப் பேசுகிறது.

சில வருடங்களுக்கு முன்பு வரை, மற்ற எந்த பாடத்தையும் விட, கர்த்தருக்குக் கொடுத்தல் பாடம் குறித்து நாம் குறைவாகவே பிரசங்கம் செய்திருக்கிறோம். பதிப்பாசிரியனாகிய எனக்குத் தெரிந்தவரை, நமது தமிழ் மொழியில், கர்த்தருக்குக் கொடுத்தலின் அவசியம் மற்றும் ஆசீர்வாதம் பற்றி உருப்படியாக எந்த ஒரு புத்தகமும் வெளிவரவில்லை.

நாம் கடந்த ஐம்பது ஆண்டுகளாக ஞானஸ்நானம் பற்றி பேசுகிறது போல காணிக்கைப் பற்றி அதிகமாக பேசியிருந்தால் பொருளாதாரத்தில் இந்தியத் திருச் சபைகள் தன்னிறைவடைந்து, பிறரிடம் இன்னும் கையேந்தும் நிலை மாறி இந்தியா வின், ஏன் உலகின் மற்ற பகுதிகளுக்கும் சுவிசேஷத்தை எடுத்துச் சென்றிருக்கலாம், ஒவ்வொரு மாநிலத்திலும் கிறிஸ்துவக் கல்லூரிகளை நாமாகவே அமைத்திருக்கலாம். நம்மிடம் உண்மை சத்தியம் இருக்கிறது, நம்முடைய பணத்தையும், பலத்தையும் சத்தியத்தை எடுத்துச் செல்ல நாம் பயன்படுத்துவதில்லை. இப்போதாகிலும் இந்த உணர்வுக்கு நாம் வந்து கொண்டிருப்பதற்காக தேவனுக்கு நன்றி.

I காயீனும், ஆபேலும்

சிலநாள் சென்ற பின்பு காயீன் நிலத்தின் கனியை கர்த்தருக்குக் காணிக்கை யாகக் கொண்டு வந்தான். ஆபேலும் தன் மந்தையின் தலையீற்றுகளிலும் அவைகளில் கொழுமையானவைகளிலும் சிலவற்றைக் கொண்டு வந்தான். காயீனையும், அவன் காணிக்கையையும் அவர் அங்கீகரிக்கவில்லை. அப்பொழுது காயீனுக்கு மிகவும் எரிச்சல் உண்டாகி, அவன் முகநாடி வேறுபட்டது (ஆதி 4:3–5).

சகோ. ஆடம் கிளார்க் (Adam Clark) அவர்கள், ஆபேல் நன்றி பலியையும் அத்தோடு கூட மந்தையின் தலையீற்றுகளையும் கொண்டு வந்தான். இதனால், ஆபேல் தன்னை ஒரு பாவியாக ஒத்துக் கொண்டான் என்றும், வாக்குத்தத்தம் செய்யப்பட்ட மேசியாவினிடத்தில் தனக்கு இருந்த நம்பிக்கையை வெளிப்படையாக அறிவித்தான் என்றும் கூறுகிறார். இது குறித்துதான் அப்போஸ்தலர் இப்படியாகச் சொன்னது போல் தெரிகிறது. " விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மை யான பலியை தேவனுக்குச் செலுத்தினான். அதினாலே அவன் நீதிமானென்று சாட்சி பெற்றான். அவனுடைய காணிக்கைகளைக் குறித்து தேவனே சாட்சி கொடுத்தார்; அவன் மரித்தும் இன்னும் பேசுகிறான் " (எபி. 11 :4).

விசுவாசத்தினாலே ஆபேல் சிறப்பான அல்லது ஒரு பெரிய பலியைச் செலுத்தினான் என்பது, ஆபேல் தன்னுடைய நன்றி பலியோடு கூட தன்னுடைய பாவங் களுக்காக அடிக்கப்பட ஒரு பலி கடாவையும் கொண்டு வந்தது போல் தான் தெரிகிறது. ஏனென்றால், உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியை அடை யாளப்படுத்துவதற்காக அவன் மந்தையின் தலையீற்றை தெரிந்து கொண்டான். ஆபேலின் காணிக்கையைக் குறித்து " தேவனே சாட்சி கொடுத்தார் என்பது ", ஆபேல் ஒன்றிற்கு மேலாக ஏதோ ஒன்றைக் கொண்டு வந்தான் என்பதையே காட்டுகிறது. இது உண்மையானால், காயீன் போதுமான அளவு கொண்டு வராதபடியினால் ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கப்பட்டான். " விசுவாசத்தினாலே " ஆபேல் தேவனுக்கு பலி செலுத்தி னான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது விசுவாசமானது, கீழ்ப்படிதலோடு சம்பந்தப்பட்டிருக்கிறது. இது முன்னதாகவே கட்டளை பெற்றிருக்கிறது என்று மறை முகமாகப் பொருள்படுகிறது. நியாயப்பிரமாணம் இல்லையென்றால் அங்கே மீறுதலும் இல்லை. தேவன் அவர்களிடம் என்ன கொண்டு வர வேண்டும், எவ்வளவு கொண்டு வர வேண்டும் என சொல்லியிருக்கவில்லையானால், காயீன் அங்கே எந்தத் தவறும் செய்ய

வில்லை. ஆனால், காயீன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டான் என்பது அவன் தேவனுக்குக் கீழ்ப்படியவில்லை என்பதையே காட்டுகிறது. அவன் தேவனுடைய பிரமாணத்தை மீறிவிட்டான்.

எபி. 11:4, ஆபேல், " மேன்மையான பலியை " தேவனுக்குச் செலுத்தினான் என்று சொல்கிறது. தேயர் (Thayer) அவர்களின் கிரேக்க அகராதியின்படி, " மேன்மை யானது " என்பது, " அளவில் அதிகமானதும் ", " தரத்தில் அதிகமானது " என்று பொருள்படும். " மேன்மையானது " என்ற கிரேக்க வார்த்தை புதிய ஏற்பாட்டில் " அதிக மானது ", " அதைவிட அதிகமானது ", " அதை விட பெரியது ", " அதிகமான பங்கு " என்கின்ற பொருள்களுடன் மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கிறது. எந்த ஒரு நேர்மை யான மனிதனும், இந்த வசனங்களைப் படித்து, காயீன் போதுமான பலி செலுத்தாத படியால் தான், தேவன் அவனுடைய பலியை அங்கீகரிக்கவில்லை என்று சொல்ல முடியாது. சிலர், காயீன் மிருக பலியை செலுத்தவில்லை, எனவே, தேவன் அதை ஏற்றுக்கொள்ள வில்லை என்று சொல்லுவார்கள். அதைத் தான் நானும் சொல்கிறேன். காயீன் போதுமான அளவு பலி செலுத்தவில்லை. இந்த உண்மையைப் புரிந்து கொள்வ தற்கு யாரெல்லாம் சிரமப்படுகிறார்களோ அவர்கள், ஜனங்கள் கொடுக்க வேண்டிய அளவு கொடுக்காமல் இருக்கும் போது தேவன் அவர்களைத் தண்டிக்கிறார் என்பதை ஏற்க மறுக்கும் கஞ்சத்தனமான சபை அங்கத்தினர்களே. காயீன் காணிக்கையை தேவன் ஏன் நிராகரித்தார் என்பதை உங்களால் புரிந்து கொள்ள முடியவில்லையெனில், அப். 2:38ஐ என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை என்பவனிடம் நீங்கள் குறை காண வேண்டாம். அங்கே இரண்டு பேருமே தவறு தான். ஒருவர் ஞானஸ்நானம் பெறுவதிலிருந்து தப்பிக்க முயற்சிக்கிறார். மற்றவர் கர்த்தருக்குக் கொடுப்பதிலிருந்து தப்பிக்க முயற்சிக்கிறார் அவ்வளவுதான்.

## II ஆபிரகாமின் கொடுத்தல்

" அவனை ஆசீர்வதித்து, வானத்தையும், பூமியையும் உடையவராகிய உன்னத மான தேவனுடைய ஆசீர்வாதம் ஆபிரகாமுக்கு உண்டாவதாக. உன் சத்துருக்களை உன் கையில் ஒப்புக்கொடுத்த உன்னதமான தேவனுக்கு ஸ்தோத்திரம் என்று சொன் னான். இவனுக்கு ஆபிரகாம் எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுத்தான். சோதோமின் ராஜா ஆபிரகாமை நோக்கி, ஜனங்களை எனக்குத் தாரும், பொருள்களை நீர் எடுத்துக் கொள்ளும் " என்றான். (ஆதி 14:19–21)

ஆபிரகாம், ராஜாவிடமிருந்து எடுத்து வந்த எல்லாப் பொருள்களிலும் பத்தில் ஒரு பங்கை எடுத்து உன்னதமான தேவனுக்கு காணிக் கையாகச் செலுத்தினான். இது நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு குறைந்தது 500 ஆண்டுகளுக்கு முன்பாக நடந்தது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இதிலிருந்து தசம பாகம் கொடுப்பது மோசேயின் பிரமாணத்திலிருந்தோ அல்லது யாக்கோபிலிருந்தோ சிலர் சொல்லுகிறது போல தொடங்கப்படவில்லை.

## III யாக்கோபின் கொடுத்தல்

" அப்பொழுது யாக்கோபு; தேவன் என்னோடே இருந்து, நான் போகிற இந்த வழியிலே என்னைக் காப்பாற்றி, உண்ண ஆகாரமும், உடுக்க வஸ்திரமும் எனக்குத்

தந்து, என்னை என் தகப்பன் வீட்டுக்குச் சமாதானத்தோடே திரும்பிவரப் பண்ணுவா ரானால், கர்த்தர் எனக்குத் தேவனாயிருப்பார்; நான் தூணாக நிறுத்தின இந்தக் கல் தேவனுக்கு வீடாகும்; தேவரீர் எனக்குத் தரும் எல்லாவற்றிலும் உமக்குத் தசமபாகம் செலுத்துவேன் என்று சொல்லிப் பொருத்தனை பண்ணிக் கொண்டான். (ஆதி. 28:20–22).

இந்த வசனப்பகுதி சொல்வதென்னவெனில், யாக்கோபு தன் வீட்டை விட்டு கடந்து சென்ற போது, இராத்திரி வேளையிலே ஒரு குறிப்பிட்ட இடத்துக்கு வந்து அங்கே இராத்தங்கி. அங்கே ஒரு சொப்பனம் கண்டான். அதில் ஒரு பெரிய ஏணி, அதின் நுனிப்பகுதி வானத்தை எட்டியிருந்தது, அடிப்பகுதி பூமியிலே இருந்தது. கர்த்தர் அதற்கு மேலாக நின்று, யாக்கோபுக்கு சில வாக்குத்தத்தங்களைக் கொடுத்தார். யாக்கோபு நித்திரை தெளிந்து, விழித்து, " மெய்யாகவே கர்த்தர் இந்த ஸ்தலத்தில் இருக்கிறார் " என்று சொன்னான். அங்கே, யாக்கோபு மிகவும் பயந்து விட்டதாக நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது.

பொதுவாக ஜனங்கள் பயந்து கொள்ளும் போதும் அல்லது கலங்கும் போதும் என்ன செய்வார்களோ அதை யாக்கோபும் செய்தான். கடந்த கால ஜீவியத்தை நினைத்துப் பார்த்த போது, அந்த இரவு கடுமையான தனிமையாகிவிட்டது. அடுத்த நாள் காலையிலே யாக்கோபு தேவனிடத்தில் பொருத்தனை செய்கிறார். அந்த பொருத்தனை என்ன? யாக்கோபு இந்த பொருத்தனையை செய்த போது ஏழையாகத் தான் இருந்தார், அதன் பின்பு யாக்கோபு தன்னுடைய ஜீவியத்தில் செல்வந்தனாக மாறினார். ஆனாலும், யாக்கோபு தேவனிடம் செய்த பொருத்தனையின்படி தசம பாகத்தை தொடர்ந்து செலுத்தி வந்தார். இதுவும் கூட மோசேயின் பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்பு என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். எனவே, மோசேயின் பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே தேவ மனிதர்கள் தசமபாகம் கொடுத்திருக்கிறார்கள் என்பதை நாம் அறிகிறோம்.

## IV விவசாயிகளுக்கு அறிவுரைகள்

" நீங்கள் தேசத்தின் பயிரை அறுக்கும் போது, உன் வயலின் ஓரத்திலிருக் கிறதைத் தீர அறுக்காமலும், சிந்திக் கிடக்கிற கதிர்களைப் பொறுக்காமலும், உன் திராட்சைத் தோட்டத்திலே பின் அறுப்பை அறுக்காமலும், அதிலே சிந்திக் கிடக்கிற பழங்களைப் பொறுக்காமலும், அவைகளை எளியவனுக்கும், பரதேசிக்கும் விட்டுவிடு வாயாக; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் " (லேவி 19:9,10)

இந்த வசனங்களிலிருந்து நாம், விவசாயி தன் வயலின் ஓரத்திலிருக்கிறதை ஏழைகளுக்கும், பரதேசிகளுக்கும் விட்டு விட வேண்டியதாயிருந்தது என்று கற்றுக் கொள்கிறோம். மேலும் அறுவடை காலத்தின் போது நாம் ஒரு யூதனுடைய வயல் வழி யாய்ச் சென்று அதன் மூலை முடுக்குகளைப் பார்த்து அவன் ஒரு கஞ்சத்தனமானவனா அல்லது உதாரண குணம் உடையவனா? என்பதைத் தெரிந்து கொள்ளலாம். அவன் மூலை முடுக்குகளில் மிகவும் கொஞ்சமாக விட்டிருந்தால் அவன் ஒரு கஞ்சத்தனமான யூதன், ஓரம்பாரத்தில் இருக்கும் சில பகுதிகளை அறுவடை செய்யாமல் விட்டிருந்தால்

அவன் உதார குணமுள்ள யூதன். அந்தக் காலகட்டத்தில் நம்முடைய சகோதரர்கள் சில பேர் விவசாயம் செய்திருந்தால், ஒரு வேளை கஞ்சி காய்ச்சுவதற்குக் கூட போதுமான அளவு தானியங்களை விட்டு வைத்திருக்கமாட்டார்கள்.

" முதல் முதல் பழுக்கும் உன் பழத்தையும், வடியும் உன் இரசத்தையும் காணிக் கையாகச் செலுத்த தாமதிக்க வேண்டாம். உன் குமாரரில் முதற்பேறானவனை எனக்குக் கொடுப்பாயாக " (யாத் 22:29).

இங்கே, நம் தேவன் முதல் தரமானவைகளையும், சிறந்தவைகளையும் நம்மிட மிருந்து எதிர்பார்கிறார் என்று கற்றுக் கொள்கிறோம். பெற்றோர்கள் தங்கள் பிள்ளை களை கொடுத்திருந்தபோது அவர்களை மீட்டுக் கொள்ளவும் அனுமதிக்கப்பட்டனர். (எண். 3:46–48).

## V மனப்பூர்வமான காணிக்கைகள் பற்றிய போதனை

" அவைகள் முடிந்த போது வாரங்களின் பண்டிகையை உன் தேவனாகிய கர்த்தருக்கு என்று அனுசரித்து, உன் தேவனாகிய கர்த்தர் உன்னை ஆசிர்வதித் ததற்குத் தக்கதாய் உன் கைக்கு நேர்ந்த மனப்பூர்வமான காணிக்கையாகிய பகுதி யைச் செலுத்தி, உன் தேவனாகிய கர்த்தர் தமது நாமம் விளங்கும்படி தெரிந்து கொள்ளும் ஸ்தானத்திலே நீயும், உன் குமாரனும், உன் குமாரத்தியும், உன் வேலைக் காரனும், உன் வேலைக்காரியும் உன் வாசல்களில் இருக்கிற லேவியனும் உன்னிடத் தில் இருக்கிற பரதேசியும், திக்கற்ற பிள்ளையும் விதவையும், தேவனாகிய கர்த்தரு டைய சந்நிதியில் சந்தோசப்பட்டு " (உபா. 16 :10–11).

இந்த மனப்பூர்வமான காணிக்கையின் தொகை கொடுப்பவரின் உதாரத்து வத்திற்கே விடப்படுகிறது. மோசே இப்படியாகக் கட்டளை கொடுத்தார். " அப்பொழுது மோசே இனி புருஷர்களாவது, ஸ்திரீகளாவது பரிசுத்த ஸ்தலத்துக்கென்று காணிக்கை யாக ஒரு வேலையும் செய்ய வேண்டாம் என்று பாளையம் எங்கும் கூறும்படி கட்டளை யிட்டான். இவ்விதமாய் ஜனங்கள் கொண்டு வருகிறது நிறுத்தப்பட்டது. செய்ய வேண்டிய எல்லா வேலைகளுக்கும் போதுமான பொருள்கள் இருந்ததுமல்லாமல் அதிக மாயும் இருந்தது ". (யாத் 36:6,7) யாரோ ஒருவர் இந்த ஜனங்களுக்கு கொடுக்கும் படியாக போதித்திருக்கிறார்கள், கொடுப்பது இயற்கையானதல்ல; ஏனென்றால், மனிதனுடைய சுபாவம் சுயநலமானது. நாம் ஜனங்களுக்கு கர்த்தருக்குக் கொடுக்கும் படியாய் போதிக்கும் போது, ஒரு சிலர் தவிர பெரும்பாலோர் கண்டிப்பாகக் கொடுப் பார்கள். தேவனே! கொடுத்தல் என்கிற பெரிய பாடத்தைப் பற்றி உம்முடைய சத்தியத் தை பல வருடங்கள் போதிக்காமல் இருந்ததற்காக எங்களை மன்னியும்.

## VI முன் மாதிரிக்காக எழுதப்பட்டது

" தேவ வசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும், ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது " (ரோமர் 15 :4).

பழைய ஏற்பாட்டைப் படித்து, அந்த ஜனங்கள் எவ்வளவாய்க் கொடுக்க கட்டளைப் பெற்றிருந்தார்கள் என்று நாம் கற்றுக் கொள்ளும்போது, நாம் குறைவாகக் கொடுப்பது அநேகராகிய நம்மை வெட்கப்படுத்த வேண்டும். பழைய ஏற்பாடு முழுவதும் அந்த ஜனங்கள் எப்படியாகக் கொடுத்தார்கள் என்று வாசிக்கிறோம். கொடுக்க வேண்டிய அளவுக்கு கொடுக்காத ஜனங்கள் தண்டனை பெற்றார்கள் என்றும் பார்க்கிறோம். காயீன் இதற்கு ஒரு மிகச்சிறந்த எடுத்துக்காட்டு.

மனிதன் கொடுப்பதற்கு ஆரம்பத்திலிருந்து போதிக்கப்பட்டு வந்திருக்கிறான். ஆபேல் உதாரத்துவமாய்க் கொடுத்தபடியால் ஆசீர்வதிக்கப்பட்டான். ஆபிரகாமும், யாக்கோபும் மாபெரும் மனிதர்களாக இருப்பதற்கான காரணங்களுள் ஒன்று, அவர்கள் உதாரத்துவமாய் கர்த்தருக்குக் காணிக்கை கொடுத்ததுதான். தேவனுடைய வாக்குத்தத்தங்கள் எல்லாம் எப்போதும் இப்படியாகத்தான் இருக்கிறது. உதாரத்துவமுள்ள ஆத்துமா செழிக்கும், நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற் போகுமட்டும் உங்கள் மேல் ஆசீர்வாதத்தை வருஷிப்பேன். தேவன் இவைகளைச் செய்வார் என்பதை என் சொந்த அனுபவத்திலிருந்து அறிவேன். " முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும் " (மத். 6:33).

நீங்கள் உதாரத்துவமாய்க் கொடுப்பவராக இல்லாவிட்டால், இன்றே நீங்கள் கொடுக்கத் தொடங்கும்படி உற்சாகப் படுத்துகிறேன். எனக்குத் தனிப்பட்ட முறையிலே தெரிந்த அநேகருடைய சாட்சிகளைக் கொடுக்க இங்கே இடம் வேண்டும் என்று விரும்புகிறேன். நீங்களும் கொடுத்துப் பார்த்தால் இதற்கு முன்பு அறிந்திராத சந்தோஷத்தை உணர்வீர்கள், அனுபவிப்பீர்கள்.

புதிய ஏற்பாட்டு கொடுத்தலை நம்முடைய நாட்களில் மீட்டமைக்க நீங்கள் உதவி செய்வீர்களா?

ஓ, தேவனுடைய உன்னதமான ஊழியர், எனக்கான சிலுவையில் தொங்கி இரத்தம் சிந்தின காட்சியை நான் பார்க்கும் போது, கர்த்தருக்காக தாராளமாய்க் கொடுப்பது மிகச் சிறிய காரியமாகவே படுகிறது. என்னுடைய நேரம், தாலந்து, சொத்து, சுகம் இவைகளில் நான் மிகவும் கடன்பட்டிருக்கிறேன் என்று அறிகிறேன். ஆம், பல லட்சம் மடங்கு நான் கடன்பட்டிருக்கிறேன்.

கேள்விகள்

1. தங்க வாக்கியப் பகுதியை எழுதுங்கள்.
2. இந்தப் பாடத்தின் நோக்கமென்ன?
3. உங்களுக்கான சிந்தனையை எழுதுங்கள்.

அறிமுகம்

1. மத்தேயு சுவிசேஷத்தில் கொடுத்தலைப் பற்றி எத்தனை முறை சொல்லப்பட்டிருக்கிறது?

2. மாற்கு நற்செய்தி நூலில் கொடுத்தலைப் பற்றி எத்தனை முறை குறிப்பிடப் பட்டுள்ளது?
3. லூக்கா மற்றும் யோவான் எழுதின நற்செய்தி நூலில் கொடுத்தலைப் பற்றி எத்தனை முறை கூறப்பட்டுள்ளது?.
4. பிலேமோன், யோவான், II யோவான், யூதா ஆகிய புத்தகங்களில் கொடுத்தலைப் பற்றி என்ன கூறப்பட்டுள்ளது?
5. கொடுத்தலைப் பற்றி திருமறை எவ்வளவாக வலியுறுத்துகிறது?
6. ஞானஸ்நானம் குறித்து போதிப்பது போலவே கொடுத்தலைக் குறித்துக் போதித் திருந்தால் விளைவு எப்படியிருந்திருக்கும்?

**காயீன், ஆபேல்**

1. ஆபேலின் காணிக்கையை தேவன் ஏற்றுக் கொண்டாரா? ஏன்?
2. காயீனுக்கு கடுங்கோபம் வந்தது ஏன்?
3. இந்த இருவரின் காணிக்கையைப் பற்றி வெளிப்படையாக விவாதியுங்கள்?
4. விசுவாசத்தினால் ஆபேல் எப்படி காணிக்கை செலுத்தினான்?
5. ஆபேல் காணிக்கை செலுத்தினானா?
6. நியாயப்பிரமாணமில்லாத இடத்தில் மீறுதல் இருக்குமா?
7. அதிக மேன்மையானது என்பதன் பொருள் என்ன?
8. காயீனின் காணிக்கை பற்றி என்ன கூறமுடியும் என்ற உண்மைகளை ஆராயுங்கள்?

**ஆபிரகாமின் கொடுத்தல்**

1. ஆதியாகமம் 14:19–21 யை வாசித்து கருத்துக்களை கூறுங்கள்.
2. ஆபிரகாமை ஆசீர்வதித்தது யார்?
3. ஆபிரகாமின் கையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது என்ன?
4. ஆபிரகாம் செய்தது என்ன?
5. இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் பாடமென்ன?

**யாக்கோபின் கொடுத்தல்**

1. யாக்கோபின் பொருத்தனை என்ன?
2. அவன் அந்த இரவை எங்கு கழித்தான்?
3. அவனுடைய சொப்பனம் பற்றி கூறுங்கள்?

4. அவனுக்கு தரிசனமானது யார்?

5. அடுத்த நாள் காலையில் யாக்கோபு செய்தது என்ன?

6. யாக்கோபு தன் பொருந்தனையை நிறைவேற்றினானா?

### விவசாயிகளுக்கு அறிவுரைகள்

1. விவசாயிகள் தங்கள் வயலில் கதிர் அறுக்கும்போது என்ன செய்ய வேண்டு

2. திராட்சை தோட்டத்தைப் பற்றிய போதனை யாது?

3. ஒரு மனிதனுடைய வயலின் மூலை முடுக்களைப் பார்த்து நாம் தெரிந்துகொள்ள என்ன?

4. முதலாவது பழுக்கும் பழங்களை என்ன செய்ய வேண்டும்?

5. தேவன் கட்டளையிட்டது என்ன?

### மனப்பூர்வமான காணிக்கைகள் சம்பந்தமான போதனை

1. மனப்பூர்வமான காணிக்கை எப்படி செலுத்தப்பட வேண்டும்?.

2. அவர்கள் எப்பொழுது மகிழ்ந்திருக்க வேண்டும்?

3. மனப்பூர்வமான கொடுத்தலின் அளவு யாது?

4. ஆசரிப்பு கூடாரத்திற்கு மோசே ஜனங்களிடமிருந்து பெற்ற காணிக்கை பற்றி கருத்துகள் என்ன?

5. இந்த ஜனங்களுக்கு கொடுத்தல் பற்றி போதிக்கப்பட்டிருந்ததா?

### முன்மாதிரிக்காக எழுதப்பட்டது

1. இவைகள் ஏன் எழுதப்பட்டிருக்கிறது?

2. பழைய ஏற்பாட்டிலிருந்து நாம் கற்றுக் கொள்வது என்ன?

3. கொடுக்காதவர்களுக்கு என்ன சம்பவித்தது?

4. உதாரத்துவமாக கொடுப்பவனுக்கு தேவன் என்ன வாக்கு செய்திருக்கிறார்?

5. கிறிஸ்து செய்த வாக்குத்தத்தம் என்ன?

## பாடம் – மூன்று

# கொடுத்தல் ஒரு வேதாகம பாடம்

## Giving is a Bible Subject

### தங்க வசனப் பகுதி

"நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும் நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே". (II கொரிந்தியர் 8:9).

### நோக்கம்

புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவத்தின் தாற்பரியமே கொடுத்தல் தாற்பாரியம் தான் என்ற உண்மையை வலியுறுத்துவது.

### உங்கள் சிந்தனைக்கு

வரப்போகும் உலகத்திற்குத் தன்னை எவ்விதத்திலும் ஆயத்தம் செய்யாமல், தன் சுகபோகமான வாழ்க்கையில் உழன்று கொண்டிருப்பவனுக்கு, மரணத்தின் அழைப்பு பேரிடியாய் அமையும்.

### முன்னுரை

இதற்கு முந்தின பாடத்தில், பழைய ஏற்பாடு கொடுத்தலைப் பற்றிய ஓர் புத்தகம் என்று நாம் காட்டினோம். இப்பாடத்தில் புதிய ஏற்பாடு இந்த முக்கியமான காரியம் பற்றி என்ன போதிக்கிறது என்று பார்க்க விரும்புகிறோம். புதிய ஏற்பாட்டின் முதல் நான்கு புத்தகங்கள் கொடுத்தலைப் பற்றி அதிகமாக சொல்லுகின்றன. புதிய ஏற்பாட்டின் முதல் அதிகாரத்திலே மனிதனுக்கு தேவனுடைய கொடையாகிய இயேசு கிறிஸ்துவின் பிறப்பு பற்றி பார்க்கிறோம். மத்தேயு புத்தகத்தின் இரண்டாவது அதிகாரத்தில் நமக்குத் தெரிந்தவரை மரியாளும், யோசேப்பும் தவிர, சாஸ்திரிகள் தான் இயேசுவுக்கு முதன் முதலில் கொடுத்துள்ளார்கள். இன்றைக்கு நாம் காணிக்கை கொடுப்பதும், கிறிஸ்துவுக்கான ஒரு கொடுத்தலாகவே இருக்கிறது.

சபையிலே பிரசங்கியார் ஒருவர் வெளிநாட்டு ஊழியத்திற்கு பொருளாதார உதவிகளைச் செய்யும்படி ஊக்கமான வேண்டுகோள் விடுத்தார், அப்பொழுது ஒரு பெண்மணி தன்னுடைய மோதிரத்தை கழற்றி காணிக்கைப் பையிலே போட்டு விட்டு ஒரு காகிதத்தில் " இந்த மோதிரத்தை விற்று அந்த பணத்தை சுவிசேஷம் பிரசங்கிக்கப் பயன்படுத்துங்கள் " என்று எழுதி பையில் போட்டார். யாரோ ஒருவர் அந்த பிரசங்கியாரிடம் காணிக்கைப் பையில் மோதிரத்தை போட்டது யார் என்று சொல்லி விட்டார்கள். உடனே அந்த பிரசங்கியார் அந்த மோதிரத்தை எடுத்துக் கொண்டு அந்த பெண்ணிடம் போய் " நான் அப்படிச் செய்யமாட்டேன் என்று சொன்னார். அப்பொழுது அந்த

பெண்மணி அந்த மோதிரத்தை நான் உங்களுக்கு கொடுக்கவில்லை இயேசுவுக் குத்தான் கொடுத்தேன் " என்று சொன்னார். சபையிலே நாம் செய்வதெல்லாம் இயேசு வை மையமாகக் கொண்டும், அவருக்காகவும் செய்யப்படுகிறது.

சாஸ்திரிகளிடமிருந்து நாம் சில அருமையான பாடங்களை கற்றுக் கொள்ள லாம். சிலருக்கு இது புதுமையான பாடங்களாக இருக்கலாம். ஆனால், ஒருவர் கிறிஸ்து பற்றியும், அவருடைய ராஜ்யம் பற்றியும் கிறிஸ்துவுக்குக் கொடுத்தல் குறித்துப் பேசாமல் பேச முடியாது. நாம் வேதாகமத்தைப் படிக்கும் போது, தேவன் நமக்காகக் கொடுத்தார், கிறிஸ்து நமக்காக கொடுத்தார், பரிசுத்த ஆவியானவர் நமக்காக கொடுத்தார் என்று கற்றுக் கொள்கிறோம். ஆதி கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுக்கு விசுவாசமாயிருக்கும்படி அபரிதமாக கொடுத்தார்கள் என்று புதிய ஏற்பாட்டை வாசிக்கும் போது கற்றுக் கொள்கிறோம். இன்னும் சிலர், தங்கள் ஜீவனையே கொடுத்திருக்கிறார்கள். நான்கு சுவிசேஷங்களிலும் நாம் கொடுத்தலைப் பற்றி வாசிக்கிறோம். மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகிய நான்கு சுவிசேஷப் புத்தகங்களில் 89 அதிகாரங்கள் உள்ளன. இவற்றில் கொடுப்பது சம்பந்தமான பாடம், நூற்றி முப்பது முறைகளுக்கும் மேல் விவாதிக்கப்பட்டுள்ளது. அப்போஸ்தலருடைய நடபடிகள் கொடுத்தலைப் பற்றியதும், மனமாற்ற சம்பவங்களைப் பற்றியதுமான புத்தகமாகும். சபைகளுக்கு எழுதப்பட்ட எல்லா நிருபங்களும் மனிதன் தேவனுக்கு கொடுக்கும்படியாய் மேலும், மேலும் உற்சாகப்படுத்துகின்றன. வெளிப்படுத்தின விசேஷப் புத்தகம் தேவன் மனிதனுக்கு ஒரு புதிய வீட்டைக் கொடுப்பதுடன் நிறைவடை கிறது.

நீங்கள் ஆதியாகமப் புத்தகத்திலிருந்து வாசிக்கத் தொடங்கி, பழைய ஏற்பாட்டின் முப்பத்தொன்பது புத்தகங்களையும் வாசித்து, அதன்பின்பு புதிய ஏற்பாட்டில் உள்ள இருபத்தேழு புத்தகங்களை வாசித்தாலும் ஆரம்பம் முதல் கடைசி வரை வேதாகமம் கொடுத்தலைப் பற்றிய ஒரு புத்தகம் என்பதை அறிந்து கொள்வீர்கள். எனவே, ஒருவன் பிரசங்கியாரைப் பார்த்து வேதாகமம் கொடுத்தலைப் பற்றி போதிக்க வில்லை என்று சொல்லும் அளவுக்கு எப்படி தேவனுடைய வார்த்தைகளை அறியாத வனாக இருக்க முடியும்?. இப்படிச் சொல்லுவதும், வேதாகமத்தைப் பற்றி போதி யுங்கள் ஆனால், கிறிஸ்துவைப் பற்றி போதிக்க கூடாது என்று சொல்லுவதும் ஒன்று தான்.

### I இயேசு கொடுத்தலைப் பற்றி போதித்தார்

" பூமியிலே உங்களுக்கு பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டாம், இங்கே பூச்சியும், துருவும் அவைகளைக் கெடுக்கும்; இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள்; பரலோகத்தில் உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள் அங்கே பூச்சியாவது, துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை " (மத்தேயு 6:19, 20)

பொருளாதாரத்தில் நல்ல நிலையிலிருக்கும் விசுவாசிகள் தாங்கள் கர்த்தருக் கென்று கொடுக்காததற்கு சொல்லும் காரணங்களை நினைத்து நான் அடிக்கடி ஆச்சரி யப்படுகிறேன். ஒருவேளை, நீங்கள் இப்பொழுது இருக்கும் நிலையிலேயே மரிக்க நேர்ந்தால், பரலோகத்தில் உங்கள் பொக்கிஷம் என்னவாயிருக்கும்? ஒரு சமயம் ஒரு பிரசங்கியார் சபையாரைப் பார்த்து இவ்வாறாகச் சொல்லக் கேட்டிருக்கிறேன். நீங்கள் ஏற்கனவே அனுப்பிக் கொடுத்த பணத்தினால் உங்களுக்காகக் கட்டப்பட்ட வீட்டிலேதான் நீங்கள் வாழப்போகிறீர்கள் என்று. அப்படிச் சொல்வது சரியானால், பெரும்பாலான கிறிஸ்துவின் சபை அங்கத்தினர்கள், தாங்கள் தூங்குவதற்கு ஒரு பாய் வாங்கக் கூட பணம் அனுப்பாததினால், பரலோகத்திலுள்ள வெட்ட வெளியில் தான் தூங்க வேண்டியதிருக்கும். " இப்படிப் பிரயாசப்பட்டு பலவீனரைத் தாங்கவும், வாங்கு கிறதை பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வார்த்தைகளை நினைக்கவும் வேண்டுமென்று எல்லாவிதத்திலேயும் உங்களுக்குக் காண்பித்தேன் என்றார் " (அப். 20:35).

இயேசு, சுயநலத்தையும், தன்னையே மையாக வைத்துச் செயல்படுதலையும் இரக்கம் காட்டாமல் வன்மையாகக் கண்டித்தார். ஐசுவரியவானாகிய விவசாயியை மதியீனனே என்று சொன்னதோடு. ஆசாரியனையும், அந்த லேவியனையும் கண்டித் தார். அதே நேரத்தில் சமாரியனை பாராட்டி விட்டு, " நீயும் போய் அந்தப்படியே செய் " என்றார். இயேசு மாற்கு பன்னிரெண்டாம் அதிகாரத்தில், அந்த ஏழை விதவையைப் பாராட்டினார். ஐசுவரியவான் பாதாளத்தில் இருப்பதாகவும், லாசருவை ஆபிரகாமின் மடியில் இருப்பதாகவும் சித்தரிக்கிறார். இயேசு, விலையேறப் பெற்ற களங்கமில்லாத நளதம் என்னும் தைலத்தைக் கொண்டு வந்து, அதை இயேசுவின் பாதங்களில் பூசி, தன் தலை மயிரால் அவருடைய பாதங்களை துடைத்ததற்காக மரியாளைப் பாராட்டி னார். அதே நேரத்தில், அதை தடை செய்த யூதாஸ்காரியோத்தை அவர் கடிந்து கொண்டார். இயேசு குறைவான காணிக்கையை ஒருபோதும் மெச்சியதில்லை. மாறாக, எதைப் பற்றியும் கவலைப்படாமல் அதிகமாக மற்றவர்கள் வீண் செலவு என்று சொன்னாலும் பரவாயில்லை என்று கொடுத்தவர்களை மெச்சியிருக்கிறார். இயேசு போதித்தது மாத்திரமல்லாமல் தன்னுடைய வாழ்க்கையில் அவைகளை முன்னுதார ணமாக செய்தும் காட்டியிருக்கிறார். " அப்படியே மனுஷ குமாரனும் ஊழியங் கொள் ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் " (மத்தேயு 20:28). மேலும், அவர் போதிக்கும் போது, அவருக்கு சீஷர்களாக இருக்க வேண்டுமென்றால், நம்மை நாம் வெறுத்து, நம்முடைய சிலுவையை எடுத்துக் கொண்டு அவரைப் பின்பற்ற வேண்டும் என்றார். " அப்பொழுது, இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பி னால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன் " (மத்தேயு 16:24).

இயேசு ஒருவருடைய வாழ்க்கை அவன் வைத்திருக்கும் சொத்து சுகங்களைப் பொறுத்து அமைவதில்லை என்று போதித்தார். உண்மையான ஜீவியம், குவித்து வைப்பதைவிட கொடுப்பதில் தான் இருக்கிறது என்பதை உணர்த்தினார். அந்த

பணக்கார வாலிபன், உண்மையான வாழ்க்கை ஒருவருடைய உடைமைகளில் உள்ளடங்கியிருக்கிறது என்று வெளிப்படையாகவே எண்ணினான். அதனால் தான் இயேசு அவனுக்குண்டான யாவற்றையும் விற்று தரித்திரருக்குக் கொடுக்க சொன்ன போது துக்கமடைந்தவனாய் போய் விட்டான். மகிழ்ச்சியை நாம் நாடுவதினால் பெற்றுக் கொள்ள முடியாது. அந்த பணக்கார வாலிபன் எல்லோரையும் போல் மகிழ்ச்சியைத் தேடுவதால் கண்டுபிடிக்க முடியாது என்றும், அது கொடுப்பதால் கிடைக்கும் ஒன்று என்றும் தன் அனுபவத்தில் கற்றுக்கொண்டான்.

## II புதிய ஏற்பாடு பணத்தைப் பற்றி அநேக காரியங்களைச் சொல்கிறது

" பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து விசுவாசத்தை விட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக்குத்திக் கொண்டிருக்கிறார்கள் " (I தீமோத்தேயு 6:10).

பணம் வஞ்சனையுள்ளது. பணத்தை மனிதர்கள் பெற்றுக் கொள்ளும் போது, அவர்களைத் தன் வசப்படுத்தும் வல்லமை பணத்திற்கு இருக்கிறது. பணம் மனிதனுடைய ஆத்துமாவின் எஜமனாக மாற முடியும். அப்படி மாறிய பின்பும், மனிதனை, இன்னும் நான் தான் எஜமானாக இருக்கிறேன் என்று எண்ணவும் வைக்கும். அநேகருக்கு பழைய கிரேக்க கதை ஒன்று நினைவுக்கு வரும். கட்டுக்கடங்காத பண ஆசையுடன் இருந்த " மிடாஸ் " என்கிற ராஜா தன்னுடைய பண ஆசையின் நிமித்தமாக சபிக்கப்பட்டான். " டயானிசஸ் " என்கிற கடவுள் இந்த ராஜாவுக்கு தொட்டதையெல்லாம் பொன்னாக மாற்றும் சக்தியைக் கொடுத்தது. இந்த வரம் கிடைத்தவுடன், இந்த ராஜா தன்னுடைய உடைமைகளையெல்லாம் தொட்டான். அவைகளெல்லாம் பொன்னாக மாறின; தன்னுடைய நாற்காலி, படுக்கை, உடைகள் எல்லாம் தான் தொட்டவுடன் பொன்னாக மாறியதை பார்த்து மகிழ்ச்சி அடைந்தான். அதேநேரம் அவன் பசியாயிருந்த போது அவனுடைய உணவும் பொன்னாக மாறியது. அவனுடைய சிறு பெண் அவனை வாழ்த்த வந்தபோது அவளை அவன் தொட்டதினால் அவள் பொற் சிலையாக மாறினாள். இந்த புராணக்கதை பண ஆசையின் சாபத்தைத் தெளிவாக விளக்குகிறது.

பணம் சம்பாதிப்பதற்கான நம்முடைய திட்டத்தில் முதலில் சபை வர வேண்டும். கிறிஸ்துவுக்காகவும், சபைக்காகவும் நாம் ஏதாவது நன்மை செய்ய வேண்டுமென்பதற்காக நாம் செழிப்பாக இருக்க ஆசைப்பட வேண்டும். சபைக்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என்கிற பாடத்தை ஒரு பிரசங்கியார் போதிக்க கேட்ட ஒரு வாலிபன் பிரசங்கம் முடிந்த பிறகு, அப்பிரசங்கியாரிடம் பிரசங்கத்திற்காக நான் உங்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், என்னுடைய கொடுத்தலில் ராஜ்ஜியத்திற்கு முதலிடம் கொடுக்கவில்லை என்பதை ஒத்துக் கொள்கிறேன். எனக்கு சம்பளம் கிடைத்தவுடன் முதலில் நான் விரும்புகிற பொருள்களுக்காக செலவு செய்கிறேன். இரண்டாவது, என் மனைவி விரும்புகிற பொருள்களுக்காக செலவழிக்கிறேன். அதில் ஏதாவது மீதியிருந்தால், அதில் கொஞ்சத்தை தேவனுக்குக் கொடுக்கிறேன் என்று கூறினான். மேலும், அந்த வாலிபன் பிரசங்கியாரிடம் சொல்லும்போது,

நான் பயங்கரமான பாவத்தை செய்து கொண்டிருக்கிறேன் என்பதை இன்று உணர்ந்து கொண்டேன். ஆனால், தேவன் எனக்கு சாட்சியாயிருக்கிறார், இனிமேல் என்னுடைய சம்பாத்தியத்தில் பத்து சதவீதத்திற்கு கீழே நான் தேவனுக்கு காணிக்கையாக கொடுக்கமாட்டேன். அதுவும் சம்பாத்தியத்தில் முதல் பத்து சதவீதமாயிருக்கும், என்றான்.

சகோதரரே, நாம் இப்போதாகிலும் விழித்துக் கொண்டால் நலமாயிருக்கும், ஏனென்றால், அநேகருக்கு பணத்தை குறித்து தவறான மனப்பான்மை இருக்கிறது. ஒன்றை நினைவில் கொள்ளுங்கள். இந்த உலகத்தில் எந்த வயதுடைய மக்களாயிருந்தாலும் தங்களுடைய வருமானத்தில் பத்து சதவீதத்திற்கு குறைவாக தேவனுக்கு கொடுத்துக் கொண்டு, தேவனுடைய அங்கீகாரத்துக்கு ஏற்றவர்களாக இருக்கிறார்களென்று சொல்ல முடியாது.

### III புதிய ஏற்பாடு பொருளாசை குறித்து அதிகமாக போதிக்கிறது

" ஆகையால், விபச்சாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரகாராதனையான பொருளாசை ஆகிய இவைகளைப் பூமியில் உண்டுபண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப் போடுங்கள். இவைகளின் பொருட்டே கீழ்ப்படியாமையின் பிள்ளைகள் மேல் தேவ கோபாக்கினை வரும் ". (கொலோசெயர் 3:5–6)

டேவிட் லிப்ஸ்கோம்ப் (David Lipscomb) என்பவர் தன்னுடைய வகுப்புகளில் பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் கர்த்தருக்கு கொடுப்பதில் அவர் எப்படியாக மாம்சத்தை ஜெயித்தார் என்று சொல்லியிருக்கிறார். அவர் முதலில் கிறிஸ்தவ வாழ்க்கையைத் தொடங்கின போது கர்த்தருக்கு கொடுப்பதில் சில சிரமங்கள் இருப்பதாகச் சொன்னார். அவர் கர்த்தருக்கென்று காணிக்கை கொடுக்க தன் மனதில் ஒரு டாலரை நியமித்த போது, பிசாசு அவரிடம் சகோதரன் ஸ்மித்தை பார், அவர் உன்னைவிட வசதியாக இருக்கிறார் அவர் கூட ஐம்பது சென்ட்கள் தான் காணிக்கையாக கொடுக்கிறார் என்று குறிப்பால் உணர்த்துவான். டேவிட் அவர்கள் இருபது டாலர் கொடுக்க தன்னுடைய மனதிலே நியமித்த போது, பிசாசின் அதே விதமான ஆலோசனைகள் வந்தன. அதாவது, உன்னை விட இந்த உலகத்தில் ஐசுவரியம் அதிகமாக உள்ளவர்கள் குறைவாகக் கொடுக்கிறார்கள் நீ ஏன் அதிகமாக காணிக்கை கொடுக்கிறாய்? என்று எண்ண வைப்பான். ஆனால், டேவிட் அவர்கள் அதிலிருந்து அதிகமாக கொடுக்கத் தொடங்கினார். மேலும், அவர் சொல்லும் போது பிசாசின் சோதனைகளால் தான் தளர்ந்து போய் விட்டதாகவும், இனிமேல் ஒவ்வொரு முறை பிசாசு தன்னைக் குறைவாக கொடுக்கத் தூண்டும் போதெல்லாம், தான் கொடுக்க மனதில் நியமித்த தொகையை இரண்டு மடங்காக உயர்த்திக் கொடுப்பதாக தீர்மானம் எடுத்துக் கொண்டார். அதாவது, அவர் இருபது டாலர்கள் கொடுக்க மனதில் நியமித்த போது பிசாசு குறைவாக கொடுக்கத் தூண்டினால், அவர் நாற்பது டாலராகக் கொடுத்தார். பிசாசின் முயற்சிகள் எல்லாம் தோல்வி அடைந்தபடியால் அவன் டேவிட் லிப்ஸ்கோம்பை விட்டு ஓடி விட்டான். நீங்கள் கொடுக்கும் போது இப்படியாகச் சோதிக்கப்பட்டால் இவர் போன்று முயற்சி செய்து பாருங்கள். யாக்கோபு ஆசிரியர் " பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள் அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான் " என்று இந்தப் பொருளில் தான் சொல்லியுள்ளார். (யாக்கோபு 4:7)

பொருளாசை வஞ்சனையுள்ளதாய் இருக்கிறபடியால் மிகவும் அபாயகர மானது. பொருளாசை என்பது ஒரு மனிதன் தான் வியாதிப்பட்டிருப்பதை அறிந்து கொள்வதற்கு முன்பே அவனுடைய சரீரத்தில் உள்ள ஒவ்வொரு அவசியமான, முக்கியமான உறுப்பு களையும் அரித்துப் போடுகிற புற்றுநோயைப் போன்றது. ஒரு குறிப்பிட்ட மத போதகர் தன்னிடம் 5000க்கும் அதிகமான பேர் பாவ அறிக்கை செய்துள்ளதாகச் சொன்னார் என்று நான் வாசித்திருக்கிறேன். ஆனால், ஒரு பாவம் மாத்திரம் அறிக்கை செய்யப்படவேயில்லை. இப்போது, அந்த மத போதகரிடம் அறிக்கை செய்யப்படாத பாவம் என்னவாயிருக்கும் என்று யூகித்துப் பாருங்கள். ஆம், நீங்கள் யூகிப்பது சரிதான், அது பொருளாசை என்கிற பாவம் தான். அநேக பொருளாசை பிடித்த சபை உறுப்பினர்கள் இந்த பயங்கரமான வியாதியாகிய " பொருளாசை என்கிற பாவம் இயேசுவானவர் என்னை விட்டு அகன்று போங்கள் " என்று சொல்லுவதற்குக் காரண மாக அமைந்து விடும் என்பதை உணர்ந்து கொள்வதற்கு முன்பாகவே மரித்துப் போய் விடுவார்கள் என்று நான் எண்ணுகிறேன்.

**IV புதிய ஏற்பாடு நம்முடைய கொடுத்தலைப் பற்றிய தேவனுடைய அக்கறையை வலியுறுத்துகிறது**

" நன்மையான எந்த ஈவும், பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி; சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது; அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை " (யாக்கோபு 1:17)

தேவன் நமக்குத் தந்திருக்கிற நன்மையானவைகளாகிய மழை, சூரிய ஒளி, உணவு, உடை, அழகான சூரிய அஸ்தமனம் என்று இன்னும் லட்சக்கணக்கானவை களுக்காக நாம் தேவனுக்கு நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும். நாம் எப்படி கிறிஸ்தவ ஜீவியத்தை ஜீவிக்க வேண்டும் என்று நமக்கு சொல்லும் வேதாகமத்திற்கு நாம் நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

தேவன் மிக ஆழமான விவரங்களை தம்முடைய குமாரனைத் தந்தது பற்றி கூறு கிறார். புதிய ஏற்பாடு முழுவதிலும் கிறிஸ்து மனிதனிடத்தில் கொண்டிருக்கும் அன்பை நாம் வாசிக்கிறோம். " கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையிலறையப்பட்டேன். ஆயினும் பிழைத்திருக்கிறேன் இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக் கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்பு கூர்ந்து எனக்காக தம்மைத் தாமே ஒப்புக் கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவா சத்தினாலே பிழைத்திருக்கிறேன் " (கலாத்தியர் 2:20)

தேவன் நம்மீது கொண்டிருக்கும் அன்பினிமித்தமாக ஐசுவரியத்தின் ஆபத்துக் களைக் குறித்து புதிய ஏற்பாடு முழுவதும் எச்சரிக்கிறார். பணமானது மனிதனுடைய முடிவெடுக்கும் திறனை உருவிழக்கச் செய்கிறது.

சில வருடங்களுக்கு முன்பு மொபைல் பிரஸ் ரெஜிஸ்டர் என்கின்ற பத்திரிக் கையிலிருந்து ஒரு துணுக்குச் செய்தியை கத்தரித்தேன். அந்த செய்தியில் வில்லி உட்ஸ் (Williewoods) என்பவர், " தன்னுடைய ஜீவனை விட பணத்தை அதிகமாக நேசிப்ப தாக பெருமை அடித்திருக்கிறார் ". அவரை அறிந்தவர்கள் அவர் மருந்துக்குக் கூட

பணத்தை செலவு செய்யமாட்டார் என்று சொன்னார்கள். அதன் பின்பு அவரை ஒரு விடுதியில் ஒரு ஹீட்டருக்கு முன்பாக செத்துக் கிடந்ததைக் கண்டிருக்கிறார்கள். அந்த இடத்தின் உரிமையாளர் இது பற்றி சொல்லும்போது வில்லி ஹீட்டர் அருகில் தூங்கு வதற்கு கேட்டதாகவும் தூங்கிக் கொண்டிருக்கும் போதே மரித்து விட்டதாகவும் சொன்னார். வில்லியின் சட்டைப் பாக்கெட்டிலிருந்து 1600 டாலர் எடுத்திருக்கிறார்கள். பாக்கெட்டில் நிறைய பணத்தை வைத்துக் கொண்டு தேவையிலும், பசியிலும் ஒரு மனிதன் மரிப்பது எவ்வளவு துக்ககரமானது! “ அவனவன் விசனமாயுமல்ல, கட்டாய மாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன். உற்சாகமாய்க் கொடுக் கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார் ” (II கொரிந்தியர் 9:7). புதிய ஏற்பாடா னது ஒரு மனிதன் உதாரத்துவமாய்க் கொடுக்கிறவனாய் மாறுவதற்கு தேவையான எல்லாத் தகவல்களையும் கொடுத்திருக்கிறது. நாம் எப்பொழுது கொடுக்க வேண்டு மென்று வேதாகமம் சொல்கிறது. “ பரிசுத்தவான்களுக்காகச் சேர்க்கப்படும் தர்ம பணத்தைக் குறித்து நான் கலாத்தியா நாட்டு சபைகளுக்குப் பண்ணின திட்டத்தின் படியே நீங்களும் செய்யுங்கள், நான் வந்திருக்கும் போது பணஞ் சேர்க்குதல் இல்லாத படிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல் நாள்தோறும் தன்தன் வரவுக்குத்தக்க தாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்து வைக்கக்கடவன் ” (I கொரிந்தியர் 16:1–2).

மேலும் தேவன் யார் கொடுக்க வேண்டுமென்றும் சொல்கிறார். “ ஒருவனுக்கு மனவிருப்பமிருந்தால் அவனுக்கு இல்லாததின்படியல்ல அவனுக்கு உள்ளதின்படியே அங்கீகரிக்கப்படும் ” (II கொரிந்தியர் 8:12).

தேவன் நாம் எவ்வளவு அவருக்கு கொடுக்க வேண்டுமென்றும் சொல்கிறார். “ ....அவனவன் தன் வரவுக்குத்தக்கதாக கொடுக்க வேண்டுமாம் ”. சுவிசேஷம் ஒவ்வொருவருக்கும் பிரசங்கிக்கப்படவும், பசியுள்ளோருக்கு ஆகாரம் கொடுக்கப் படவும், நாம் ஒவ்வொரு நற்கிரியையும் செய்ய ஆயத்தமாகும்படிக்கும், நாம் கொடுக்க வேண்டும். எனவே, வேதாகமம் கொடுத்தலைப் பற்றிப் பேசும் ஒரு புத்தகம் என்று காண்கிறீர்கள்.

**புதிய ஏற்பாட்டுக் கொடுத்தலை மீண்டும் பழைய நிலைக்கு கொண்டுவர நீங்கள் முயற்சி எடுக்கத் தயாரா?.**

தேவன் உனக்கு தந்திருந்த ஆசீர்வாதங்களுக்காக அவருக்கு நன்றி செலுத்து, நீ சேர்த்து வைத்திருக்கிற பொருள்களை மற்றவர்களுக்கும் பகிர்ந்து கொடு. உன்னுடைய முயற்சி எவ்வளவு பெரியதாக இருந்தாலும் அதை விட பெரி தானவைகளை, அதிகமானவைகளை உன் இரட்சகர் உனக்குள் தந்திருக்கிறார் என்பதை எப்பொழுதும் நினைவில் கொள்.

கேள்விகள்

1. நாம் படிக்கும் பாடம் என்ன?
2. தங்க வசனப்பகுதியை மேற்கோள் காட்டுக?
3. இந்த பாடத்தின் நோக்கம் என்ன?
4. உங்கள் சிந்தனைக்கான கருத்து என்ன?

முன்னுரை

1. புதிய ஏற்பாட்டின் முதல் அதிகாரம் என்ன சொல்கிறது?
2. இரண்டாம் அதிகாரத்தில் நாம் எதைப்பற்றி படிக்கிறோம்?
3. அந்த பெண்மணியின் மோதிரம் பற்றி ஏதேனும் தெரிவி?
4. சிலருக்கு எது புதுமையாக தெரியலாம்?
5. புதிய ஏற்பாட்டை நாம் படிக்கும் போது நாம் என்ன கற்றுக் கொள்கிறோம்?
6. மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகிய புத்தகங்களில் எத்தனை அதிகாரங்கள் உள்ளன?
7. இந்த புத்தகங்களில் கொடுத்தல் எத்தனை முறை விவாதிக்கப்பட்டுள்ளன?
8. அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் கொடுத்தலைப் பற்றி நாம் வாசிக்கிறோமா?
9. ஆதியாகமத்திலிருந்து வெளிப்படுத்தின விசேஷம் வரை நாம் எதை கற்றுக் கொள்கிறோம்?
10. வெளிப்படுத்தின விசேஷம் எப்படி நிறைவடைகிறது?
11. ஒருவர் கொடுத்தலைப் பற்றி போதிக்காமல் வேதாகமத்தை பிரசங்கிக்க முடியுமா?

இயேசு கொடுத்தலைப் பற்றி போதித்தார்

1. பொக்கிஷத்தைப் பற்றி இயேசு என்ன போதித்தார்?
2. பரலோகம் பற்றி பிரசங்கியார் என்ன சொன்னார்?
3. அப் 20:35ஐ பற்றி விவாதம் செய்?
4. இயேசு வன்மையாக யாரைக் கண்டித்தார்?
5. அந்த விதவையை இயேசு ஏன் பாராட்டினார்?
6. அளவாக அல்லது குறைவாக காணிக்கை கொடுப்பதை இயேசு பாராட்டினாரா?
7. எவ்விதமான கொடுத்தலை இயேசு பாராட்டினார்?
8. மத்தேயு 16:24 ஐ பற்றி விவாதி?
9. மெய்யான வாழ்க்கை என்றால் என்ன?
10. இயேசு அந்த பணக்கார வாலிபனிடம் என்ன சொன்னார்?

புதிய ஏற்பாடு கொடுத்தலைப் பற்றி அதிகமாகப் பேசுகிறது

1. மத்தேயு 6:10யை விளக்குக?
2. பணம் எப்படி வஞ்சனையுள்ளது?
3. மிடாஸின் கதையை கூறு?

4. நம்முடைய திட்டங்களில் சபை எந்த இடத்தில் இருக்க வேண்டும்?

5 பிரசங்கியார் பிரசங்கிப்பதைக் கேட்ட வாலிபனைப் பற்றி சொல்?

6. ஏன் சிலர் விழித்துக் கொண்டால் நலமாயிருக்கும்?

7. நாம் எதை நினைவில் கொள்ள வேண்டும்?

**புதிய ஏற்பாடு பொருளாசையைப் பற்றி போதிக்கிறது**

1. கொலோசெயர் 3:5–6 வசனங்களை வாசித்து விவாதி?

2. டேவிட் லிப்ஸ்கோம்ப் சாத்தானை எப்படி மேற்கொண்டார் என்பதை தெரிவி?

3. டேவிட் லிப்ஸ்கோம்ப் இருபது டாலரை கொடுக்க மனதில் நியமித்த போது என்ன நடந்தது?

4. யாக்கோபு 4:7ஐ விளக்குக?

5. அநேக பண ஆசை உள்ள மக்களுக்கு என்ன சம்பவிக்கிறது?

6. பண ஆசை ஏன் புற்று நோயைப் போன்றது?

7. தன்னிடம் அறிக்கை செய்யப்படாத பாவம் என்று மதப் போதகர் எதை சொன்னார்?

8. பொருளாசை உள்ள அநேக சபை அங்கத்தினர்கள் எப்படியாக மரிப்பார்கள்?

**புதிய ஏற்பாடு கொடுத்தலைப் பற்றி தேவனுடைய அக்கறையை வலியுறுத்துகிறது**

1. யாக்கோபு 1:17யைப் பற்றி விளக்குக?

2. வேதாகமம் நமக்கு என்ன சொல்கிறது?

3. கலாத்தியர் 2:20ஐ விவாதி?

4. பணத்தால் மனிதனுடைய முடிவெடுக்கும் திறனை சீரழிக்க முடியுமா?

5. ஹீட்டருக்கு அருகில் இறந்த அந்த மனிதனை விவரி?

6. II கொரிந்தியர் 9:7ஐ விளக்குக?

7. நாம் எப்போது காணிக்கை கொடுக்க வேண்டும் என்று வேதாகமம் சொல்கிறதா?

8. நாம் எவ்வளவு கொடுக்க வேண்டும் என்று வேதாகமம் சொல்லுகிறதா?

9. நாம் ஏன் கொடுக்க வேண்டும் என்று வேதாகமம் சொல்லுகிறதா?

# பாடம் – நான்கு

# பரலோகத்தில் பொக்கிஷங்களைச் சேர்த்து வைத்தல்

## Laying up Treasures in Heaven

### தங்க வசனப் பகுதி

**"பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டாம். இங்கே பூச்சியும், துருவும் அவைகளைக் கெடுக்கும்; இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள்; பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள்; அங்கே பூச்சியாவது, துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை. உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும் " (மத்தேயு 6:19-21).**

### நோக்கம்

பரலோகத்தில் நாம் சேர்த்து வைக்கும் பொக்கிஷங்களே நம்முடைய உண்மையான பொக்கிஷங்களாயிருக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ள உதவுவது.

### உங்கள் சிந்தனைக்கு

நமக்கு கொடுக்கப்பட்டிருக்கும் ஒரே வாழ்க்கை சீக்கிரமாய் கடந்து போகும். ஆனால், கிறிஸ்துவுக்காக நாம் எதைச் செய்கிறோமோ அது நிலைத்து நிற்கும்.

### முன்னுரை

புதிய ஏற்பாட்டை நாம் படிக்கும்போது ஐந்து வசனங்களில் ஒரு வசனம் பணத்தைப்பற்றி தான் பேசுகிறது. நம்முடைய கர்த்தர் இந்த பூமியில் வாழ்ந்த நாட்களில் அதைப் பற்றி அடிக்கடி பேசியிருக்கிறார். அவருடைய உவமைகளில் சுமார் பாதி உவமைகள் பணத்தைப் பற்றித் தான் பேசுகின்றன. பணத்தைக் கையாளுகிற காரியத்தில் ஞானத்தோடு நடக்காத தம்முடைய சீஷர்களை இயேசு கடிந்து கொண்டார்.

மத்தேயு 25:27 " அப்படியானால், நீ என் பணத்தைக் காசுக்காரர் வசத்தில் போட்டுவைக்க வேண்டியதாயிருக்கிறது; அப்பொழுது நான் வந்து என்னுடையதை வட்டியோடே வாங்கிக் கொள்வேனே என்று சொன்னார்". இந்த மனுஷன் தன்னுடைய பணத்தை ஒழுங்காக முதலீடு செய்யாததன் காரணமாக இயேசு கடிந்து கொள்கிறார். இந்த மனிதன் தேவனுக்கு கணக்கு கொடுக்கவேண்டியிருந்தது போல, நாமும் நம்முடைய பணத்தை எப்படிப் பயன்படுத்தினோம் என்பது குறித்து தேவனிடத்தில் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்.

லூக்கா 19:23, " பின்னை ஏன் நீ திரவியத்தைக் காசுக் கடையிலே வைக்கவில்லை, வைத்திருந்தால் நான் வரும்போது அதை வட்டியோடே வரப்பற்றிக் கொள்வேனே என்றார் ". தன் எஜமானுடைய திரவியத்தை முறையாகப் பயன்படுத்தாதற்காக இந்த மனிதன் கடிந்து கொள்ளப்பட்டான். ஞானமாகப் பணத்தை பயன்படுத்தாதற்காக

தாங்கள் இழந்து போனோம் என்பதை நியாயத்தீர்ப்பு நாளில் எத்தனை பேர் தெரிந்து கொள்ளப் போகிறார்கள்?.

## I பூமிக்குரிய பொக்கிஷங்கள்

கோடிக்கணக்கான மக்கள் பூமியிலே பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கும் படியாக வருடம் முழுக்க ஒவ்வொரு நாளிலும் உழைக்கிறார்கள். அப்படிச் சம்பாதிப்ப பவைகளை அநேகர் கொஞ்ச நாளில் இழந்து போகிறார்கள். துணி துவைத்து, அயர்னிங் செய்யக்கூடிய ஒரு பெண்ணைக் குறித்து எழுதப்பட்டதை நான் படித்திருக் கிறேன். அவள் தனது நாற்பதாண்டு கால உழைப்பில் ரூ. 1,50,000/– சேர்த்து வைத்தி ருந்தாள். அந்தப் பணத்தைக் கொண்டு ஓர் அழகிய சிறிய வீட்டைக் கட்டி குடியேறி னாள். இரண்டு நாளில் அவ்வீடு தீயினால் அழிக்கப்பட்டது. தனக்குண்டான எல்லா வற்றையும் இழந்தாள்.

அநேகர் பங்குச் சந்தைகளிலும், பத்திரங்களிலும் முதலீடு செய்து, பூமியில் பொக்கிஷங்களைச் சேர்த்து வைப்பதின் முட்டாள்தனத்தை குறுகிய காலத்தில் உணர்ந்து கொள்ளுகிறார்கள். பங்குச் சந்தைகளிலும், பத்திரங்களிலும் முதலீடு செய்த பல்லாயிரக்கணக்கானோர் போட்ட பணத்தையே இழந்திருக்கிறார்கள். கிறிஸ்தவ அறத்திற்கு ஏற்ப பூமியில் முதலீடு செய்வது தவறல்ல. ஆனால், ஒருவன் தான் சம்பாதிக் கும் எல்லாவற்றையும் அப்படியே முதலீடு செய்து, ஒவ்வொரு முதலீட்டிலும் லாபம் பண்ணினாலும், இந்த வாழ்க்கையை விட்டுப் போகும் வேளை வந்தால், ஒரு பைசா கூட இல்லாமல் எல்லாவற்றையும் விட்டுச் செல்ல வேண்டியிருக்கும். பணத்தில் மிகவும் குறியாக இருந்த " பியர்பான்ட் மார்கன் " என்ற மனிதன் மரித்த போது, " அவர் எவ்வளவு விட்டுச் சென்றார் " என்று ஒருவர் கேட்டார். அதற்கு மற்றொருவர், " எல்லா வற்றையும் " என்று பதில் சொன்னார். பூமியில் நீங்கள் முதலீடு செய்யும் ஒவ்வொன் றையும், நீங்கள் மரிக்கும் போது, இங்கேயே விட்டுச் செல்லுவீர்கள் என்பது நினைவி லிருக்க வேண்டும்.

## II பரலோக முதலீடு

நாம் இப்போது சில உண்மைகளை அலசுவோம். இயேசு நாம் பரலோகத்தில் பொக்கிஷங்களை சேர்த்து வைக்க வேண்டும் என்று கட்டளையிட்டிருப்பதாலும், பொக்கிஷங்களை நாம் இவ்வுலகத்தை விட்டுப் போகையில் நம்மோடு எடுத்துச் செல்ல முடியாமல் இருப்பதாலும், நாம் அதை எப்படிச் செய்வது என்பது பற்றி சிந்திப்பது அவசியமாயிருக்கிறது. ஒரு தனிப்பட்ட நபர் அவர் உயிரோடிருக்கும் நாளில் பணத்தை பதுக்கி வைத்து அவர் மரிக்கும் போது நான் என் பொக்கிஷங்களை என்னோடு கொண்டு செல்ல விரும்புகிறேன் என்று தன் உயிலில் எழுதி வைக்கிறார். ஆனால், பொக்கிஷங்களை நாம் இந்த பூமியில் இருந்து கடந்து போகும் போது கொண்டு செல்ல முடியாது. மாறாக, நாம் இந்த உலகத் திலிருந்து கடந்து செல்வதற்கு முன்பாக அதை நாம் நமக்காக அனுப்பி வைக்க வேண்டும்.

நியாயத்தீர்ப்பின் நாளிலே ஓர் உண்மையுள்ள கிறிஸ்தவனைப் பார்த்து கிறிஸ்து "இவைகள் எல்லாம் உன் பொக்கிஷங்கள்" என்று சொன்னால் அது எவ்வளவு அருமையாக இருக்கும்!. ஓர் உண்மையுள்ள தேவனுடைய பிள்ளை தொடர்ந்து பரலோகத்தில் பொக்கிஷங்களை சேர்த்து வைப்பது ஆசீர்வாதமானது. ஒவ்வொரு கர்த்தருடைய நாளின் போதும் நாம் கர்த்தருக்கென்று காணிக்கைக் கொடுக்கும் போது அது ஞானமான முதலீடு என்பதைப் பற்றிய அறிவு நமக்கு பூரண நிச்சயத்தைக் கொடுக்கிறது, ஏனென்றால், பரலோகத்தில் நாம் சேர்த்து வைப்பவைகளை நம்மிடமிருந்து யாராலும் எடுத்துக் கொள்ளவே முடியாது. உபத்திரவத்தால் அதை அழிக்க முடியாது. தந்திரமான நேர்மையற்ற மனிதர்கள் நம்மை மேற்கொள்ள முடியாது. யுத்தங்கள், பஞ்சங்கள், வெள்ளப்பெருக்குகள், வியாதிகள், மரணங்கள் கூட நம்மை அதினின்று பிரிக்க முடியாது.

சுவிசேஷத்தை பரப்புவதற்காகவோ, அநாதைகளை போஷிப்பதற்காகவோ, கிறிஸ்தவத்தின் காரியங்களை மேம்படுத்துவதற்காகவோ நான் கொடுக்கும் ஒவ்வொரு பணமும் பரலோக முதலீடாக இருக்கிறது. அதை நம்மிடமிருந்து யாரும் எடுத்துக் கொள்ள முடியாது. ஒரு சகோதரனுடைய விசுவாசம் பலமாகி மேற்சொன்ன காரியங்களில் ஒன்றிற்கு பொருளாதார உதவி செய்யும் போது அவர் பரலோகத்தில் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கிறார். அப்போது அவரைக் கடிந்து கொண்டோ, அல்லது மன்றாடியோ, ஊழியத்திற்கென்று கொடுக்கச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. அப்போது மோசே சொன்னது போல நாமும் சொல்ல முடியும். "அப்பொழுது மோசே இனி புருஷர்களாவது ஸ்திரீகளாவது பரிசுத்த ஸ்தலத்துக்கென்று காணிக்கையாக ஒரு வேலையும் செய்ய வேண்டாம் என்று பாளயம் எங்கும் கூறும்படி கட்டளையிட்டான். இவ்விதமாய் ஜனங்கள் கொண்டு வருகிறது நிறுத்தப்பட்டது" (யாத். 36:6) வாரந்தோறும் நாம் பரலோகத்தில் முதலீடு செய்கிறதாக நாம் திட்டமிட்டுக் கொடுத்தால் நம்முடைய காணிக்கை இரண்டு மடங்கு அல்லது மூன்று மடங்கு இன்னும் பல மடங்கு அதிகமாகும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

சில நாட்களுக்கு முன்பு செய்தித்தாளிலே இப்படியாக ஒரு செய்தி வந்தது. அந்தக் கடிதத்தை எழுதியவர் பரலோக முதலீட்டில் நம்பிக்கை உடையவர், அவர் சொன்னது, "அடுத்த ஞாயிறு நீங்கள் பரலோகம் பற்றிப் பேச இருக்கிறீர்கள்". பரலோகத்தில் எனக்கு ஐம்பது வருடங்களாக ஆஸ்தி இருப்பதால் அந்த இடத்திற்கு செல்வதற்கு நான் விருப்பமுடையவனாயிருக்கிறேன். இதை நான் ஒப்புக்குச் சொல்லவில்லை. அரை நூற்றாண்டுக்கும் மேலாக, எனக்காக வீட்டைக் கட்டி கொண்டிருக்கின்ற இவ்வுலகத்தின் மிகச்சிறந்த கட்டிடப் பொறியாளராகிய தேவனிடம் அனுப்பிக் கொண்டிருக்கிறேன். தேவன் எனக்காகக் கட்டும் வீட்டை திரும்பக் கட்டுவதற்கோ அல்லது பழுது பார்ப்பதற்கோ அவசியமில்லை. ஏனென்றால், அது எனக்கு ஏற்றதாயிருக்கும். அது காலத்தால் அழியாது. காலங்களின் கன்மலையில் அது அஸ்திபாரம் போடப்பட்டிருக்கிறபடியால் பூச்சிகள் ஒன்றும் அஸ்திபாரத்தை சேதப்படுத்தாது. அக்கினியால் அதை அழிக்க முடியாது. வெள்ளப்பெருக்கு ஒன்றும் அதை அடித்துச் செல்லாது. அதன் கதவுகளில் தாழ்பாள்களோ, பூட்டுகளோ வைக்கப்படமாட்டாது. தீய

எண்ணம் கொண்ட எந்த ஒரு மனிதனும் என்னுடைய குடியிருப்பு இருக்கிற இடத்திற்குள் பிரவேசிக்கவே முடியாது. நான் நிராகரிக்கப்படுவேனோ என்ற பயமின்றி நித்திய சமாதானத்திற்காக அந்த வீட்டிற்குள் பிரவேசித்து நிலைத்திருக்க அவ்வீடு கிட்டத்தட்ட ஆயத்தமாகி விட்டது.

நான் சீக்கிரமாக பயணிக்கப் போகிற இடத்திற்கு இடையில் ஆழமான நிழல் பள்ளத்தாக்கு ஒன்று உள்ளது. இந்த பள்ளத்தாக்கை நான் கடக்காமல் அந்த பட்டணத்திலுள்ள என் வீட்டை சென்றடைய முடியாது. ஆனால், நான் அதைப் பற்றி பயப்படவில்லை. ஏனென்றால், முன்பு இதே பள்ளத்தாக்கின் வழியாகத்தான் என்னுடைய சிறந்த நண்பர் வெகு காலத்துக்கு முன்பு கடந்து சென்று இருளை விரட்டிவிட்டார்.

ஐம்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பாக நாங்கள் பரிச்சயமானதிலிருந்து வாழ்க்கையின் எல்லா நிலையிலும் அவர் என்னோடு இருந்தார். அவர் என்னைக் கைவிடுவதுமில்லை தனியாக விடுவதுமில்லை என்கிற அவருடைய வாக்குத்தத்தத்தை அச்சிடப்பட்ட நிலையிலே வைத்துள்ளேன். இந்த ஆழமான பள்ளத்தாக்கு வழியாய் கடந்து செல்லும் போது அவர் என்னோடிருப்பார், அவர் என்னோடிருக்கும் போது நான் வழிதப்பி போகமாட்டேன். பரலோகம் செல்லுவதற்கான என்னுடைய சீட்டில் பயணத்திற்கான தேதி குறிப்பிடப்படவில்லை. திரும்பி வருவதற்கான சீட்டும் இல்லை, சாமான்கள் எடுத்துச் செல்வதற்கும் அனுமதி கொடுக்கப்படவில்லை ஆம், நான் போக ஆயத்தமாயிருக்கிறேன். அடுத்த ஞாயிறு நீங்கள் இங்கே பேசும் போது நான் இல்லாமலிருக்கலாம். ஆனால், பரலோகில் நாம் சந்திக்கலாம் என்று எழுதியிருந்தார்.

## III நம்முடைய பொக்கிஷங்களைப் பற்றி நம் ஆண்டவரின் புத்திமதி

1. இயேசு பூச்சி கெடுத்துப் போடும் பொருள்களை மனிதர்கள் தவிர்க்க வேண்டும் என்று சொல்கிறார். கிழக்கத்திய நாடுகளில் மனிதனுடைய செல்வத்தின் ஒரு பகுதியாக அருமையான விஸ்தாரமான நீண்ட உடைகள் கருதப்படும். எலிசாவின் வேலைக்காரனாகிய கேயாசி நாகமானிடமிருந்து மறுக்கப்பட்டதைப் பெற்றுக் கொள்ள விரும்பின போது, அதாவது தன்னுடைய எஜமான், நாகமானை குணப்படுத்தின பிறகு, கேயாசி நாகமானி டம், ஒரு தாலந்து வெள்ளியையும், இரண்டு மாற்று வஸ்திரங் களையும் கேட்டு இருந்தான். II ராஜாக்கள் 5:22. ஆகான், பாவம் செய்ய காரணமாயிருந்தவைகளுள் நேர்த்தியான பாபிலோனிய வஸ்திரமும் இருந்தது (யோவா 7:21). எளிதில் அழிந்து போகக்கூடிய பொருள்களில் சிந்தையை வைப்பது அவர்களுக்கும் மதியீனமாயிருந்தது, அதைப் போலவே நமக்கும் மதியீனமாயிருக்கிறது.

2. இயேசு, துரு அழிக்கக்கூடிய பொருள்களைத் தவிர்க்க வேண்டும் என்று அவர்களுக்குச் சொன்னார். துரு என்கிற பதமானது தின்று போடுதல் என்கிற அர்த்தத்தைக் கொடுக்கிறது. கிழக்கத்திய நாடுகளில் ஒரு மனிதனுடைய செல்வம் அவன் களஞ்சியங்களில் சேர்த்து வைத்த தானியங்களை உள்ளடக்கியது. ஆனால், அந்த

தானியங்களை பூச்சியானது தின்று போடும். அதைப் போலவே எலிகளும், சுண்டெலி களும் படையெடுத்து வந்து அந்த களஞ்சியம் கெட்டுப் போகும் வரைக்கும், அழிக்கப் படும் வரைக்கும் வேலையைக் காட்டும். நிலையானதென்று எதையும் சொல்ல முடியாது.

3. இயேசு, திருடர்கள் கன்னமிட்டு திருடுகிற பொருள்களைத் தவிர்க்க வேண்டும் என்று அவர்களுக்குச் சொன்னார். பாலஸ்தீன தேசத்தில் பெரும்பாலான வீடுகளின் சுவர்கள் களிமண்ணினால் கட்டப்பட்டிருக்கும். திருடர்கள் அடிக்கடி அந்த சுவர்களைத் நோண்டி அதை உடைத்துப் போட்டு உள்ளே சென்று திருடிச் செல்வார்கள். இங்கே கரியம் என்னவென்றால், ஒரு மனிதன் தன்னுடைய வீட்டில் சேர்த்து வைத்த பொன் போன்ற பொக்கிஷங்களை விட்டு விட்டு ஒரு நாள் வெளியூருக்குச் சென்று விட்டு மறுபடி யும் திரும்பி வந்து காண்பதற்கு முன் திருடர்கள் அந்த சுவர்களை இடித்து பொக்கிஷங் களை எடுத்துச் செல்வார்கள். நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்ற இந்தக் காலகட்டத்தி லும் நம்முடைய பொக்கிஷங்கள் எல்லாம் திருடர்களுக்குட்பட்டதேயாகும் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

யூதமார்க்கத்திற்கு மனமாற்றம் அடைந்த மோனோபாஸ் என்கின்ற ராஜா வைப் பற்றி ஒரு கதை உண்டு. மோனோபாஸ் ராஜா பஞ்சத்தின் போது தன்னுடைய பொக்கிஷங்களை எல்லாம் ஏழைகளுக்கு தான தர்மம் பண்ணினார். அப்போது அவருடைய சகோதரர்கள் அவரைப் பார்த்து " உம்முடைய பிதாக்கள் அவர்களுடைய பிதாக்களைக் காட்டிலும் அதிகமான பொக்கிஷங்களைச் சேர்த்தனர். ஆனால், நீயோ உன்னுடையதையும், அவர்களுடையதையும் தொலைத்து விட்டாய் " என்று சொன்னார் கள். அப்போது ராஜா அவர்களை நோக்கி, " என் பிதாக்கள் என்னைக் காட்டிலும் குறைவாகத்தான் பொக்கிஷங்களைச் சேர்த்தனர். அவர்கள் மனித கை ஆட்சி செய்யும் இடத்தில் தான் பொக்கிஷங்களைச் சேர்த்தனர் ஆனால், நானோ மனித கை ஆட்சி செய்யாத இடத்தில் பொக்கிஷங்களைச் சேர்த்து வைத்திருக்கிறேன்; மேலும் என் பிதாக்கள் வட்டி கொடுக்காத பொக்கிஷங்களைத் தான் சேர்த்து வைத்தனர். ஆனால், நானோ வட்டி தரக்கூடிய பொக்கிஷங்களைச் சேர்த்து வைத்திருக்கிறேன்; என் தகப்பன் பணத்தினாலான பொக்கிஷங்களைச் சேர்த்து வைத்தார். நானோ ஆத்து மாக்களில் பொக்கிஷங்களைச் சேர்த்து வைத்திருக்கிறேன்; என் தகப்பன் இந்த உலகத்தில் பொக்கிஷங்களைச் சேர்த்து வைத்தார்; நானோ வருகின்ற உலகத்திற்காக பொக்கி ஷங்களைச் சேர்த்து வைக்கிறேன் " என்றார்.

## IV பாதுகாப்பான முதலீடு

என்னுடைய வாழ்க்கையில் நான் எந்த லாபத்தொகையும் தராத பல முதலீடு களை செய்திருக்கிறேன். ஒரு முறை ஒரு லட்சம் கடனாகப் பெற்று ஒரு வியாபாரத்தில் போட்டேன். ஆனால், ஒவ்வொரு சிறு தொகையையும் இழந்து விட்டேன். கடந்த பத்து ஆண்டுகளில் ஐந்து காப்பீட்டு நிறுவனங்களில் உள்ள பங்குகளை வாங்கியிருந்தேன். ஆனால், இன்று அந்த பங்குகள் எல்லாம் இறங்கு முகத்தில் உள்ளது. என்னைப்பார்த்து சிலர், நான் ஒரு நல்ல வியாபாரி அல்ல என்று சொல்கிறார்கள். இல்லை நான் ஒரு நல்ல வியாபாரிதான். ஏனென்றால், அதிலிருந்து நான் அநேக பாடங்களைக் கற்றுக்

கொண்டதால் இப்போது நான் பரலோகத்தில் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கிறேன். இப்போது அந்த பணத்தில் நான் வாழ்கின்ற நாளிலும் பல மடங்காகப் பெற்றுக் கொண்டிருக்கிறேன். எனவே, உங்கள் பொக்கிஷம் பாதுகாப்பாக இருக்க வேண்டுமென்றால், அவைகளை பரலோகத்தில் சேர்த்து வையுங்கள். மத்தேயு 19:27−29 " அப்பொழுது பேதுரு அவரை நோக்கி; இதோ, நாங்கள் எல்லாவற்றையும் விட்டு உம்மைப் பின்பற்றினோமே; எங்களுக்கு என்ன கிடைக்கும் என்றான்; அதற்கு இயேசு, மறுஜென்ம காலத்திலே மனுஷகுமாரன் தம்முடைய மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கும் போது என்னைப் பின்பற்றின நீங்களும் இஸ்ரவேலின் பன்னிரெண்டு கோத்திரங்களையும் நியாயந்தீர்க்கிறவர்களாகப் பன்னிரெண்டு சிங்காசனங்களின் மேல் வீற்றிருப்பீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். என் நாமத்தினிமித்தம் வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனோ, அவன் நூறத்தனையாய் அடைந்து, நித்திய ஜீவனையும் சுதந்தரித்துக் கொள்வான் " என்றார். நான் பரலோகம் செல்ல விரும்புவதற்கு அநேக காரணங்கள் உண்டு. அவைகளுள் ஒன்று, என்னுடைய பொக்கிஷங்களை காண வேண்டும் என்பதாகும். " அழியாததும், மாசற்றதும், வாடாததுமாகிய ஜீவகிரீடம் பரலோகத்தில் உங்களுக்கு வைக்கப்பட்டிருக்கிறதா? " (I பேது 1:4) பரலோகத்தில் சேர்த்து வைக்கும் பொக்கிஷங்கள் தான் மெய்யானதும், பாதுகாப்பானதாகவும் இருக்கிறது.

### V பொக்கிஷங்களின் வல்லமை

பொக்கிஷங்களுக்கு மனிதனின் இருதயத்தைக் கட்டுப்படுத்தும் வல்லமை உள்ளது. இந்த உண்மை, இயேசுவை விட வேறு யாருக்கும் சிறந்த முறையில் தெரியாது. இதன் காரணமாகத்தான் இயேசு இப்படியாகச் சொன்னார். " ஒரு மனிதனுடைய பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே அவன் இருதயமும் இருக்கும் ". என்று பொக்கிஷம் ஒருவருடைய இருதயத்தைப் பின் தொடர்வதில்லை. மாறாக, இருதயம் தான் பொக்கிஷங்களைப் பின் தொடர்கிறது என்பதைக் கவனியுங்கள்.

ஒரு சகோதரன் சேமித்துப் பதுக்கி வைத்த பணத்தை பூமிக்குரியவைகளில் முதலீடு செய்து சபைக்கோ, கிறிஸ்தவத்தைப் பரப்புவதற்கோ, மற்ற நற்கிரியைகளுக்கோ உதவி செய்யாவிட்டால் இந்த மனிதனுக்குப் பரலோகில் பொக்கிஷம் இல்லாததால், பரலோகத்தைப் பற்றிய அக்கறை ஏதுமிருக்காது.

நான் பொருளாதார வீழ்ச்சியின் போது அலபாமாவில் உள்ள ஒரு பண்ணை வீட்டில் வளர்க்கப்பட்டேன். எங்களிடம் சில மாடுகள் இருந்தது. அவைகளுள் ஒன்று (புல் வெளியின் பின்புறத்தில்) கன்றுக் குட்டியை ஈன்றெடுக்கும் போது, மாட்டை அதன் தொழுவத்திற்கு நாங்கள் அழைத்துச் செல்ல வேண்டியதாயிருந்தது. அப்போது, நான் சீக்கிரமாக மாட்டை தொழுவத்திற்கு அழைத்துச் செல்ல கற்றுக் கொண்டேன். நான் கன்றுக்குட்டியை (மாட்டின் பொக்கிஷத்தை) மாட்டின் முன் எடுத்துச் செல்வேன். மாடு அப்போது அதன் பின் செல்லும். தேவன் உண்டாக்கின எல்லாமே அதன் பொக்கிஷத்தை பின் தொடரும். ஒரு மனிதன் பரலோகத்தில் பொக்கிஷத்தை சேர்த்து வைக்க

வில்லையென்றால் அதில் அவன் விருப்பமாயிருப்பது முடியாத காரியம். சகோதரனே, சகோதரியே நீங்கள் பரலோகத்தில் பொக்கிஷங்களை சேர்த்து வைக்கிறீர்களா? கடைசி மட்டும் கால தாமதம் செய்ய வேண்டாம். இன்றே தொடங்குங்கள். இந்தத் தலை முறையிலேயே இந்த உலகத்தில் சுவிசேஷம் அறிவிப்பதற்கு நம்மிடம் தேவையான செல்வம் இருக்கிறது.

புதிய ஏற்பாட்டின்படியான கொடுத்தலை மீட்டமைக்க நீங்கள் உதவி செய்வீர்களா?

**கேள்விகள்**

1. இந்தப் பாடத்தின் பொருள் என்ன?
2. தங்க வசனப்பகுதியை மேற்கோள் காட்டுக?
3. தங்க வசனப்பகுதியை விரிவாக விளக்குக?
4. உங்கள் சிந்தனைக்கான கருத்து என்ன?
5. இன்றைய பாடத்திற்கான நோக்கம் என்ன?

**முன்னுரை**

1. பணத்தைப் பற்றி புதிய ஏற்பாடு எவ்வளவாய்ப் பேசுகிறது?
2. எதற்காக இயேசு தம்முடைய சீஷர்களைக் கடிந்து கொண்டார்?
3. மத்தேயு 25:27ஐ விளக்குக?
4. லூக்கா 19:23 உள்ள கடிந்து கொள்ளுதலை விளக்குக?
5. நியாயத் தீர்ப்பு நாளிலே அநேகர் எதை கற்றுக் கொள்ளுவார்கள்?

**பூமிக்குரிய பொக்கிஷங்கள்**

1. ஏன் அநேகர் அல்லும் பகலும் வேலை செய்கிறார்கள்?
2. பெண்மணி காப்பற்றப்பட்ட கதையை விவரி?
3. பங்குகள் மற்றும் பத்திரங்களின் அபாயத்தை விளக்குக?
4. ஒரு மனிதன் மரிக்கும் போது எதை விட்டுப் போகிறார்?
5. "பியர்பான்ட் மார்கன்" பற்றி விவரி?

**பரலோக முதலீடு**

1. பரலோக பொக்கிஷங்களைப் பற்றி நாம் ஏன் அக்கறையாய் இருக்க வேண்டும்?
2. கிறிஸ்து சொல்கிற எதை ஓர் உண்மையுள்ள கிறிஸ்தவன் கேட்பார்?
3. ஒரு கிறிஸ்தவனுக்கு என்ன நிச்சயம் இருக்கிறது?
4. யுத்தங்கள், பஞ்சம், வெள்ளப் பெருக்குகள் பற்றி எழுதுக?

5. கொடுத்தலைப் பற்றி பிரசங்கியார்கள் எப்போது படித்து கொள்ளக்கூடாது?.
6. யாத்திராகாமம் 36:6ஐ விளக்குக?
7. அந்த மனிதன் எழுதின கடிதத்தை விளக்குக?

## நம்முடைய பொக்கிஷங்களைப் பற்றி நம் ஆண்டவரின் அறிவுரை

1. பூச்சிகளைப் பற்றி சொல்லப்பட்டிருப்பவைகளை விவாதி?
2. துருவைப் பற்றி சொல்லப்பட்டிருப்பவைகளை விவாதி?
3. திருடர்களைப் பற்றி சொல்லப்பட்டிருப்பவைகளை விவாதி?
4. அன்றைய நாட்களின் கட்டிடங்களை விவரி?
5. ராஜா மேனோபாஸின் கதையை விவரி?

## பாதுகாப்பான முதலீடு

1. நம்முடைய அநேக முதலீடுகளைப் பற்றி எழுதுக?
2. பரலோகத்திலிருந்து நம்முடைய பொக்கிஷங்களுக்கு நாம் என்ன வட்டியைப் பெறுகிறோம்?
3. மத்தேயு 19:27–30 வசனங்களை வாசித்து விவாதி?
4. இனிவரும் உலகத்தில் நாம் எதை பெற்றுக் கொள்வோம்?
5. 1 பேதுரு 1:4ஐ விளக்குக?

## பொக்கிஷங்களின் வல்லமை

1. நம்முடைய பொக்கிஷங்கள் எதைக் கட்டுப்படுத்துகிறது?
2. ஒரு மனிதனுடைய இருதயம் பற்றி இயேசு என்ன சொன்னார்?
3. பரலோகத்தைப் பற்றி யார் அக்கறைப்படுவதில்லை?
4. ஒரு பசு ஏன் அதன் கன்றுக்குட்டியை பின் தொடரும்?
5. அதிக காலம் தாழ்த்துவதின் அபாயம் என்ன?

# பாடம் – ஐந்து

# வசன அடிப்படையிலான கொடுத்தலுக்கு பலன்

## Rewards for scriptural Giving

### தங்க வசனப்பகுதி

**உன் ஆகாரத்தை தண்ணீர்கள் மேல் போடு; அநேக நாட்களுக்குப் பின்பு அதின் பலனைக் காண்பாய் (பிரசங்கி 11:1).**

### நோக்கம்

கொடுத்தல் ஒரு போதும் ஒருவரை தரித்திரராக்காது என்பதையும். மாறாக, அவரை ஐசுவரியவானாக்கும் என்பதையும் மற்றும் கொடுத்தல் காரியத்தில் நாம் தேவனைத் தோற்கடிக்க முடியாது என்பதையும் காட்டுவது.

### உங்கள் சிந்தனைக்கு

கிரியைகள் இல்லாத விசுவாசத்தைத் தேவன் மதிப்பதில்லை, அதுபோல், விசுவாசம் இல்லாத கிரியைகளை தேவன் ஏற்று பலன் அளிப்பதில்லை.

### முன்னுரை

தேவன் வேதாகமத்தில் ஏராளமான வாக்குத்தத்தங்களை வைத்திருக்கிறார். எந்த ஒரு வாக்குத்தத்தத்தின் மதிப்பும் அதை கொடுக்கிறவரின் மேன்மை மற்றும் நேர்மையைப் பொறுத்து தான் அமையும். மகாமேன்மையும் அருமையுமான வாக்குத் தத்தங்களை தேவன் அவருடைய பிள்ளைகளுக்குக் கொடுத்திருக்கிறார். " தம்முடைய மகிமையினாலும், காருண்யத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினா லே ஜீவனுக்கும், தேவ பக்திக்கும் வேண்டிய யாவற்றையும் அவருடைய திவ்ய வல்ல மையானது நமக்குத் தந்திருக்கிறது ". (I பேதுரு 1:3) " தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல்; ஒரு வரும் கெட்டுப் போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார். (II பேதுரு 3:9) " பொய் சொல்ல தேவன் ஒரு மனிதர் அல்ல; மனம் மாற அவர் ஒரு மனுபுத்திரனும் அல்ல; அவர் சொல்லியும் செய்யா திருப்பாரா? அவர் வசனித்தும் நிறைவேற்றாதிருப்பாரா? " (எண். 23:19).

தேவன் பண்ணியிருக்கிற மகா பெரிய, விலையேறப் பெற்ற வாக்குத்தத்தங் களுள் பெரும்பாலனவைகள் நாம் கர்த்தருக்கு கொடுப்பது சம்பந்தமானவைகள். ஒரு மனிதன் " நான் வேதாகமத்தை விசுவாசிக்கிறேன் " என்று சொல்லும் போது, அவன் நான் " தேவனுடைய வாக்குத்தத்தங்களை விசுவாசிக்கிறேன் " என்றும் சொல் கிறார். நாம் இக்கருத்தை மிக ஆழமாக படிப்பதற்கு முன்பு, நான் உங்களிடத்தில் கேள்வி யொன்றை கேட்க விரும்புகிறேன், தேவன் தம்முடைய வாக்குத்தத்தங்களை நிறை வேற்றுவாரா? இதைவிட வேறு முக்கியமான கேள்வி எதுவும் இல்லை என்று எனக்குத் தெரியும். எல்லாமே இதைச் சார்ந்து தான் இருக்கிறது. தேவன் தம்முடைய வாக்குத் தத்தத்தை நிறைவேற்றினால், வேதாகமம் உண்மையானதாயிருக்கும் மற்றும்

அவருடைய வார்த்தைகளையும் நாம் நம்ப முடியும். நம்முடைய பாடத்தில், நம்முடைய பணத்தைக் கர்த்தருடைய வேலையில் முதலீடு செய்வது சம்பந்தமாக செய்திருக்கிற வாக்குத்தத்தங்களை நாம் பார்ப்போம்.

## I தேவன் வாக்குத்தத்தம் செய்த சில காரியங்கள்

" பூமியுள்ள நாளளவும் விதைப்பும், அறுப்பும், சீதளமும், உஷ்ணமும், கோடை காலமும், மாரிகாலமும், பகலும், இரவும் ஒழிவதில்லை ". (ஆதியாகமம் 8:22) இது, வருடங்களின் பருவத்தைப் பற்றி தேவன் செய்திருக்கிற வாக்குத்தத்தம் ஆகும். தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்ததிலிருந்து இந்த வாக்குத்தத்தம் தவறின தேயில்லை. அது போலவே, தேவன் இந்த பூமியை இனி ஒரு போதும் ஜலப்பிரயத்தி னால் அழிப்பதில்லை என்றும் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். (ஆதியாகமம் 9:11)

" நீங்கள் பண ஆசையில்லாதவர்களாய் நடந்து, உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள்; நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கை விடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறார் ". (எபிரயர் 13:5). " மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடு கூட அதற்குத் தப்பிக் கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்கு வார் " (I கொரிந்தியர் 10:13) ஒரு மனிதன் கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து, தன்னு டைய பாவங்களிலிருந்து மனந்திரும்பி, இயேசுவின் நாமத்தை அறிக்கை செய்து கிறிஸ்துவின் சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றால் அவனுடைய பாவங்களை மன்னிப்பதாக வாக்குத்தத்தம் செய்திருக்கிறார்.

ஞானஸ்நானம் சம்பந்தமாக தேவன் கொடுத்திருக்கும் வாக்குத்தத்தங்களை தேவன் நிறைவேற்றுவார் என்று விசுவாசிக்கும் சபை அங்கத்தினர்கள், அதே தேவன் கொடுத்தல் சம்பந்தமான வாக்குத்தத்தங்களையும் நிறைவேற்றுவார் என்று விசுவா சித்தால் குறுகிய காலத்தில் இந்த உலகத்தில் சுவிசேஷத்தை அறிவித்து விடலாம். மீண்டும், மீண்டும் சொல்லுகிறேன், உற்சாகமாய்க் கொடுக்கிறவர்களை தேவன் அபரி மிதமாய் ஆசீர்வதிப்பதாக வாக்குக் கொடுத்திருக்கிறார். நீங்கள் இதை நம்புகிறீர் களா?.

## II பழைய ஏற்பாட்டில் தேவன் செய்திருக்கிற வாக்குத்தத்தங்கள்

" உன் பொருளாலும், உன் எல்லா விளைவின் முதற்பலனாலும் கர்த்தரைக் கனம் பண்ணு, அப்போது உன் களஞ்சியங்கள் பூரணமாய் நிரம்பும்; உன் ஆலைகளில் திராட்சை ரசம் புரண்டோடும் ". (நீதிமொழிகள் 3:9–10)

ஒவ்வொரு கட்டளைக்கும் அதோடு தொடர்புடைய ஆசீர்வாதம் உண்டு. நம்முடைய விளைச்சல்களில் தேவனுக்கு முதலிடம் கொடுத்தால் நம்முடைய களஞ்சி யங்களை பூரணமாய் நிரப்புவதாக வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். இதை நான் முழு மனதோடு விசுவாசிக்கிறேன். அதோடு கூட இது உண்மை என்பதை என்னுடைய அனு பவத்தாலும் அறிகிறேன். " உதாரகுணமுள்ள ஆத்துமா செழிக்கும்; எவன் தண்ணீர்

பாய்ச்சுகிறானோ அவனுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும் " (நீதி. 11:25). இந்த வாக்கியத்தை சொல் அர்த்த ரீதியில் எடுத்திருந்தால், வெகு குறைந்த மக்களே செழிப்பாக இருப்பார்கள்.

" உன் ஆகாரத்தைத் தண்ணீர்கள் மேல் போடு; அநேக நாட்களுக்குப் பின்பு அதின் பலனைக் காண்பாய் ". (பிரசங்கி 11:1) " ஆடம் கிளார்க் " (Adam Clark) இந்த வசனம் சம்பந்தமாகச் சொல்லும் போது, இது நெல் விதைப்பதை மறைமுகமாகப் பேசுகிறது என்கிறார். நெல் மணியானது சேற்றில் விதைக்கப்படுகிறது. இது கால்நடைகளின் பாதங்களால் மிதிக்கப்படுகிறது. இப்படியாக இந்த விதையானது வேர்கொண்டு வளர்ந்து அபரிதமான அறுவடையைக் கொடுக்கிறது. நாம் கர்த்தருக்கு கொடுக்கும் போது அது நல்ல நிலத்தில் விதைக்கப்படும் விதையாயிருக்கிறது.

" என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படி தசமபாகங்களையெல்லாம் பண்ட சாலையிலே கொண்டு வாருங்கள்; அப்பொழுது நான் வானத்தின் பல கனிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற்போகு மட்டும் உங்கள் மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்க மாட்டேனோவென்று அதினால் என்னை சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளில் கர்த்தர் சொல்லுகிறார் ". (மல்கியா 3:10) இதை முயற்சி செய்து பார்த்த மனிதன் இதை உண்மை என்று தன் அனுபவத்தில் அறிந்து கொள்கிறான். இதை முயற்சி செய்து பார்க்காத மனிதர் இது உண்மை தான் என்று சொல்ல அறியாதவனாயிருக்கிறார்.

ஆறு மாதங்களுக்கு முன்பு மரித்துப்போன ஒருவருடைய மனைவியாகிய ஒரு விதவை, ஒரு சுவிசேஷப் பிரசங்கியாரிடம் வந்து, அவள் கர்த்தருக்குக் கொடுப்பது சம்பந்தமாக திட்டமிடுவதில் உதவி செய்யுமாறு கேட்டுக் கொண்டாள். அவள் வாரந் தோறும் ஐந்தாயிரம் ரூபாய் தருவதாக தீர்மானம் செய்தாள். இது அவள் உருளைக் கிழங்கு பயிர் செய்வதற்கு முன்பு எடுத்த தீர்மானம். அறுவடைக்கு பிறகு என்னுடைய நண்பரான அந்த பிரசங்கியார் உதாரத்துவமாய் கொடுத்ததற்காக அந்த பெண்ணைப் பாராட்டினார். அந்தப் பெண் இப்படியாகச் சொன்னாள். இந்தப் பண்ணையின் வரலாற்றில் மிகப்பெரிய மகசூலை நாங்கள் கண்டிருக்கிறோம், நான் எப்படி கொடுக்க வேண்டுமோ அப்படி நான் கொடுக்க ஆரம்பித்தபோது, தேவன் என் மீது ஆசீர்வாத மழையை பொழியப் பண்ணினார். என் களஞ்சியங்கள் எல்லாம் நிரம்பி வழிகிறது என்று சொன்னாள்.

இதைத் தான் தேவன் உங்களிடமும் என்னிடமும் எதிர்பார்க்கிறார், நீ எப்படி கொடுக்க வேண்டுமோ அப்படிக் கொடு. அப்போது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து உங்களுக்கு மழையையும் செழிப்புள்ள காலங்களையும் தந்து உங்கள் நெற்களஞ்சியங்கள் கொள்ளாதபடியாக தானியங்களால் நிரப்பமாட்டேனோவென்று என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று கர்த்தர் சொல்கிறார். கர்த்தருக்குக் கொடுப்பது நாம் செய்தே ஆக வேண்டிய ஒரு காரியம்.

நாம் கொடுக்கும் போது நம்மை ஆசீர்வதிப்பதாக வாக்குத்தத்தம் செய்திருக்கிற தேவன், நாம் கொடுக்காத போது நம்மை சபிப்பதாகவும் சொல்லியிருக்கிறார். எனவே, நாம் கொடுக்கும் போது தேவன் நம்மை ஆசீர்வதிக்கிறார், நாம் கொடுக்காத

போது நம்மை சபிக்கிறார். கர்த்தருடைய சபையின் அங்கத்தினர்கள் கர்த்தருக்குக் கொடுக்க மறுப்பதால் அனுதினமும் சபிக்கப்படுகிறவர்களாயிருக்கிறார்கள்.

## III புதிய ஏற்பாட்டில் தேவன் பண்ணியிருக்கிற வாக்குத்தத்தங்கள்

நாம் இதுகாறும் விவாதித்த வாக்குத்தத்தங்களெல்லாம் பழைய ஏற்பாடு தானே என்ற ஆட்சேபணை இருக்குமானால், நாம் இப்போது புதிய ஏற்பாட்டு வாக்குத்தத்தங் கள் பற்றிப் பார்ப்போம். " முதலாவது தேவனுடைய ராஜ்ஜியத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்கு கூட கொடுக் கப்படும் " (மத். 6:33). இந்த வசனப்பகுதி கிறிஸ்து உணவு, உடை மற்றும் சரீரப்பிர காரமான நன்மைகளைப் பற்றி பேசுவதாகத்தான் இருக்கிறது. இங்கே சீஷர்கள் வாழ்க்கையின் சரீரப்பிரகாரமான நன்மைகளைப் பற்றி அதிகம் கவலைப்பட்டனர். இயேசு அவர்களைப் பார்த்து " முதலாவது தேவனுடைய ராஜ்ஜியத்தையும், அவரு டைய நீதியையும் தேடுங்கள்! அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூட கொடுக்கப்படும் " என்றார். நீங்கள் இதை ஒருபோதும் முயற்சி செய்யவில்லையென் றால், இதை உண்மையென்று சொல்வற்கு நீங்கள் தகுதியானவர்களாக இருக்க முடியாது. இதை முயற்சி செய்தவர்கள் இது உண்மையென்று சாட்சி பகர்கிறார்கள். இதை விசுவாசியாத மனிதனை அற்ப விசுவாசியென்று இயேசு சொல்கிறார். ஒரு வேளை, நீங்கள் விசுவாசியாதவர்களாயிருந்தால் உங்கள் விசுவாசம் பற்றி நம்முடைய ஆண்டவர் என்ன சொல்லுவார்? இப்பொழுது, லூக்கா நூலில் கர்த்தருடைய வாக்குத் தத்தம் என்னவென்று கவனிப்போம். கொடுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக் கப்படும். அமுக்கிக் குலுக்கி சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்; நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் என்றார் (லூக். 6:38). தாராளமாய்க் கொடுக்கும் ஒருவர் பற்றி விவரிக்க கிறிஸ்து பயன்படுத்தும் அழகான வார்த்தைகளைக் கவனியுங்கள். உங்களுக்கு அளக்கப்படும் அந்த அளவினால், அமுக்கிக் குலுக்கி சரிந்து விழும்படி உங்கள் மடியிலே போடுவார்கள். கர்த்தருக்குக் கொடுப்பதில் தாராளமாய் இருக்க மறுக்கும் ஒரு மனிதன், தான் புதிய ஏற்பாட்டை விசுவாசிக்கிறேன் என்று எப்படிச் சொல்ல முடியும்? நீங்கள் இதுகாறும் இந்த வசனத்தின்படி செய்யாமலிருந்தால், இன்றே செய்ய ஆரம்பியுங்கள்.

அப்பொழுது, பேதுரு அவரை நோக்கி; நாங்கள் எல்லாவற்றையும் விட்டு, உம்மைப் பின்பற்றினோமே; எங்களுக்கு என்ன கிடைக்கும் என்றான். அதற்கு இயேசு, மறுஜென்ம காலத்திலே மனுஷகுமாரன் தம்முடைய மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கும் போது, என்னைப் பின்பற்றின நீங்களும், இஸ்ரவேலின் பன்னி ரெண்டு கோத்திரங்களையும் நியாயந்தீர்க்கிறவர்களாக பன்னிரெண்டு சிங்காசனங் களின்மேல் வீற்றிருப்பீர்களென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். என் நாமத்தினிமித்தம் வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்ப னையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களை யாவது விட்டவன் எவனோ, அவன் நூறத்தனையாய் அடைந்து, நித்திய ஜீவனையும் சுதந்தரித்துக் கொள்ளுவான் (மத். 19:27-29). பேதுரு கேட்ட கேள்வியைக் கவனியுங் கள், " ஆண்டவரே, எல்லாவற்றையும் விட்டுப் பின்பற்றினோமே எங்களுக்கு என்ன

கிடைக்கும்? " இந்தக் கேள்வியைக் கேட்டதற்கு இயேசு பேதுருவைக் கடிந்து கொள்ள வில்லை. பேதுருவே, இந்தக் கேள்வியைக் கேட்டதற்காக நீ வெட்கப்பட வேண்டு மென்றும் சொல்லவில்லை. பேதுரு விட்டு வந்ததற்கு ஈடாக என்னத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று கேட்பதற்கு அவனுக்கு உரிமை உண்டு என்பதைக் கர்த்தர் அறிந்திருந்தார். மறுஜென்ம காலத்திலே மனுஷ குமாரன் தம்முடைய மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கும் போது, என்னைப் பின்பற்றின நீங்களும், இஸ்ரவேலின் பன்னிரெண்டு கோத்திரங்களையும் நியாயந்தீர்க்கிறவர்களாக வீற்றிருப்பீர்களென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று பேதுரு விடம் சொன்னபோது கர்த்தர் புன்னகை பூத்திருக்க வேண்டும். அங்கே, அவர்களுக் குக் கிடைத்த உயர்வை எண்ணிப் பாருங்கள். அழுக்கடைந்த நாற்றம் பிடித்த மீன் படகு களிலிருந்து நேராக வல்லமையும், அதிகாரமும் கொண்ட சிம்மாசனம்.

தொடர்ந்து இயேசு, என் நாமத்தினிமித்தம் வீட்டையாவது, சகோதர்களையா வது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன், நூறத்தனையாகப் பெற்று, நித்திய ஜீவனையும் சுதந்தரிப்பான் என்றார். நூறு மடங்கு என்பது ஆயிரம் சதவீத லாபம். இயேசுவின் இவ்வார்த்தைகள் ஒருவரை உற்சாகமாகவும், தாராளமாகவும் கொடுக்கத் துண்டுவதற்குப் போதுமானதாக இல்லையானால், கொடுக்க ஒருவனை ஊக்கப்படுத்துவதற்கு, எனக்குத் தெரிந்த வரை இதை விடச் சிறப்பாகச் செய்யவோ, சொல்லவோ முடியாது. ஆகவே, கொடுக்கிற காரியத்தில் நீங்கள் முயற்சிக்கும்படியாய் உங்களை ஊக்கப்படுத்துகிறேன்.

பின்னும் நான் சொல்லுகிறதென்னவெனில், சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான். அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார். மேலும், நீங்கள் எல்லாவற்றி லும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகு கிறவர்களாயிருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச் செய்ய வல்லவராயிருக்கிறார் (II கொரி. 6–8). எல்லா விவசாயிகளுக்கும் தெரிந்த விதைப்பு, அறுப்பு விதி பற்றி இங்கே பார்க்கிறோம். விதைகளை எண்ணி விதைத்தால் குறைவான அறுவடைதான் கிடைக்கும். நிறைய விதைத்தால் நிறைய அறுவடை இருக்கும். வசனம் 8–ல் பவுலடியார், தேவன், கொடுப்பதில் நம்மை சம்பூரண முள்ளவர்களாக்க முடியும் என்று கூறுகிறார். அநேகரால், கொடுக்க முடியாமலிருப்ப தற்குக் காரணம், அவர்கள் ஒருபோதும் கொடுத்ததில்லை. வசனம் 8–ஐ கவனமாக வாசித்து அது என்ன கூறுகிறதென்று பாருங்கள். தேவனாலே இதைச் செய்ய முடியு மென்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா?

**IV தேவனுடைய வாக்குத்தத்தங்களில் விசுவாசத்தைக் காட்டுதல்**

தங்களுடைய விசுவாசத்தைக் குறித்து பெருமை பாராட்டி, வேதாகமம் பேசுகிற இடத்தில் நாங்கள் பேசுகிறோம், அது மௌனமாயிருக்கும் இடத்தில் நாங்களும் மௌனமாயிருக்கிறோம் என்று சொல்லிக் கொண்டு " விசுவாசம் மாத்திரம் " போதும் என்று சொல்வதற்காகப் பிற சபையாரைக் கேலியும் செய்யும் கிறிஸ்துவின் சபை

அங்கத்தினர்கள், தாங்கள் உபதேசிப்பதற்கு மாறாக, கொடுக்கிற காரியத்தில் கிரியைகளில்லாமல், கர்த்தருக்குக் கொடுப்பது பற்றிய போதனையை " விசுவாசிப் பது மாத்திரம் " போதும் என்று நினைக்கிறார்கள். இந்த ஜனங்கள் தாங்கள் கிறிஸ்து வை விசுவாசிப்பதாகச் சொல்லுகிறார்கள். ஆனால், தாராளமாய்க் கொடுக்கிறவர் களாக இருக்க மறுக்கிறார்கள். இப்படிப்பட்ட மனிதர்கள், நாங்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கிறோம், ஆனால், ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளமாட்டோம் என்பவர்கள் எப்படி மோசமானவர்களாக உள்ளார்களோ அதுபோலவே இவர்களும் மோசமான வர்களாயிருக்கிறார்கள்.

நாம் இப்போது தேவனுடைய வாக்குத்தத்தங்களை விசுவாசித்த தேவ மனிதர் கள் சிலர் பற்றி பார்போம்.

1. ஆபிரகாம் – " தேவனுடைய வாக்குத்தத்தைக் குறித்து அவன் அவிசுவாச மாய் சந்தேகப்படாமல் தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவரா யிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி, தேவனை மகிமைப்படுத்தி, விசுவாசத்தில் வல்லவனானான் ". (ரோமர் 4:20–21). ஆபிரகாம் தேவன் சொன்ன எது பற்றியும் ஒரு போதும் சந்தேகப்பட்டதில்லை. நம்முடைய விசுவாசத்தை பெலப்படுத்த நாம் தேவனி டத்தில் ஜெபிக்க வேண்டும்.

2. யோசுவா – " இதோ இன்று பூலோகத்தார் எல்லோரும் போகிற வழியே போகிறேன்; உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குச் சொன்ன நல்வார்த்தைகளி லெல்லாம் ஒரு வார்த்தையும் தவறிப்போகவில்லை என்பதை உங்கள் முழு இருதயத்தா லும் உங்கள் முழு ஆத்துமாவாலும் அறிந்திருக்கிறீர்கள்; அவைகளெல்லாம் உங்களுக்கு நிறைவேறிற்று; அவைகளில் ஒரு வார்த்தையும் தவறிப் போகவில்லை " (யோசுவா 23:14). தேவனுடைய வாக்குத்தத்தங்களை அநேக வருடங்களுக்குத் தாங்கிப் பிடித்துக் கொண்டிருந்த ஒரு முதிர்ந்த மனிதனின் வார்த்தைகள் இவை. தேவன் இவருக்கு எதை யும் பொய்யாக்கவில்லை.

3. சாறிபாத் விதவை – " அப்பொழுது எலியா அவளைப் பார்த்து; பயப்படாதே; நீ போய் உன் வார்த்தையின்படி ஆயத்தப்படுத்து; ஆனாலும் முதல் அதிலே எனக்கு ஒரு சிறிய அடையைப் பண்ணி என்னிடத்தில் கொண்டு வா; பின்பு உனக்கும் உன் குமாரனுக்கும் பண்ணலாம். கர்த்தர் தேசத்தின் மேல் மழையை கட்டளையிடும் நாள் மட்டும் பானையின் மா செலவழிந்து போவதும் இல்லை; கலசத்தின் எண்ணெய் குறைந்து போவதும் இல்லை என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் எலியாவைக் கொண்டு சொன்ன வார்த்தையின்படியே, பானையிலே மா செலவழிந்து போகவும் இல்லை; கலசத்தின் எண்ணெய் குறைந்து போகவும் இல்லை ", (1 ராஜாக்கள் 17:13–16).

4. பவுல் – " ஆனபடியால் மனுஷரே, திடமானதாயிருங்கள் எனக்குச் சொல்லப் பட்ட பிரகாரமாகவே நடக்கும் என்று தேவனிடத்தில் நம்பிக்கையாயிருக்கிறேன் " (அப் 27:25). இங்கே கிறிஸ்துவுக்காக எல்லாவற்றையும் விட்டு வந்த ஒரு மனுஷனை நாம் பார்க்கிறோம். அவர் மரண தண்டனைக்காக ரோமாபுரிக்குச் செல்லும் போது கூட, தேவன் பேரில் தனக்கு இருந்த நம்பிக்கையை வெளிப்படுத்துகிறார். ஒரு சமயம், ஞாயிறு பள்ளியில், விசுவாசம் என்றால் என்ன என்று ஒரு சிறு பெண்ணிடம்

கேட்கப்பட்டது. அதற்கு அவள், " எந்தக் கேள்வியும் கேட்காமல் தேவன் சொல்லுவதை நம்புவதுதான் விசுவாசம் " என்று பதிலளித்தாள். இப்படிப்பட்ட விசுவாசம் தான் இன்றைய தேவை.

**புதிய ஏற்பாட்டுக் கொடுத்தலை மீட்டமைக்க நீங்கள் தயாரா?**

## கேள்விகள்

1. இப்பாடம் என்ன?
2. தங்க வசனப்பகுதியை மேற்கோள் காட்டுக?
3. இந்த பாடத்தின் நோக்கம் என்ன?
4. இன்றைய நாளிற்கான கருத்து என்ன?

## முன்னுரை

1. ஒரு வாக்குத்தத்தத்தின் மதிப்பு எதை அடிப்படையாகக் கொண்டது?
2. தேவன் எவ்விதமான வாக்குத்தத்தங்கள் செய்துள்ளார்?
3. தேவன் தம்முடைய வாக்குத்தத்தங்கள் குறித்து தாமதமாயிருக்கிறாரா?
4. II பேதுரு 1:3ஐ விளக்குக?
5. எண்ணாகமம் 23 :19ஐ விளக்குக?
6. தேவனுடைய வாக்குத்தத்தங்களில் பெரும்பாலானவை எது பற்றிப் பேசுகிறது?
7. தேவன் தம்முடைய வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவார் என்பதை நம்புகிறீர் களா?.

## தேவன் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிற சில காரியங்கள்

1. வருடத்தின் பருவங்களைப் பற்றி தேவன் என்ன வாக்குத்தத்தம் பண்ணியிருக்கி றார்?
2. ஜலப்பிரளயத்தைப் பற்றி தேவன் என்ன வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார்?
3. நாம் எதைக் கொண்டு திருப்தி பட்டுக் கொள்ள வேண்டும்?
4. நம்முடைய சாம்பாஷணை பற்றி என்ன சொல்லப்பட்டிருக்கிறது?
5. சோதனைகள் பற்றி தேவன் என்ன வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார்?
6. சபைக்கு வெளியே இருக்கும் பாவியை தேவன் எப்போது மன்னித்தார்?
7. திரும்ப திரும்ப தேவன் என்ன வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார்?

## பழைய ஏற்பாட்டில் தேவன் பண்ணிருக்கிற வாக்குத்தத்தங்கள்

1. களஞ்சியங்கள் நிரப்பப்படுவது பற்றி என்ன சொல்லப்படுகிறது?
2. எவ்விதமான ஆத்துமா செழிக்கும்?
3. பிரசங்கி 11:1 யை விளக்குக?
4. மல்கியா 3;10 யை வாசித்து விளக்குக?

5. இது உண்மையென்று யாருக்கு தெரியும்?
6. அந்தப் பெண்மணியைப் பற்றியும் அவளுடைய பண்ணையைப் பற்றியும் கூறுக?
7. தேவன் நமக்கு என்ன சொல்லுகிறார்?
8. தேவன் நம்மை எப்போது ஆசீர்வதிப்பார்?
9. தேவன் நம்மை எப்போது சபிப்பார்?

**தேவன் புதிய ஏற்பாட்டில் செய்திருக்கிற வாக்குத்தத்தங்கள்**

1. மத்தேயு 6:33 என்ன சொல்கிறது?
2. இந்த வசனப்பகுதி எதைக் காட்டுகிறது?
3. இந்த விஷயத்தில் நியாயத்தீர்ப்பை கடந்துபோக யார் தகுதி பெற்றவர்?
4. லூக்காவில் கர்த்தருடைய வாக்குத்தத்தம் என்ன?
5. கிறிஸ்து பயன்படுத்தின வெளிப்பாடுகளை விவாதி?
6. ஒருவர் உதாரத்துவமாய்க் கொடுக்க மறுத்துவிட்டு புதிய ஏற்பாட்டை விசுவாசிக்கிறேன் என்று சொல்ல முடியுமா?
7. மத்தேயு 19:27 –29 வசனங்களை வாசியுங்கள்?
8 பேதுருவின் கேள்வி என்னவாயிருந்தது?
9. அதைக் கேட்பதற்கு பேதுருவுக்கு உரிமை இருந்ததா?
10. சிங்காசனத்தைப் பற்றி இயேசு பேதுருவுக்கு என்ன சொன்னார்?
11. பதவி உயர்வு பற்றி விவாதி?
12. அவர்கள் எவ்வளவு வட்டியைப் பெறுவதாக இயேசு சொன்னார்?
13. ஒரு மடங்கு என்பது எவ்வளவு?
14. நூறுமடங்கு என்பது எவ்வளவு?
15. II கொரிந்தியர் 9:6–8 வசனங்களை வாசித்து விவாதி?
16. எல்லா விவசாயிகளுக்கும் என்ன தெரியும்?
17. ஏன் சிலரால் கொடுக்க முடியவில்லை?

**தேவனுடைய வாக்குத்தத்தங்களில் விசுவாசத்தைக் காட்டுதல்**

1. சபையின் அங்கத்தினர்கள் எப்படி “விசுவாசத்தை மட்டும்” காட்டுகிறார்கள்?
2. ஆபிரகாம் தேவனை எப்படி விசுவாசித்தார் என்பதை விவாதி.
3. தேவனுடைய வாக்குத்தத்தங்களை யோசுவா எப்படியாக உணர்ந்தார்?
4. சாறிபாத் விதவை சம்பவத்தைக் கூறுக?
5. அவளுடைய கலசத்தில் இருந்த ஆகாரம் விரயமானதா? ஏன்?
6. தேவனுடைய வாக்குத்தத்தங்களைப் பற்றி பவுல் என்ன நினைத்தார்?
7. விசுவாசம் பற்றி அந்த சிறு பெண்ணின் விளக்கத்தை தருக?

## பாடம் – ஆறு

# துருவின் சாட்சி

## Rust as a Witness

### தங்க வசனப் பகுதி

பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டாம். இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும்; இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள்; பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள்; அங்கே பூச்சியாவது, துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை. உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும். (மத்தேயு 6:19–21).

### நோக்கம்

ஒரு போதும் துரு பிடிக்காத பொன்னையும், வெள்ளியையும் தான் நாம் பரலோகத்திற்கு நமக்கு முன்பாக அனுப்ப முடியும் என்பதை மனதில் இருத்துவது.

### உங்கள் சிந்தனைக்கு

உங்கள் பணத்தை எப்பொழுதும் நீங்கள் எண்ணி கணக்குப் பார்ப்பதற்குப் பதிலாக, அந்தப் பணம் உங்களுக்காகப் பேசுவதற்கு நீங்கள் ஏன் அனுமதிக்கக் கூடாது?.

### முன்னுரை

ஒரு சட்ட வல்லுநரின் கடமை குற்றவாளி மீது சுமத்தப்பட்ட எல்லாக் குற்றங்களையும் மோசமான நடத்தைகளையும் விசாரித்து, அவன் மிகப்பெரிய தவறுகள் செய்திருந்தால் கடைசியாக நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி தண்டனை வழங்குவதாகும். நம்முடைய பரலோக நியாதிபதியும் இப்படியாக நீதியை விசாரித்து இந்த தீர்ப்பை வழங்கியிருக்கிறார். "ஐசுவரியவான்களே, கேளுங்கள், உங்கள் மேல் வரும் நிர்ப்பந்தங்களினிமித்தம் அலறி அழுங்கள். உங்கள் ஐசுவரியம் அழிந்து உங்கள் வஸ்திரங்கள் பொட்டரித்துப்போயின. உங்கள் பொன்னும், வெள்ளியும் துருபிடித்து; அவைகளிலுள்ள துரு உங்களுக்கு விரோதமாகச் சாட்சியாயிருக்கிறது. அக்கினியைப் போல உங்கள் மாம்சத்தைத் தின்னும் கடைசி நாட்களிலே பொக்கிஷத்தைச் சேர்த்தீர்கள். இதோ, உங்கள் வயல்களை அறுத்த கூலிக்காரருடைய கூலி உங்களால் அநியாயமாய்ப் பிடிக்கப்பட்டுக் கூக்குரலிடுகிறது; அறுத்தவர்களுடைய கூக்குரல் சேனைகளுடைய கர்த்தரின் செவிகளில் பட்டது. பூமியிலே நீங்கள் சம்பிரமமாய் வாழ்ந்து, சுகபோகத்தில் உழன்றீர்கள்; கொழுத்தவைகளை அடிக்கும் நாளிலே நடக்கிறது போல உங்கள் இருதயங்களைப் போஷித்தீர்கள். நீதிமானை நீங்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்துக் கொலை செய்தீர்கள்; அவன் உங்களோடே எதிர்த்து நிற்கவில்லை" (யாக்கோபு 5:1–6).

## I நியாயத்தீர்ப்பின் போது ஒரு காட்சி

முதல் குற்றச்சாட்டு, உங்களுடைய பொன்னும், வெள்ளியும், துருபிடித்து உங்களுடைய வஸ்திரங்கள் பொட்டரித்துப் போயிற்று. இது இன்று உலகத்திலே குவிக்கப்பட்டிருக்கும் பொன், வெள்ளி போன்றவைகளின் பயங்கரமான சித்திரம். நியாயத்தீர்ப்பின் காட்சியாக நம்முடைய கண்களில் நாம் இதைக் காணும்போது நடுக்கம் ஏற்படுகிறது. இயேசுவின் சிலுவையைப் பற்றி இந்த முழு உலகத்திற்கும் எடுத்துச் செல்லப் போதுமான செல்வம் நம் சகோதரர்களிடத்தில் இருக்கிறது. இந்த செல்வத்தை " சுயம் " என்னும் பலிபீடத்தில் நம் சகோதரர்கள் வைப்பதற்கு பதிலாக, தேவனுடைய பலிபீடத்தில் வைத்தால் தான் இது சாத்தியம்.

என்னுடைய மனதிலே மகாநியாயத்தீர்ப்பின் காட்சியை என்னால் பார்க்க முடிகிறது. நாள் வந்து விட்டது. சூரியன் ஒளி கொடுக்க மறுக்கிறது. சந்திரன் இரத்த மாக மாறுகிறது, நட்சத்திரங்கள் வானத்திலிருந்து கீழே பூமியில் விழுகிறது; மலைக ளெல்லாம் அதின் அதின் இடத்திலிருந்து அசைகின்றது. தேவனுடைய சிங்காசனம் நமக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கிறது. அந்த மகாநாளில் நாம் இந்த உலகத்தில் எப்படி பணத்தை செலவழித்தோம் என்று தேவனிடத்தில் கணக்கொப்பிக்க அவருக்கு முன்பாக நிற்கிறோம்.

தேவனிடம் கணக்கொப்புவிக்கும்படி தேவனால் அழைக்கப்பட்ட மனிதன் ஒருவன் நிற்கிறான். தேவன் அவனை சாட்சியின் இருக்கைக்கு அழைக்கிறார். அவனு டைய காலின் கீழ் குவிக்கப்பட்டிருக்கிற கெட்டுப்போன செல்வத்தை உள்ளடக்கிய ஒரு குவியலை சுட்டிக் காட்டி " அது என்ன " என்று தேவன் கேட்கிறார். அதற்கு அந்த மனிதன் சோகமாக கீழே பார்த்துக் கொண்டு " அது செல்வம் " என்று சொன்னான். மறுபடியும், தேவன் அவனைப் பார்த்து " அந்த செல்வம் ஏன் கெட்டுப்போனது " என்று கேட்டார். அந்த மனிதன் எனக்குத் தெரியாது என பதில் அளித்தான். அதற்கு தேவன், " இங்கே ஏதோ மிகப்பெரிய தவறு நடந்திருப்பது உனக்குத் தெரியாதா? " என்று கேட்டார். செல்வமானது பயன்படுத்தப்பட்டால் அது கெட்டுப் போவதில்லை. அதை நீ ஏன் பயன்படுத்தவில்லை? நீ ஏழைகளுக்கு என்ன செய்தாய்? இதுவரை சுவிசேஷத்தை கேள்வி படாத மக்களுக்கு என்ன செய்தாய்? விதவைகளுக்கும், திக்கற்றவர்களுக்கும் நீ என்ன செய்தாய்? தன்னிடம் வரும் நீரை வெளியே அனுப்ப வழியில்லாத சவக்கடல், தன்னை நோக்கி வரும் ஆறுகளின் நீரை எப்பொழுதும் பெற்றுக் கொள்கிறது. அதினால் அது உப்பு நீராக மாறி உயிரினங்கள் வாழ்வதற்கு லாயக்கற்றதாக மாறி விடுகிறது.

சவக்கடலில் பிரயாணம் செய்பவர்கள் தாகத்தினால் சோர்வடைந்து மரித்தும் போவார்கள். அந்த தண்ணீர் குடிப்பதற்கு லாயக்கற்றதும் அதை குடித்தால் இன்னும் அதிகமான தாகத்தை ஏற்படுத்துவதாக இருக்கும். இந்த மனிதனின் செல்வமானது பயன்படாமல் அது தேங்கிக்கிடந்தது. கெட்டுப்போன உன்னுடைய செல்வம் ஏற்கனவே பேசிவிட்டபடியால் இப்போது நீ வாயைத் திறந்து பேசு என்று தேவன் சொன்னார்.

பரலோக நீதிமன்றத்தில் அந்த கைதி நடுங்கி முகநாடி வேறுபட்டது. " நான் எனக்காக சேர்த்து வைத்தது உண்மைதான் " என்று சொன்னான். " இவைகளை

செய்யக்கூடாது என்று என் வார்த்தைகள் உன்னை எச்சரிக்கவில்லையா? என் வார்த்தைகள் தான் உன்னை கடைசி நாளில் நியாயம் தீர்க்கும் என்று உனக்குச் சொல்லப்படவில்லையா? என்று கேட்டார். (யோவான் 12:48)

மெதுவாக அந்த மனிதன் தன்னுடைய தலையை கீழே போட்டு மிகுந்த பரிதாபத்தோடு " கர்த்தாவே நான் குற்றவாளியாக இருக்கிறபடியால் எனக்கு இரங்கி என்னைக் காப்பாற்றும் " என்று கதறினான்.

அதன் பின்பு இயேசு, " அந்த துருபிடித்த பணத்தையும், பொட்டரித்துப் போன வஸ்திரங்களையும் சுட்டிக் காட்டினார் ". அவைகள் எல்லாம் அந்த மனிதனுடைய காலடியில் பயங்கரமான பிசாசைப் போல் தோற்றமளித்தன.

இயேசு தொடர்ந்து சொல்லும்போது, " பொன்னும், வெள்ளியும் நல்ல முறையில் பயன்படுத்தும் போது துரு பிடிக்கும் தன்மையை உடயவைகள் அல்ல. இந்த துரு மற்றும் பொட்டரித்துப் போன வஸ்திரங்கள் பயன்பாட்டிற்கு அதிகமாக உன்னால் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது என்பதையே காட்டுகிறது. உன்னுடைய பணத்தை பதுக்கி வைத்ததால் இழந்துபோன ஆத்துமாக்களைப் பற்றி சிந்தித்துப்பார். சாட்சி யாக இருந்த துரு உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறது. பிசாசுக்காகவும், அவனுடைய தூதனுக்காகவும் வைக்கப்பட்டிருக்கிற அக்கினிகடலுக்கு போ என்பார் ".

## II என்னுடைய பணம் உண்மையில் என்னுடையது தானா?

" வெள்ளியும் என்னுடையது, பொன்னும் என்னுடையது என்று சொல்கிறார் (ஆகாய் 2:8). பூமியும் அதின் நிறைவும், உலகமும் அதிலுள்ள குடிகளும் கர்த்தரு டையது " (சங்கீதம் 24:1).

உண்மையென்னவென்றால், நமக்கு எதுவுமே சொந்தமில்லை, நம்முடைய பராமரிப்பின் கீழ் தேவனால் நம்மிடத்தில் ஒப்புவிக்கப்பட்டிருப்பவைகளுக்கு உக்கிரா ணக்காரர்களாகவே இருக்கிறோம். பணம் என்னுடையது " நான் இதை வைத்துக் கொண்டு நான் பிரியப்படுகிறபடி செலவழிப்பேன். நான் எப்படி பணத்தை செலவு செய்ய வேண்டுமென்று யாருமே எனக்கு சொல்ல முடியாது " என்று சிலர் சொல்வதை நீங்கள் கேட்டிருக்கிறீர்களா? இப்படிப்பட்ட மனிதன் உணர்ந்து கொள்ள தவறும் காரியம் என்னுடையது எதுவும் என்னுடையதல்ல. அது தேவனுடையது என்பதே. மனிதன் இந்த பணத்தை எப்படி செலவு செய்தான் என்பதைக் குறித்து தேவனுக்கு கணக் கொப்புவிக்க வேண்டும்.

ஒரு மனிதனுடைய பண்ணையில், அவனுடைய நிலத்தையும், ஆடு மாடுகளை யும், மரச்சாமன்களையும், வேறுசில உடமைகளையும் பார்த்துக்கொள்கிற ஒருவரை கற்பனை செய்து கொள்ளுங்கள். அவன் கணக்கு கொடுக்கும் நேரம் வந்தபோது, ஒரு கூடை நிறைய உருளைக் கிழங்குகளை மட்டும் கொண்டுவந்து முற்றத்தில் வைத்து விட்டு, போகும் போது எஜமானைப் பார்த்து அன்பாக கையசைத்து, அந்த எஜமா னைப் பற்றி வருவோர், போவோரிடம் " அவர் நல்லவர் " என்று சொல்லிவிட்டால் இவன் ஒரு நல்ல உக்கிராணக்காரனாகி விட முடியுமா?.

அநேக வருடங்களுககு முன்பு குத்தகைக்கு பயிர் செய்த ஒருவர் தன்னுடைய எஜமானுக்கு குத்தகையாக பருத்தியில் நான்கில் ஒரு பகுதியையும், மக்காச் சோளத்தில் மூன்றில் ஒரு பகுதியையும் கொடுப்பதாகவும் ஒப்புக் கொண்டார். ஆனால் அறுவடை முடிந்த பிறகும் குத்தகைக்கு பயிர் செய்த அந்த மனிதன் எஜமனுக்கு எந்த தகவலையும் தெரிவிக்கவில்லை. எஜமான் அவனைப் அழைத்து விளைச்சலைப் பற்றிக் கேட்ட போது குத்தகைக்கு பயிர் செய்தவன், எஜமானை பார்த்து " நான் உங்களுக்கு ஒன்றும் தரவேண்டியதில்லை. இரண்டு லாரிகள் நிரம்பத் தக்கதாகத்தான் எனக்கு விளைச்சல் கிடைத்தது என்று சொன்னான் ". நம்மில் அநேகர் தேவனுக்கு கொடுப்பது சம்பந்தமான காரியங்களில் இப்படித்தான் நடந்து கொள்கிறோம்.

பிரபு பைரோன் (Lord Byron), மனிதனின் நிலை பற்றிச் சொல்லும்போது " மனிதன் இப்பூமியில் செலவழிக்கும் ஒவ்வொரு மணி நேரத்திற்கும் வாடகை கொடுக்கக்கூடிய வனாக இருக்கிறான் ". ஆனால், உண்மையென்னவென்றால், நாம் கணக்குக் கொடுக்க எப்போது அழைக்கப்படுவோம் என்பது நமக்கே தெரியாது. ஒரு நல்ல உக்கிராணக்காரன் என்பவன் தன்னுடைய எஜமான் தன் கணக்கு புத்தகத்தை பரிசோதனை செய்ய எந்த நேரத்திலும் ஆயத்தமாக இருப்பவன் தான். நம்மில் எத்தனை பேர் தேவன் நம்மிடத்தில் ஒப்புக்கொடுத்த பணத்தை நாம் எப்படி பயன்படுத்தினோம் என்று தேவனிடம் கணக்கு ஒப்புவிக்க எந்த நேரத்திலும் தயாராக இருக்கிறோம்? நம்மில் யாரையும் எப்போது வேண்டுமானாலும் அழைத்து கணக்கு கேட்க தேவனுக்கு எல்லா உரிமையும் உண்டு. ஒரு நாளில் நாம் கணக்குக் கொடுக்க வேண்டும்.

## III ஐசுவரியத்தைக் கெடுக்கும் வழிகள்

இந்த வாழ்க்கையில் ஒரு மனிதன் தன்னுடைய ஐசுவரியத்தை மூன்று வழிகளில் கெடுக்கலாம். இந்த வழிகளெல்லாம் இப்போது பயன்படுத்தப்பட்டு வருகின்றன:

**1. பரிசுத்தமில்லாத வழிகளினால் அந்த பணத்தை சம்பாதிப்பதன் மூலம் அவன் அதை கெடுத்துப் போடமுடியும்.** நேர்மையற்ற முறையில் மனிதன் சேர்த்து வைக்கும் பணமெல்லாம் நியாயத்தீர்ப்பு நாளிலே அவனுக்கு விரோதமாக சாட்சியிடும். " திருடகிறவன் இனித் திருடாமல் குறைச்சலுள்ளவனுக்குக் கொடுக்கத்தக்கதாக தனக்கு உண்டாயிருக்கும்படி, தன் கைகளினால் நலமான வேலை செய்து பிரயாசப்படக்கடவன்" (எபேசியர் 4:28). " பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது " (I தீமோத்தேயு 6:10).

**2. தனக்காக பணத்தை சேர்த்து வைப்பதினால் அவற்றைக் கெடுத்துப் போட முடியும்.** இவ்வுலகத்திலே ஐசுவரியமுள்ளவர்கள் இறுமாப்பான சிந்ததையுள்ளவர்களாயிராமலும், நிலையற்ற ஐசுவரியத்தின் மேல் நம்பிக்கை வையாமலும், நாம் அனுபவிக்கிறதற்குச் சகலவித நன்மைகளையும் நமக்குச் சம்பூரணமாய்க் கொடுக்கிற ஜீவனுள்ள தேவன் மேல் நம்பிக்கை வைக்கவும் என்று பார்க்கிறோம் (I தீமோத். 6:17) " நீங்கள் கிறிஸ்துவுடன் கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள் ". (கொலோ. 3:1–2) ஆம், நம்முடைய

ஆண்டவர், ஒரு மனுஷனுடைய பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ அங்கே தான் அவனு டைய இருதயமும் இருக்கும் என்றும் போதித்திருக்கிறார். நாம் பரலோகத்திலே பணத்தை சேர்த்து வைக்கும்படி அவற்றை சேர்க்க ஆசையுள்ளவர்களாயிருக்க வேண்டும். பணத்தை தேவனுடைய மகிமைக்காகப் பயன்படுத்துவதன் மூலமாக நாம் பரலோகத்திலே பொக்கிஷத்தைச் சேர்த்து வைக்க முடியும். சுவிசேஷ வேலைக்காக, திக்கற்றவர்களுக்காக, வேதாகமப் பள்ளி நடத்துவதற்காக மற்றும் வேறுசில நற்கிரியைகளுக்காக கொடுக்கப்படும் ஒவ்வொரு ரூபாயும் பரலோகத்திலே சேர்த்து வைக்கப்படுகிற ரூபாயாக இருக்கிறது.

3. ஒழுக்கக்கேடான காரியங்களில் பணத்தை கெடுத்துப்போட முடியும். இதை நாம் இரண்டு வழிகளில் செய்கிறோம். வெட்கத்திற்குரிய காரியங்களில் பணத்தை செல வழிப்பதன் மூலம் நாம் கெடுத்துப் போடுகிறோம். நீங்கள் உங்கள் வருமானத்தில் 50 சதவீத்தை, 75 சதவீதத்தை, அல்லது 99 சதவீதத்தை கர்த்தருக்குக் கொடுப்பதாக இருந்தாலும், மீதமுள்ள அந்த 50 சதவீதத்தை 20 சதவீதத்தை அல்லது 1 சதவீதத்தை வெட்கப்படக்கூடிய காரியத்திற்கு செலவழிக்க உங்களுக்கு அதிகாரம் இல்லை. சொல்லப்போனால், நம்மிடம் இருக்கும் 100 சதவீதத்திற்கும் தேவன் நம்மிடம் கணக்கு கேட்பார். நம்மிடம் இருக்கும் ஒவ்வொரு பணமும் கனமுள்ள காரியங்களுக்குப் பயன் படுத்தப்பட வேண்டும். சிலர் தங்களுக்கு முழு சுதந்திரம் கொடுக்கும் போது மீதமான வைகளை தங்கள் விருப்பம் போல் பயன்படுத்த சுதந்திரம் பெற்றிருப்பதாக நினைக்கி றார்கள். இந்த உலகத்தில் நாம் பெற்று அனுபவிக்கும் காரியங்களைக் குறித்து நியாயத்தீர்ப்பின் நாளிலே தேவனுக்கு கணக்கு கொடுக்க வேண்டும்.

இரண்டாவதாக, நம்முடைய பணத்தை பயன்படுத்த மறுப்பதன் மூலமாக நாம் பாவம் செய்யலாம். அநேக மக்கள் எவ்வித சந்தேகமுமின்றி மற்றெல்லாவற்றைப் பார்க்கிலும் இந்த காரணத்திற்காக இழந்துபோவார்கள். இதே காரியத்தை தான் யாக்கோபு 5:1–6 வசனங்களில் பேசுகிறார். நமக்கு வாய்ப்பு இருக்கும்போது கர்த்த ருடைய வேலைக்கென்று கொடுக்க மறுத்தால் அது நியாயத்தீர்ப்பு நாளிலே நமக்கு விரோதமாக சாட்சி கொடுக்கும். ஒரு தாலந்து கொடுக்கப்பட்ட மனிதன் பணத்தை தவறாக பயன்படுத்தியதற்காக வெளியே தள்ளப்பட்டான். நியாயத்தீர்ப்பு நாளிலே தங்களுடைய பணத்தை தேவனுடைய நாம மகிமைக்காகப் பயன்படுத்தாமல் இருந்த தற்காக எத்தனை பேர் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவார்கள்? நியாயத்தீர்ப்பு நாளிலே உலகத்தின் பெரும்பகுதி இதற்குள் வந்து நிற்பதை நினைத்து நடுங்குகிறேன். நாம் ஐசுவரியவான்கள் அல்ல என்று சொல்லி நாம் தப்பிக் கொள்ளவோ சாக்கு போக்கு சொல்லவோ முடியாது. இதுதான் ஒரு தாலந்து கொடுக்கப்பட்ட மனிதன் செய்த அழிவுக் கேதுவான தவறு.

## IV பேராசை என்கிற பாவம்

பேராசை என்பது மனிதன் அறிந்திருக்கிற அசிங்கமான பாவங்களுள் ஒன்றாகும். பேராசை என்பது ஒருவருக்குப் பசியே இல்லாத போது, சாப்பிடுகிற ஒரு குழந்தையின் வாயிலிருந்து ரொட்டியைப் பிடுங்குவதாகும். பணக்காரனுடைய பேராசை ஒரு ஏழைக்குத் தன்னுடைய வருமானத்திலிருந்து குடும்பத்தை பராமரிக்கும்

கடமையிருக்கும் போது, அந்த ஏழையை திவாலாக்கி, தன்னுடைய அழிந்து போகும் பொக்கிஷத்தில் மேலும் பணத்தைச் சேர்க்க அந்த ஏழையிடமிருந்து பிடுங்குவதைத் தான் குறிக்கிறது. இந்த பேராசை தான் கேயாசியை நான் அவன் பிறகே ஓடி, அவன் கையிலே ஏதேனும் வாங்குவேன் என்று சொல்லத் தூண்டியது. இந்த பேராசையினால் தான் கேயாசிக்கு குஷ்டரோகம் பிடித்தது. (II இராஜா 5:20) பேராசை தான் ஆகானை திருடத் தூண்டியது. (யோசுவா 7:21) இந்த பாவத்திற்காகத் தான் ஆகான் தண்டிக்கப் பட்டான். பேராசை என்னும் பாவம் செய்பவர்களை தேவன் குஷ்ட ரோகத்தினாலோ, மரணத்தினாலோ இப்போது அடித்தால் நிலைமை எப்படி இருக்கும்? சகோத ரர்களே, பேராசை என்கிற பயங்கரமான பாவத்தைக் குறித்து ஜாக்கிரதையுள்ளவர்களாயிருந் தால் நலமாயிருக்கும்.

**புதிய ஏற்பாட்டின்படி கர்த்தருக்கு கொடுத்தலை மீட்டமைக்க நீங்கள் உதவி செய்வீர்களா?**

சுவிசேஷ வேலைக்காக அதிகமாகக் கொடுங்கள்

தேவனுடைய செய்தியை இழந்து போனவர்கள் கேட்பது அவசியமாயிருக்கிறது.

காணிக்கை உதாரத்துமாய் கொடுங்கள்

மகிழ்ச்சியுள்ள இருதயத்தோடு தேவன் விரும்புகிறபடி கொடுங்கள்

**கேள்விகள்**

1. இந்த பாடத்தின் பொருள் என்ன?
2. தங்க வசனப் பகுதியை மறுபடியும் எழுதுக?
3. இந்த பாடத்தின் நோக்கம் என்ன?
4. இந்தப் பாடத்திற்கான சிந்தனை என்ன?

**முன்னுரை**

1. நீதிபதிக்கு குற்றவாளியைப் பற்றி ஆலோசனை சொல்லும் நீதிமன்ற குழுவின் நோக்கம் என்ன?
2. அவர்களுடைய ஐசுவரியங்களைப் பற்றி யாக்கோபு என்ன சொன்னார்?
3. அவர்களுடைய வஸ்திரங்களைப் பற்றி யாக்கோபு என்ன சொன்னார்?
5. ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டு கொல்லப்பட்டது யார்?

**நியாயத்தீர்ப்பின் நாளின் காட்சி**

1. முதல் குற்றச்சாட்டு என்ன?
2. ஒருவரை எது நடுங்கச் செய்கிறது?
3. கடைசி நாளைப் பற்றி விவரி?
4. பதில் அளிக்கும்படியாக அழைக்கப்பட்ட மனிதனை பற்றி எழுதுக?
5. எந்த கடலுக்கு தண்ணீர் வெளியே செல்வதற்கு இடமில்லை?
6. எந்த மனிதன் ஏன் நடுங்கி அவனுடைய முகநாடி மாறுபட்டது?

7. மனிதன் தன்னுடைய குற்றத்திற்காக தேவனிடம் மன்றாடுகிறானா?
8. இயேசு எதை சுட்டிக் காட்டினார்?
9. பணம் துருபிடிப்பது எதைக் காட்டுகிறது?

## என்னுடைய பணம் உண்மையிலேயே என்னுடையதா?

1. ஆகாய் 2:8 ஐ விவரி?
2. சங்கீதம் 24:1 ஐ விவரி?
3. முதலாளித்துவம் என்கிற பதத்தில் உள்ளடங்கியுள்ள உண்மை என்ன?
4. என் பணம் என்னுடையது என்று சொல்லும் மனிதனைப் பற்றி எழுதுக?
5. குத்தகைக்கு பயிர் செய்பவரைப் பற்றி எழுதுக?
6. பைரோன் பிரபு என்ன சொன்னார்?
7. ஒரு நல்ல உக்கிராணக்காரன் என்பவன் யார்?
8. எதைச் செய்வதற்கு தேவனுக்கு உரிமை உண்டு?

## ஐசுவரியத்தைக் கெடுக்கும் வழிகள்

1. ஐசுவரியத்தை கெடுக்கும் முதல் வழி என்ன?
2. எபேசியர் 4:28 ஐ விவரி?
3. I தீமோத்தேயு 6:10 ஐ விவரி?
4. ஐசுவரியத்தை கெடுப்பதற்கான இரண்டாவது வழி என்ன?
5. I தீமோத்தேயு 6:17 ஐ விவரி?
6. கொலோசெயர் 3:1–2 வசனங்களின் பொருள் என்ன?
7. நம்முடைய பொக்கிஷங்களைப் பற்றி இயேசு என்ன போதித்தார்?
8. நற்கிரியைகளுக்குக்காக நாம் செலவு செய்யும் பணத்திற்கு என்ன நடக்கிறது?
9. ஐசுவரியத்தை கெடுத்துப் போடுவதற்கான மூன்றாவது வழி என்ன?
10. உதாரத்துவமாய் கொடுப்பது பற்றி சிலர் என்ன நினைக்கிறார்கள்?
11. ஏன் அநேகர் இழந்து போவார்கள்?
12. நாம் கொடுக்காவிட்டால் நியாயத்தீர்ப்பின் போது நமக்கு விரோதமாக எது சாட்சியிடும்?

## பேராசை என்கிற பாவம்

1. பேராசை என்ன செய்யும்?
2. II இராஜாக்கள் 5ஆம் அதிகாரத்தில் இடம் பெற்றுள்ள கேயாசியின் கதையை விவரி?
3. யோசுவா ஏழாம் அதிகாரத்தில் இடம் பெற்றுள்ள ஆகானின் காரியங்களை விவரி?
4. நாம் எதைக் குறித்து எச்சரிக்கையாயிருக்க வேண்டும்?

## பாடம் – ஏழு

# தசமபாகம் பற்றிய காரியங்கள்

### This Business of Tithing

### தங்க வசனப்பகுதி

"அவன் எவ்வளவு பெரியவனாய் இருக்கிறான் பாருங்கள்; கோத்திரத் தலைவனாகிய ஆபிரகாம் முதலாய்க் கொள்ளையிடப்பட்ட பொருள்களில் இவனுக்கு தசம பாகம் கொடுத்தான் " (எபி. 7:4)

### நோக்கம்

தசமபாகம் கொடுப்பது பற்றிய பிரமாணம் எப்போது தொடங்கியது, எப்போது முடிவுக்கு வந்தது என்பதை அறிந்து கொண்டு, நாம் இப்போது மோசே யின் பிரமாணத்தின் கீழ் இல்லாமல் கிருபையின் காலத்தில் இருக்கிறோம் என்ற உண்மை யை மனதில் இருத்துவது.

### உங்கள் சிந்தனைக்கு

தானதர்மம் என்ற பிறப்பின் மூலமாக பொருளாசையின் மரணம் வருகிறது.

### முன்னுரை

கொடுத்தலைப் பற்றி ஒரு சராசரி சபை விசுவாசியிடம் சபையிலோ, வேத வகுப்பிலோ குறிப்பிட்டால் கூட, சில சகோதரர்கள் நாம் தசமபாக பிரமாணத்தின் கீழ் இல்லை என்று சொல்கிறார்கள். அப்படிச் சொல்கிறவர் " அறிவாளிபோல் " தோற்ற மளிக்கிறார். அப்போது அனைவரது முகத்திலும் புன்னகை பூக்கிறது. இவைகளை யெல்லாம் வைத்து நாம் அனுமானிக்கும் போது, நாம் மோசேயின் பிரமாணத்தின் கீழ் இல்லை. ஆகவே, நாம் விரும்பியபடி கொடுக்கலாம் என்று நினைப்பது போலவே தெரிகிறது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இப்படிப்பட்ட நபர் கிறிஸ்தவத்தை தன்னு டைய பேராசைக்கு தீனி போடும் ஒன்றாக மாற்றவே முயற்சி செய்கிறார். நாம் மோசேயின் பிரமாணத்தின் கீழ் இல்லாமல் கிருபையின் கீழ் இருப்பது உண்மை தான். நாம் கர்த்தருக்குக் கொடுத்தலைப் பொறுத்தவரை, நாம் நியாயப்பிரமாணத்தின் கீழ் இல்லாவிட்டாலும் அதைவிட அதிகமாகக் கொடுக்க வேண்டியவர்களாயிருக்கிறோம்.

கர்த்தருக்குக் கொடுத்தலை சிலர் லேசாக எடுத்துக் கொள்கிறார்கள் என்பது வெட்கப்பட வேண்டிய ஒன்றாகும். யூதர்கள் நியாயப்பிரமாணத்தின் கீழ் வாழ்ந்த போது, இஸ்ரவேல் என்கிற சிறிய தேசத்திற்கு பொறுப்பாளிகளாக இருந்தார்கள். ஆனால், முழு உலகத்திற்கும் சுவிசேஷத்தை பிரசங்கிக்கும் பொறுப்பு நமக்கு இருக்கிறபடியால், இந்த மாபெரும் பணியை நிறைவேற்ற தசமபாகத்தை விட அதிகமாக தேவைப்படும் என்பதை கர்த்தர் அறிந்திருந்தபடியால், அவர் மனிதனை தசமபாக பிரமாணத்தின் கீழிலிருந்து எடுத்து அவர் முழு உலகத்திற்கும் சுவிசேஷத்தை

பிரசங்கிப்பதற்குத் தேவையானதைக் கொடுக்கத்தக்கதாக கிருபையின் காலத்தின் கீழ் வைத்தார். இன்று நாம் முழு உலகத்திற்கும் சுவிசேஷத்தை அறிவிப்பதிலிருந்து நம்மைத் தடுப்பது நம்முடைய கஞ்சத்தனமான காணிக்கை தான். இலட்சக்கணக்கான மக்கள் கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தை கேள்விப்படாமல் இருப்பதன் காரணம், சபையின் சராசரி அங்கத்தினர் சரியாக கொடுக்காமல் இருப்பதும், அநேகர் கொடுக்க மறுப்பதும் தான். இன்னும் சிலர், கொடுத்தலினிமித்தம் சபையை விட்டு வெளியேறவும், இப்படிப்பட்ட எண்ணங் கொண்டவர்களை வைத்து தனியாக சபை களை ஆரம்பிக்கும் அளவுக்குத் துணிகரம் கொள்கின்றனர். இங்கே, நான் என்ன பேசுகிறேன் என்பதைத் தெரிந்து தான் பேசிக் கொண்டிருக்கிறேன்.

எனக்கு தெரிந்து ஒரு சிறு கூட்டம் கொடுத்தலைப் பற்றிய காரியங்களைப் படிப்பது தங்களுக்கு பாவமாகத் தோன்றினபடியால், " சபையிலிருந்து பிரிந்து சென்று தனியாக ஒரு சபையை தொடங்கிவிட்டர்கள். ஒரு பிராந்திய சபையில் தன்னை சுவிசேஷப் பிரசங்கியார் என்று சொல்லிக் கொள்ளும் ஒரு பெரியவர் " (அவர் முழு நேர ஊழியராயிராமல் பகுதி நேர ஊழியராக இருக்கிறபடியால் தேவனுக்கு ஸ்தோத் திரம்) கொடுப்பது பற்றி முறையான வகுப்பை ஒருவர் எடுத்துக் கொண்டு இருக்கும் போது, சபையில் திடீரென எழுந்து நான், " ஆயிர வருட அரசாட்சி கொள்கையை எதிர்க்கிறேன் ", " மார்க்க பிரிவினை கூட்டத்தை எதிர்க்கிறேன் ", " அதைப்போல கொடுத்தலைப் பற்றிய காரியங்களையும் எதிர்க்கிறேன் " என்று சொன்னார். அதன் பிறகு அவர் ஒரு கொடிய மிருகத்தைப் போல நடந்து கொண்டார். முதலாம் உலகப் போருக்கு பின்பு, அச்சபையில் நடந்த குறிப்பிடத்தக்க சம்பவம் இதுதான் என்று நினைக்கிறேன். இதுபோன்ற சபையானது, ஒரு சமுதாயத்தில் ஐம்பது வருடங்களாக இருந்தும் ஐம்பது உறுப்பினர்களே இருப்பது ஏன் என்பதை இப்பொழுது ஒருவரால் புரிந்து கொள்ள முடியும். நாம் இந்த பாடத்தை திறந்த மனதோடும் நேர்மையான இருத யத்தோடும் படிப்போம்.

## I தசமபாகம் கொடுப்பது எப்போது ஆரம்பமானது?

அநேக வருடங்களாக பிரசங்கியார்கள் தசமபாக பிரமாணம் யாக்கோ பிடமிருந்து தொடங்கியது எனப் பேச கேட்டிருக்கிறேன். ஆனால், வேதாகமத்தை நாம் படிக்கும் போது யாக்கோபின் தாத்தாவான ஆபிரகாம் தசமபாகம் கொடுத்ததை நாம் வாசிக்கிறோம். " இவன் எவ்வளவு பெரியவனாயிருக்கிறான் பாருங்கள்; கோத்திரத் தலைவனாகிய ஆபிரகாம் முதலாய் கொள்ளையிடப்பட்ட பொருள்களில் இவனுக்குத் தசமபாகம் கொடுத்தான் " (எபிரெயர் 7:4). எனவே, தசமபாகம் கொடுப்பது யாக்கோ பிலிருந்தும் தொடங்கவில்லை, மோசேயின் பிரமாணத்திலிருந்தும் தொடங்கவில்லை. அப்படியென்றால், எப்போது தொடங்கியது? எல்லா சாத்தியக் கூறுகளோடும், தசம பாகப் பிரமாணம் ஒரே ஒரு குடும்பம் இருந்த ஆதாமின் நாட்களுக்கே செல்கிறது. மக்கள் பலுகிப் பெருகி உலகம் முழுவதும் பரம்பி, ஆராதனையைக் கெடுத்துப் போட்டு தங்கள் கைகளினாலேயே தெய்வங்களை உண்டு பண்ணினபோது கூட அவர்களெல்லா ரும் ஒரே குடும்பமாயிருந்தபடியால் அவர்களை கட்டுப்படுத்தின தசமபாகப் பிரமாணத் தை நினைவு கூர்ந்தார்கள்.

உண்மையில் தசமபாகம் கொடுப்பது ஆதிகாலந் தொட்டே செய்ய வேண்டிய ஒன்றாக இருந்து வந்துள்ளது. ஆபிரகாம் நினைவு கூரத்தக்க ஒரு சந்தர்ப்பத்தில் தசமபாகம் கொடுத்தான். (ஆதியாகமம் 14:20) யாக்கோபு மற்றொரு தருணத்தில், தேவனுக்கு தசமபாகம் செலுத்துவதாக பொருத்தனை பண்ணிக் கொண்டான். (ஆதியாகமம் 28:22).

" நீங்கள் உங்கள் பிதாக்களின் நாட்கள் தொடங்கி என் கட்டளைகளைக் கைகொள் ளாமல், அவைகளை விட்டு விலகிப் போனீர்கள்; என்னிடத்திற்குத் திரும்புங்கள், அப்பொழுது உங்களிடத்திற்குத் திரும்புவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லு கிறார்; நாங்கள் எந்த விஷயத்தில் திரும்ப வேண்டும் என்கிறீர்கள். மனுஷன் தேவனை வஞ்சிக்கலாமா? நீங்களோ என்னை வஞ்சிக்கிறீர்கள். எதிலே உம்மை வஞ்சித்தோம் என்கிறீர்கள்? தசம பாகத்திலும் காணிக்கைகளிலுந்தானே நீங்கள் சபிக்கப்பட்டவர் கள்; ஜனத்தாராகிய நீங்கள் எல்லாரும் என்னை வஞ்சித்தீர்கள். என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படி தசமபாகங்களையெல்லாம் பண்டசாலையிலே கொண்டு வாருங்கள்; அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளா மற் போகுமட்டும் உங்கள் மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோவென்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லு கிறார் ". (மல்கியா 3:7–10).

" தேவனை வஞ்சித்தல் என்கிற பாவம் : இங்கே கண்டிக்கப்படுகிற தசமபாகத் திலும், காணிக்கையிலும் தேவனை வஞ்சிக்கிற பாவமானது, தசமாகப் பிரமாணத் தைப் போலவே பழமையானது, இது பாவத்தின் வெளிப்பாடாயிருக்கிறது. இவ்வகை யான பாவம் இந்நாள் வரைக்கும் எல்லா தேசங்களிலும் காணப்படுகிறது ".

" எபிரெயர்கள் மாத்திரமல்ல, வேறு பழங்காலத்து மக்களும் தங்களுடைய விளைச்சலில், மந்தைகளில், கொள்ளையிட்ட பொருள்களில் பத்தில் ஒரு பங்கை பரிசுத்த நோக்கங்களுக்காக கொடுத்திருக்கிறார்கள் ". கிரேக்கர்கள் அப்போல்லோ வுக்கும், ரோமர்கள் ஹெர்குலசுக்கும் பத்தில் ஒரு பங்கை கொடுத்திருக்கிறார்கள். பத்தில் ஒரு பங்கை அவர்கள் தங்கள் கடவுள்களுக்கு கொடுக்க வேண்டுமென்பதற்காக கொடுக்காமல், தாங்களாகவே முன்வந்து கொடுத்திருக்கிறார்களே ". பக்தி காரியங் களுக்கு கொடுப்பதை அவனவன் விருப்பத்திற்குக் கொடுக்கலாம் என்பது ஒவ்வொரு மனிதனின் முடிவுக்கு விடப்பட்டிருக்குமானால், எப்படி ஐந்தில் ஒரு பங்கு, பதினைந்தில் ஒரு பங்கு, இருபதில் ஒரு பங்கு என்று இப்படியாக இல்லாமல், தேவனுடைய பங்காகிய பத்தில் ஒரு பங்கை இத்தனை பேர் கொடுத்திருக்க முடியும். ந, அந்நாட்களில் கூடி ஒன்றாக வாழ்ந்த முன்னோர்கள், பொதுவான ஒரு ஆதாரத்திலிருந்து இப்படிச் சரிவிகிதமாகக் கொடுப்பதை கற்றுத் தெரிந்திருக்கிறார்கள் என்பது நமக்குச் சொல்லு கிறதா? இல்லையா? மத வரலாற்றை நாம் படிக்கும் போது, எகிப்தியர்கள், பாபிலோ னியர்கள், கிரேக்கர்கள், ரோமர்கள் இன்னும் பிற இனத்தைச் சேர்ந்த அநேகர் பத்தில் ஒரு பங்கைக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை நாம் கற்றுக் கொள்ளலாம். இப்படி தேவ னுக்குப் பத்தில் ஒரு பங்குக்கும் குறையாமல் கொடுக்கும் பழக்கம், இப்பூமியில்

ஒரே ஒரு குடும்பம் இருந்த காலத்திலேயே தொடங்கியிருக்க வேண்டும். இவர்கள் பூமியெங்கும் சிதறிப் போய், விக்கிரக வணக்கத்திற்குள்ளான நிலையிலும், தேவனுக் குக் கொடுக்கும் அளவாகிய இச்சட்டமானது அவர்கள் மனதில் பதிந்து, அவர்கள் அதை மறவாமல் பின்பற்றியிருக்கிறார்கள். தேவன் ஆரம்பத்திலிருந்தே, ஆதாமுக்கு ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய விளைச்சலில் ஒரு பங்கை தன்னை உண்டாக்கின வருக்குக் கொடுக்க வேண்டும், அந்த பங்கு பத்துக்கு குறையாததாக இருக்க வேண்டும் எனப்போதித்திருந்தால், அப்போது ஆதியாகமத்தில் சொல்லப்பட்டிருக்கும் காரியங் கள் எல்லாம் இந்த கருத்தை மேலும் பலப்படுத்தும். எனவே, அனனியா, சப்பீராளிடத் தில் பொருளாசை இருந்தது போல காயீனிடத்திலும் பொருளாசை இருந்திருக்கலாம் என நாம் முடிவுக்கு வரலாம். ஏனென்றால், இவர்கள் கொடுக்கப்பட்ட தொகையை விட அதிகமாக கொடுப்பது போல பாசாங்கு செய்தார்கள். அதன் மூலம் அவர்கள் சர்வ வல்லவரை வஞ்சிக்க முயற்சி செய்தார்கள்.

ஆதியாகமத்தை வாசிக்கும் போது, பத்தில் ஒரு பாகம் சட்டம் பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லையே என்று சிலர் எதிர்கருத்து கூறக்கூடும். கொலைக்கு எதிரான ஒரு சட்டம் ஆரம்பத்திலிருந்தே இருந்ததென்பதைச் சந்தேகிக்கிறீர்களா? காயீன் அதற்காகத்தானே தண்டிக்கப்பட்டான். அதைப்போல வேசித்தனத்திற்கு எதிரான பிரமாணம் இருந்ததா? நிச்சயமாக இருந்தது. அதனால் தான் யூதா தாமாரைப் பார்த்து, “ அவளை வெளியே கொண்டு வாருங்கள் அவள் சுட்டெரிக்கப்பட வேண்டும் என்றான் ”. (ஆதியாகமம் 38:24) கொடுத்தல் சம்பந்தமாக எந்த ஒரு பிரமாணமும் இல்லையென்றால் தேவன் ஏன் காயீனை தண்டிக்க வேண்டும்?. சிலர் ஆபிரகாமின் நாட்கள் வரை தசம பாகம் குறிப்பிடப்படவில்லை என்று சொல்வார்கள். ஆபிரகாமுக்கு முன்னால் யாரும் தசம பாகம் கொடுக்கவில்லை என்றால் இந்த வகை வாதத்தை நாம் மற்ற சம்பவங்களோடு ஒப்பிட்டுப்பார்க்கலாம்.

உதாரணமாக, மெல்கிசெதேக்கு வேதாகமத்தில் ஆசாரியனாக அழைக்கப்பட்ட முதல் மனிதனாக இருந்திருக்கிறார். சிநெயாரின் ராஜாவான அம்ராப் பேல் வேதாக மத்தில் முதல் ராஜாவாக குறிப்பிடப்பட்டிருக்கிறான். அதைப் போல ஆபிரகாம் முதல் தீர்க்கதரிசியாக அழைக்கப்படுகிறார். இந்த மூன்று பேருக்கும் முன்பே, பல நூற்றா ண்டுகள் மனித இனம் இந்த பூமியில் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். அப்படியானால், மனித இனம் பல நூற்றாண்டுகளாக இராஜாக்களும், ஆசாரியர்களும், தீர்க்கதரிசி களும் இல்லாமலும் வாழ்ந்து வந்திருக்கிறார்கள் என்று பொருள் கொள்ள முடியுமா? அதே போல் நோவா முதல் நீதிமானாக விவரிக்கப்பட்டிருக்கிறார். “ தேவனை விசுவாசித்த ” முதல் மனிதனாக ஆபிரகாம் விவரிக்கப்பட்டிருக்கிறார். ஆயினும், இவர் களுக்கு முன்பாகவே ஆபேலும், ஏனோக்கும் நீதிமான்களாக இருந்து தேவனை விசுவா தித்திருக்கிறார்கள். ஆக, கிடைத்த ஆதாரங்களை அடிப்படையாக வைத்துப் பார்க்கும் போது, கர்த்தர் மனிதனிடமிருந்து குறைந்தது பத்தில் ஒரு பங்கை எதிர்பார்த்திருக் கிறார் என்கிற முடிவுக்கு வரலாம். தசமபாகமானது இந்த பூமியில் ஒரு குடும்பம் இருந்த போது ஆரம்பமாகி, மனிதர்களால் பூமியெங்கும் நடைமுறைப்படுத்தப்பட்டது என்று உறுதியாக நம்பலாம்.

## II தசமபாகத்தைப் பற்றிய பிரமாணம் எப்போது முடிவுக்கு வந்தது

" நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து சிலுவையின் மேல் ஆணியடித்து " என்று வாசிக்கிறோம் (கொலோசெயர் 2:14)

இயேசு கிறிஸ்து சிலுவையில் மரித்தபோது பழைய பிரமாணத்தை நீக்கி விட்டார் அல்லது நீக்கிப்போட்டார். ஜனங்கள் நியாயப்பிரமாணத்தின் கீழ் எப்படி மிருகங்களின் இரத்தத்தை பலியாகச் செலுத்தினார்களோ அதை போலவே, நியாயப் பிரமாணத்தின் கீழ் தசமபாக பிரமாணத்தையும் அனுசரித்தார்கள். " இவ்விதமாக நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மை கிறிஸ்துவினிடத்தில் வழி நடத்துகிற உபாத்தியாய் இருந்தது. விசுவாசம் வந்தபின்பு நாம் உபாத்திக்குக் கீழானவர்களல்லவே " (கலாத்தியர் 3:24,25) " நீங்கள் நியாயப் பிரமாணத்திற்கு கீழ்ப்பட்டிராமல் கிருபைக்கு கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது ". (ரோமர் 6:14) " அன்றியும், ஒழிந்து போவதே மகிமையுள்ளதாயிருந்ததானால் நிலைத்திருப்பது அதிக மகிமையுள்ளதாயிருக்குமே ". (II கொரிந்தியர் 3:11). இந்த வசனங்களையெல்லாம் வாசித்து விட்டு ஒருவரால் மோசே யின் பிரமாணமும், முற்பிதாக்களின் பிரமாணமும் இன்னும் நம்மை கட்டுப்படுத்துகிறது என்று வாதிடவே முடியாது. கிறிஸ்துவின் காலத்தில் தசமபாக பிரமாணம் நம்மைக் கட்டுப்படுத்துவதில்லை என்ற முடிவுக்கு வந்தாக வேண்டும்.

அப்படியானால், இது இந்த கிறிஸ்துவின் காலத்தில் கர்த்தருக்கென்று காணிக்கை கொடுக்கத் தேவையில்லை என்று பொருள்படுமா? அந்த யூதர்களைப் போல நாம் உதாரத்துவமாய் கொடுக்க வேண்டும் என்று தேவன் நம்மிடமிருந்து எதிர் பார்க்கவில்லை என்று பொருள்படுமா? நான்காயிரம் ஆண்டுகளாக நான் மனிதனிடம் எப்படிக் கொடுக்க வேண்டும் எப்போது கொடுக்க வேண்டும், எவ்வளவு கொடுக்க வேண்டும் என்று சொன்னேன், ஆனால், இப்போது நீங்கள் குறைவாகவோ அல்லது அதிகமாக வோ நீங்கள் விரும்புகிறபடி கொடுக்கலாம் என்று தேவன் நம்மிடம் சொல்லு கிறாரா? இந்த கிறிஸ்துவின் காலத்தில் வாழும் உங்களுக்கு கொடுக்க மனதில்லை யென்றால் அதை மறந்து விடுங்கள். உங்களுக்கு நீங்களே நியாதிபதிகளாயிருக்க நான் உங்களை விட்டு விடுகிறேன். இப்படிப்பட்ட முட்டாள்தனமான காரியங்களை யார் நம்புவார்கள்? ஆயினும், சில கிறிஸ்துவின் சபை அங்கத்தினர்கள் பேசும் விதத்தைப் பார்த்தால் இதைத்தான் அவர்கள் நம்புகிறார்கள் என்பது வெளிப்படையாகவே தெரிகிறது.

இது உண்மையென்றால், கொடுப்பதில் பொய் சொன்னதற்கு தேவன் ஏன் அனனியாவையும், சப்பீராளையும் அடித்தார்? (அப் 5). இது உண்மையென்றால் இயேசு ஏன் " வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிக மாயிராவிட்டால் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் " என்று சொன்னார்? இந்த வார்த்தைகளில் இயேசு கொடுப்பதைத் தவிர வேறு எல்லாக் காரியங்களைப் பற்றியும் தான் பேசினாரா? யூத மார்க்கத்தை விட்டு வந்தவர்களிடம் அவர்களுடைய மனதில் பத்தில் ஒரு பங்குக்கும் குறைவாகக் கொடுத்தாலே போதும் என்று

சொல்லப்பட்டிருக்குமா? இந்த யூதர்கள் கிறிஸ்தவர்களாவதற்கு முன்பு கிட்டத்தட்ட மூன்று தசமபாகம் (30%) அளவுக்குக் கொடுத்து வந்தவர்கள், கிறிஸ்தவர்கள் கொடுக்க வேண்டிய விகிதாச்சாரம் பத்தில் ஒரு பங்குக்கு குறைவாக இருக்க வேண்டும் என்று சொல்வது, யூதமார்க்கம் கிறிஸ்தவத்தை விட தரத்தில் உயர்ந்தது என்றும், ஒரு கிறிஸ்தவன் ஒரு யூதனைவிட சுயநலவாதி என்றும் பொருள்படும்.

## III புதிய ஏற்பாடு உதாரத்துவத்தை போதிக்கிறது

" புத்தி சொல்லுகிறவன் புத்தி சொல்லுகிறதிலும் தரித்திருக்கக்கடவன்; பகிர்ந்து கொடுக்கிறவன் வஞ்சனையில்லாமல் கொடுக்கக்கடவன் " (ரோமர். 12:8).

பழைய ஏற்பாடு தசம பாகம் பற்றி போதித்தது. புதிய ஏற்பாடு உதாரத்துவம் பற்றி போதிக்கிறது. அடிக்கடி ஒருவர் கொடுத்தலைப் பற்றிய பிரசங்கத்தை கேட்கும் போது, அவர் தன்னுடைய பொறுப்பை தவிர்க்க, பிரசங்கியாரைப் பார்த்து, வேதாகமம் நாம் பத்தில் ஒரு பங்கை கொடுக்க வேண்டும் என்று போதிக்கிறதா? என்று கேட்பார். இல்லை, வேதாகமம் நாம் தசம பாகம் கொடுக்க வேண்டும் என்று போதிப்பதில்லை. அதே வேளையில், பத்தில் ஒரு பங்குக்குக் குறைவாக நாம் கொடுக்க வேண்டும் என்றும் போதிப்பதில்லை; நாம் உதாரத்துவமாய் கொடுக்க வேண்டும் என்று தான் போதிக்கிறது. நாம் நியாயப்பிரமாணத்தின் கீழ் இல்லாமல் கிருபையின் கீழ் இருக்கிறோம் என்பது உண்மையென்றாலும், அது கொடுக்க வேண்டிய பொறுப்பைக் குறைத்து விடாது. நம்மிடம் அதிகமாக கொடுக்கப்பட்டிருக்கிபடியால் நம்மிடமிருந்து குறைவாக எதிர்பார்க்கப்படும் என்று நினைக்கிறீர்களா? (லூக்கா 12:48). நமக்கு வாய்ப்புகள் அதிகமாக இருக்கிறபடியால் நமக்கு பொறுப்புகளும் அதிகமாக இருக்கிறது என்று தான் இயேசு போதித்தார். மல்கியாவின் நாட்களில் யூதர்கள் மங்கலான ஒளியில் வாழ்ந்து கொண்டிருந்தார்கள், நாமோ இந்த நாட்களில் பிரகாசமான ஒளியில் வாழ்ந்த கொண்டிருக்கிறோம். தேவன் அவர்களிடமிருந்து தசமபாகத்தை எதிர்பார்த்தார். ஆனால், அவர்கள் அப்படிக் கொடுக்க மறுத்து, தேவனை வஞ்சித்ததினால் குற்றவாளிகளாக தேவனால் கருதப்பட்டார்கள்.

உதாரத்துவம் என்பதன் அர்த்தத்தை புரிந்து கொள்வதற்கு ஓர் உதாரணத்தை பார்க்கலாம். உங்கள் பிராந்திய சபையில் மோசேயின் பிரமாணத்தின் கீழ் வாழ்கிற நூறு யூதர்கள் இருப்பதாக நினைத்துக் கொள்ளுங்கள். பக்தியுள்ள யூதர்கள் எல்லாருமே தங்கள் வருமானத்தில் தோராயமாக முப்பது சதவீதத்தை கர்த்தருக்கென்று கொடுத்தார்கள் என்பதை நாம் அறிவோம். ஆகையால், நீங்கள் கூடிவருகிற சபையில் வாரம் நூறு ரூபாய் சம்பாதிக்கும் நூறு யூதர்கள் இருந்தால் வாரக் காணிக்கை 3000 ரூபாயாகும். அவர்கள் வாரம் ஐம்பது ரூபாய் மாத்திரம் சம்பாதித்தால் வாரக் காணிக்கை 1500 ரூபாய்களாகும். நியாயப்பிரமாணத்தின் கீழ் வாழ்கின்ற யூதர்களோடு நம்முடைய காணிக்கையை ஒப்பிட்டுப் பார்த்தால் சபை அங்கத்தினர்கள் அநேகர் வெட்கத்தில் தலையைத் தொங்கப் போட்டுக் கொள்ள வேண்டியதாயிருக்கும். இதைப் பற்றி நாம் சிந்திக்கும் போது, நம்முடைய கர்த்தர் சொன்னதை நினைவில் கொள்வோம், " வேதபாரகர், பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும்,

உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று உங்க ளுக்குச் சொல்லுகிறேன்" (மத்தேயு 5:20) யூதர்களுடைய மார்க்கமானது ஒரு தேச அளவில் தான் இருந்தது. ஆனால், நம்முடைய மார்க்கமோ உலகளாவிய மார்க்கமாக இருக்கிறது. எனவே, நம்முடைய பொறுப்புகள் மாபெரும் பொறுப்புகளாயிருக்கிறது. வேதாகமத்தில் ஒருவர் கூட பத்தில் ஒரு பங்குக்கு குறைவாக தேவனுக்குக் கொடுத்ததில்லை என்று வாசிக்கிறோம். பர்னபாவும், அந்த ஏழை விதவையும் தங்களுக்கு உண்டான எல்லாவற்றையும் கொடுத்தார்கள். பத்தில் ஒரு பங்கு, இருந்த எல்லாம் ஆகிய இந்த இரண்டையும் கவனிக்கும் போது, உதாரத்துமாய்க் கொடுப்பதற்கான அளவு எவ்வளவாக இருக்க முடியும் என்பதை சுலபமாகத் தீர்மானிக்க முடியும்.

புதிய ஏற்பாட்டு கொடுத்தலை மீட்டமைக்க உதவி செய்வீர்களா?.

### கேள்விகள்

1. நாம் இதுவரை பார்த்ததின் பொருள் என்ன?
2. இந்த பாடத்தின் நோக்கம் என்ன?
3. தங்க வசனப் பகுதியை மேற்கோள் காட்டுக?
4. உங்கள் சிந்தனைக்கானது எது?

### முன்னுரை

1. கொடுத்தலைப் பற்றி நாம் விவாதிக்கும் போது சிலர் என்ன சொல்கிறார்கள்?
2. அநேக உதாரணங்களில் ஒருவர் எதைச் செய்ய நாடுகிறார்?
3. நாம் எந்தப் பிரமாணத்தின் கீழ் இருக்கிறோம்?
4. எந்த விதத்தில் சிலர் நியாயப்பிரமாணத்தின் கீழ் இருக்கிறார்கள்?
5. கொடுத்தல் என்கிற பாடத்தை சிலர் எப்படியாக எண்ணுகிறார்கள்?
6. சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதில் நம்முடைய பொறுப்பு என்ன?
7. சிலருடைய பதில் கொடுத்தலைப் பற்றி எப்படியாக இருக்கிறது?
8. வகுப்பை விட்டு வெளியே சென்ற சகோதரனைப் பற்றி கூறு?

### தசமபாகம் கொடுப்பது எப்போது ஆரம்பமானது?

1. அது யாக்கோபிலிருந்து ஆரம்பமாகவில்லை என்பது எப்படி நமக்குத் தெரியும்?
2. ஆபிரகாம் யாருக்கு தசமபாகம் கொடுத்தார்?
3. ஆதாமின் எந்தப் பிரமாணத்தின் நாட்களுக்கு எது செல்கிறது? விளக்குக?
4. உலகத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் மக்கள் பரவிய போது என்ன நடந்தது?
5. ஆதியாகமம் 14:20 ஐ விவாதி?
6. பிரசங்க பீடம் இது பற்றி என்ன சொல்கிறது?
7. யூதர்கள் தேவனிடம் என்ன கேள்வி கேட்டார்கள்?

8. தேவனுடைய பதில் என்னவாயிருந்தது?
9. எல்லா ஜனங்களும் தங்கள் கொடுத்தலில் தசமபாகத்தை மையமாக கொண்டிருந்தனர் என்பதை நாம் எப்படி கணக்கில் எடுத்துக் கொள்ளலாம்?
10. கிரேக்கர்களும், ரோமர்களும் என்ன செய்தார்கள்?
11. கொடுத்தல் அவர்கள் மனதில் எப்படி பதிந்திருந்தது?
12. நாம் என்ன முடிவுக்கு வரலாம்?
13. ஆரம்பத்திலிருந்த சில குறிப்பிட்ட பிரமாணங்களுக்கு என்ன நேர்ந்தது?
14. யார் முதல் ஆசாரியனாகவும், ராஜாவாகவும், தீர்க்கதரிசியாகவும் அழைக்கப்பட்டார்?

### தசம பாகம் எப்போது முடிவுக்கு வந்தது?

1. கொலோசெயர் 2:14 ஐ வியாக்கியானம் செய்?
2. கலாத்தியர் 3:24—25 வசனங்களை விளக்குக?
3. ரோமர் 6:14 என்ன கூறுகிறது?
4. அது எதில் நிலைத்திருக்கிறது?
5. தசமபாக பிரமாணம் நம்மைக் கட்டுப்படுத்துகிறதா?
6. இது நாம் கொடுக்க தேவையில்லை என்று பொருள்படுமா?
7. சில சபை அங்கத்தினர்கள் வெளிப்படையாக என்ன நம்புகிறார்கள்?
8. அனனியாவுக்கும், சப்பீராளுக்கும் என்ன நடந்தது?
9. இயேசு என்ன சொன்னார்?
10. பத்தில் ஒரு பங்குக்கு குறைவாக நாம் தேவனுக்கு கொடுக்கும் காணிக்கையை அவர் ஏற்றுக் கொள்வாரா?

### புதிய ஏற்பாடு உதாரத்துவத்தைப் போதிக்கிறது

1. ரோமர் 12:8 ஐ வாசித்து விளக்குக?
2. பழைய ஏற்பாடு எதை போதிக்கிறது?
3. புதிய ஏற்பாடு எதை போதிக்கிறது?
4. சிலர் தங்கள் பொறுப்புகளை எப்படி தவிர்க்கிறார்கள்?
5. லூக்கா 12:48 ஐ விளக்குக?
6. நம் பொறுப்புகள் எப்படி மகத்தானவைகள்?
7. நாம் எந்த காலத்தில் வாழ்கிறோம்?
8. நூறு யூதர்களின் உதாரணத்தை விவாதி?
9. அவர்களுடைய காணிக்கையோடு நம்முடைய காணிக்கையை ஒப்பிடுக?
10. மத்தேயு 5:20 ஐ விளக்குக?
11. வேதாகமத்தில் நாம் எது பற்றி ஒருபோதும் வாசிக்க முடியாது?
12. நாம் எவ்வளவு கொடுக்க வேண்டும் என்பதை அறிந்து கொள்ள எது நமக்கு உதவி செய்யும்?.

# பாடம் – எட்டு

# உறுதி எடுத்துக் கொடுப்பதில் உங்களுக்கு நம்பிக்கையில்லையா?

## So You Don't Believe in Pledging

### தங்க வசனப்பகுதி

" அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல தன் மனதில் நியமித்த படியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயி ருக்கிறார் (II கொரி. 9:7)

### நோக்கம்

நாம் மனதிலே முன்னதாகத் தீர்மானம் செய்தால் தான், நம்முடைய வருமானத் திலிருந்து வசனத்தின்படியும், சீராகவும், தாராளமாகவும் கொடுக்க முடியும் என்பதைப் புரிந்து கொள்ள உதவுவது.

### உங்கள் சிந்தனைக்கு

மனிதனுக்கு மாற்றம் தேவை; முதலில் சிந்தனை மாற்றம், பின்பு இருதய மாற்றம், அதன்பின்பு கொடுத்தல் சம்பந்தமான மாற்றம்.

### முன்னுரை

படிப்பில்லாவிட்டால் யாராலும் வேதாகமத்தை வாசிக்க முடியாது, அது போலவே, மனதிலே நியமித்துக் கொள்ளாவிட்டால் யாராலும் கொடுக்கவும் முடியாது. ஒருவன் கொடுக்க மறுக்கும்போது கூட தன்மனதிலே நியமித்துத் தானே அப்படிச் செய்ய வேண்டும். கர்த்தருக்குக் காணிக்கை கொடுப்பது சம்பந்தமாக மனதிலே நியமித் துக் கொள்வது, உறுதி எடுத்துக்கொள்வது, வாக்குக் கொடுப்பது என்பது உணர்ச்சி சம்பந்தப்பட்ட ஒன்று. நாம் ஒருவருடைய பணப்பையை தொடும் போது, நாம் உண்மை யிலேயே அவருடைய மென்மையான இடத்தை தொடுகிறோம். இது லேசாக சொல்லப் பட வேண்டிய ஒரு காரியம் அல்ல. ஏனென்றால், பவுல், " பண ஆசையே எல்லா தீமைக் கும் வேராயிருக்கிறது " என்றார். ஒருவர் தன் சொந்த நலனுக்காக ஒன்றைச் செய்வ தாக உறுதிமொழி எடுத்துவிட்டு, சபையின் நலனுக்கு எதுவும் செய்வதாக உறுதிமொழி எடுக்காமல் இருக்கும் போது அவர் தான் தேவனோடு நேர்மையாக இருப்பதாக எப்படி சொல்லிக் கொள்ள முடியும்?. பளிச்செனத் தெரியக்கூடிய ஓர் உண்மை என்னவென் றால், நாம் எல்லாவற்றுக்கும் மேலாக இயேசு கிறிஸ்துவை நேசிப்பதில்லை, ஏனென் றால், அப்படிச் செய்ய பண ஆசை தடுக்கின்றது. வேதாகமத்தில் மிகப் பரிதாபமான வார்த்தைகள் அந்த பணக்கார வாலிபனைப் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. " அவன் துக்கமடைந்தவனாய் போய் விட்டான் என்று ".

நியமித்தல் என்ற வார்த்தைக்கான பொருள் ஒன்றைச் செய்வதற்காகத் தீர்மானிப்பது அல்லது முடிவெடுப்பது ஆகும். சபையின் மூப்பர்கள், ஒவ்வொரு வருடமும் கூடி, சில குறிப்பிட்ட பணிகளுக்கு உதவி செய்வது சம்பந்தமாக முடிவெடுக்கும் போது, எதற்கு வாக்குக் கொடுக்கலாம், எதற்கு உறுதி கொடுக்கலாம் என்று விவாதிக்கிறார்கள். மூப்பர்கள் ஒரு ஊழியக்காரரை ஊழியக் களத்திற்கு அனுப்பி ஒரு வருடம் அல்லது இரண்டு வருடங்கள் அவர்களுக்கு உதவி செய்வதாக வாக்கு கொடுப்பது, நியமிப்பது அல்லது உறுதி செய்வதாயிருக்கிறது. இப்போது உங்கள் அயலகத்தார் ஞானஸ்நானம் பற்றிய பாடத்தை படிக்க வேண்டும் என்று நீங்கள் எப்படி உண்மையாய் விரும்புவீர்களோ அது போல இந்த பாடத்தையும் நேர்மையாகப் படிக்க வாருங்கள்.

**I நியமித்தலுக்கு வசன அடிப்படையிலான அதிகாரம்**

“ தானியேல் ராஜாவின் போஜனத்தினாலும் அவர் பானம் பண்ணும் திராட்ச ரசத்தினாலும் தன்னைத் தீட்டுப்படுத்தலாகாதென்று தன் இருதயத்தில் தீர்மானம் பண்ணிக் கொண்டு தன்னை தீட்டப்படுத்தாதபடி பிரதானிகளின் தலைவனிடத்தில் வேண்டிக் கொண்டான் ” (தானியேல் 1:8) தானியேல் தன் மனதில் தீர்மானித்துச் செய்யப்பட்டது தவறு என்று யாராலும் சொல்ல முடியுமா? ஆனால், சபை அங்கத்தினர்கள் “ தானியேலே, தீர்மானிப்பது தவறு, நான் உன்னைப்போல் செய்யமாட்டேன் ” என்று சொல்வதை என்னால் கேட்க முடிகிறது.

“ இவைகள் முடிந்த பின்பு பவுல் மக்கெதோனியா, அகாயா என்னும் நாடுகளில் சுற்றி நடந்து, எருசலேமுக்குப் போகும்படி ஆவியில் நிருணயம் பண்ணிக் கொண்டு நான் அங்கே போன பின்பு ரோமாபுரியையும் பார்க்க வேண்டியதென்று சொல்லி ” (அப் 19:21).

“ உங்களிடத்தில் வர பலமுறை யோசனையாயிருந்தேன், ஆயினும் இது வரைக்கும் எனக்குத் தடையுண்டாயிற்று என்று நீங்கள் அறியாதிருக்க எனக்கு மனதில்லை ” (ரோமர் 1:13).

“ உராய்ஞ்சுகிற ஒரு பட்சியைக் கிழக்கிலிருந்தும், என் ஆலோசனையை நிறைவேற்றும் மனுஷனைத் தூர தேசத்திலிருந்தும் வரவழைக்கிறவராயிருக்கிறேன்; அதைச் சொன்னேன், அதை நிறைவேற்றுவேன்; அதைத் திட்டம் பண்ணினேன், அதைச் செய்து முடிப்பேன் ”. (ஏசாயா 46:11).

“ அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார் ” (IIகொரிந்தியர் 9:7). இந்த வசனங்களை வாசித்து நியமிப்பதை விசுவாசிக்க மறுத்துவிட்டு, நான் நேர்மையாயிருக்கிறேன் என்று ஒருவராலும் சொல்ல முடியாது. இந்த வசனங்களை விசுவாசிக்க மறுப்பது வேதாகமத்தை விசுவாசிக்க மறுப்பதாகும், அது பாவமாகும்.

" நியமித்தலை அல்லது தீர்மானித்தலை நான் நம்புவதில்லை " என்று சொல்வது ஒரு சாதாரண காரியமாகிவிட்டது. ஏன் நம்புவதில்லை? வேதாகமம் பாவ மன்னிப்பிற்காக ஞானஸ்நானம் என்று எவ்வளவு வெளிப்படையாக போதிக்கிறதோ அது போலவே ஒருவர் எவ்வளவு கொடுக்க வேண்டும் என்று மனதில் நியமிப்பது பற்றியும் வெளிப்படையாகவே, தெளிவாகவே போதிக்கிறது. ஒருவர் சொல்கிறார், " மனதில் நியமித்துக் கொள்வேன் ஆனால் எழுதித்தரமாட்டேன் " என்று. " நான் உண்மையைச் சொல் வேன் ஆனால், எழுத்து வடிவத்தில் அதைத் தரமாட்டேன் " என்று ஒருவர் சொன்னால் அவரைப் பற்றி என்ன நினைப்பீர்கள்? இங்கே உண்மை என்னவென்றால், நான் உண்மையை சொன்னால், அதை எழுதிக் கொடுப்பதில் எனக்கு எந்த பிரச்சனையும் இல்லை. நான் பொய் சொல்கிறதாயிருந்தால் அதை எழுதுவது எனக்குப் பிடிக்காது. தீர்மான அட்டையில் கையெழுத்திடுவதில் நம்பிக்கை இல்லாத ஒருவர் தன் வருமானத்திற்குச் சம்பந்தமில்லாமல் குறைவாகக் கொடுக்கிறபடியால், மற்றவர்கள் அதைப் பார்த்து விடுவார்கள் என வெட்கமடைவதால் அதில் கையெழுத்திட அவர் விரும்புவதில்லை. இது தவிர வேறு காரணங்கள் ஏதாவது உங்களுக்குத் தெரியுமானால் சொல்லுங்கள். அது குறித்து என் அடுத்த புத்தகத்தில் எழுதுவேன்.

" உன் வாயினால் சொன்னதை நிறைவேற்ற வேண்டும்; உன் தேவனாகிய கர்த்தருக்கு உன் வாயினால் நீ பொருத்தனை பண்ணிச் சொன்ன உற்சாக பலியை செலுத்தித் தீர்ப்பாயாக " (உபாகமம் 23:23), இந்த ஜனங்கள் கட்டாயமில்லாத காணிக்கைகளில் கூட தீர்மானம் செய்து கொடுத்துள்ளார்கள் (ஆதி.28:20−22). வசனங்களில் யாக்கோபு தேவனுக்கு தசமபாகம் கொடுப்பதாக பொருத்தனை செய்து, வாக்குக் கொடுத்தான் அல்லது உறுதி எடுத்துக் கொண்டான் என்று பார்க்கிறோம்.

## II தீர்மானித்துக் கொள்வது ஒழுங்காகவும், விகிதாச்சார அடிப்படையிலும் கொடுக்க உதவி செய்கிறது

கர்த்தருக்குக் கொடுத்தல் ஒரு கிறிஸ்தவனுடைய வாழ்க்கையில் ஒரு முக்கிய பங்காக இருக்கிறது. தேவன் நம்மிடத்தில் அதிகமாக அன்பு கூர்ந்தபடியால் தம்முடைய குமாரானையே கொடுத்தார் (யோவான் 3:16). " தேவனுடைய ஈவு மனிதனை வெட்கமடையச் செய்கிறது ". நாம் கர்த்தருடைய வேலையை நம்முடைய சுவாசத்தை விட அதிகமாக நேசிப்பதால், கர்த்தருக்காகச் சிறந்ததைக் கொடுப்பதும் நம்மிடத்தில் இயற்கையாகவே அமைந்து விடவேண்டும். நாம் கிறிஸ்துவையும், அவருடைய சபையையும் மிகவும் நேசிப்பதால், சபையின் எல்லாத் தேவைகளுக்கும் நாம் உற்சாக மாகக் கொடுக்கிறவர்களாயிருக்கும்படி, சபையின் மூப்பர்களுக்கு நாம் முறையாகவும், உறுதி எடுத்தும் கர்த்தருக்கு கொடுப்பதாக அறிவிக்கிறோம். ஒரு மனிதன், தான் இப்படியாகக் கொடுப்பேன் என்று தீர்மானித்தால் தான், கொடுக்கப் போகிற காணிக்கை குறித்து சிந்தை இயற்கையாக வரும். ஒரு சபை விசுவாசி விடுமுறைக்குப் போகும் போது, தான் கொடுப்பதாகச் சொன்ன தொகையை கொடுத்துச் செல்லவில்லையென்றாலும் அல்லது திரும்பி வந்தபின் அதைக் கொடுக்கவில்லை என்றாலும் அவர் அந்த தீர்மான அட்டையில் கையெழுத்திடவில்லை என்று தான் பொருள்படும். சபையில் ஜாக்கிரதையுள்ள மக்களும், உதாரத்துவமாய்க் கொடுப்பவர்களும்

தாங்கள் தீர்மான அட்டையில் கையெழுத்திடுவது அனைவருக்கும் தெரிந்திருக்கிற படியால், கர்த்தருடைய சபையின் வேலையைத் திட்டமிட உதவுவதற்கு அவர்கள் தயங்குவதில்லை.

இப்போது, உண்மையிலேயே ஏன் ஒருவர் இதை ஆட்சேபிக்கிறார்? அவர் அதிகமாக கொடுப்பது யாருக்கும் தெரிய வேண்டாம் என்பதற்காகவா? அல்லது உதாரத்துவமாய்க் கொடுப்பதாலா? அல்லது அவர் கர்த்தருடைய வேலையில் அதிக விருப்ப முள்ளவராயிருக்கிறபடியால் தீர்மான அட்டையில் கையெழுத்திடாமலிருக்கி றாரா? சகோதரரே, நாம் நம்முடைய புத்தி தெளிந்து, கர்த்தருடைய வேலையில் ஆர்வம் கொண்டு நம்முடைய பணத்தால் அதை தாங்க முன்வருவோமாக. ஒரு சராசரி அங்கத்தினர் தீர்மான அட்டையில் கையெழுத்திடாமல் இருப்பதற்கு காரணம், அவர் குறைவாக கொடுப்பது தான் என்பது உங்களுக்கும் தெரியும் எனக்கும் தெரியும். தேவன் அவருக்கு அபரிதமாக கொடுப்பதில் அவர் குறைவாகக் கொடுப்பதால் வெட்க மடைந்து, அந்த தீர்மான அட்டையில் கையெழுத்திட மறுக்கிறார். (இக்கருத்துக்கு விதி விலக்கு என்று யாராவது இருக்கலாம். ஆனால், அவர்கள் குறித்து இதுவரை நான் கேள்விப்படவோ, சந்திக்கவோ இல்லை) தவறாமல் தொடர்ந்து, உறுதியாய்க் கொடுப்பவர்கள் தீர்மான அட்டையில் கையெழுத்திடுபவர்கள் தான். அஜாக்கிரதை யானவர்களும், குறிக்கோளற்றவர்களும், கற்பிக்கப்படாதவர்களுமாகிய இவர்கள் தான் தீர்மான அட்டையில் கையெழுத்திடுவதில் நம்பிக்கை இல்லாதவர்கள்.

### III ஒருவர் கொடுக்க தீர்மானித்துக் கொள்ள வேண்டும்

தீர்மானிக்காமல் கொடுப்பது என்பது முடியாத காரியம். " அவனவன் விசன மாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்ககடவன்; உற்சாக மாய் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார் ". (II கொரிந்தியர் 9:7). ஒருவர் பத்து பைசா கொடுக்க மறுத்தால் கூட அவர் தன் மனதில் கொடுக்க வேண்டாம் என தீர்மானித்தாலொழிய அப்படி நடைபெறாது. அதை நீங்கள் " தீர்மானம் ", " உறுதி மொழி " அல்லது " வாக்கு " என எப்படி வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம். அது நாம் கொடுப்பது சம்மந்தமாக செய்யப்படவேண்டிய ஒன்றாகும். சபையின் மூப்பர்கள், கர்த்தருடைய வேலையைச் சரியாகத் திட்டமிட முடியாதபடி, தீர்மானித்துக் கொடுப்பதை ஆட்சேபிப்பவர் அல்லது தான் எவ்வளவு கொடுக்கப்போகிறேன் என்று தெரியக்கூடாது என நினைப்பவர் பற்றி இப்படியாகச் சொல்லிவிடலாம். கர்த்தர் அவரை ஆசீர்வதித்ததற்குத் தக்கதாகக் கொடுக்காதபடியால், தன்னுடைய பெலவீனம் மற்றவர்களுக்குத் தெரியாதபடி இதை ஒரு " தப்பிக்கும் வழியாக " பயன்படுத்துகிறார். நாம் நம்முடைய பணத்தைக் கொடுக்கவில்லையென்றால் அல்லது உதாரத்துவமாய்க் கொடுக்க எண்ணமே இல்லையென்றால் அல்லது அந்த பணத்தை எடுத்து நம்முடைய சுயநலமான இச்சைகளை பூர்த்தி செய்யப் பயன்படுத்தினால் நாமும் தீர்மான அட்டை யில் கையெழுத்திட மறுத்து. தீர்மான அட்டையில் கையெழுத்திடுவது வேத வசனங் களுக்கு புறம்பானது என்று வாதிடுவோம். ஒரு மனிதன் ஒரு வாகனத்தை வாங்கும் போது அதற்கான கட்டணத் தொகையை செலுத்துவதாக ஒரு சிறிய தாளில் கையெ

முத்திடுகிறான். நாம் ஒரு வங்கியில் " ஒரு லட்சம் ரூபாய் கடன் பெறுகிறோம் " என்று வைத்துக் கொள்வோம். அப்போது, அந்த வங்கி அதிகாரி, நம்மை பார்த்து, " நாங்கள் பணத்தைக் கடனாக தருகிறோம்" என்று சொல்லி, ஒரு சிறிய தாளை நம்மிடத்தில் நீட்டி " இதில் கையெழுத்திடுங்கள் " என்று சொல்லுகிறார். அப்போது, " என்ன, அநியாயம் இது ", " கடனைத் திருப்பிச் செலுத்துகிறேன் என்று கையெழுத்திடச் சொல்லுகிறார் " என்று எல்லோருக்கும் முன்பாகச் சொல்வோமா? அல்லது சத்தமிட்டு, காலைத் தரையில் உதைத்து, மேஜையை ஓங்கித் தட்டி, வாக்குக் கொடுப்பதிலோ, தீர்மானிப்பதிலோ, எனக்கு நம்பிக்கை இல்லை, நான் கிறிஸ்துவின் சபை அங்கதினன்; ஆகையால், நான் இதை எதிர்க்கிறேன் என்று சொன்னால், அவர்கள் என்னைப் பற்றி என்ன நினைப்பார்கள் என்று நீங்கள் எண்ணுகிறீர்கள்?.

ஒரு மனிதர் தான் விரும்புகின்ற வாகனத்தையோ, மீன்பிடி படகையோ, நிலம், வீடு போன்ற பூமிக்குரியவைகளையோ வாங்கும்போது, அதற்கான பணத்தை திரும்பச் செலுத்துவதாக வாக்குக் கொடுத்து, தீர்மானம் எடுத்து, உறுதி அளிக்கிற போது, கர்த்தருடைய வேலைக்கென்று கொடுப்பதற்கு மட்டும் பத்து பைசா கொடுக்கக் கூட நான் உறுதி அளிக்கமாட்டேன் என்று சொல்வாரானால் அவருடைய இருதயம் தேவனோடு சரியாக இல்லை என்று தெரிந்து கொள்ளலாம்.

கர்த்தருடைய வேலை சம்மந்தமாக தீர்மானம் எடுப்பதில், உறுதி அளிப்பதில், வாக்கு கொடுப்பதில் நம்பிக்கை இல்லாத மனிதன், வேதத்தை நன்றாகப் படிக்க வேண்டும். அநேகர் தீர்மானம் எடுப்பது தேவனுடைய வேலையை திட்டமிட்டு, ஆசை யுடன் அதை நிறைவேற்றுவதற்காக என்பதை மறந்து விடுகிறார்கள் போல் தெரி கிறது.

கர்த்தரு டைய வேலைக்கென்று முறையாக நிதியை திரட்டாத பிராந்திய சபை யானது தேவனுடைய பார்வையில் கவிழ்ந்து போவதற்கான விளிம்பில் உள்ளது. ஒருவர் இப்படியாகச் சொன்னார். " நான் தானாகவே முன்வந்து கொடுக்கிற காணிக் கையில் நம்பிக்கை வைக்கிறேன் " என்று. நல்லதுதான் ஆனால், அவை உறுதி எடுத்துக் கொடுக்கப்பட வேண்டும். I கொரிந்தியர் 9:5 ல், " ஆகையால், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிற உங்கள் தான தர்மமானது லோபத்தனமாய்க் கொடுக்கப்பட்ட தாயிராமல், உதாரத்துவமாய்க் கொடுக்கப்பட்டதாயிருக்கும்படியாக அதை ஆயத்தப் படுத்துகிறதற்குச் சகோதரரை ஏவி, உங்களிடத்தில் முன்னதாக அனுப்புவது எனக்கு அவசியம் என்று காணப்பட்டது " என்று பார்க்கிறோம். (I கொரி. 9:1–5 வாசிக்கவும்).

நம்முடைய காணிக்கையானது உறுதியான திட்டத்தை வெளிப்படுத்துகிறதாக இருக்க வேண்டும். அதாவது, நிர்ணயித்ததை செயலில் காட்டவேண்டும். நம்முடைய காணிக்கையானது நன்கு திட்டமிடப்பட்ட ஒன்றாக இருக்க வேண்டும். செயல்படுத் தப்படாத திட்டம் மதிப்பற்றதாயிருக்கும். அதுபோலவே, திட்டமிடாத கொடுத்தலும் அரைகுறையானதாகவே இருக்கும். மேலும், தீர்மானிக்கப்பட்ட திட்டமானது, சகோதரர்கள் மத்தியில் பக்தி வைராக்கியத்தை உண்டாக்குவதாக இருக்க வேண்டும்.

இப்படிப்பட்ட தீர்மானமும், திட்டமிடுதலும் இந்த வைராக்கியத்தை செயலில் கொண்டு வரத்தூண்டுகிறதாய் இருக்க வேண்டும். இவ்வகையான கொடுத்தலானது எப்போதும் உதாரத்துவமாய்க் கொடுக்கிறதில் நம்மைக் கொண்டு போய் சேர்க்கும். கிறிஸ்துவின் சபை அங்கத்தினர்கள் அனைவரும் தங்கள் வரவுக்குத்தக்கதாக திட்டமிட்டு, தீர்மானித்து கர்த்தருக்கு காணிக்கை கொடுத்தால், குறுகிய காலத்திற்குள்ளேயே நாம் உலக முழுவதிலும் சுவிசேஷத்தை அறிவித்து விடலாம்.

சகோதரர்களே, நாம் நின்று, யோசித்து, கொடுத்தலைப் பற்றி தேவனுடைய வார்த்தை என்ன சொல்கிறது என்பதை கவனிப்போம். தேவனுடைய ஜனங்களுக்கு பிரசங்கியார்களும், போதகர்களுமாயிருக்கிறவர்கள், சபையில் உள்ள லோபத்தனமான, சுயநலமுள்ள, பொருளாசையுள்ள சபை அங்கத்தினர்கள் காணிக்கைக் கொடுப்பதை விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் பிரசங்கிக்க வேண்டும். சபையார் நம்மை பயமுறுத்த நாம் அனுமதிக்க கூடாது. வேதாகமம் கொடுத்தலைப் பற்றி என்ன போதிக்கிறது என்பதை கற்றுக் கொள்ள வேதாகமத்தை படிக்க மறுக்கும் ஒருவர், வேதாகமம் கொடுத்தலைப் பற்றி என்ன போதிக்கிறது என்பதை பார்க்காமல் தன் கண்களை மூடிக் கொள்ளும் ஒருவர், தான் ஏற்கனவே தன்னுடைய மனதில் தீர்மானித்து விட்டபடியால் தனக்கு இந்த பாடத்தைக் குறித்து யாரும் போதிக்க முடியாது என நினைக்கும் ஒருவர் நிச்சயமாகவே தன்னுடைய ஆத்துமாவை இழந்து போவார். அவருக்கு மிக துன்மார்க்கர்களுக்கான கதியே அல்லாமல் வேறொரு சிறந்த வாய்ப்பு அமையாது. இந்த உண்மையை சபையார் மிக விரைவில் தெரிந்து கொள்வது நல்லது. ஏதாவது பிரசங்கியார் கஞ்சத்தனமான விசுவாசி சத்தியத்தை பிரசங்கிக்க அச்சுறுத்த அனுமதி கொடுத்தால் அந்த பிரசங்கியாரும் நரகத்தில் அந்த கஞ்சத்தனமான சபை விசுவாசியுடன் தன்னை இணைத்துக் கொள்வார். காணிக்கை பிசங்கத்தை விரும்பாத அந்த அங்கத்தினர், இந்த பிரசங்கியார் தீயிலிடப்படுவதற்கு காரணமாகிவிடுகிறார். ஒருவர் இப்படியாகச் சொன்னார், " உங்களால் முடிந்தவரை பெற்றுக் கொண்டு, உங்களால் முடிந்தவரை சேமித்துக் கொண்டு, உங்களால் முடிந்தவரை கொடுக்கவில்லையென்றால், நீங்கள் இதற்கு முன்பு இருந்ததை விட இப்போது இரண்டு மடங்கு நரகத்தின் பிள்ளைகளாயிருக்கிறீர்கள்" என்று.

## IV தீர்மானிப்பதற்கு, வாக்கு கொடுப்பதற்கு, உறுதி அளிப்பதற்கு ஆட்சேபணைகள்

இந்த பாடத்தைக் குறித்து தேவன் சொல்லியிருக்கிறவைகளுக்கு எதிராக நீங்கள் ஆட்சேபணை தெரிவிக்கும் போது, நீங்கள் மற்றவர்களிடம் ஞானஸ்நானம், சபை, கர்த்தருடைய பந்தி, அல்லது தேவன் சொல்லியிருக்கிற வேறு ஏதாவது பாடம் பற்றி படிக்கும் போது அவர்களும் நொண்டிச் சாக்குகளால் ஆட்சேபணை தெரிவிப்பார்களென்பதை மறுந்து விடாதீர்கள். ஆகையால், தேவனுடைய வார்த்தை யை நாம் மறுதலிக்காமல் அப்படியே விசுவாசிப்போம்.

ஒருவர் இப்படியாகச் சொன்னார். கொடுக்கிறவர்கள் கிணறுகளைப் போன்றவர்கள். சில கிணற்றிலிருந்து தண்ணீரை இறைக்க வேண்டும். சில கிணறுகளிலிருந்து குழாய் மூலமாக தண்ணீர் வெளியேற்றப்பட வேண்டும். சில கிணறுகள் தண்ணீரால் நிரம்பி வழியும். நீங்கள் இதில் எவ்வகையைச் சார்ந்தவர்கள்?

நீங்கள் புதிய ஏற்பாட்டு கொடுத்தலை மீட்டமைக்க உதவி செய்வீர்களா?

**கேள்விகள்**

1. தங்க வசனப்பகுதி என்ன?
2. இந்த பாடத்தின் நோக்கம் என்ன?
3. உங்கள் சிந்தனைக்கு எழுது?

**முன்னுரை**

1. எது முடியாதது?
2. மிகவும் உணர்வுப் பூர்வமான விஷயம் எது?
3. வெளிப்படையான, எளிமையான சத்தியம் யாது?
4. இந்த பாடத்தில் நான்கு சோகமான வார்த்தைகளை குறிப்பிடுக?
5. எப்படி நாம் இப்பாடத்தை படிக்க வேண்டும்?

**தீர்மானிப்பதற்கு வேதவசன அடிப்படையிலான அதிகாரம்**

1. தானியேல் 1:8 ஐ விளக்குக?
2. பவுல் என்ன செய்ய தீர்மானித்திருந்தார்?
3. பவுல் ரோமாபுரியாருக்கு என்ன எழுதினார்?
4. ஏசாயா 46:11 ல் தேவனுடைய தீர்மானத்தை விவாதி?
5. IIகொரிந்தியர் 9:7 ஐ வகுப்பில் விவாதியுங்கள்.
6. பொதுவாக நாம் கேள்விப்படும் காரியம் என்ன?
7. தீர்மானிப்பதும், நியமித்துக் கொடுப்பதும் தவறு என்று போதிக்கும் ஒருவர் உதாரத்துவமாகக் கொடுப்பதை நீங்கள் அறிவீர்களா?
8. உபாகமம் 23:23 ல் பொருத்தனைப் பற்றி என்ன சொல்லுகிறது என்று விவாதி.
9. ஆதியாகமம் 28:20–22 ஐ விவரி.

**தீர்மானித்துக் கொள்வது ஒழுங்காகவும், விகிதாச்சார அடிப்படையிலும் கொடுக்க உதவி செய்கிறது**

1. கிறிஸ்தவ வாழ்வின் ஒரு முக்கிய, முழுமையான பகுதி என்ன?
2. தேவன் எவ்வளவாக அன்பு கூர்ந்தார்?
3. மிகவும் உதாரத்துவமாய்க் கொடுப்பவர்கள் பற்றி கூறுங்கள்.
4. நியமித்துக் கொடுப்பதை எதிர்ப்பவர் அதிகமாக கொடுப்பவர் என்று நம்புவது சரியானது தான் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

6. நாம் எப்படி புத்தி தெளிய வேண்டும்?
7. தீர்மான அட்டையில் கையெழுத்திடுகிறவர் யார்?

ஒருவர் கொடுக்க தீர்மானித்துக் கொள்ள வேண்டும்

1. உற்சாகமாய் கொடுப்பவரைப் பற்றி விவரி.
2. நியமிப்பது, தீர்மானிப்பது, உறுதிமொழி எடுப்பது என்றால் என்ன?
3. தீர்மான அட்டையில் கையெழுத்திடுவது பாவம் என்று யார் போதிக்க கூடும்?
4 ஒருவர் ஒரு வாகனம் வாங்கும் போது உறுதிமொழி கொடுக்க மறுக்கிறாரா?
5. வங்கியிலிருந்து கடன் வாங்கும்போது உறுதிமொழி கொடுப்பதை ஒருவர் மறுக்கிறாரா?
6. ஒரு வங்கியில் கடன் வாங்கும் ஒருவர் உறுதிமொழி கொடுக்கும் காட்சியை விவரி?
7. விசேஷமாக படிக்க வேண்டியது யார்?
8. I கொரிந்தியர் 9:1–5 வாசித்து விவரி.
9. திட்டமிட்டு கொடுப்பதின் பலன்களை விவரி?
10. பொருளாசை உள்ளவர்கள், கொடுப்பது பற்றி பிரசங்கிப்பதை தடுக்க நாம் அனுமதிக்கலாமா?
11. கொடுத்தலைப் பற்றிய போதனைக்கு தன் கண்களை மூடிக்கொள்ளும் ஒரு மனிதனின் நிலை என்ன?

தீர்மானிப்பதற்கு, வாக்குகொடுப்பதற்கு, உறுதி அளிப்பதற்கு ஆட்சேபனைகள்

1. திட்டமிட்டு கொடுப்பதின் சில பயன்களை விவரி?
2. நம்முடைய கொடுத்தலை ஜெபத்துடன் திட்டமிட்டுக் கொடுத்தால் இன்னும் அதிக மாயிருக்கும் அல்லவா?
3. ஒரு மனிதன் ஞானஸ்நானத்தை நம்பவில்லை என்றால், அவன் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கலாமா?
4. ஒரு மனிதன் தேவனை விசுவாசிக்கவில்லை என்றால் அவர் மீது அவன் குற்றம் கண்டுபிடிக்கலாமா?
5. ஒரு மனிதர் திட்டமிட்டுக் கொடுப்பதை நம்பவில்லை என்றால், அதை அவர் எதிர்க்கலாமா?
6. கிறிஸ்தவர்கள் ஏன் கிணறுகளைப் போல் இருக்கிறார்கள்?

# பாடம் – ஒன்பது

# கொடுத்தல் திராவகப் பரிசோதனை போன்றது

## Giving is The Acid Test

### தங்க வசனப்பகுதி

" இதை நான் கட்டளையாகச் சொல்லாமல், மற்றவர்களுடைய ஜாக்கிரதையைக் கொண்டு, உங்கள் அன்பின் உண்மையைச் சோதிக்கும் பொருட்டே சொல்லுகிறேன் ". (II கொரி. 8:8)

### நோக்கம்

காணிக்கை கொடுத்தல், ஒரு மனிதர் கிறிஸ்துவுக்கும், அவருடைய சபைக்கும் எவ்வளவு உண்மையானவராக இருக்கிறார் என்பதை வெளிப்படுத்தும் மிகப்பெரிய சோதனை என்பதை உணர்ந்து கொள்ள உதவுவது.

### உங்கள் சிந்தனைக்கு

தன்னால் இழக்க முடியாததை ஆதாயப்படுத்தும்படி, தன்னால் காக்க முடியாததைக் கொடுப்பவன் ஒன்றும் அறியாதவனல்ல.

### முன்னுரை

நாம் வாழும் இந்தக் காலகட்டம், நாம் பயன்படுத்தும் வாகனம், தொலைக்காட்சிப் பெட்டி, கம்ப்யூட்டர் ஆகிய அனைத்தும், அவ்வளவு ஏன் நாம் உடுத்தும் ஆடை, காலணிகள் போன்றவைகள் கூட சோதிக்கப்பட்ட பிறகே விற்பனைக்கு வரும் காலமாயிருக்கிறது. உண்மையில், எல்லாமே ஒன்றுக்கு, இரண்டு முறை அல்ல, பல முறையும், இன்னும் சில உபகரணங்கள் மிக அதிகமான அளவிலும் சோதிக்கப்படுகின்றன. முதலீடு செய்பவரின் நலன் பாதுகாக்கப்படும்படியாக இவ்வாறு செய்யப்படுகிறது.

தேவன் நம்மை ஏன் சோதிக்கிறார் என்பதைப் புரிந்து கொள்வது எப்பொழுதும் சுலபமானதல்ல. ஆனால், தேவன் மனிதனை சோதித்ததற்கான நிறைய உதாரணங்கள் வேதாகமத்தில் உண்டு. " சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கின பின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவ கிரீடத்தைப் பெறுவான் ". (யாக் 1:12)

ஆதியாகமம் 22ம் அதிகாரத்தில், ஆபிரகாம் தன் குமாரன் ஈசாக்கை பலி செலுத்துவது சம்பந்தமாக நாம் வாசிக்கிறோம். ஆபிரகாமின் வாழ்க்கையில் இது மிகப்பெரிய சோதனை என்பதில் சந்தேகமில்லை. இச்சோதனையில் ஆபிரகாம் மிக நேர்த்தியாக வெற்றி பெற்றார்.

யோபு புத்தகம் 1 ம் அதிகாரத்தில் யோபு சந்தித்த மிகப் பெரிய சோதனையை நாம் பார்க்கிறோம். குலை நடுங்க வைக்கும் அச்சோதனையில், அவன் எப்படி உறுதி காட்டி, இரட்டிப்பான ஆசீர்வாதம் பெற்றான் என்று படிக்கிறோம். எந்த ஒரு கட்டத்தி

லும், அவன் தேவனுடைய வார்த்தையை சந்தேகிக்கவே இல்லை. இன்றைக்கு தேவன் நம்மை பல வழிகளில் அல்லது வகைகளில் சோதிக்கலாம். ஆனால், எந்த ஒரு சந்தேகமுமில்லாமல், கர்த்தருடைய சபையாருக்கும் அநேக கிறிஸ்தவர்களுக்கும் நம்முடைய வருமானத்திலிருந்து கர்த்தருக்குத் தாராளமாய்க் கொடுப்பது ஒரு முக்கியமான சோதனையாகவே உள்ளது.

**I கொடுத்தல் நம்முடைய விசுவாசத்திற்கான ஒரு சோதனை**

நான் வளர்ந்த எங்கள் பகுதியில், அநேக ஜனங்களுக்கு ஞானஸ்நானமும், கர்த்தருடைய பந்தியும் கிறிஸ்தவத்திற்கான ஒரு சோதனையாக இருந்தது. மதம் சம்பந்தமாக இவைகள் பற்றித் தான் நான் கேட்டிருக்கிறேன். நான் வளர்ந்த பகுதியிலிருந்த சகோதரர்களுள் ஒரு கூட்டத்தார், பணம் பற்றி அல்லது கொடுத்தல் பற்றி யார் பிரசங்கித்தாலும், தங்கள் புருவங்களை உயர்த்தி முறைத்துப் பார்த்து, பிரசங்கிப்பவருக்கு மரண பயத்தை உண்டாக்கி விடுவார்கள். ஆனால், கர்த்தருக்கு ஸ்தோத்திரமுண்டாகட்டும். சகோதரர்களில் சிலர், குற்றச்சாட்டுகள் பற்றி கவலைப்படாமல் ஞானஸ்நானம் பற்றி எப்படிப் பிரசங்கித்தார்களோ அதுபோல, கர்த்தருக்குக் கொடுத்தல் பற்றிய உண்மையையும் பிரசங்கித்தார்கள்.

ஆபிரகாமின் விசுவாசத்தை சோதிக்க தேவன் விரும்பியபோது ஆபிரகாமுடைய குமாரனைக் கொடுக்கும்படியாக தேவன் கேட்டார். தேவன், தன் குமாரனையே கேட்டிருந்தாலும் கூட, அவனை பலியாகக் கொடுக்க விருப்பமுற்று, தேவன் பேரில் தனக்கிருக்கும் விசுவாசத்தை நிரூபித்தான். இந்த ஆபிரகாமின் விசுவாசம் பற்றிப் பவுல் இவ்விதம் பேசியுள்ளார். " தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறை வேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி, தேவனை மகிமைப்படுத்தி, விசுவாசத்தில் வல்லவனானான் " (ரோமர். 4:21).

ஒரு கிறிஸ்தவன் தன் வருமானத்திலிருந்து தாரளமாகக் கொடுக்காமலிருப்பதற்கான அடிப்படைக் காரணம், அவன் பெலவீனமான விசுவாசமே. இந்த விசுவாச பெலவீனம் நம்மைக் காலங்காலமாகப் பிடித்திருக்கிறது. நம்முடைய இரட்சகர், தம்முடைய சீடர்களின் பெலவீனமான (அற்ப) விசுவாசத்திற்காகப் பலமுறை அவர்களைக் கடிந்து கொண்டார். மத்தேயு 6ம் அதிகாரத்தில், அவருடைய சீடர்கள், என்னத்தை உண்போம். என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுத்துவோம் என்று மிகவும் கவலைப்பட்டிருக்கிறார்கள். இது நம்முடைய நிலையைப் பிரதிபலிப்பதாக இல்லையா? அவர்களைப் பார்த்து, " இயேசு, உடைக்காகவும் நீங்கள் கவலைப்படுகிறதென்ன? காட்டுப் புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப் பாருங்கள்; அவைகள் உழைக்கிறதுமில்லை, நூற்கிறதுமில்லை; என்றாலும் சாலமோன் முதலாய் தன் சர்வ மகிமையிலும் அவைகளில் ஒன்றைப் போலாகிலும் உடுத்தியிருந்ததில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். அற்ப விசுவாசிகளே, இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும், காட்டுப் புல்லுக்குத் தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால், உங்களுக்கு உடுத்துவிப்பது, அதிக நிச்சயமல்லவா? என்றார் " (மத். 6:28–30).

மத்தேயு 8ம் அதிகாரத்தில், பெருங்காற்றுக்கு மத்தியில் இயேசு, நித்திரையாயிருந்ததை நாம் படிக்கிறோம். " அவருடைய சீடர்கள் பயந்து, அவரை எழுப்பி, மடிந்து போகிறோம் என்றார்கள். அதற்கு அவர் " அற்ப விசுவாசிகளே! ஏன் பயப்படுகிறீர்கள் என்று சொல்லி எழுந்து, காற்றையும், கடலையும் அதட்டினார். உடனே, மிகுந்த அமைதல் உண்டாயிற்று " (மத். 8:23–27). மேலும், மத். 14:25–31 வசனப்பகுதியில், இயேசு கடலின் மீது நடந்து சீடர்களிடம் சென்றார். இயேசு தண்ணீரின் மேல் நடந்து வருகிறதைப் பேதுரு கண்டபொழுது, " ஆண்டவரே, நீரேயானால் நான் ஜலத்தின் மேல் நடந்து உம்மிடத்தில் வரக் கட்டளையிடும் " என்றான். பிறகு, காற்று பலமாயிருக்கிறதைக் கண்டு, பயந்து, அமிழ்ந்து போகையில், " ஆண்டவரே, என்னை இரட்சியும் " என்று கூப்பிட்டான். " உடனே இயேசு கையை நீட்டி, அவனைப் பிடித்து, அற்ப விசுவாசியே, ஏன் சந்தேகப்பட்டாய் என்றார் ". மத். 16:5–8 வசனப்பகுதியில், இயேசு, புளித்தமாவாகிய பரிசேயர், சதுசேயர் என்பவர்களை குறித்து எச்சரிக்கையாயிருங்கள் என்று தன்னுடைய சீடர்களுக்கு எச்சரித்தார். அவருடைய சீடர்கள் மிகுந்த மாம்ச சிந்தையுடையவர்களாயிருந்து, வயிற்றுக்கான போஜனம் கொண்டு வராதபடியால் இப்படிப் பேசுகிறார் என்று தங்களுக்குள்ளே யோசனை பண்ணினார்கள். இயேசு அதை அறிந்து, " அற்ப விசுவாசிகளே, அப்பங்களைக் கொண்டு வராததைக் குறித்து நீங்கள் உங்களுக்குள்ளே யோசனை பண்ணுகிறதென்ன? " என்றார் (16:8).

ஒருவர் தேவன் கொடுத்துள்ள வாக்குத்தத்தங்களை விசுவாசிக்கும் போது தான், அவர் கர்த்தருக்குக் கொடுப்பதில் தாராளமுள்ளவராயிருப்பார். ஒருவர் தேவனுடைய வாக்குத்தத்தங்களை விசுவாசிக்க ஆரம்பித்துவிட்டால், அவர் கர்த்தருக்குக் கொடுக்கவேண்டிய அளவு கொடுக்காமல் அவரிடத்திலிருந்து திருடுவதை நியாயப்படுத்த காரணங்களைத் தேடமாட்டார். வேதாகமம் போதிக்கிறபடி ஒருவர் கொடுக்காமலிருக்கும் போது அதை நியாயப்படுத்த அவர் பல காரணங்களைத் தேடி அலைவார்.

## II கொடுத்தல் நம்முடைய அன்பிற்கான ஒரு சோதனை

தேவனுடைய அன்பின்மேன்மை பற்றி ஒரு மனிதனுடைய மனம் உணர வேண்டும் என்று முயற்சிக்கும் போது, யோவான் 3:16 ஐ நாம் வாசித்துக் காட்டலாம். " தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார் ". தன் குமாரனைத் தந்து இவ்வளவாய் அன்பு கூர்ந்தார் என்பதை நாம் இங்கே வலியுறுத்துகிறோம். ஒரு குடும்பத்தில் உள்ள தகப்பன், தான் குடும்பத்தில் அன்பு கூறுகிறேன் என்பதைத் தன் உழைப்பாலும், தியாகத்தாலும் நிரூபிக்கிறார். ஒரு மனிதன் தான் சம்பாதிக்கும் பணத்தை எடுத்து, தன் குடும்பத்தின் தேவைகளுக்குச் செலவிடாமல், மற்றவர்களுக்குச் செலவழிக்கும் போது, அவன் தன் குடும்பத்தின் மீது கொண்டிருக்கும் அன்பைக் குறித்து என்ன சொல்லுவது? அந்த மனிதன் தன் குடும்பத்தை நேசிப்பதாக நீங்கள் நினைப்பீர்களா? நாம் தேவனையும், அவருடைய காரியங்களையும் நேசிக்கக் கற்றுக்கொள்ளும் போது தான், அவருக்குக் கொடுப்பதில் நாம் தாராளமாக இருக்க முடியும். ஆத்துமாவில் இழந்து போனவர்க

ளாகக் காணப்படுபவர்கள் மீது நாம் கொண்டிருக்கும் அன்பினிமித்தமே நாம் நம்முடைய பணத்தைக் கொடுக்கிறோம். அப்படிக் கொடுப்பதின் மூலம், சுவிசேஷம் அநேகருக்குக் கொண்டு செல்லப்படுகிறது.

ஒரு சமயம் ஒரு பிரசங்கியார் ஒரு குறிப்பிட்ட சபையில் தான் ஆப்பிரிக்காவுக்குத் திரும்பிச் சென்று, அவர்கள் இரட்சிக்கப்படும்படியாய் அவர்களுக்காக மரித்த இயேசுவைக் குறித்து பிரசங்கம் செய்ய, சிறப்புக் காணிக்கைக் கொடுங்கள் என்று வேண்டுகோள் விடுத்தார். சபையின் மூப்பர்கள் சிறப்புக் காணிக்கைக்கு அனுமதி கொடுத்தனர். ஒரு உதவிக்காரர் காணிக்கை பையை சபையாருக்கு மத்தியில் கொண்டு சென்ற போது, அச்சபையில் நீண்ட காலமாக அங்கம் வகிக்கும், அதே சமயம், ஒருபோதும் கர்த்தருக்காக தாரளமாகக் கொடுக்காத முதியவர் ஒருவர், " நாடு கடந்து செய்யும் ஊழியப்பணியில் தனக்கு நம்பிக்கையில்லை? " என்றார். அப்பொழுது உதவிக்காரர், " அப்படியானால், காணிக்கை பையிலிருந்து கொஞ்சம் எடுத்துக் கொள்ளுங்கள். இப்பணம் சத்தியம் அறியாதவர்களுக்கு என்றார் ". ஒவ்வொரு சகோதரனும், ஏதாகிலும் கொடுக்கிறவர்களாகவோ அல்லது எடுக்கிறவர்களாகவோ உள்ளோம். ஒருவருடைய கொடுத்தல் அவருடைய அன்புக்கு எடுத்துக்காட்டாக உள்ளது. ஒரு மனிதனுக்கு, தேவன், அவருடைய சபை, இழந்து போனவர்கள், அநாதைகள் மற்றும் அஞ்ஞானிகள் போன்றோரின் மீது அன்பில்லை என்றால், உற்சாகமாகக் கொடுக்கும்படி எதுவுமே அவனைத் தூண்டாது.

முதியோர் இல்லத்தில் வாழும் வயதான ஒரு அம்மாளை நான் அறிவேன். அரசாங்கத்திடமிருந்து ஒரு சிறிய தொகையை மாதந்தோறும் அவர் பெறுகிறார். சுவிசேஷப் பணியைத் தாங்குவதற்கு, அதிலிருந்து 20% மாதந்தோறும் கொடுக்கிறார். ஏன்? சபையை அவர்கள் அதிகம் நேசிக்கிறார்கள். ஆனால், அதே நேரத்தில் அதிகம் சம்பாதிக்கும் சபை அங்கத்தினர்கள் தனது வருமானத்திலிருந்து வாரம் 500 ரூபாய் கொடுக்க கடமைப்பட்டிருக்கும் போது 50 ரூபாயோ, 100 ரூபாயோ கொடுத்தால், கர்த்தருடைய பந்தியில் பங்கேற்கும்போது, எல்லா கட்டளைகளையும் நிறைவேற்றாததால் அபாத்திரமாய்ப் பங்கேற்று தங்களுக்கு ஆக்கினையை வரவழைத்துக் கொள்கிறார்கள்.

பல வருடங்களுக்கு முன்னால், வளைகுடா நாடுகள் ஒன்றில் வேலை செய்து கொண்டு பிரிவினைச் சபைகள் ஒன்றில் அங்கமாக இருந்த ஒருவர், தன்னுடைய நல்ல வருமானத்தில் பத்தில் ஒரு பங்கை, தான் நம்பிய விசுவாசத்திற்காக கொடுத்து வந்தார். ஒரு கிறிஸ்துவின் சபை ஊழியர் இவரை சத்தியத்திற்குக் கீழ்ப்படியும்படி செய்தார். தான் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்த அந்நாட்களில், வாரம் தோறும் ரூ. 1000 கொடுத்து வந்தார். பிறகு, படிப்படியாக குறைத்து ரூ. 100 கொடுத்தார். தன் அனுபவத்தில் ஒரு சராசரியாக கிறிஸ்தவன் கொடுக்கும் தொகை அதுதான் என்று கண்டார். ஒரு கர்த்தருடைய சபையை உண்மையாக நேசிக்கும் ஒரு கிறிஸ்துவின் சபை அங்கத்தினர் தான் உலகிலேயே தாராளமாகக் கொடுக்கக் கூடியவராக இருக்க வேண்டுமென்று போதிக்கும் வரை, தான் கொடுத்த குறைவான காணிக்கையிலயே அவர்

திருப்தி பட்டுக் கொண்டார். கர்த்தருக்குக் கொடுப்பதில் கிறிஸ்துவின் சபை அங்கத்தி னர்களை விட வேறு யாரும் மிஞ்சினவர்களாக இருக்கக் கூடாது.

### III கொடுத்தல் நம்முடைய தொலைநோக்குப் பார்வைக்கான ஒரு சோதனை

தொலைநோக்குப் பார்வை அல்லது தரிசனம் இல்லாத இடங்களில் ஜனங்கள் அழிந்து போவார்கள் என்று சாலமோன் கூறியுள்ளார். சிலபேர், கர்த்தருடைய ஊழியம் என்பது ஒரு பிராந்திய அளவில் அல்லது உள்ளூர் அளவில் நடப்பது தான் என்று கருதுகிறார்கள். " அறுப்புக்காலம் வருகிறதற்கு இன்னும் நாலு மாதம் செல்லும் என்று நீங்கள் சொல்லுகிறதில்லையா? இதோ வயல் நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறதென்று உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் ". (யோவான் 4:35). தாராளமாய்க் கொடுப்பவராய் இருப்பதற்கு ஒருவர், தொலை நோக்குடையவராக, தேவையைப் பார்க்கக்கூடிய அளவுக்கு இருக்க வேண்டும்.

ஒரு வாகன விபத்து குறித்து ஒரு சமயம் நீதிமன்றத்தில் விசாரணை நடந்தது. ஒரு விவசாயி சாட்சி சொன்னார். விபத்து நடந்த இடத்திலிருந்து தான் ஒரு நூறு அடி தூரத்தில் இருந்ததாகவும், ஆனால், தான் சொல்லுவது உண்மை என்றும் சொன்னார். இவருடைய சாட்சியை ஏற்காத, எதிர் வழக்கறிஞர், அந்த விவசாயியை குறுக்கு விசாரணை செய்தார். அந்த வழக்கறிஞர் நீங்கள் சோடா பாட்டில் கண்ணாடி அணிந்தி ருக்கிறபடியால், நீங்கள் சரியாக அங்கிருந்து பார்த்திருக்க வாய்ப்பில்லை என்று தெரி கிறது என்றார். ஆகவே, நீதிபதிக்கும், கூடியிருப்பவர்களுக்கும் உங்கள் பார்வை எப்படி என்பதைச் சொல்லுங்கள் என்றார். அந்த நேர்மையான விவசாயி, " இளைஞ னே, நீ கேட்பது எனக்கு தெரியாது. ஆனால், என்னால் பகலில் பல லட்சம் மைல்களுக்கு அப்பாலிருக்கும் சூரியனைப் பார்க்க முடிகிறது " என்று பதிலளித்தார்.

அந்தியோகியாவிலிருக்கும் சகோதரர்கள் எருசலேமுக்கு உதவியை அனுப் பின பொழுது, யூதேயாவிலிருக்கும் தேவையை அவர்களால் பார்க்க முடிந்தது. " அந்நாட் களிலே எருசலேமிலிருந்து சில தீர்க்கதரிசிகள் அந்தியோகியாவுக்கு வந்தார்கள். அவர்களில் ஒருவனாகிய அகபு என்பவன் எழுந்து, உலகமெங்கும் கொடிய பஞ்சம் உண்டாகும் என்று ஆவியானவராலே அறிவித்தான்; அது அப்படியே கிலவுதியுராய னுடைய நாட்களிலே உண்டாயிற்று, அப்பொழுது சீஷரில் அவரவர் தங்கள் தங்கள் திராணிக்குத்தக்கதாக யூதேயாவில் குடியிருக்கிற சகோதரருக்கு உதவியாக பணம் சேகரித்து அனுப்ப வேண்டுமென்று தீர்மானம் பண்ணினார்கள். அப்படியே அவர்கள் சேகரித்து பர்னபா, சவுல் என்பவர்களுடைய கையிலே கொடுத்து, மூப்பரிடத்திற்கு அனுப்பினார்கள் ". (அப். 11:27–30)

மக்கெதோனியாவிலிருந்த சகோதரர்கள், தேவை என்ன என்பதை உணர்ந்த படியால், தங்கள்திராணிக்கும் அதிகமாகக் கொடுக்க முடிந்தது. " அன்றியும் சகோதர ரே, மக்கெதோனியா நாட்டுச் சபைகளுக்குத் தேவன் அளித்த கிருபையை உங்களுக்கு அறிவிக்கிறோம். அவர்கள் மிகுந்த உபத்திரவத்தினாலே சோதிக்கப்படுகையில்,

கொடிய தரித்திரமுடையவர்களாயிருந்தும் தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள். மேலும், அவர்கள் தங்கள் திராணிக்குத் தக்கதாகவும் தங்கள் திராணிக்கு மிஞ்சியும் கொடுக்க, தாங்களே மனதுள்ளவர்களா யிருந்தார்களென்பதற்கு நான் சாட்சியாயிருக்கிறேன். தங்கள் உபகாரத்தையும், பரிசுத்தவான்களுக்குச் செய்யப்படும் தர்ம ஊழியத்தின் பங்கையும் நாங்கள் ஏற்றுக் கொள்ளும்படி அவர்கள் எங்களை மிகவும் வேண்டிக் கொண்டார்கள். (II கொரி. 8:1–4).

கர்த்தருக்கு தாராளமாகக் கொடுக்கும் ஒரு சகோதரர், நம்முடைய நாட்களில் சுவிசேஷம் அறிவிக்கப்படாமல் அழிந்து கொண்டிருக்கும் அநேக ஆத்துமாக்களைக் காண்கிறவராக இருக்கிறார். கர்த்தருடைய சபையைச் சேர்ந்தவர்கள், கர்த்தர் தங்க ளை ஆசீர்வதித்த அளவுக்கு தாராளமாகக் கொடுக்கிறவர்களாக இருந்தால், நாம் நற்செய்தியை ஏராளமான இடங்களுக்கு எடுத்துச் செல்ல முடியும்.

## IV கொடுத்தல் நம்முடைய உண்மைக்கான ஒரு சோதனை

தானியேல் யெகோவாவிற்கு உண்மையுள்ளவனாக இருந்தபடியால், அந்த துன்மார்க்க ராஜா இட்ட கட்டளைக்கு அவன் கீழ்ப்படியவில்லை. " தானியேலோவென் றால், அந்த பத்திரத்துக்குக் கையெழுத்து வைக்கப்பட்டதென்று அறிந்த போதிலும், தன் வீட்டுக்குள்ளே போய், தன்மேல் அறையிலே எருசலேமுக்கு நேராக பலகணிகள் திறந்திருக்க, அங்கே தான் முன் செய்து வந்தபடியே, தினம் மூன்று வேளையும் தன் தேவனுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு ஜெபம் பண்ணி, ஸ்தோத்திரம் செலுத்தி னான் " (தானி. 6:10).

பர்னபா, கிறிஸ்துவுக்கும், கிறிஸ்துவின் சபைக்கும் உண்மையுள்ளவனாக இருந்தபடியால், தன்னுடைய சொத்தை விற்று, அதன் கிரையத்தை அப்போஸ்தலரு டைய பாதத்தில் கொண்டு வந்து வைத்தான். " சீப்புருதீவானும், லேவியனும், அப்போஸ்தலராலே ஆறுதலின் மகன் என்று அர்த்தங் கொள்ளும் பர்னபா என்னும் மறுபேர் பெற்றவனுமாகிய யோசே என்பவன், தனக்கு உண்டாயிருந்த நிலத்தை விற்று அதன் கிரையத்தைக் கொண்டு வந்து, அப்போஸ்தருடைய பாதத்திலே வைத்தான் " (அப். 4:36–37).

அனனியா, சப்பீராள் கிறிஸ்துவுக்கும், சபைக்கும் உண்மையற்றவர்களாக இருந்தபடியால், தங்களுடைய நிலத்தை விற்றும், கொடுக்கிற காரியத்தில் பொய் சொன்னார்கள். அவர்களுடைய பொய்யினிமித்தம் தேவன் அவர்களைக் கொன்று போட்டார். (அப். 5:1–11) சகோதரரே, கொடுக்கிற காரியத்தில் பொய் சொல்லுகிறவர் களை தேவன் இன்றைக்கும் கொல்லுகிறதாக இருந்தால், சபைகளில் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுவதற்கே ஆட்கள் இருக்காது. நாம் ஒவ்வொருவரும் கொடுக்கிற காரியத்தில் பொய்காரர்களாக இருக்கிறோமா? என்று நம்மை கேட்க வேண்டும். சகோ. V.P. பிளாக் அவர்கள் எழுதின " என் தேவன், என் பணம் " என்ற புத்தகத்தைப் படித்து விட்டு, நான் கடந்த 25 ஆண்டுகளாக, கொடுக்கிற காரியத்தில் பொய்காரனாக இருந்திருப்பதை உணருகிறேன் என்று ஒருவர் என்னிடம் சொன்னார்.

கொடுக்கிற காரியத்தில், எத்தனை பேர் பொய்காரர்களாக உள்ளோம்?

புதிய ஏற்பாட்டு கொடுத்தலை நாம் மீட்கப் போகிறோமா?

**கேள்விகள்**

1. இப்பாடத் தலைப்பு என்ன?
2. தங்க வசனப் பகுதியை விளக்குக?
3. இப்பாடத்திற்கான நோக்கம் என்ன?
4. உங்கள் சிந்தனைக்கான கருத்து என்ன?

**முன்னுரை**

1. சோதிக்கப்பட்ட சில காரியங்களை எழுது.
2. ஏன் இவைகள் சோதிக்கப்பட்டன?
3. கிறிஸ்தவர்கள் ஏன் சோதிக்கப்பட்டார்கள்.
4. இன்றைக்கு எந்த சோதனை பற்றி நாம் படிக்க இருக்கிறோம்?

**கொடுத்தல் நம் விசுவாசத்திற்கான ஒரு சோதனை**

1. சிலருக்கு கிறிஸ்தவத்தின் சோதனை என்பது என்ன?
2. கஞ்சத்தனமான சபை அங்கத்தினர்கள் எதற்காக அடிக்கடி பிரசங்கியாரைக் குற்றப்படுத்துகிறார்கள்?.
3. ஆபிரகாமின் விசுவாசத்தை தேவன் எப்படி சோதித்தார்?
4. ரோமர் 4:20 ஐ விளக்கு?
5. கொடுக்காமலிருப்பதற்கான மனிதனின் அடிப்படைக் காரணம் என்ன?
6. நம்முடைய கர்த்தர் சீடர்களை எதற்காக அடிக்கடி கடிந்து கொண்டார்?
7. இன்றைக்கு நம்மைப் போல தெரிவது என்ன?
8. மத்தேயு 6:28–30 விளக்கு
9. மத்தேயு 8:23–27 விளக்கு
10. மத்தேயு 14:25–31 விளக்கு
11. மத்தேயு 16:5–8 விளக்கு
12. எப்பொழுது ஒரு மனிதன் தன் கொடுத்தலில் தாராளமாயிருப்பான்?

**கொடுத்தல் நம்முடைய அன்புக்கான ஒரு சோதனை**

1. யோவான் 3:16 விவாதி
2. எந்தளவு தேவன் நம்மில் அன்பு கூர்ந்தார்?
3. ஒரு தகப்பன் தன் குடும்பத்திற்கான அன்பை எப்படி வெளிப்படுத்துகிறார்?

4. எப்படி அன்பு நம்மை கொடுக்கத் தூண்டுகிறது?

5. அயல்நாட்டு ஊழியப் பணியில் நம்பிக்கையில்லாத ஒரு மனிதனிடம் உதவிக்காரன் என்ன சொன்னார்?

6. நம்முடைய கொடுத்தலை எது கட்டுப்படுத்துகிறது?

7. வயதானவர்களுக்கான இல்லத்திலிருந்த அந்தப் பெண் எப்படி?

8. கொடுத்தல் விஷயத்தில் கிறிஸ்துவின் சபை எங்கே நிற்கிறது?

9. ஒருவன் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்தும், நடைமுறையில் கொடுப்பதை நிறுத்திக் கொண்டால் அவன் எப்படி?

10. உலகத்திலேயே யார் மிகவும் தாராள குணமுடையவர்களாயிருக்க வேண்டும்?

**கொடுத்தல் நம்முடைய தொலைநோக்கிற்கான அல்லது தரிசனத்திற்கான ஒரு சோதனை**

1. தரிசனத்தைக் குறித்து சாலமோன் என்ன சொன்னார்?

2. கர்த்தருடைய வேலை குறித்து சிலர் என்ன கருத்து கொண்டிருக்கிறார்கள்?

3. யோவான் 4:35 ஐ விவாதி

4. அந்தியோகியாவிலிருந்த சகோதரர்களின் தரிசனம் குறித்துச் சொல்லு.

5. அப்போஸ்தலர் 11:27–30 பகுதியை விவாதி?

6. II கொரி 8:1–4 விவாதி?

7. அறுவடைக்குத் தயாராயிருக்கிற நிலத்தை யார் பார்க்கிறார்?

**கொடுத்தல் நம்முடைய உண்மைக்கான ஒரு சோதனை**

1. ஏன் தானியேல் ராஜாவுக்குக் கீழ்ப்படிய மறுத்தான்?

2. பர்னபா ஏன் தன் நிலத்தை விற்றான்?

3. அப்போஸ்தலர் 4:36–39 வசனப்பகுதியை வாசித்து விவாதி?

4. அனனியா, சப்பீராளுக்கு என்ன நடந்தது?

5. அப்போஸ்தலர் 5:1–11 வாசித்து விவாதி

6. கொடுத்தல் காரியத்தில் பொய் சொல்லுகிறவர்களை இன்றைக்கும் தேவன் கொன்றால் நிலைமை எப்படியிருக்கும்?

## பாடம் – பத்து

# மனிதன் தேவனை வஞ்சிக்கலாமா?

**Will a Man Rob God?**

### தங்க வசனப்பகுதி

**" கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும். அமுக்கிக் குலுக்கி சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள். நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் என்றார் " (லூக்கா. 6:38).**

### நோக்கம்

மனிதன் தேவனை வஞ்சிக்க முடியுமென்றும், வித்தியாசமான வழிகளில் அதை அவனால் செய்ய முடியுமென்பதையும் காட்டுவது.

### உங்கள் சிந்தனைக்கு

பணத்தைப் பெற்றிருப்பதில் இருக்கும் ஒரே அனுகூலம், அதை எப்படிப் பயன் படுத்துகிறோம் என்பது தான். சொத்து யார் வைத்திருக்கிறார்களோ அது அவர்களுக் குரியதல்ல. மாறாக, யார் அதை அனுபவிக்கிறார்களோ அவர்களுக்குரியது.

### முன்னுரை

மல்கியா தீர்க்கதரிசன நூலில், தேவன் தன்னுடைய ஜனங்களுக்கு எதிராக பல குற்றச்சாட்டுகளைக் கொண்டு வருகிறார். அவர்கள் தேவனுடைய நாமத்தை அசட்டை செய்தார்கள். பலிபீடத்தின் மீது அவர்கள் அசுத்தமான அப்பத்தைக் கொண்டு வந்தார் கள். அவர்கள் ஊனமானதையும், நசல் பிடித்ததையும் கொண்டு வந்து பலி செலுத்தி னார்கள். அவர்கள் கர்த்தருடைய நாமத்தை அசிங்கப்படுத்தி, தங்கள் வார்த்தைகளால், அவரைக் களைப்படையப் பண்ணினார்கள். அவர்கள் தேவனுடைய பிரமாணங்களை விட்டு விலகி, அவைகளைக் கைக்கொள்ள மறுத்தார்கள். தேவன் அவர்கள் மீது சாட்டின குற்றச்சாட்டுகளில் பெரிதானது மல்கியா 3:8 ல் காணப்படு கிறது. " மனுஷன் தேவனை வஞ்சிக்கலாமா? நீங்களோ என்னை வஞ்சிக்கிறீர்கள்? தசம பாகத்திலும், காணிக்கைகளிலுந் தானே என்று ".

மனிதன் தேவனை நேரத்திலும், தாலந்திலும், வேலையிலும் வஞ்சிக்கிறான் என்று நாம் அடிக்கடி பேசுகிறோம். இது பற்றி நாம் வெறுமனே பேசிவிட்டு மேலோட்ட மாக விட்டு விடுகிறோம். அநேக, மனிதர்கள் தேவனை வஞ்சிக்கிறார்கள். இது மனிதன் செய்யக்கூடிய பாவங்களில் மிக மோசமானதாக உள்ளது.

## I தேவனை வஞ்சித்தல்

வேதாகமத்தில் திகைப்பை ஏற்படுத்தக் கூடியதும், இருதயத்தை ஆராயக் கூடியதுமான கேள்விகள் பல உண்டு. ஏதேன் தோட்டத்தில், பகலில் குளிர்ச்சியான வேளையில், " ஆதாமே, நீ எங்கே இருக்கிறாய்? " என்று கேட்டது (ஆதி 3:9) திகைப்பை ஏற்படுத்தும் ஒரு கேள்வி தான். முதல் கொலைகாரனாகிய காயீனுக்கு தேவன் தரிசன மாகி " உன் சகோதரனாகிய ஆபேல் எங்கே? " என்று கேட்டதும் (ஆதி 4:9) திகைப்பை ஏற்படுத்திய ஒரு கேள்விதான். ஆனால், வேதாகமத்தில் இப்படி கேட்கப்பட்டிருக்கும் நூற்றுக்கணக்கான கேள்விகளுள், மிகவும் திகைப்பை ஏற்படுத்தும் ஒரு கேள்வி, " மனிதன் தேவனை வஞ்சிக்கலாமா? " என்பதே.

இந்தக் கேள்வி எளிதில் விளங்கக் கூடிய, மிகவும் பொருத்தமான, தன்னைத் தானே சோதித்துப் பார்க்க கூடிய, இருதயத்தை ஊடுருவக் கூடிய ஒரு கேள்வி. இக்கேள் வியின் மூலம் தூங்கிக் கொண்டு, அக்கறையில்லாமல் பாராமுகமாயிருந்த ஜனங் களைத் தேவன் எழுப்ப எண்ணினார். தங்களைப் பற்றிய உண்மைகளைத் தெரிந்து கொண்டு அதை அவர்கள் எதிர் கொள்ள வேண்டும் என்று விரும்பினார். இங்கே கேட்கப்படும் கேள்வி, அநேகர் செய்வது போல் மனிதன் அரசாங்கத்தை வஞ்சிக்க லாமா என்பதல்ல. இங்கே கேட்கப்படும் கேள்வி, ஒரு நம்பிக்கையான பதவிக்கு தெரிந் தெடுத்த பட்டணத்து மக்களுடையதை, ஒருவன் திருடலாமா என்பதல்ல. இங்கே கேட்கப் படும் கேள்வி பெற்றோர்கள் பிள்ளைகளிடமிருந்து திருடலாமா? அல்லது பிள்ளைகள் பெற்றோரிடமிருந்து திருடலாமா? என்பதல்ல. மாறாக, இங்கு கேட்கப்படும் கேள்வி, மனிதன் தேவனை வஞ்சிக்கலாமா அல்லது தேவனிடமிருந்து திருடலாமா? என்பது தான்.

இக்கேள்விக்கு மனிதன் உடனடியாகக் கொடுக்கும் பதில் திருடக் கூடாது, தேவனைக் கண்டிப்பாக வஞ்சிக்கக் கூடாது என்பதே!. தேவனை வஞ்சிக்கக் கூடிய அளவு ஒருவரும் பைத்தியகாரராக இருக்கக் கூடாது. ஒரு சமயம் நான் இவ்விதம் படித்தேன். திருடர்கள் வீட்டை உடைத்து உள்ளே சென்று பணம் வைத்திருக்கும் அறைக் குச் சென்ற போது, அங்கே இயேசுவின் சிலை ஒன்று வைக்கப்பட்டிருந்தது. அடுத்த நாள் காலையில் இந்தச் சிலை சுவற்றுப் பக்கம் திரும்பியிருந்ததை அந்த வீட்டின் உரிமையாளர் கண்டார். திருடர்கள், பார்வையற்ற கண்களைக் கொண்டிருந்த அந்தச் சிலையின் கண்கள் தாங்கள் செய்வதைப் பார்ப்பதை விரும்பவில்லை. ஒரு வேளை, சிலையின் கண்கள் அவர்களைப் பார்க்காமலிருந்திருக்கலாம். ஆனால், கர்த்தருடைய கண்கள் எல்லா இடங்களிலுமிருந்து நம்மைக் கவனித்துக் கொண்டிருக்கிறது. " கர்த்த ரின் கண்கள் எவ்விடத்திலுமிருந்து, நல்லோரையும், தீயோரையும் நோக்கிப் பார்க் கிறது " (நீதி. 15:3).

தேவனிடமிருந்து இப்படிக் கடுமையான குற்றச்சாட்டு வந்ததைக் கேட்டு ஜனங் கள் அதிர்ச்சியடைந்தார்கள். அவர்களின் பதில் இதற்குச் சான்றாக உள்ளது. எதிலே உம்மை வஞ்சித்தோம் என்கிறீர்கள்? " இக்கேள்விக்குத் தேவன், நீங்கள் என்னிடத்தில் குறிப்பாக கேட்கிறீர்கள் ". சரி, நான் பதில் சொல்கிறேன் என்று, " தேவனுக்குச் சேர வேண்டிய தசமபாகத்தையும், காணிக்கையையும் செலுத்தாமல் அவர்கள் ஏமாற்றி யிருக்கிறார்கள் என்றார் ".

## II இந்த யூதர்கள் எப்படி ஜனங்களை வஞ்சித்தார்கள்?

தசமபாகம் கொடுக்க மறுத்ததற்கு எப்படிப்பட்ட சாக்குப் போக்கு கொடுத்தார் கள்? தசம பாகம் எங்களுக்குத் தெரியாது என்று அவர்கள் சொல்ல முடியாது. ஏனெனில், அவர்கள் சிறுபிராயம் முதல் தசம பாகம் கொடுக்க வேண்டுமென்று முனைப்பாக போதிக்கப்பட்டிருக்கிறார்கள். பல சமயங்களில், கர்த்தருக்கு தாராள மாய்க் கொடுக்கப்பட வேண்டியது அறியாமையினிமித்தம் கொடுக்கப்படாமலிருக் கிறது. இந்தக் காரணத்தினிமித்தம், கொடுத்தல் பாடம் அவசியமாகிறது. எங்கெல் லாம் சபைகள் இந்தப் பாடத்தைப் படிக்கிறதோ அங்கே சபைகளில் காணிக்கை அளவு அதிகரித்திருக்கிறது. " என் தேவன், என் பணம் " என்று தலைப்பிட்ட புத்தகத்தை 13 வாரங்களுக்கு எந்த சபைகள் படித்ததோ அந்த சபைகள் பெரும்பாலனவற்றில் காணிக்கை அளவு 25% முதல் 40% வரை அதிகரித்திருக்கிறது. இவைகளெல்லாம், நாம் கொடுத்தல் பற்றி சிறப்பாகவும் அதிகமாகவும் அறியும் போது, சிறப்பாக கொடுக்க முடியுமென்பதையே காட்டுகிறது.

கொடுத்தல் காரியத்தில், நம்முடைய ஆத்தும அழிவிலிருந்து தப்பிக்க ஒரே வழி, பிரசங்கியார்களும், மூப்பர்களும், ஞாயிறு பள்ளி ஆசிரியர்களும், இந்த முக்கிய மான பாடம் குறித்து போதிப்பது தான். அறியமையைத் தேவன் கண்டு கொள்ளாமல் இருப்பதில்லையென்பதை நாம் உணர வேண்டும். (அப். 17:30) இந்தப் பாடத்தை முடித்த பிறகு, அறியாமையினால் ஒருவன் கொடுக்க வேண்டிய அளவுக்குக் கொடுக்கா மலிருந்தாலும் அல்லது அந்த கலக மனம் கொண்ட யூதர்கள் போல் தெரிந்தே கொடுக்க வேண்டியதைக் கொடுக்காமலிருந்தாலும், அவன் நித்திய வாழ்க்கையை இழந்து போவான்.

அவர்கள் வறுமையை ஒரு காரணமாகக் காட்ட முடியாது. இன்றைக்கு நம்மில் அநேகர் ஏழைகளாக இருப்பது போல், அன்றைக்கு அவர்களில் அநேகர் ஏழைகளா யிருந்தார்கள். எனக்குத் தெரிந்த வரை ஒரு சிலருக்குத் தான் வறுமை கொடுப்பதற்குத் தடையாக இருந்தது. உண்மையென்னவெனில், தன்தன் வரவுக்குத் தக்கதாகக் கொடுக்க வைப்பதில், அதிக வருவாய் ஈட்டுபவர்களைக் கொடுக்க வைப்பதைக் காட்டிலும், குறைந்த வருவாய் உள்ளவர்களைக் கொடுக்க வைப்பது சுலபமாக உள்ளது. ஒருவன் ஏழையாக இருந்தாலும், பணக்காரனாக இருந்தாலும் அவன் கொடுக்க வேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறார். " ஆனாலும், அவர்கள் கர்த்தருடைய சந்நிதியில் வெறுங்கையோடே வராமல், உன் தேவனாகிய கர்த்தர் உனக்கு அருளிய ஆசீர்வாதத்திற்குத் தக்கதாக அவனவன் தன்தன் தகுதிக்கு ஏற்றபடி காணிக்கையைக் கொண்டு வரக்கடவன் ". (உபா. 16:17) " நான் வந்திருக்கும் போது பணம் சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல் நாள் தோறும் தன்தன் வரவுக் குத்தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்து வைக்கக்கடவன் " (Iகொரி. 16:2). ஆம், ஒவ்வொருவரும் கொடுக்க வேண்டும். தேவனுடைய வேலைக்கு கொடுக்கப்பட வேண்டுமென்று தெரிந்தும், அதைக் கொடுக்காமலிருக்கும் போது, மனிதர்கள் தேவ னை வஞ்சிக்கிறார்கள்.

### III யூதர்கள் தேவனை ஏன் வஞ்சித்தார்கள்?

ஏனெனில், தேவனில் அவர்கள் அன்பு கூரவில்லை. தேவன் தந்த ஆசீர்வாதங்களை அவர்கள் கண்கள் காணவில்லை. தேவ அன்பை உணரும் அறிவை இழந்தார்கள். அதினிமித்தம் அவரில் அன்பு கூருவதை நிறுத்தினபடியால், கொடுப்பதினால் வரும் மகிழ்ச்சியை இழந்தார்கள். அன்பு கொடுப்பதில் மகிழ்ச்சி கொள்ளும். கொடுக்க முடியாத சூழ்நிலை வரும்போது அது இருதயத்தை உடைக்கும். ஆனால், அன்பு சாகுமானால் எவ்வளவு குறைவாக வேண்டுமானாலும் கொடுக்க மனம் இடம் கொடுக்கும். அன்பு " நான் எவ்வளவு குறைவாகக் கொடுக்கலாம் என்று கேட்காது. மாறாக, எவ்வளவு அதிகமாகக் கொடுக்க முடியும்? என்றே கேட்கும் ". மல்கியா தீர்க்கன் நாட்களில் இருந்த யூதர்கள், மந்தையின் தலையீற்றையும், பழுதற்ற ஆட்டுக்குட்டியையும் கொண்டு வராமல், ஊனமானதையும், நசல் பிடித்ததையும், ஆகாதவைகளையும் கொண்டு வந்தார்கள். அதன் மூலம் தேவனை கனப்படுத்தாமல் கனவீனப்படுத்தினார்கள். தேவன், அவர்களிடம், " கண் ஊனமானதைப் பலியிடுகிறீர்களே, அது பொல்லாப்பில்லையா? " என்று கேட்டார். அதை நீ உன் அதிபதிக்குச் செலுத்து, அவன் உன்மேல் பிரியமாயிருப்பானோ? உன் முகத்தைப் பார்ப்பானோ என்று சேனைகளின் கர்த்தர் கேட்டார். அதாவது, தேவன் மீது கொண்டிருந்த அன்பை அவர்கள் விட்டபடியால், ஒரு மனிதனுக்குச் செலுத்தத் துணியாததைக் கூட தேவனுக்குப் பலியிடத் துணிந்திருக்கிறார்கள்.

இந்தக் கருத்து இன்றைக்கு சபையில் உள்ள அநேகர் விஷயத்தில் உண்மையாயிருக்கிறதென்று நான் திட்டமாய் நம்புகிறேன். ஒருவன் ஒவ்வொரு வாரமும் தன் பணத்திலே தான் செலுத்த வேண்டியவைகளையெல்லாம் செலுத்தித் தீர்த்து, தாராளமாகச் செலவு செய்து விட்டு, வாரத்தின் முதல் நாளிலே வந்து, மிச்சம் மீதியிருப்பதை தேவனுக்குச் செலுத்தினால், அவன் தேவனை அவமானப்படுத்துகிறான். மிச்சம் மீதியிருப்பதில் ஒரு பகுதியை தேவனுக்குச் செலுத்தும் வழக்கம் இன்றைக்கு சபையில் பரவலாகவும், பொதுவாகவும் காணப்படுகிறது. நம்மிடத்திலிருப்பதில் சிறந்ததையும், முதலாவதையும் நாம் தேவனுக்குச் செலுத்தாத பட்சத்தில் அவர் அதை ஏற்றுக் கொள்ளமாட்டார்.

யெகோவா தேவன் தான் எல்லாவற்றிற்கும் சொந்தக்காரர் என்பதை ஒருவன் உணரும்போது, ஒருவன் தேவனுக்கு கொடுப்பது கடினமான காரியமல்ல. "பூமியும் அதின் நிறைவும், உலகமும் அதிலுள்ள யாவும் கர்த்தருடையது". பூமியிலுள்ள எல்லாமே தேவனுக்குச் சொந்தமானது. அவர்தான் எல்லாவற்றையும் சிருஷ்டித்தார். தேவன் தான் அனைத்திற்கும் சொந்தக்காரர் என்பதை ஒருவன் அங்கீகரிக்கும் போது, அவருக்குக் கொடுப்பது ஏன் அவ்வளவு கடினமாக இருக்க வேண்டும்? பொருளாசையை அறிக்கையிடுகிற எந்த ஒரு மனிதனையும் நான் அறிந்ததில்லை. நாம் குறிப்பிடப் பயப்படுகிற பாவம் இது என்று ஒருமுறை ஒருவர் சொன்னார்.

இப்பொழுது, தேவன் எல்லாவற்றுக்கும் சொந்தக்காரராக இருக்கிறபடியால், நாம் சம்பாதிப்பதில் முதல் பங்கை அவருடைய ஊழியத்தைத் தாங்கக் கொடுக்க வேண்டும். பொருளாசையினிமித்தம் சிலபேர் தேவனை வஞ்சிக்கிறார்கள்.

பொருளாசை ஒரு வஞ்சனையுள்ள பாவம். நம்முடைய பொருளாசை பற்றி நாம் அறியாமலிருப்பது மிகவும் சுலபம்.

புதிய ஏற்பாட்டில் மிக மோசமான பாவங்களுடன் பொருளாசை பட்டியலிடப் பட்டிருக்கிறது. ஆனாலும், " இவ்வுலகத்திலுள்ள விபச்சாரக்காரர், பொருளாசைக் காரர், கொள்ளைக்காரர், விக்கிரகாரதனைக்காரர் இவர்களோடு எவ்வளவும் கலந்திருக்கக் கூடாதென்று நான் எழுதவில்லை " (1 கொரி. 5:10) மேலும், " பரிசுத்தவான் களுக்கு ஏற்றபடி, வேசித்தனமும், மற்றெந்த அசுத்தமும், பொருளாசையும் ஆகிய இவைகளின் பேர் முதலாய் உங்களுக்குள்ளே சொல்லப்படவுங் கூடாது ". (எபே. 5:3) " ஆகையால் விபச்சாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரகாராதனையான பொருளாசை ஆகிய இவைகளைப் பூமியில் உண்டு பண்ணுகிற உங்கள் அவயவங் களை அழித்துப் போடுங்கள் " (கொலோ. 3:5)

**IV இன்றைக்கு மனிதர்கள் தேவனை எப்படி வஞ்சிக்கிறார்கள்?**

இன்றைக்கு தேவனை வஞ்சிக்கும் வழிகளில் ஒன்று, காணிக்கைப் பையில் அல்லது பெட்டியில் போட வேண்டியதைப் போடாமலிருப்பது. கர்த்தருடைய நாளில், ஒருவர் தன் வருமானத்திலிருந்து நூறு ரூபாய் கொடுக்கத் திராணியுள்ளவராயிருந்து அவர் இருபது ரூபாய் மாத்திரம் போட்டால், அவர் எண்பது ரூபாயை தேவனிடமிருந்து திருடியிருக்கிறார் என்று பொருள். இவ்விதமாக, இன்றைக்கு பெரும்பாலோர், தேவனுக்கு கனத்தைக் கொடுக்கக் கூடிய அளவில் அவருக்குப் போய்ச் சேர வேண்டியதைத் திருடுகிறவர்களாக உள்ளார்கள். மல்கியாவின் நாட்க ளில் அவர்கள் செய்தது எப்படிக் கர்த்தருடைய பார்வையில் அசிங்கமாக இருந்ததோ அப்படியே இன்றைக்கும் அது அசிங்கமாகவே இருக்கும். இன்றைக்கு ஒருவர் " ஆமாம், நான் கொடுக்க வேண்டிய அளவு கொடுக்காமலிருக்கிறேன் என்பது எனக்குத் தெரியும் ". என்று சொல் வது பொதுவான ஒன்றாக உள்ளது. அதைப் பற்றி அவர் ஒன்றும் பெரிதாக நினைப்ப தில்லை. சகோதரனே, ஒன்றை நான் இங்கே குறிப்பிடுகிறேன். நீங்கள் கொடுக்க வேண்டிய அளவு கொடுக்காமலிருந்திருந்தால், உடனடியாக உங்களால் எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் கொடுக்கத் தொடங்குவது நல்லது.

ஒரு மனிதர் ஞாயிறு பள்ளி வகுப்பில் உட்கார்ந்து கொண்டு " நான் சொல்ல வேண்டிய அளவுக்கு உண்மையைச் சொல்லவில்லை " என்பது எனக்குத் தெரியும் அல்லது " சத்தியத்துக்கு மாறாகப் பேசுவதிலிருந்து நான் என்னை விலக்கிக் கொள்ள வில்லை என்பது எனக்குத் தெரியும் " அல்லது " விபச்சாரத்திலிருந்து நான் விலகி யிருக்க வேண்டிய அளவுக்கு நான் விலகியிருக்கவில்லையென்பது எனக்குத் தெரியும் " என்று சொன்னால், அவனைப் பற்றி நீங்கள் என்ன நினைப்பீர்கள்?. சகோதரனே, நான் கர்த்தருக்குக் கொடுக்க வேண்டிய அளவுக்குக் கொடுக்கவில்லையென்பது எனக்குத் தெரியும் என்று சொல்லுபவர்களும், இப்படிப்பட்டவர்களும் தேவனைப் பொறுத்தள வில் ஒரே ரகம் தான். காணிக்கையில் தேவனை வஞ்சிக்கும் இன்னொரு வழி காணிக்கைப் பையிலிருந்தோ, தட்டிலிருந்தோ, பெட்டியிலிருந்தோ, எடுத்துக் கொள்வது. நான் ஒரு சமயம் ஒரு பட்டணத்தில் நடந்த உயிர் மீட்சிக் கூட்டத்தில் பேசிக்

கொண்டிருந்தேன். அப்பொழுது சகோதரன் ஒருவர் வந்து " சகோதரர் பிளேக் அவர்களே, இங்கே ஒரு மோசமான செயல் நடந்து விட்டது " என்றார். அது என்ன என்று விசாரித்தபோது, ஒரு சகோதரர் காணிக்கைப் பையிலிருந்து பணத்தைத் திருடிக் கொண்டார் என்பதை அறிந்தேன். என்னிடத்தில் சொன்னவர், இப்படிப்பட்ட செயல், இப்பொழுதுதான் முதல் முறையாக நடந்துள்ளது என்று எண்ணிக் கொண் டார். ஆனால், நான் சொன்னேன், இல்லை, இது முதல் தடவை அல்ல, உண்மையில், இது நாடெங்கும் நடந்து கொண்டுள்ளது என்றேன். அவர் நீங்கள் உண்மையைத்தான் சொல்லுகிறீர்களா என்றார். ஆம், சபையில் மிகவும் பரவலாக உள்ள பாவம் இதுதான் என்று பதிலளித்தேன். பெரும்பாலானவர்கள், கர்த்தருக்குக் கொடுக்க வேண்டிய அளவு கொடுக்காததினால் காணிக்கைப் பெட்டியில் தங்கள் பங்கைப் போடுவதற்கு முன்பாக வே திருடிக் கொள்ளுகிறார்கள். வேறு சிலர், தாங்கள் கொடுக்க வேண்டிய அளவு கொடுப்பது போல் பெட்டியில் போட்டு விட்டு, காணிக்கை எண்ணுவதற்கு உதவி செய்வது போல் பாசாங்கு காட்டிப் போட்டதை எடுத்துக் கொள்கிறார்கள். இந்த இரண்டு சாராருக்கும் எந்த வேறுபாடும் இல்லை. இரண்டு பேரும் திருடர்கள் தான்.

**V தேவனை வஞ்சிப்பதின் விளைவுகள்**

" நீங்கள் ஒரு சாபத்தால் சபிக்கப்பட்டிருக்கிறீர்கள்; ஜனத்தாராகிய நீங்கள் எல்லாரும் என்னை வஞ்சித்தீர்கள் " நீங்கள் எனக்கு கொடுத்தால் நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங் கொள்ளாமற் போகுமட்டும் உங்கள் மேல் ஆசீர்வா தத்தை வருஷிக்கமாட்டேனோவென்று அதினாலே என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று தேவன் சொன்னார். தாரளமாய்க் கொடுக்கிறவர்களைத் தேவன் ஆசீர்வதிப்பது நிச்சயமான ஒன்று. காணிக்கை கொடுக்க மறுப்பவர்களை அவர் சபிக்கிறார். ஒரு மனிதர் செய்யக் கூடிய மிகப்பெரிய தவறு தேவன் அவரை ஆசீர்வதித்த அளவுக்கு கொடுக்க மறுப்பது தான்.

தேவன் யூதர்களிடம், " இதினாலே என்னைச் சோதித்து பாருங்கள். நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து இடங்கொள்ளாமற்போகுமட்டும் உங்களை ஆசீர் வதிக்கமாட்டேனோவென்று கேட்கிறார் ". நீங்கள் தேவனை சோதித்துப் பார்க்கத் தயாரா? ஒரு ஆறு மாதத்திற்காகிலும் சோதித்து, பிறகு பாருங்கள்.

புதிய ஏற்பாட்டு கொடுத்தலைப் புதுப்பிக்க நீங்கள் உதவுவீர்களா?

**கொடுக்க கூடிய சபை தான் வாழ்கிறது.**

**படைக்கக் கூடிய சபை தான் வளருகிறது.**

**தாராளமான சபை தான் பெருகுகிறது.**

**செலவழிக்கக் கூடிய சபை தான் ஜெயிக்கிறது.**

**இறுக்கிப் பிடிக்கும் சபை கண்ணீர் வடிக்கிறது.**

**கேள்விகள்**

1. நாம் படிக்கும் பாடம் என்ன?
2. தங்க வாக்கியத்தை மனப்பாடமாக எழுது.
3. உங்கள் சிந்தனைக்கான கருத்து என்ன?

**அறிமுகம்**

1. ஜனங்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் என்ன?
2. அவர்களுக்கு எதிராக கூறப்பட்ட மிகப்பெரிய குற்றச்சாட்டு என்ன?
3. மல்கியா 3:8 ஐ எழுது.
4. இன்றைக்கு, ஜனங்கள் தேவனை எப்படி வஞ்சிக்கிறார்கள்?

**தேவனை வஞ்சித்தல்**

1. ஆதியாகமம் 3:9ல் கேட்கப்பட்ட கேள்வி என்ன?
2. ஆதியாகமம் 4:9ல் கேட்கப்பட்ட கேள்வி என்ன?
3. இருதயத்தை ஊடுருவக் கூடிய கேள்வி எது?
4. தேவன் நாம் என்ன செய்ய விரும்புகிறார்?
5. மனிதன் கொடுக்கும் உடனடியான பதில் என்ன?
6. திருடர்களின் கதையைக் கூறு?
7. கர்த்தருடைய கண்கள் எப்படிப்பட்டது?
8. ஜனங்களுக்கு அதிர்ச்சி தந்தது எது?
9. அவர்கள் தேவனிடத்தில் கேட்டது என்ன?
10. தேவனுடைய பதில் என்ன?

**யூதர்கள் தேவனை எப்படி வஞ்சித்தார்கள்**

1. யூதர்களால், அது எங்களுக்குத் தெரியாது என்று சொல்ல முடியுமா?
2. அவர்களுக்கு எப்படி போதிக்கப்பட்டிருந்தது?
3. கொடுத்தலைப்பற்றி ஜனங்கள் படிப்பிக்கப்படும் போது என்ன நடக்கிறது?
5. அப்போஸ்தலர் 17:30 ஐ மனப்பாடமாக எழுது.
6. அவர்களால் வறுமையை ஒரு காரணமாக சொல்ல முடியுமா?
7. I கொரிந்தியர் 16:1–2 எழுது.
8. கொடுக்க வேண்டியது யார்?
9. தேவனை மனிதன் எப்பொழுது வஞ்சிக்கிறான்?

**யூதர்கள், தேவனை ஏன் வஞ்சித்தார்கள்?**

1. அவர்கள் எல்லோரும் எதை இழந்தார்கள்?
2. கொடுத்தலைக் குறித்து அவர்கள் எதை இழந்தார்கள்?
3. அன்பு எதை கேட்காது?
4. தேவனுக்கு ஜனங்கள் எப்படிப்பட்டதைக் கொண்டு வந்தார்கள்?
5. அதிபதிக்கு என்ன செய்ய வேண்டுமென்று அவர்களுக்கு சொல்லப்பட்டது?
6. இன்றைக்கு சிலர் தேவனுக்கு எதைக் கொடுக்கிறார்கள்?
7. மிச்சமீதியுள்ளதை தேவனுக்கு நாம் கொடுக்கலாமா?
8. கொடுப்பது ஒரு மனிதனுக்கு எப்பொழுது கடினமாகத் தோன்றாது?
9. நமது வருமானத்தின் எந்தப் பகுதியை தேவனுக்கு கொடுக்க வேண்டும்?
10. பொருளாசை என்னவென்று பட்டியலிடப்பட்டிருக்கிறது?.
11. II கொரிந்தியர் 5:11 விளக்கு.
12. எபேசியர் 5:3 விளக்கு.
13. கொலோசெயர் 3:5 வாசித்து விளக்கு.

**இன்றைக்கு மனிதர்கள் தேவனை எப்படி வஞ்சிக்கிறார்கள்?**

1. தேவனை வஞ்சிக்கும் வழிகளில் ஒன்றைக் கூறு.
2. மனிதனுக்கு எது மரியாதைக்குரிய பாவமாயிருக்கிறது?
3. நாம் பெரும்பாலும் அல்லது பொதுவாக கேட்பது என்ன?
4. சிலர் உடனே ஆரம்பிக்க வேண்டியது என்ன?
5. தேவனை வஞ்சிக்கும் மற்றொரு வழி என்ன?
6. இரண்டு பாவங்களுக்குண்டான வேறுபாட்டைக் கூறு.

**தேவனை வஞ்சிப்பதின் விளைவுகள்**

1. தேவன் இதைக் குறித்து கூறுவது என்ன?
2. வானத்தின் பலகணிகளை குறித்து தேவன் கூறுவது என்ன?
3. மல்கியா 3:8 – 11 வாசித்து விவாதி?

## பாடம் – பதினொன்று

# கொடுத்தலும், வாங்குதலும்

## Giving Vs Getting

### தங்க வசனப்பகுதி

" வியாதியுள்ளவர்களை சொஸ்தமாக்குங்கள், குஷ்டரோகிகளைச் சுத்தம் பண்ணுங்கள், மரித்தோரை எழுப்புங்கள், பிசாசுகளைத் துரத்துங்கள், இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய் கொடுங்கள் ". (மத்தேயு. 10:8)

### நோக்கம்

உண்மையான மகிழ்ச்சி கொடுப்பதால் வருகிறதென்றும், கொடுத்தல்; கொடுப்பவரையும், பெற்றுக் கொள்பவரையும் ஆசீர்வதிக்கிறதென்றும், கொடுக்கிறவர் அதிகமான ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்கிறார் என்றும் காட்டுவது.

### உங்கள் சிந்தனைக்கு

நீங்கள் வாழ்கிறபோது கொடுத்துக் கொண்டிருங்கள், பிறகு அது, எங்கே போகிறதென்பதைத் தெரிந்து கொள்ளுவீர்கள்.

### முன்னுரை

மனிதன் மறக்கும் இயல்பு கொண்டவன். நம் எல்லோருக்குமே நம்முடைய கடமைகள் குறித்து நினைவூட்டப்படுவது அவசியம். இதினிமித்தம், இவைகளை நீங்கள் அறிந்தும், நீங்கள் இப்பொழுது அறிந்திருக்கிற சத்தியத்தில் உறுதிப்பட்டிருந்தும், உங்களுக்கு இவைகளை எப்பொழுதும் நினைவூட்ட நான் அசதியாயிரேன் (II பேதுரு 1:12). பவுல், அப். 20:35 ல் " வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வார்த்தைகளை நினைக்கவும் வேண்டுமென்று எல்லாவிதத்திலேயும் உங்களுக்குக் காண்பித்தேன் " என்றார். ஒரு சராசரிக் கிறிஸ்தவன் இதை வாசிக்கும்போது, இது எப்படி சரி என்று எண்ணுவார். "வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறது பாக்கியம் என்பதை அறிவேன். ஆனால், வாங்குவது எனக்கு நல்லதாக இருக்கிறதென்று " யாரோ ஒருவர் சொன்னதை மேற்கோள் காட்டுவான். இப்படி இதை ஒரு வேடிக்கையாகப் பேசுவது சரியல்ல. ஏனெனில், கொடுப்பது பாக்கியம் என்று சொன்னவர் தேவனுடைய குமாரன். ஒருசாரார் இதை உண்மை என்று நம்புகின்றனர், மற்றவர்கள் பொய் என்று தள்ளுகின்றனர். இயேசு உண்மையைத் தான் சொன்னார் என்று நீங்கள் நம்புகிறீர்களா? இதை நாம் செயல்படுத்த வேண்டுமென்ற அளவுக்கு நம்புகிறோமா? மறுபடியும் கேட்கிறேன். இது உண்மையா அல்லது பொய்யா? இது பொய்யாக இருந்தால், இது புதிய ஏற்பாட்டில் எழுதப்பட்டிருந்தாலும், நடைமுறையில் இதை உண்மையாக்காது. மாறாக, இது உண்மையாக இருந்தால் உலகில் உள்ள பெரும்பாலானவர்கள் இதை ஏற்றுக் கொள்வதில்லை என்பது உண்மையாக இருந்தாலும், இது பொய்யாகாது.

## I பெற்றுக் கொள்ளுதலின் பாக்கியம்

வாங்குவதைப் பார்க்கிலும், கொடுத்தலே பாக்கியம் என்று இயேசு சொன்ன போது, பெற்றுக் கொள்வதில் மகிழ்ச்சியே இல்லை என்று அவர் பொருள் கொள்ள வில்லை. பெற்றுக்கொள்வதில் மகிழ்ச்சி உண்டு என்று நம் எல்லோருக்கும் தெரியும். நம்முடைய வாழ்க்கையில் நாம் வெகுமதிகளைப் பெற்றிருக்கிறோம். ஆனால், பிரச்சினை என்னவென்றால், கொடுத்தலில் உள்ள மகிழ்ச்சியை மறக்கின்ற அளவில், பெரும்பாலானவர்களாகிய நாம் பெற்றுக் கொள்கிறவர்களாகவே உள்ளோம். பெற்றோர்களிடமிருந்து வெகுமதிகளைப் பெற்றுக் கொள்வது ஒவ்வொருவருக்கும் பசுமையான நினைவாக இருக்கும். நாம் சிறுவர்களாக இருந்த போது, விசேஷித்த நாட்களில் நாம் கொடுக்கிறவர்களாக இல்லாமல் பெற்றுக்கொள்கிறவர்களாக இருந்திருப்போம். இப்படி பெற்றுக் கொள்ளும் முறையையே நாம் இன்னும் நினைத்துக் கொண்டிருக்கிறோம். எப்பொழுதும் பெற்றுக் கொள்கிறவர்களாகவே இருக்க வேண்டுமென்ற எண்ணம், நம்மை மோசமான நிலைக்கு வழி நடத்துகிறது. இப்படி வெறுமனே எதையாவது பெற்றுக் கொள்ள வேண்டுமென்ற விருப்பம் நம்முடைய நாட்களில் சூதாட்ட மனப்பான்மை கொண்ட சாபமாக மாறிவிடுகிறது. ஆனால், பெற்றுக் கொள்வதில் உண்டாகும் மகிழ்ச்சியைக் காட்டிலும் பெரிய மகிழ்ச்சி ஒன்று உண்டு என்பதை நாம் எல்லோரும் மனதில் கொள்ள வேண்டும். நாம் நம்முடைய வாழ்க்கையில் பெற்றுக் கொண்ட எல்லாம் நம்மிடமிருந்து எடுக்கப்பட்டிருக்குமானால், நம்மால் வாழ்ந்திருக்க முடியாது. யெகோவாவிடமிருந்து நாம் பெற்றுக் கொள்ளும் எல்லா ஆசீர்வாதங்களையும் எண்ணிப் பாருங்கள்! பழைய ஏற்பாட்டில், அநேக இடங்க ளில் தேவன் அடிக்கடி, நான் உன்னை ஆசீர்வதிப்பேன் என்று சொல்லியுள்ளார். நாம் எல்லோரும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம். நம்முடைய ஜெபங்கள் பெரும்பாலும் நன்றி சொல்லுதலாக இல்லாமல், விண்ணப்பங்களாகவே இருப்பது பெற்றுக் கொள்வதில் தான் நம்முடைய நம்பிக்கை உள்ளதென்பதையே காட்டுகிறது. " நான் உன்னை ஆசீர் வதிப்பேன் " என்று தேவன் சொல்லுவதைக் கேட்பது நல்லது. ஆனால், அதைக் காட்டி லும் மேலான ஒன்று இருக்கிறது. அது, " வாங்குவதைப் பார்க்கிலும் கொடுப்பதே பாக்கியம் " என்று இயேசுவானவர் சொன்ன வார்த்தைகள் தான்.

## II கொடுத்தலிலுள்ள மகிழ்ச்சி

நான் சிறுவனாக இருந்தபோது, ஒரு கிராமத்தில் மவுண்ட் பிளசன்ட் கிறிஸ்து வின் சபைக்கு ஞாயிறு பள்ளிக்குச் சென்றேன். அந்த சபையில் இருந்த மூப்பர்களில் ஒருவராக இருந்த வெர்னர் ஐயா அவர்கள் எனக்கு ஞாபகத்தில் இருக்கிறார். சோர் வான, கவலை தரும் வேளையின் போது, மாதத்திற்கு ஒரு முறை அந்த சபைக்கு பிரசங் கம் செய்ய வந்த பிரசங்கியாரிடம், ஐந்து டாலர் கொடுத்தார். அதற்கு அந்த பிரசங்கி, " வேண்டாம், பஞ்ச காலமாக இருக்கிறது, ஆகையால், நீங்கள் வைத்துக் கொள்ளுங் கள் என்றார் ". அதற்கு வெர்னர் ஐயா, " உங்களுக்கு இதைக் கொண்டு வந்திருக்கி றேன், இதை வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் வெறுமனே ஐந்து டாலரைப் பெற்றுக்

கொள்ளுகிறீர்கள். ஆனால் எனக்கோ ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் அநேகம் கிடைக்கும் என்றார் ". அந்த வயதான ஐயா, உண்மையாகவே அப். 20:35 தெரிந்ததோடு அதைப் புரிந்துமிருந்தார்.

மகிழ்ச்சியாகவும், உற்சாகமாகவும் கொடுப்பதுதான் தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றதாயிருக்கிறது. " அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாய் இருக்கிறார் ". (IIகொரி. 9:7) இப்படி சொல்லியிருப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. எப்படியெனில், இந்த வகையானதைத் தான் நாமும் விரும்புவோம். வேண்டா வெறுப்போடு வெகுமதியைப் பெற்றுக் கொள்ள யார்தான் விரும்புவார்?

கொஞ்சகாலம் வெளியே இருந்து பிறகு வீடு திரும்பும் ஒரு கணவர், ஒரு வெகுமதியை மனைவிக்குக் கொண்டு வருகிறார் என்று வைத்துக் கொள்வோம். வீட்டுக்குள் நுழைந்தவுடன் கொண்டு வந்ததைத் தூக்கிக் கீழே எறிந்ததுடன், " வெகுமதியை எடுத்துக் கொள், இதை உனக்கு வாங்கி வரவேண்டுமென்று விரும்பவில்லை, ஆனால், அப்படி வாங்கி வரவில்லையென்றால், நீ கோபம் கொள்வாய் என்று எனக்கு தெரியும் " என்று சொன்னால் மனைவி அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்வாளா? சபையில், கொடுக்கும் சிலபேர், மனவிருப்பமில்லாமல், விசனமாயும், கட்டாயமாயும் கொடுப்பதை நான் அறிவேன். உண்மையில் அப்படிப்பட்டவர்கள் கொடுக்கும் போதெல்லாம் தேவனையும், அவருடைய வேலையையும் அவமானப்படுத்துகிறார்கள்.

II கொரிந்தியர் 8 ம் அதிகாரத்தில் நாம் சில பிச்சைக்காரர்கள் பற்றி வாசிக்கிறோம். அப்பொழுது, அவர்களுக்கிருந்த கொடிய சூழ்நிலையினிமித்தம் அவர்களை இப்படி எழுதுகிறோம். பவுல் இந்த பிச்சைக்காரர்கள் பற்றி சிறப்பாகப் பேசுகிறார். பாடுகள் எங்களுக்கு வரக்கூடாது என்று அவர்கள் கேட்கவில்லை. தங்களுக்குப் பெரிய பதவி வேண்டுமென்றோ, தங்களுக்கு முதன்மையான இடம் வேண்டுமென்றோ கெஞ்சவில்லை. இப்பொழுது, இங்கே கவனியுங்கள். பரிசுத்தவான்களை தாங்கும்படியான ஒரு சந்தர்ப்பத்தைத் தங்களுக்குத் தாரும் என்று பவுலிடம் கெஞ்சினார்கள். அவர்களினிமித்தம் பவுல் ஆர்வமாக இருந்ததில் ஒன்றும் ஆச்சரியமில்லை. தன் இருதயத்தில் மகிழ்ச்சி பொங்காமல் பவுலடியார் அந்த மக்கெதோனியர்களை ஒருபோதும் நினைத்திருக்க முடியாது. இந்த ஜனங்கள் தங்களுக்கு இருந்தவைகளைப் பற்றி ஒரு அற்புதமான மனநிலையைக் கொண்டிருந்தனர். ஆர்வமில்லாமலும், முகவாடலாகவும் கொடுப்பவர்களுக்கு, கர்த்தருக்கு கொடுப்பது தங்கள் மேல் விழுந்த கடமை என்று தெரிவதில்லை. கொடுப்பது மகிழ்ச்சியானது. மக்கெதோனியர் தங்கள் இருதயங்களில் மகிழ்ச்சியோடு கொடுத்தார்கள். " தங்கள் உபகாரத்தையும், பரிசுத்தவான்களுக்குச் செய்யப்படும் தர்ம ஊழியத்தின் பங்கையும் நாங்கள் ஏற்றுக் கொள்ளும்படி அவர்கள் எங்களை மிகவும் வேண்டிக் கொண்டார்கள் " (II கொரி. 8:4) என்று பவுல் கூறுகிறார்.

## III கொடுப்பது தேவச் செயலைப் போன்றது

மனிதர்கள் அறிந்திருக்கும் மிக பெரும் கொடையாளர் தேவனே. யெகோவா அநேக காரியங்களை நமக்குக் கொடுக்கிறார். நாம் அதற்கு நன்றியாக இருப்பதில்லை. சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், தண்ணீர், பருவகாலங்கள் இப்படி எண்ணற்ற அளவில் கிடைக்கும் ஈவுகளை நாம் பெரிதாக எண்ணுவதில்லை. தேவன் நமக்கு வேதாகமம், சபை, பரலோக நம்பிக்கை ஆகியவைகளையும் கொடுத்திருக்கிறார். தேவன் நமக்குத் தந்தவைகளை நினையாமல் நாம் தேவனை நினைக்கவே முடியாது.

யோவான் 3:16 –ல் " தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படி அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார் " என்று கூறுகிறது. சுவிசேஷத்தின் மையமே தேவன் அன்பு கூர்ந்து கொடுத்தார் என்பதுதான். தேவன் கொடுத்தது மாத்திர மல்ல கொடுத்ததை தியாகமாகக் கொடுத்தார். ஆம், ஒரே பேறான குமாரனையே கொடுத்தார். தேவன் தாராளமாக கொடுக்கிறார். ரோமர் 8:32 ல் " தம்முடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக் கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி? " என்றுள்ளது. தேவன் தாராளமாக கொடுக்கிறவர் " யாக்கோபு 1:5, " உங்களில் ஒருவன் ஞானத்தில் குறையுள்ளவனாயிருந்தால் யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்து கொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன். அப்பொழுது, அவனுக்குக் கொடுக்கப்படும் " என்று கூறுகிறது. தேவனை போன்று ஒரு காரியத்தை நாம் செய்ய முடியுமானால் அது கொடுப்பது தான். நாம் கொடுப்பதில் தேவனைப் போல் இருப்போமானால், நாம் தாராளமாக, தியாகமாக, உதாரத்துவமாகக் கொடுக்க முடியும். பவுல் ரோமர் 12:1 ல் நம்முடைய சரீரங்களைத் தேவனுக்குக் கொடுக்க வேண்டுமென்று அழைக்கிறார். " அப்படியிருக்க சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவ பலியாக ஒப்புக் கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்கிறேன் இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை " என்று. சபையில் ஒவ்வொரு அங்கத்தினரும் ஒரு மழைமேகம் போன்று கொடுக்கக் கூடியவர்களே. கொடுத்தல் காரியத்தில் ஒவ்வொரு அங்கத்தினரும் ஓர் ஊடகம் போன்றவர்கள்.

## IV கொடுப்பது பெற்றுக்கொள்ளும் திறனை அதிகரிக்கிறது

ஒருவர் சொன்னார், " கிறிஸ்தவர்கள் கிணறு போன்றவர்கள் " என்று. சில கிணறுகளிலிருந்து தண்ணீரை மோட்டார் பம்ப் கொண்டு உறிஞ்சி எடுக்கிறார்கள். சில கிணறுகளில் வாளி கொண்டு இறைத்து எடுக்கிறார்கள். சில கிணறுகள் தானாகவே நிரம்பி வழிகிறது என்றார். கிறிஸ்தவர்கள் தானாக நிரம்பி வழியும் கிணறு போன்று இருக்க வேண்டும்.

இன்றைக்கு அநேகர் தங்களுக்குத் தேவையானவைகளைப் பெற்றுக் கொள்ளாமலிருப்பதற்கு காரணம், அவர்கள் கர்த்தருக்குக் கொடுப்பதை ஒருபோதும் கற்றுக் கொள்ளவில்லையென்பது தான். கொடுப்பதற்கு அகலத் திறந்திருக்கும் கை வாங்கு

வதற்கும் திறந்திருக்கிறது. தாராளமாய்க் கொடுப்பதில் அநேகருடைய கவனத்தை ஈர்த்த ஒரு மனிதரிடம், எப்படி உங்களால் இப்படி தாராளமாகக் கொடுக்க முடிகிறது என்று கேட்கப்பட்டது. அவன், " நான் ஏழையாக இருந்த போது கொடுப்பதற்கு என்னிடத்தில் அதிகமில்லை. நான் இருப்பதிலிருந்து அதிகமாக வாரிக் கொடுக்க ஆரம்பித்தேன். அப்பொழுது தேவன் வாரி எனக்குத் தர ஆரம்பித்தார். நான் தேவனுக்கு வாரிக் கொடுக்க பயன்படுத்திய மண்வெட்டியை விட பெரிதான மண்வெட்டியை எனக்கு வாரித் தள்ள தேவன் பயன்படுத்தினார் என்றான் ". இது தான் தன்னுடைய ஜனங்களுக்கு தேவ வாக்குத்தத்தமாக எப்பொழுதும் இருந்து வந்திருக்கிறது. கொடுப்பதில் தேவனை யாரும் மிஞ்ச முடியாது. " என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும் படிக்குத் தசம பாகங்களையெல்லாம் பண்ட சாலையிலே கொண்டு வாருங்கள்; அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து இடங்கொள்ளமற் போகுமட்டும் உங்கள் மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோவென்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் ". (மல். 3:10) இதே உண்மை புதிய ஏற்பாட்டில் பவுலடியாரால் போதிக்கப்பட்டிருக்கிறது. " பின்னும் நான் சொல்கிறதென்னவெனில், சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக் கிறவன் பெருக அறுப்பான் " (II கொரி. 9:6).

இன்றைக்கு அநேக சபைகள், விலை மதிப்புள்ள ஒரு ஜாடிக்குள் தன் கையை சிக்க வைத்துக் கொண்ட ஒரு சிறுவனின் நிலை போன்று தான் இருக்கிறது. ஜாடி உடைந்து போக கூடாது என்று எண்ணிய தகப்பனார், மெதுவாகக் கையை வெளியே எடுக்க முயன்றார். பலனளிக்கவில்லை. கடைசியில் மகனே, மூடியிருக்கும் உன் கையை திற அப்பொழுது, அது வெளியே வந்து விடும் என்றார். மகனோ, நான் திறக்க மாட்டேன் என்றான். நான் கையை எடுத்தால் என் கையிலிருக்கும் காசை நான் இழந்து விடுவேன் என்றான். இதைப் போன்று, இருப்பதும் போய்விடும் என்ற பயத்தால் அநேகர், கர்த்தருக்குக் கொடுப்பதற்குக் கையைத் திறக்க பயப்படுகிறார்கள். ஆனால், அதன் மூலம் தங்கள் ஆத்துமாவை இழக்கிறார் கள்.

### V கொடுக்க மறுப்பதும், வாழ மறுப்பதும் ஒன்று தான்

வேதாகம பூமியில் இரண்டு கடல்கள் நமக்கு பரிச்சயமானவை. அவைகளில் ஒன்று கலிலேயாக் கடல். ஒரு நாளின் காலை வேளையில், மகிழ்ச்சியான ஒன்று தன்னைத் தேடி வருவதைக் கண்டது. அது வேறு எதுவுமல்ல, யோர்தான் நதி, அது பாடலோடும், சிரிப்போடும், ஒய்யாரமாகவும் வருவதைக் கண்ட கலிலேயாக் கடல் மகிழ்ச்சி கொண்டது. அது, தன்னுடைய கரங்களை அகல விரித்து, தன் மார்போடு அணைத்து ஆரத்தழுவி, அதன் உதட்டில் முத்தமிட்டு, " நீ ஒரு விலை மதிக்க முடியாத ஈவு, உன்னை வைத்துக் கொள்வது மிகவும் நன்றாக இருக்கிறது " என்றது. பிறகு அக்கடல், அந்நதியை மற்றொரு கடலாகிய சவக்கடலுக்கு போகும்படி செய்தது. அதுவும் அப்படியே பார்த்து, அதே நதி தன்னிடத்தில் வருவதைக் கண்டு மகிழ்ச்சி கொண்டது. இக்கடலும், அந்நதிக்கு ஒரு நல்ல வரவேற்பைத் தந்தது. ஆனால், அது அந்நதியைத் தன் கரங்களுக்குள் ஏற்றுக் கொண்டதற்கு பிறகு " இது என்னுடையது, எனக்கு மட்டும்தான், இதிலிருந்து ஒரு சொட்டு தண்ணீரைக் கூட ஒரு பூச்செடிக்கோ

அல்லது தாகத்துக்குக் கேட்கும் குழந்தையின் உதடுகளுக்கோ தரமாட்டேன் " என்றது. அந்த நாளில் அந்நதி கோடித் துணியைச் சுற்றிக் கொண்டு சவப்பெட்டிக்குள் நழுவி விழுந்தது. அந்த நாளில், இயற்கையின் அன்பு, " இந்த நாளில் நீ சாவாய் என்று சொல்லிற்று ". கொடுப்பது வாழ்வதற்கு, கொடுக்க மறுப்பது மரிப்பதற்கு. பேதுரு " நான் கொடுக்கிறேன்" என்று சொன்னதன் மூலம், மரணத்துக்குப் பதிலாக ஜீவனைக் கண்டு கொண்டான். ஆனால் யூதாஸின், " நீ எனக்கு என்ன கொடுப்பாய் " என்ற மனோ பாவம், அவனுக்கு துயரமான மரணத்தை ஏற்படுத்தியது.

## VI வாங்குவதால் வரும் சாபத்திலிருந்து கொடுத்தல் நம்மைக் காக்கிறது

" நீங்கள் கேளாமலும் என் நாமத்துக்கு மகிமையைச் செலுத்தும்படி இதைச் சிந்தியாமலுமிருந்தால், நான் உங்களுக்குள்ளே சாபத்தை அனுப்பி, உங்கள் ஆசீர்வா தங்களையும் சாபமாக்குவேன்; ஆம், நீங்கள் அதைச் சிந்தியாமற் போனதினால் அவைகளைச் சபித்தேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் " (மல். 2:2) தேவன் கொடுக்கும் ஒவ்வொரு ஆசீர்வாதத்தையும், சாபமாக மாற்ற முடியும். தேவன் நாம் அனுபவிக்கும்படியாக ஆசீர்வாதங்களைக் கொடுக்கிறார். ஆனால், நாம் அதைச் சரியான முறையில் பயன்படுத்த வேண்டும். பணம் ஒரு பெரிய ஆசீர்வாதம் தான். ஆனால், அது ஒரு சாபமாக முடியும். " இவ்வுலகத்தில் ஐசுவரியமுள்ளவர்கள் இறுமாப் பான சிந்தனையுள்ளவர்களாயிராமலும், நிலையற்ற ஐசுவரியத்தின் மேல் நம்பிக்கை வையாமலும், நாம் அனுபவிக்கிறதற்குச் சகலவித நன்மைகளையும் நமக்குச் சம்பூரணமாய்க் கொடுக்கிற ஜீவனுள்ள தேவன் மேல் நம்பிக்கை வைக்கவும்... அவர் களுக்குக் கட்டளையிடு" (I தீமோ. 6:17–19). தன்னுடைய ஆசீர்வாதங்களை அவருடைய ஜனங்கள் முறையாகப் பெற்றுக் கொள்ளாததால், தேவன் அவர்களைச் சபித்தார். அவர்கள் கொடுப்பதை நிறுத்திக் கொண்டபடியால் அவருடைய ஆசீர்வாதங்களைச் சரியாகப் பெற்றுக் கொள்ளவில்லை. வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுப்பதே பாக்கி யம் என்பதை அனுபவத்தினால் கற்றுக் கொண்ட மனிதன் தான், தேவனுடைய ஈவு களை முறையாகப் பெற்றுக் கொள்ள முடியும். எல்லா ஞானத்தாலும் புரிந்து கொள்ள முடியாத ஒரு மகிழ்ச்சி கொடுத்தலில் உண்டு.

ஆகையால், நீங்கள் உங்கள் வாழ்க்கையில் புதிய ஏற்பாட்டு கொடுத்தலை மீட்டு நடைமுறைப்படுத்துவீர்களா?

| | | |
|---|---|---|
| ஒரு வீணான மனிதனின் குறிக்கோள் | : | தங்கத்தை வென்று அதை அணிந்து கொள். |
| ஒரு உதாரத்துவ மனிதனின் குறிக்கோள் | : | தங்கத்தை வென்று பகிர்ந்து கொள். |
| ஒரு கஞ்ச மனிதனின் குறிக்கோள் | : | தங்கத்தை வென்று சேமித்து வை. |
| ஒரு ஊதாரி மனிதனின் குறிக்கோள் | : | தங்கத்தை வென்று செலவழி. |
| ஒரு வட்டிக்காரனின் குறிக்கோள் | : | தங்கத்தை வென்று வட்டிக்குக் கொடு. |
| ஒரு சூதாட்டக்காரனின் குறிக்கோள் | : | தங்கத்தை வென்று அதை இழந்து விடு. |
| ஒரு கிறிஸ்தவனின் குறிக்கோள் | : | தங்கத்தை வென்று பயன்படுத்து. |

### கேள்விகள்

1. தங்க வாக்கியத்தை எழுது.
2. இப்பாடத்தின் நோக்கமென்ன?
3. உங்களுக்கான சிந்தனை என்ன?

### முன்னுரை

1. பொதுவாக மனிதனின் இயல்பு என்ன?
2. II பேதுரு 1:12 ஐ விவரி.
3. அப்போஸ்தலர் 20:35 என்ன சொல்கிறது?
4. அப்போஸ்தலர் 20:35 பற்றி சிலர் வேடிக்கையாக பேசுவது என்ன?
5. இது மெய்யா அல்லது பொய்யா என்பதை விவாதி.

### பெற்றுக் கொள்ளுதலின் பாக்கியம்

1. பெற்றுக்கொள்ளுதலின் பாக்கியமென்ன?
2. நாம் எவ்வளவு காலமாய் பெற்றுக் கொண்டிருக்கிறோம்?
3. நமது பெற்றோர் நமக்கு என்ன செய்திருக்கிறார்கள்?
4. பெற்றுக் கொண்டே இருக்க வேண்டும் என்ற நினைப்பிலிருக்கும் ஆபத்தென்ன?
5. தேவனிடத்திலிருந்து நாம் பெற்றுக்கொள்ளும் ஆசீர்வாதங்கள் என்ன?
6. நமது ஜெபங்கள் எப்படி இருக்க வேண்டும்?
7. கேட்பதினால் கிடைக்கும் நன்மை என்ன?

### கொடுத்தலின் மகிழ்ச்சி

1. "வெர்னர்" அவர்கள் வாழ்வில் நடந்ததைக் கூறு?
2. கர்த்தருக்குப் பிரியமானது என்ன?
3. ஒரு மனிதன் எப்படி கொடுக்க வேண்டும்?
4. வேண்டா வெறுப்போடு கொடுக்கப்படும் வெகுமதி எப்படியிருக்கும்?
5. ஒரு கணவன், தன் மனைவிக்கு வெகுமதி கொடுக்கிறதைப் பற்றி விவரி?
6. II கொரிந்தியா 8 ல் யாரைப் பேசுகிறார்? ஏன்?
7. இந்த ஜனங்கள் எதற்காக கெஞ்சுகிறார்கள்?
8. இருதயத்தில் சந்தோசத்தோடு கொடுத்தவர்கள் யார்?
9. அவர்கள் எப்படி கெஞ்சுகிறார்கள்?

### கொடுப்பது தேவச் செயலை ஒத்தது

1. மிகப் பெரிய கொடையாளர் யார்?
2. எதை நாம் பெரிதாக எண்ணுவதில்லை?

3. யோவான் 3:16 விவாதி.
4. சுவிசேஷத்தின் இருதயம் எது?
5. தேவன் எப்படிக் கொடுக்கிறார்?
6. ரோமர் 8:32 ஐ விவாதி.
7. யாக்கோபு 1:5 ஐ விவாதி.
8. நாம் என்ன செய்யவேண்டும் என பவுல் அழைக்கிறார்?
9. ரோமர் 12:1 ஐ விவாதி.

**கொடுப்பது, பெற்றுக்கொள்ளும் திறனை அதிகரிக்கிறது**

1. தேவையானவைகளை சிலர் பெற்றுக் கொள்ளாததற்கு காரணமென்ன?
2. தன்னால் எப்படி அதிகமாக கொடுக்க முடிந்தது என்று ஒரு மனிதன் எப்படி விளக்குகிறான்?
3. தேவன் தனது ஜனங்களை என்ன செய்யும்படி சொன்னார்?
4. மல்கியா 3:10 ஐ விவாதி.
5. IIகொரிந்தியர் 9:6 ஐ விவாதி, அவ்வசனத்தின் பொருள் என்ன?
6. ஜாடிக்குள் கையைவிட்ட சிறுவனின் கதையைக் கூறு.
7. திறந்த கைகளைப் பற்றி எழுது?

**கொடுக்கமறுப்பதும், வாழ மறுப்பதும் ஒன்றுதான்**

1. இரண்டு கடலைப்பற்றி விவாதித்து, அதை நம் வாழ்க்கையோடு எப்படி பொருத்தலாம் என்பதையும் எழுது.
2. பேதுரு மரணத்திற்கு பதிலாக ஜீவனை எப்படி கண்டு கொண்டான்?
3. யூதாஸின் மனோநிலை எப்படி இருந்தது?.

**வாங்குதலால் வரும் சாபத்திலிருந்து கொடுத்தல் நம்மைக் காக்கிறது**

1. மல்கியா 2:2 ஐ வாசித்து விவாதி.
2. தேவன் நமக்கு ஆசீர்வாதத்தை தருவது ஏன்?
3. I தீமோத்தேயு 6:17 ஐ விவாதி.
4. கொடுத்தலினால் வரும் சந்தோஷத்தை கூறு.

# பாடம் – பன்னிரெண்டு

# ஏழை விதவையின் காணிக்கை

## The Widow's Mite

### தங்க வசனப்பகுதி

" அவர்களெல்லாரும் தங்கள் பரிபூரணத்திலிருந்தெடுத்துப் போட்டார்கள், இவளோ தன் வறுமையிலிருந்து தன் ஜீவனத்துக்குண்டாயிருந்ததெல்லாம் போட்டு விட்டாள் " (மாற்கு 12:14).

### நோக்கம்

நாம் செய்கின்ற எல்லாவற்றையும் கர்த்தர் கவனிக்கிறார் என்பதையும், நாம் மிகவும் ஏழைகளாக இருந்தாலும், கிறிஸ்துவை முதலிடத்தில் வைத்தால் நாம் ஆசீர்வதிக்கப்படுகிறோம் என்பதையும் நம் மனதில் நிறுத்துவது.

### உங்கள் சிந்தனைக்கு

உன்னால் முடியாது என்று உன்னைக் குறித்து நீ குறைவாக எண்ணினால், நீ அசட்டை செய்யப்படுவாய். உன் திராணிக்கு மேலாக உன்னை உயர்வாக எண்ணாதிருந்தால் நீ ஏற்றுக் கொள்ளப்படுவாய்.

### முன்னுரை

புதிய ஏற்பாட்டில் கொடுத்தலுக்குப் பல உதாரணங்கள் உண்டு. அப்போஸ்தலர் நான்காம் அதிகாரத்தில் பர்னபா நிலத்தை விற்று, அதன் கிரயத்தை அப்போஸ் தலருடைய பாதத்தில் கொண்டு வந்து வைத்தான் என்று வாசிக்கிறோம். II கொரிந் தியர் 8 ல் மக்கெதோனியர்கள் தங்கள் திராணிக்கு மேலாகக் கொடுத்தார்கள் என்று வாசிக்கிறோம். அப்போஸ்தலர் 11 ல் அந்தியோகியாவிலிருந்த சகோதரர்கள், எப்படி யூதேயாவிலிருந்தவர்களுக்குக் கொடுத்தார்கள் என்று வாசிக்கிறோம். புதிய ஏற்பாட்டில் உள்ள இந்த உதாரணங்களெல்லாம், ஒருவன் நின்று, தன்னைத் தானே பார்த்து, நான் கொடுக்க வேண்டிய அளவுக்குக் கொடுக்கிறேனா? என்று கேட்கத் தூண்ட வேண்டும்.

இரண்டு காசுகள் கொடுத்த இந்த ஏழை விதவை, உலக நன்மைகளை அதிகம் பெற்றிருக்கும் நமக்கு மிகப் பெரிய பாடமாக இருக்கிறாள். ஒரு பக்கம் பொருளாசை, மறுபக்கம் சொகுசு வாழ்க்கை இவைகளினால், கிறிஸ்துவுக்கும், அவருடைய சபைக் கும் அநேகர் மிகக் குறைவானதையே கொடுக்கிறார்கள். தேவனுடைய வழி நடத்து தலில் நம்பிக்கை வைக்காமல், தங்களுக்கிருக்கும் கொஞ்சத்திலிருந்து தேவனுக்குக் கொடுக்க மறுக்கும் ஏழைகளை கடிந்து கொள்ளும் ஒரு பாடமும் இங்கே உண்டு. ஏழை களும், பணக்காரர்களும் இதை கவனித்தால் தாராளமாய்க் கொடுப்பதை இரண்டு தரப் பாரும் கற்றுக் கொள்ளலாம். இந்த ஏழை விதவை கொடுக்க வெளிப்படுத்தின மனோ பாவத்தை, ஒரு 100 பேர் மாத்திரம் உள்ள சபையில் எல்லோரும் பின்பற்றினால், அந்த சபை எவ்வளவாய் செயல்பட முடியும் என்பதை எண்ணிப்பாருங்கள்.

## I சிறிய காரியங்கள் பற்றி இயேசுவின் மனப்பான்மை

சிறியவைகளின் மகத்துவம் பற்றி கிறிஸ்து அடிக்கடி போதித்துள்ளார். மத்தேயு 13:31 –32 ல், வேறொரு உவமையை அவர்களுக்குச் சொன்னார்; " பரலோக ராஜ்யம் கடுகு விதைக்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு மனுஷன் எடுத்துத் தன் நிலத்தில் விதைத்தான். அது சகல விதைகளிலும் சிறியதாயிருந்தும் வளரும் போது, சகல பூண்டுகளிலும் பெரிதாகி, ஆகாயத்துப் பறவைகள் அதின் கிளைகளில் வந்து அடையத்தக்க மரமாகும் " என்றார். மத். 10:42 ல் " சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர் மாத்திரம் குடிக்க கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற் போகான் " என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லு கிறேன் என்றார்.

ஒரு கடல், தண்ணீர் சொட்டுகளால் ஆனதாகவும், ஒரு மலை, கல், மண் துகள் களால் ஆனதாகவும் இருக்கிறது. கோடிக்கணக்கான சொட்டுத் தண்ணீரும், கோடிக் கணக்கான கல், மண் துகள்களும் ஒன்று சேர்க்கப்படும் போது, அவை மகத்தானவை களாக மாறுகின்றன. அதுபோல, ஒரு சகோதரனுடைய கொடுத்தல் பார்ப்பதற்குக் கொஞ்சமாகத் தெரியலாம். ஆனால், அவன் தன் திராணிக்குத்தக்க அளவில் கொடுக்கும் போது, அது பெரிதாகிறது. பழைய ஏற்பாட்டின் நாட்களில், அற்பமான ஆரம்பத்தின் நாட்களை அசட்டை பண்ணின தன் ஜனங்களைத் தேவன் கடிந்து கொண்டார். (சகரியா 4:10) இயேசு இந்த சந்தர்ப்பத்தைத் தனக்கு சாதகமாக்கிக் கொண்டு சிறியவைகளைக் கொண்டு மகத்தான காரியங்களை நமக்குப் போதிக்கிறார்.

## II இயேசு உட்கார்ந்து கவனித்தார்

இயேசு காணிக்கைப் பெட்டிக்கு எதிரே உட்கார்ந்து, ஜனங்கள் எப்படிக் கொடுக்கிறார்கள் என்பதை கவனித்தார். அன்றைக்கு எப்படி காணிக்கைப் பெட்டியின் எதிரே அமர்ந்து அவர்கள் போடுவதைக் கவனித்தாரோ, அதுபோல இன்றைக்கும் கவனிக்கிறார் என்பதை மனதில் கொள்வது அவசியம். அவருடைய கண்கள் பணக் காரர்களின் பரிபூரணத்திற்கும், ஏழைகளின் தரித்திர நிலைக்கும் திறந்திருக்கிறது. நம்மிடத்திலிருக்கும் ஒவ்வொரு ரூபாயையும் நாம் எப்படிப் பயன்படுத்துகிறோம் என்பதையும் இயேசு கவனிக்கிறார். அது மாத்திரமல்ல, அவர்களுடைய செயலுக்குக் காரணமாயிருக்கக் கூடிய ஒவ்வொரு நோக்கத்தையும் அவர் பார்க்கிறார். நம்முடைய கொடுத்தல் மாயையானதாக, சுயநலமுள்ளதாக, ஆர்வமில்லாததாக, எதிர்பார்ப்புள்ள தாக இருக்கிறதா அல்லது அன்புள்ளதாகவும், அவரைப் பிரியப்படுத்த வேண்டுமென்ற வாஞ்சையுடையதாகவும் இருக்கிறதா என்பதை அறிந்திருக்கிறார். இன்னும், நம்முடைய செயலோடு சம்பந்தப்பட்ட சூழ்நிலைகளையும் அவர் கவனிக்கிறார். நாம் அக்கறையோடு செயல்படுகிறோமா அல்லது உதாசீனமாகச் செயல்படுகிறோமா, ஆர்வத்தோடு செயல்படுகிறோமா அல்லது தயக்கத்தோடு செயல்படுகிறோமா என்பதையும் கவனிக்கிறார்.

இயேசு கிறிஸ்து உன் அருகில் உட்கார்ந்திருந்தால், நீ எப்படிக் கொடுப்பாய்? இயேசு உன்னருகில் உட்கார்ந்திருந்து நீ கொடுக்கிறதைக் காண்கிறார். அனனியா, சப்பீராள் ஆகிய இருவரும் உள்ளே வந்து, கொடுத்தல் காரியத்தில் அவர்கள் பொய்

சொன்னதைக் கண்டார். இன்றைக்கு உங்களுடையதிலிருந்து கர்த்தருக்குக் காணிக்கை கொடுக்கும் போது உங்கள் கண்களை மூடிக்கொண்டு இயேசு அருகில் இருந்து உங்களைக் காண்கிறார் என்று எண்ணியபடி கொடுங்கள். அப்பொழுது, அது எப்படிப்பட்ட காட்சியாக இருக்கும்! அங்கே ஒரு பணக்கார பரிசேயன், தன்னுடைய பரிபூரணத்திலிருந்து கொடுத்தான். காணிக்கை கொடுத்த அனைவரும், எவ்வித சந்தேகமுமில்லாமல், இயேசுவின் கவனத்தை ஈர்க்க அங்கே முயற்சித்திப்பார்கள். இயேசு அருகே உட்கார்ந்து கவனித்தபடியால், வழக்கத்திற்கும் மாறாக கூடுதலாகக் கூட கொடுத்திருப்பார்கள். ஒரு பெரிய கூட்டத்தில், நம்முடைய கர்த்தர் இந்த ஏழை விதவை இரண்டு காசுகள் போடுவதைக் கண்டார்.

இந்த ஏழை கொடுத்த காணிக்கை பற்றி வேறொரு மொழியாக்கம் கொண்ட வேதாகமத்தில் இப்படியாக உள்ளது. " இயேசு சொல்ல வரும் கருத்து வெட்ட வெளிச்ச மானது. மதிப்புள்ள ஈகைதான் சரியான ஈகையாகக் கருதப்படும். தேவனுடைய அளவை மனிதனுடைய அளவோடு வேறுபடுத்திக் காட்டும் பல சந்தர்பங்களில் இதுவும் ஒன்று. தங்கள் பெருக்கத்திலிருந்தும், பரிபூரணத்திலிருந்தும் கொடுக்கப்பட்டதற்கு அவர் கண்டனம் தெரிவிக்கவில்லை. உண்மையான கொடுத்தல், எவ்வளவு கொடுக்கப் பட்ட தென்பதை வைத்து கணக்கிடப்படாமல், கொடுத்ததற்கு பிறகு எவ்வளவு மீதமிருக் கிறதென்பதை வைத்தே கணக்கிடப்படுகிறது. காணிக்கைப் பெட்டியின் அருகே அமர்ந்து, ஜனங்கள் காணிக்கை போடுவதைக் கவனித்த போது, ஒரு ஏழை விதவை யின் கொடுத்தல் இவரது கவனத்தை ஈர்த்து ஆச்சரியத்தில் மூழ்க வைத்தது. உண்மை நிலவரம் இதுதான். அடுத்த வேளை ஆகாரத்திற்கு அவளிடம் இருந்தது அதுதான். தேவாலயமானது காணிக்கை போடும் சத்தத்தால் நிறைந்திருந்தது. அங்கே வைக்கப் பட்டிருந்த 13 பெரிய காணிக்கை பெட்டிகளில், காசுகள் மீது காசுகள் விழுந்ததால் கணீர் கணீர் என்ற பெரிய சத்தம் உண்டாயிற்று. ஆனால், இயேசுவின் காதுகள் அன்றைக்குப் புழக்கத்தில் இருந்த நாணயங்களில் மிகச் சிறியதும், அதைக் கொண்டு மிகமிகக் குறைவானதைத் தான் வாங்க முடியும் என்ற நிலையில் அதிகம் மதிப்பில்லாத இரண்டு சிறிய காசுகளின் மெல்லிய சத்தத்தைக் கேட்டது. இருப்பினும் இருதயத்தைப் பார்க்கக் கூடிய தேவனின் பார்வையில், அந்த இரண்டு காசுகள் தான் மிகப் பெரியதாக இருந்தது. ஆம், அது உலகத்திலேயே வைத்து மிகப் பெரிய வரவு என்று நிரூபண மானது. அந்த ஏழை விதவையின் மதிப்புமிக்க கொடுத்தல், அவளுடைய வரவுக்குத்தக்க தான ஒன்றாக மாத்திரம் இருக்கவில்லை. மாறாக, அது ஒரு பலி என்று சொல்லத்தக்க அளவுக்கு இருதயத்திலிருந்து தூக்கி எடுக்கப்பட்ட ஒன்றாக இருந் தது. அந்த இரண்டு காசுகளைப் போடாமல் நியாயப்படுத்த அவளுக்கு போதுமான காரணங்கள் இருந்த தென்பதை நாம் எல்லோரும் நன்றாக அறிவோம். ஒரு இரண்டு காசு என்ன மாற்றத்தை உண்டு பண்ண முடியும்? இது மிகவும் சிறியது, கணக்கிலேயே எடுத்துக் கொள்ளப் படாது. யார் எதைக் கொடுக்க முடியுமோ அதை அவர்கள் கொடுக்கட்டும். என்னிடத்தில் மீதமாக வைப்பதற்கு ஒரு காசு கூட இல்லை. நான் ஒன்றைப் போடுகிறேனா இல்லையா என்று ஒருவரும் ஒருபோதும் கவனிக்கமாட்டார்கள் " என்று.

அன்பின் எந்த ஈவும் எண்ணப்படுவதற்கு சிறியதுமல்ல அல்லது எந்த ஜீவனும் பகிர்ந்தளிக்கும் கிருபையிலிருந்தும், கடமையிலிருந்தும் ஒதுக்கித் தள்ளத்தக்கதல்ல.

## III இயேசு என்ன சொன்னார்

" அப்பொழுது அவர் தம்முடைய சீஷரை அழைத்து காணிக்கைப் பெட்டியில் பணம் போட்ட மற்ற எல்லாரைப் பார்க்கிலும் இந்த ஏழை விதவை அதிகமாய்ப் போட்டாள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்; அவர்களெல்லாரும் தங்கள் பரிபூரணத்திலிருந்தெடுத்துப் போட்டார்கள்; இவளோ தன் வறுமையிலிருந்து தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்ததெல்லாம் போட்டுவிட்டாள் " என்றார் (மாற்கு. 12:43 –44).

இந்த சந்தர்ப்பத்தில் இயேசு தியாகமான கொடுத்தல் பற்றி மனிதன் முன்னெப் போதும் கேட்டிராத அளவில் போதிக்கிறார். இங்கே, இயேசு சீஷர்களை தன்னிடமாக அழைத்து, " மனிதர்களே, தியாகமாகக் கொடுத்தல் பற்றி நான் உங்களுக்கு ஒரு பாடம் கற்பிக்க விரும்புகிறேன் " என்று சொன்னதை என்னால் பார்க்க முடிகிறது. இயேசு தொடர்ந்து, " இந்தப் பெருங்கூட்டத்திலிருந்த ஒருவர் மற்ற எல்லாருடையதைக் காட்டிலும் அதிகமாகக் கொடுத்தார் " என்று சொன்னார். அப்போஸ்தலர்களுக்கு ஒரே அதிர்ச்சியாக இருந்திருக்கும். அது எப்படி, மற்ற எல்லோரும் போட்ட தொகையை விட அதிகமாக ஒரு மனிதரால் போட்டிருக்க முடியும் என்று எண்ணியிருப்பர். அன்றைக்கு வந்த பணக்காரர்களில் யாராவது ஒருவரை நினைத்திருப்பர். எருசலே முக்கு வடக்கே ஐந்து மைல் தொலைவில், பெரிய ஆட்டு மந்தைக்குச் சொந்தக்காரனை பணக்கார வியாபாரி இருந்தான். ஆனால், அவன் கஞ்சனென்று எல்லோராலும் அறியப்பட்டிருந்தான். ஆகவே, எல்லோருடைய கண்களும் இயேசுவின் பக்கமாகத் திரும்பி இவ்வளவு பெரிய காரியத்தைச் செய்தது யார் ஆண்டவரே? என்று கேட்டது. இயேசு அந்த ஏழை விதவையைச் சுட்டிக் காட்டி இவள் தான் அவள் என்றார்.

அவள் அணிந்திருந்த சாதாரண உடை கூட்டத்திலிருந்தவர்களில் அவளை தனிமைப்படுத்திக் காட்டியதால் அவளைக் கண்டு பிடிப்பது சிரமமாக இருக்கவில்லை. ஒருவேளை அவள், கந்தலான ஆடை அணிந்தவளாக இருந்திருக்கலாம், ஆனால், அந்த ஆடைகளுக்குப் பின்னால் பசும் பொன் போலும், சுத்தப்பட்டுப் போலுமான ஓர் ஆத்து மா இருந்தது.

மற்ற எல்லாரைக் காட்டிலும் இவள் அதிகமாகக் கொடுத்தாள் என்று நான் ஏன் சொன்னேன் என்று இயேசு விளக்கினார். பெரும்பாலான பணக்காரர்களும், பொருளாதார நிலையில் நன்றாக இருப்பவர்களும் தங்கள் பரிபூரணத்திலிருந்து கொடுத்தார்கள். ஒருவேளை, அவர்கள் தியாகமாகக் கொடுத்திருந்தாலும், கொடுத்த தற்குப் பிறகு அவர்களிடத்தில் என்ன மீதமிருந்ததென்று பார்க்கும்போது அவர்கள் கொடுத்தது மிகவும் குறைவே.

நம்முடைய வருமானத்திலிருந்து 10% முதல் 25% வரை நாம் கொடுக்கும் போது, காணிக்கை கொடுப்பதில் நாம் சிறப்பாகத் தான் இருக்கிறோம் என்று நினைக்கலாம். ஆனால், நாம் கொடுத்ததற்குப் பிறகு என்ன மீதமிருக்கிறதென்பதை எண்ணிப்பார்த்

தால், நாம் கொடுப்பது குறைவாகவே தெரியும். இந்த விதவையோ எல்லோரைக் காட்டிலும் குறைவாகக் கொடுத்தாள். மற்றவர்கள் தங்கள் பரிபூரணத்திலிருந்து கொடுத்தார்கள், இவள் தன்னிடமிருந்த கொஞ்சத்தையும் பரிபூரணமாகக் கொடுத்தாள். ஓ! அவள் கொடுத்த அளவு, அவள் குணத்தைக் காட்டுகிறது. எல்லோரைக் காட்டிலும் அவள் அதிகமாக கொடுத்தாள். அன்றைக்குக் காணிக்கை கொடுத்த பெரும்பாலோர் தங்கள் பங்கை அளித்தார்கள். ஆனால், இவளோ தன்னையே தியாகம் செய்திருக்கிறாள்.

சபையில் இருக்கும் ஒரு சராசரி கிறிஸ்தவன், இந்த ஏழை கொடுத்ததோடு தான் கொடுப்பதை ஒப்பிட்டு எண்ணிப் பார்த்தால், " ஓ கர்த்தாவே, என்னுடைய சுய நலமான காணிக்கைக்காக என்னை மன்னியும், இந்த விதவையைப் போல நானும் இருக்க எனக்கு உதவி செய்யும் என்று தேவனிடத்தில் கெஞ்சி அழ வேண்டும் ".

நான் பரலோகம் செல்லும் போது, அந்த விதவையைச் சந்தித்து நீண்ட நேரம் பேச விரும்புகிறேன். அவள் ஒரு மிகச் சிறந்த பெண்ணாக இருந்திருக்க வேண்டும். சபையில் இருக்கும் அங்கத்தினர்களை கொடுத்தல் காரியத்தில் இந்த விதவையின் மனோபாவத்திற்கு நாம் கொண்டு வந்து விட்டால், குறுகிய காலத்தில் உலகத்தை சுவிசேஷ மயமாக்கி விடலாம். இந்த விதவையோடு ஒப்பிடும்போது உங்கள் கொடுத்தல் எப்படியுள்ளது? கொடுத்தலில் இந்த ஓர் உதாரணம், கொடுத்தலில் நாம் தாராளமுள்ளவர்களாயிருக்க நம்மை ஊக்கப்படுத்த வேண்டும். சகோதரனே, உங்களிடம் இருப்பதை நீங்கள் உங்களோடு எடுத்துச் செல்லப் போவதில்லை. பத்துக் காசு கூட உங்களோடு வராது. ஏன் சிலபேர், தாங்கள் நித்திய காலமெல்லாம் பணத்தை வைத்திருப்பது போல், அதை கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருக்கிறார்களோ தெரியவில்லை.

## IV இயேசு அவளைப் பாராட்டினார்

நம்முடைய ஆண்டவர் இப்பூமியில் இருந்த போது நிறைய பேரைப் பாராட்டியதில்லை. ஆனால், கொஞ்சம் பேரைப் பாராட்டியுள்ளார். அவர்களில் இந்த விதவையும் ஒருவள். " இயேசு ஸ்திரீகளிடத்தில் பிறந்தவர்களில் யோவான் ஸ்நானகனைப் பார்க்கிலும் பெரியவன் ஒருவனும் எழும்பினதில்லை; ஆகிலும், பரலோக ராஜ்யத்தில் சிறியவனாயிருக்கிறவன் அவனிலும் பெரியவனாயிருக்கிறானென்று உங்களுக்கு மெய்யாகவே சொல்லுகிறேன் ". (மத். 11:11) என்று யோவானைப் பாராட்டினார்.

" இயேசு அவளுக்குப் பிரதியுத்திரமாக: ஸ்திரீயே உன் விசுவாசம் பெரிது; நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது " என்று அந்த கானானிய ஸ்திரீயைப் பாராட்டினார் (மத். 15:28).

இயேசு மரியாளைப் பாராட்டினார். " தேவையானது ஒன்றே, மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்து கொண்டாள் " என்று. (லூக் 10:42).

இயேசு நாத்தான்வேலைப் பாராட்டினார். " இயேசு நாத்தான்வேலைத் தம்மிடத்தில் வரக் கண்டு அவனைக் குறித்து: இதோ, கபடற்ற உத்தம இஸ்ரவேலன் " என்றார். (யோவான் 1:47).

இன்றைக்கு நாம் பேசிக்கொண்டிருக்கிற அந்த விதவை, இயேசு இந்த பூமியில் வாழ்ந்த போது பாராட்டியவர்களில் ஒருவள் என்ற பெருமையைப் பெற்று சரித்திரத்தில் இடம் பிடித்தாள். நாளைக்கு என்ன செய்வது என்று தெரியாத நிலையில் அவள் வீடு திரும்ப வேண்டியிருந்த போதிலும், அவள் இருதயம் மகிழ்ச்சியால் துள்ளிற்று. அவளுடைய தோழிகளும், அயலகத்தாரும் அவளைப் பார்த்து கலிலேயனாகிய இயேசு கிறிஸ்து உன்னைக் குறித்து அநேக நற்காரியங்கள் சொன்னதை நாங்கள் கேட்டோம் என்ற போது, அவள் இருதயம் மகிழ்ந்து முகம் மலர்ச்சியடைந்திருக்கும். சகோதரர்களே, நம்முடைய கொடுத்தலை எண்ணிப் பார்ப்போம். தேவன் நமக்கு மிகவும் நல்லவராக இருந்து வருகிறார். தாரளமாய்க் கொடுப்போம். அப்பொழுது அவர் ஆயிரம் வித்தியாசமான வழிகளில் நம்மை ஆசீர்வதிப்பார்.

புதிய ஏற்பாட்டுக் கொடுத்தலை மீட்டு நடைமுறைப்படுத்த நீங்கள் உதவி செய்வீர்களா?

**கேள்விகள்**

1. தங்க வாக்கியம் என்ன?
2. இப்பாடத்தின் நோக்கம் என்ன?
3. உங்கள் சிந்தனைக்கான கருத்து என்ன?

**முன்னுரை**

1. கொடுத்தலின் சில உதாரணங்களைக் கூறு.
2. II கொரிந்தியர் 8 ம் அதிகாரத்தின் முற்பகுதியை விவரி.
3. கொடுத்தலின் உதாரணத்தை விவரி.
4. இப்பாடத்தையும், கடிந்து கொள்ளுதலையும் விவரி.
5. ஏழை விதவையின் மனோபாவம் சபையில் எல்லோருக்கும் இருக்குமானால், சபையில் என்ன செய்ய முடியும்?

**சிறிய காரியங்கள் பற்றி இயேசுவின் மனோபாவம்**

1. மத்தேயு 13:31–32ன் உவமையை விளக்கு.
2. ஒரு கலசம் தண்ணீரைக் குறித்து இயேசு என்ன சொன்னார்?
3. மலைகளையும், கடல்களையும் எது உண்டாக்குகிறது?
4. கொடுத்தல் எப்பொழுது சிறந்ததாகும்?
5. தேவன் தனது ஜனங்களை ஏன் கடிந்து கொண்டார்?
6. சகரியா 4:10 ஐ விவரி.

**இயேசு உட்கார்ந்து கவனித்தார்**

1. இயேசு எங்கு உட்கார்ந்தார்?
2. இன்று நாம் கொடுப்பதை இயேசு கவனிக்கிறாரா?
3. நமது கொடுத்தலின் சூழ்நிலையை இயேசு காண்கிறாரா?

4. அனனியா, சப்பிராள் சம்பந்தப்பட்ட நிகழ்வைக் கூறு?.
5. காணிக்கைப் பெட்டியில் ஜனங்கள் காணிக்கை போட்டதை விவரி?.
6. விதவை காணிக்கையாக எதை பெட்டியில் போட்டாள்?
7. இயேசு எதை தெளிவுபடுத்தினார்?
8. உண்மையான கொடுத்தல் எவ்வாறு தவறாக பயன்படுத்தப்படுகிறது?.
9. இன்றைய ஆலயத்தில் உள்ள காட்சிகளை விவரி.
10. விதவையின் காணிக்கை எப்படி வித்தியாசப்பட்டதாக இருந்தது?
11. அவள் கொடுக்காமல் தன் நிலையை எப்படி நியாயப்படுத்தியிருக்கக் கூடும்?
12. அன்பினால் தரப்படும் காணிக்கை சிறிதாக இருக்குமா?

**இயேசு என்ன சொன்னார்?**

1. தன் சீடர்களிடம் இயேசு என்ன கூறினார்?
2. தியாகமான கொடுத்தல் பற்றி இயேசு என்ன போதித்தார்?.
3. அப்போஸ்தலர்கள் என்ன எண்ணியிருக்கக் கூடும்?
4. இந்த நிகழ்வின்போது இருந்த சிலரை விவரி.
5. கூட்டத்தில் விதவையை அடையாளம் காண்பது கடினமாக இருந்ததா?
6. கொடுத்தது போக மீதமிருக்கும் அளவின்படி நமது கொடுத்தலைப் பார்த்தால் அது எப்படி காட்சி தரும்?
7. அவர்கள் எதிலிருந்து கொஞ்சமானதைக் கொடுத்தார்கள்?
8. விதவை எதிலிருந்து பூரணமாகக் கொடுத்தாள்?
9. விதவை எவ்வளவு கொடுத்தாள்?
10. விதவை கொடுத்ததின்படி தங்கள் கொடுத்தலைக் காணும்போது சிலர் தங்கள் கொடுத்தலைப் பற்றி என்ன கூறுவர்?
11. இந்த விதவையின் உதாரணம் நம்மை எப்படி ஊக்கப்படுத்த வேண்டும்?

**இயேசு அவளைப் பாராட்டினார்**

1. இயேசு அநேகரைப் புகழ்வதை நாம் படிக்கிறோமா?
2. மத்தேயு 11:11 ஐ விவரித்து விளக்கு.
3. மத்தேயு 15:28 ஐ விவரித்து விளக்கு.
4. லூக்கா 10:48 ஐ விவரித்து விளக்கு.
5. யோவான் 1:47 ஐ விவரித்து விளக்கு.
6. இந்த விதவை வீடு திரும்பியபோது எவ்வகையான உணர்வைக் கொண்டிருந்திருப்பாள்?.

## பாடம் – பதின்மூன்று

# ஒரு நல்ல உக்கிராணக்காரன்

## A Good Steward

### தங்க வசனப்பகுதி

**"இப்படியாக எந்த மனுஷனும் எங்களைக் கிறிஸ்துவின் ஊழியக்கார ரென்றும், தேவனுடைய இரகசியங்களின் உக்கிராணக்காரனென்றும் எண்ணிக் கொள்ளக்கடவன்" (I கொரி. 4:1)**

### நோக்கம்

மனிதனுக்கு எதுவும் அவசியமில்லையென்றும், அவன் தன்னிடமிருப்பதைக் கொஞ்ச காலத்திற்கு மாத்திரம் வைத்திருக்கிறான் என்றும் உணர்த்துவது.

### உங்கள் சிந்தனைக்கு

அவர் நிறையப் பணம் வைத்திருக்கிறார் என்று நாம் அடிக்கடி கேள்விப்படு கிறோம். ஆனால், அந்தப் பணம் அவரை அடிமைப்படுத்தி வைத்திருக்கிறது என்பது தான் உண்மையாகிறது.

### முன்னுரை

ஒரு உக்கிராணக்காரனாக இருக்கிற காரியத்தில், ஒரு கிறிஸ்தவனுக்கு எந்த உரிமையும் கிடையாது. எப்படியெனில், அவர்கள் விரும்புகிறார்களோ, இல்லையோ, எல்லோரும் உக்கிராணக்காரர்களே. ஒருவன் நல்ல அல்லது மோசமான உக்கிராணக் காரனாக இருப்பதை அவன் தனக்காகத் தெரிந்து கொள்ளலாம். இருப்பினும் அவன் ஒரு உக்கிராணக்காரனே. உக்கிராணக்காரன் என்பவன், தனக்குச் சொந்தமல்லாத ஒன்றை நிர்வகிக்கும் பொறுப்பில் ஒப்படைக்கப்படுபவன். " அன்றியும் உன்னை விசேஷித்தவனாகும்படி செய்கிறவர் யார்? உனக்கு உண்டாயிருக்கிறவைகளில் நீ பெற்றுக் கொள்ளாதது யாது? நீ பெற்றுக் கொண்டவனானால் பெற்றுக் கொள்ளதவன் போல் ஏன் மேன்மை பாராட்டுகிறாய்? " (I கொரி. 4:7) " உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை, இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டு போவதுமில்லை என்பது நிச்சயம் (I தீமோ. 6:7) உன் தேவனாகிய கர்த்தரை நினைப்பாயாக; அவரே ஐசுவரியத்தை சம்பாதிக்கிறதற்கான பெலனை உனக்குக் கொடுக்கிறார்" (உபா. 8:18). ஒரு கிறிஸ்தவன் முடிவு செய்ய வேண்டிய ஒரே கேள்வி, தான் ஒரு நல்ல உக்கிராணக் காரனா அல்லது ஒரு மோசமான உக்கிராணக்காரனா என்பது தான்.

பணம் பற்றிய தவறான மனோபாவம் தான், வேறு எதைக் காட்டிலும் அநேக ஜனங்கள் தேவனோடு கொண்டிருக்க வேண்டிய சரியான உறவுக்குத் தடையாக இருக்கி றது என்று " ஹங்கர் போர்டு " (E.A. Hungerford) என்ற மனிதர் சொன்னது ஓரளவு உண்மையாக இருக்கிறது. தன்னுடைய சம்பாத்தியத்திற்கும், செலவினங்களுக்கும்,

சேமிப்புகளுக்கும், முதலீடுகளுக்கும், பணம் பற்றிய கிறிஸ்துவின் உபதேசக் கொள்கைகளை எப்படி நடைமுறைப்படுத்த வேண்டுமென்பதைச் சரியாகப் புரிந்து கொண்டவன், தனக்கென சுலபமான வழியைத் தெரிந்து கொள்ளமாட்டான். இருப்பினும், இது கிறிஸ்தவ அனுபவத்தின் முழுமைக்கு மிகவும் அவசியம்.

நாம் உக்கிராணக்காரர்களாக இருக்கிறபடியால், தேவனுக்குக் கணக்குக் கொடுக்கவேண்டும். அத்தோடு, உக்கிராணக்காரன் உண்மையுள்ளவனாகக் காணப்படுவது அவசியம். நியாயத்தீர்ப்பின் போது, நம்முடைய நேரம், தாலந்து, பணம் மற்றும் அவர் தந்த எல்லாவற்றையும் நாம் எப்படி செலவழித்தோம் என்று கர்த்தர் நம்மிடத்தில் கணக்குக் கேட்பார். இந்த உலக ஆஸ்தி எவ்வளவு அதிகமாக அல்லது குறைவாக நம்மிடம் இருக்கிறதென்பது ஒரு பிரச்சனையே அல்ல. அந்த பயங்கரமான நாளில், நாம் அவருக்கு கணக்குக் கொடுக்க வேண்டுமென்பதே காரியம்.

## I யார் மோசமான உக்கிராணக்காரன்?

இன்றைய பாடத்தில், நல்ல உக்கிரணக்காரன் பற்றி நாம் பிரதானமாகப் பார்த்தாலும், அநேகர் மோசமான உக்கிராணக்காரர்களாக இருக்கிறார்கள் என்கிற கொடுமையான உண்மையைத் தெரிந்து கொள்ள வேண்டும். விவாகரத்துக்காக வழக்குப் போட்ட ஒரு பெண், ஜீவனாம்சமாக 1,00,000 டாலர் கேட்டாள் என்று நியூயார்க்கிலிருந்து வெளி வரும் செய்தித்தாளில் வந்தது. அவளுடைய தேவைகளைப் பட்டியலிடுமாறு கேட்டபோது, நான் ஒரு ஓட்டலில் தங்கியிருக்கிறேன், அதற்கு வாடகை 10,000 டாலர். என்னுடைய நான்கு வயது பையனுக்கு ஒரு தாதி இருக்கிறாள். என் எட்டு வயது மகளுக்கு ஒரு பிரெஞ்சு வேலைக்காரி இருக்கிறாள். அவர்களின் நலனை நான் கவனித்துக் கொள்ள வேண்டும். பிள்ளைகள் ஒவ்வொருவரின் கல்விச் செலவுக்கு 5000 டாலர் வருடம் செலவழிக்க வேண்டும் என்றெல்லாம் பதிலளித்தாள்.

அந்த பெண் வாகனச் செலவுக்கென்று வருடம் 10,000 டாலர் என்றும், பிறகு கவனமாக செலவழித்தால் கூட, வருடத்திற்கு துணிமணிகளுக்காக 25,000 டாலர் தேவை என்றும் சொன்னாள். ஆனால், அவள் சொன்ன ஓட்டலின் நிழலில் தங்களுடைய வாழ்வில் ஒரு வேளை உணவு கூட ஒழுங்காகச் சாப்பிடாத நூற்றுக்கணக்கான அநாதைகள் இருந்தனர். நூற்றுக்கணக்கான குழந்தைகள் ஆடை கூட இல்லாமல் அம்மணமாகத் திரிந்து, எச்சில் உணவுக்காகச் சண்டை போட்டுக் கொண்டனர். இவைகளைக் கவனித்தால் அவள் ஒரு மோசமான உக்கிராணக்காரி என்பது தெரியும். தேவன் நம்மிடத்தில் ஒப்புக்கொடுத்த எல்லாவற்றையும் கணக்கிலெடுத்து, அவைகளை முதலில் நமக்குப் பயன்படுத்தி விட்டு, மீதமானதை தேவனுக்குக் கொடுப்போமானால், நாம் மோசமான உக்கிராணக்காரர்கள்.

தேவன் தம்முடைய வசனத்தில், மோசமான உக்கிராணனுக்குரிய விளக்கத்தையும் கொடுக்கிறார். " அல்லாமலும், ஒரு உவமையை அவர்களுக்குச் சொன்னார். ஐசுவரியமுள்ள ஒருவனுடைய நிலம் நன்றாய் விளைந்தது, அப்பொழுது அவன் நான் என்ன செய்வேன்? என் தானியங்களை சேர்த்து வைக்கிறதற்கு இடமில்லையே; நான் ஒன்று செய்வேன்? என் களஞ்சியங்களை இடித்து பெரிதாகக் கட்டி, எனக்கு விளைந்த

தானியத்தையும் என் பொருள்களையும் அங்கே சேர்த்து வைத்து பின்பு: ஆத்துமாவே, உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேகம் பொருள்கள் சேர்த்து வைக்கப்பட்டிருக் கிறது; நீ இளைப்பாறி, புசித்துக் குடித்து, பூரிப்பாயிரு என்று என் ஆத்துமாவோடே சொல்லுவேன் என்று தனக்குள்ளே சிந்தித்துச் சொல்லிக் கொண்டான், தேவனோ அவனை நோக்கி: மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரி யிலே எடுத்துக் கொள்ளப்படும். அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும் என்றார் ". (லூக்கா 12:16-20). தேவன் மிகுந்த விளைச்சலினால் இந்த மனிதனை ஆசீர்வ தித்தார். ஆனால், அவன் ஒரு மோசமான உக்கிராணக்காரனாக இருந்தான். அவன் எப்படி பேசினான் என்பதைக் கவனியுங்கள். " என் தானியம் ", " என் களஞ்சியம்," "என் ஆத்துமா" என்றான். ஆனால், தேவன் அவனை, " மதிகேடனே " என்றார்.

## II யார் நல்ல உக்கிராணக்காரன்?

ஒரு நல்ல உக்கிராணக்காரனுக்கு மூன்று வகையான வேலைகள் உண்டு; 1. தன்னால் முடிந்தளவு பாடுபட வேண்டும். 2. தன்னால் முடிந்தளவு சேமிக்க வேண்டும். 3. தன்னால் முடிந்தளவு கொடுக்க வேண்டும். இந்த மூன்று வகை வேலைகள் பற்றி ஒரு பிரசங்கி பிரசங்கிப்பதை, ஒரு வயதான கஞ்சன் கேட்டான். தன்னால் முடிந்தளவு பாடுபட வேண்டும் என்று முதல் கருத்தைச் சொன்ன போது, அந்த வயதான கஞ்சன், " ஆமென் " என்று சொன்னான். அடுத்து, இரண்டாவது கருத்தான, தன்னால் முடிந்தளவு சேமிக்க வேண்டும் என்ற போது, அந்த கிழக் கஞ்சன், " ஆமென், ஆமென் " என்று சொல்லி தன் பக்கத்தில் அமர்ந்திருப்பவனை இலேசாக ஒரு இடி இடித்து இவ்வளவு விஷயங்களைத் தெரிந்து இப்படிப் பாங்கான முறையில் தன் கருத்தைச் சொல்லும் ஒருவரை நான் இதுவரை பார்த்ததேயில்லை என்றான். அடுத்து, அந்தப் பிரசங்கி, இதுதான் என் மூன்றாவது கருத்து என்று சொல்லி " தன்னால் முடிந்தளவு கொடுக்க வேண்டும் " என்றார். அதைக் கேட்ட அந்தக் கஞ்சன் மயங்கி விழுந்து விட்டான்.

1. ஒரு நல்ல உக்கிராணக்காரன் தன்னால் முடிந்தளவு பாடுபட வேண்டுவது அவன் கடமை என்று வேதாகமம் போதிக்கிறது. மத்தேயு 25ம் அதிகாரத்தில், ஐந்து தாலந்துக்காரனும், இரண்டு தாலந்துக்காரனும் அதை வைத்து சம்பாதித்ததற்காக, பாராட்டப்பட்டுள்ளனர். ஆனால், ஒரு தாலந்துக்காரன் தனக்கு கிடைத்ததை வைத்து என்ன செய்திருக்க வேண்டுமோ அதைச் செய்யாதபடியால் கடிந்து கொள்ளப்பட்டான் (மத். 25:14-27). " திருடுகிறவன் இனித் திருடாமல் குறைச்சலுள்ளவனுக்கு கொடுக்கத் தக்கதாக தனக்கு உண்டாயிருக்கும்படி தன் கைகளினால் நலமான வேலை செய்து பிரயாசப்படக்கடவன் ". (எபே. 4:28). ஒரு நல்ல உக்கிராணக்காரன் பாடுபட வேண்டு மென்று தேவன் எதிர்பார்க்கிறபடியால், பாடுபட்டுப் பணத்தைச் சாம்பாதிப்பது ஒரு மனிதனுக்கு கனமானது. ஒரு மனிதன் தனக்குச் சம்பாதிக்கத் திராணி இருக்கும் போது, அப்படிச் செய்வதில் எந்த தவறும் இல்லை. சோம்பல்தனத்தை தேவன் கண்டிக் கிறார். " ஒருவன் வேலை செய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடா தென்று நாங்கள் உங்களிடத்தில் இருந்த போது உங்களுக்குக் கட்டளையிட்டோமே " (II தெச. 3:10). " அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள். ஆவியிலே அனலா யிருங்கள். கர்த்தருக்கு ஊழியஞ் செய்யுங்கள் " (ரோமர். 12:11).

2. உங்களால் முடிந்தளவு சேமியுங்கள். " அவர்கள் திருப்தியடைந்த பின்பு, அவர் தம்முடைய சீஷர்களை நோக்கி: ஒன்றும் சேதமாய்ப் போகாதபடிக்கு மீதியான துணிக்கைகளைச் சேர்த்து வையுங்கள் " என்றார். (யோவான் 6:12). இயேசு இந்த சந்தர்ப்பத்தை, சேமித்து வைக்க வேண்டியதை சேமித்து வைக்காமல் வீணாக்குவது பாவமென்று தன்னுடைய சீடர்கள் மனதில் பதியவைக்கப் பயன்படுத்தினார். தேவன் தம்முடைய பிள்ளைகள் சுறு சுறுப்புள்ளவர்களும், சிக்கனமானவர்களுமாக இருக்க விரும்புகிறார். கர்த்தருடைய சபையில் யாரெல்லாம் சிக்கனமுள்ளவர்களாக இருக்கிறார்களோ அவர்கள்தான் கர்த்தருடைய வேலையை 90% தாங்குகிறவர்களாக இருக்கிறார்களென்பதை நான் கவனித்திருக்கிறேன். நான் இங்கே சிக்கனமான ஒரு மனிதன் பற்றித் தான் பேசுகிறேனேயொழிய ஒரு கஞ்சன் பற்றியல்ல. " இதோ, உங்களிடத்திற்கு மூன்றாம் தரம் வர ஆயத்தமாயிருக்கிறேன்; நான் உங்களை வருத்தப்படுத்து வதில்லை; நான் உங்களுடையதல்ல, உங்களையே தேடுகிறேன். பெற்றாருக்குப் பிள்ளைகளல்ல. பிள்ளைகளுக்கு பெற்றார்களே பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டும். (II கொரி. 12:14) தன்னுடைய குடும்பத்திற்கும், எதிர் காலத்திற்கும் தேவையானவைகளைச் சேமிப்பது தவறல்ல.

3. உங்களால் முடிந்தளவு கொடுங்கள். " நான் வந்திருக்கும் போது பணம் சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல் நாள்தோறும், தன் தன் வரவுக்குத்தக்கதாக எதையாகிலும் தன்னிடத்தில் சேர்த்து வைக்கக்கடவன் ". (I கொரி. 16:2) தேவன் நமக்குக் கொடுத்ததற்குத் தக்கதாக நம்முடைய காணிக்கை இருக்க வேண்டும். சபையில் இருக்கும் எல்லா அங்கத்தினர்களும் இந்த போதனைக்கு உண்மையுள்ளவர்களாயிருந்தால், மிகக் குறுகிய காலத்தில் நாம் உலகம் முழுவதற்கும் நற்செய்தியை அறிவித்து விடமுடியும். உங்களுக்குக் கூலி உயர்வோ, சம்பள உயர்வோ எதற்காக வேண்டும்? சுயநலமான ஆடம்பரச் செலவுகளுக்கா அல்லது கர்த்தருடைய வேலைக்கு அதிகம் கொடுப்பதற்கா? உங்கள் தொழிலில் நல்ல வருமானம் பண்ண வேண்டுமென்று ஏன் விரும்புகிறீர்கள்? உங்களுக்காகவா அல்லது மற்றவர்களின் நன்மைக்காகவா?.

**III ஒரு நல்ல உக்கிராணக்காரன், தேவன்தான் எல்லாம் என்பதை அங்கீகரிக்கிறான்**

தேவன் வானத்தையும், பூமியையும் படைத்து அதிலுள்ள எல்லாவற்றுக்கும் சொந்தக்காரராயிருக்கிறபடியால், ஒரு நல்ல உக்கிராணக்காரன் தன்னிடத்தில் உள்ள எல்லாம் அவருடையது என்றும், தான் வெறும் உக்கிராணக்காரன் தான் என்றும் ஏற்றுக் கொள்கிறான். " நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது. அவரிடத்தில் யாதொரு மாறுதலும் வேற்றுமையின் நிழலுமில்லை ". (யாக். 1:17). ஆதிக்கிறிஸ்தவர்கள் " ....ஒருவனாகிலும் தனக்குள்ளவைகளில் ஒன்றையும் தன்னுடையதென்று சொல்லவில்லை ". (அப். 4:12). இவ்வுண்மையை அவர்கள் வெகுவாக உணர்ந்தனர். ஒட்டு மொத்த உலகமும் அதிலுள்ள யாவும் யாருடையது என்ற உண்மை வேதாகமத்தில் தெளி வாக சொல்லப்பட்டிருக்கிறது. " ஆதியிலே, தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ் டித்தார் " (ஆதி. 1:1). " பூமியும், அதின் நிறைவும் கர்த்தருடையது " (சங். 24:1). " வெள்ளியும் என்னுடையது, பொன்னும் என்னுடையது என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் ". (ஆகாய். 2:8) " சகல காட்டு ஜீவன்களும், பர்வதங்களில் ஆயிரமாய்த் திரிகிற மிருகங்களும் என்னுடையவைகள் " (சங். 50:10). " உங்கள் சரீரமானது நீங்கள்

தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலய மாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால், தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும், உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள். (I கொரி. 6:19,20) அவர் நம்மை அழைத்தபடியால் நாம் அவருக்குச் சொந்தமாயிருக்கிறோம் (ஏசாயா. 43:1). மக்கெதோனியாவிலே இருந்த கிறிஸ்தவர்கள் தாரளமாய் கொடுத்ததற்கான இரகசியம், முன்பு தங்களைத்தாமே கர்த்தருக்கு ஒப்புக் கொடுத்தார்கள் என்பது தான். (II கொரி. 8:5).

## IV ஒரு நல்ல உக்கிராணக்காரன் தன் கர்த்தரை கனப்படுத்துவான்

ஒரு நல்ல உக்கிராணக்காரன், தன் கர்த்தருக்கு சிறப்பான முறையில் ஆதாயம் செய்து தருகிறவனாக இருப்பான். ஒரு வாடகை வீட்டில் குடியிருப்பவன், தன் வீட்டுக்காரருக்கு முழு தொகையையும் சரியான தேதியில் கொடுக்கிறவனாயிருப்பான். குடியிருப்பவர், அந்த வீட்டுக்காரரை அதன் உரிமையாளர் என்று இதன் மூலம் ஏற்றுக் கொள்ளுகிறான். அதுபோல, “ ஒரு நல்ல உக்கிராணக்காரன் ” “ தன் பொருளாலும், தன் எல்லா விளைவின் முதற்பலனாலும் கர்த்தரை கனம் பண்ணுகிறான் ” (நீதி. 3:9). ஒரு நல்ல உக்கிராணக்காரன் கர்த்தருக்காக எவ்வளவு கொடுப்பான்? தன்னிடத்தில் உள்ள எல்லாம் கர்த்தருடையது என்றும், அவை எல்லாவற்றையும் அவன் எப்படி பயன்படுத்துகிறான் என்ற பொறுப்பு அவனுக்கிருக்கிறது என்பதையும் நினைவில் கொள்வான். யூதர்கள் தங்கள் தசம பாகத்தைக் கொடுக்க வேண்டுமென்று தேவன் எதிர்பார்த்தார். நாம் நியாயப்பிரமாணத்தின் கீழ் வாழவில்லை என்பது உண்மை தான். ஆனால், நாம் கிருபையின் கீழாக வாழ்கிறபடியால், அந்த, யூதர்களைக் காட்டிலும் அதிகமானவை நம்மிடத்தில் எதிர்பார்க்கப்படுகிறது.

தேவனுடைய ஜனங்களின் சரித்திரத்தை நாம் கவனித்தால், அவர்கள் எப்பொழுதெல்லாம் கர்த்தருக்கு கொடுப்பதில் சோடை போனார்களோ அப்பொழுதெல்லாம் சரீரப்பிரகாரமானவைகளிலும், ஆவிக்குரியவைகளிலும் பின்னடைவை சந்தித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளலாம். “ மனுஷன் தேவனை வஞ்சிக்கலாமா? எதிலே உம்மை வஞ்சித்தோம் என்கிறீர்கள்? தசம பாகத்திலும் காணிக்கைகளிலுந் தானே. நீங்கள் சபிக்கப்பட்டவர்கள்; ஜனத்தாராகிய நீங்கள் எல்லாரும் என்னை வஞ்சித்தீர்கள் ”. (மல். 3:8,9; நெகே. 13:10–12 வாசிக்கவும்).

அதே நேரத்தில், நாம் ஒன்றைக் கவனிக்க வேண்டும். ஆதிகாலத்திலிருந்து இந்நாள் வரையிலும், எப்பொழுதெல்லாம் மனிதன் கர்த்தருக்கென்று உற்சாகமாகக் கொடுத்திருக்கிறானோ அப்பொழுதெல்லாம், தேவன் அவர்களை ஆவியிலும், சரீரத்திலும் ஆசீர்வதித்திருக்கிறார். “ அவனை (மெல்கிசேதேக்கை) ஆசீர்வதித்து, வானத்தையும், பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனுடைய ஆசீர்வாதம் ஆபிரகாமுக்கு உண்டாவதாக ” என்றார். (ஆதி. 14:19). “ சாதோக்கின் சந்ததியானாகிய அசரியா என்னும் பிரதான ஆசாரியன் அவனை நோக்கி; இந்த காணிக்கையைக் கர்த்தருடைய ஆலயத்திற்கு கொண்டு வரத் தொடங்கினது முதல் நாங்கள் சாப்பிட்டுத் திருப்தியடைந்தோம். இன்னும் மிச்சமும் இருக்கிறது. கர்த்தர் தம்முடைய ஜனத்தை ஆசீர்வதித்ததினால் இந்தத் திரட்சியான அம்பாரம் மீந்திருக்கிறது ” என்றான். (II நாளா. 31:10).

ஒரு " நல்ல உக்கிராணக்காரன் ", காணிக்கை கொடுப்பதைப் பத்தில் ஒரு பங்கு என்று ஆரம்பித்து, கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்துக் கொண்டே போவான். கர்த்தர் அவனை வர்த்திக்கச் செய்திருப்பதற்குத் தக்கதாக கொடுக்கிறவனானபடியால் (I கொரி. 16:1–2), பத்தில் ஒரு பங்கு என்பதைக் காட்டிலும் மிக அதிகமாகவே கொடுப்பான். மக்கெதோனியா நாட்டு கிறிஸ்தவர்கள் போல, " தன் திராணிக்கு மேலாக " கொடுப்பான். (II கொரி. 8:3–5) கர்த்தருடைய பலி பீடத்திற்கு முன்பாகத் தன்னை சமூலமாக ஒப்புக் கொடுப்பான் (ரோமர். 12:1)

## V ஒரு நல்ல உக்கிராணக்காரன் சிறிய காரியங்களில் கூட உண்மையுள்ளவனாயிருப்பான்

" கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ளவனாயிருக்கிறான். கொஞ்சத்திலே அநீதியுள்ளவன் அநேகத்திலும் அநீதியுள்ளவனாயிருக்கிறான் " (லூக்கா. 16:10).

ஒரு நல்ல உக்கிராணக்காரன், தன்னுடைய ஆயிரங்களிலானவைகளுக்கு எப்படிப் பொறுப்பாளியாக இருக்கிறானோ, அது போல மிகவும் கொஞ்சமானவைகளுக்கும் பொறுப்பாளியாயிருக்கிறான் என்பதை உணர்ந்திருக்கிறான். நீ ஒரு இலட்சாதிபதியாய் இருந்திருந்தால் என்ன செய்வாய் என்பதல்ல கேள்வி. மாறாக, உன்னிடத்திலிருக்கும் 10 ரூபாயை வைத்துக் கொண்டு நீ என்ன செய்கிறாய் என்பதே கேள்வி. சில நேரங்களில், இப்படியாகச் சிலர் சொல்லுவதை நாம் கேட்க முடியும். நான் ஓர் இலட்சாதிபதியாக இருந்திருந்தால், கிறிஸ்தவத்தை வெகுவாகத் தாங்குவேன் அல்லது சபை கட்டிடங்களைக் கட்டுவேன் என்று. ஆனால், அப்படி சொல்லுகிறவர்கள், தங்களுடைய சம்பளத்திலிருந்தே ஒழுங்காகக் கொடுக்கமாட்டார்கள். இப்படிப்பட்டவர்களிடம், லட்சம் லட்சமாக இருந்தாலும், தாங்கள் சொல்லுகிறபடி செய்யமாட்டார்கள். கொஞ்சத்தில் அநீதியுள்ளவன் அநேகத்திலும் அநீதியுள்ளவனாயிருப்பான் என்று இயேசு சொல்லியுள்ளார். பணத்தைப் பற்றி இப்பொழுது உங்கள் மனநிலை எப்படி இருக்கிறதோ அதுபோல் தான் இன்றைக்கே உங்களுக்கு லட்சம் லட்சமாகக் கிடைத்தாலும் இருக்கும். உங்களுடைய பணத்தைப் பற்றியே தொடர்ந்து பேசிக் கொண்டிருப்பதற்கு பதிலாக, ஏன் உங்கள் பணம் உங்களுக்காக எப்பொழுதும் பேசும்படி செய்யக்கூடாது? பணம் தேவனுக்காகவோ அல்லது பிசாசுக்காகவோ பேசும்.

ஒரு மனிதன் தன்னிடமிருக்கும் பணத்தில் 99% கர்த்தருக்குக் கொடுத்தாலும், மீதமுள்ள அந்த ஒரு சதவிகிதத்தை எப்படிச் செலவழிக்கிறான் என்பதற்கு கர்த்தருக்குக் கணக்கு கொடுக்க வேண்டும். எல்லாம் கர்த்தருக்குச் சொந்தமானது, அவை எல்லாவற்றிற்கும் நாம் கர்த்தருக்குக் கணக்கு கொடுக்க வேண்டும். தேவன் என்னிடத்தில் என்னத்தை எதிர்பார்க்கிறாரோ அதைச் செய்திருக்கிறேனா என்பதில் நான் திட்டமுள்ளவனாயிருக்க வேண்டும். நாம் ஒவ்வொருவரும் " நல்ல உக்கிராணக்காரராக " இருப்பதற்கு முயற்சிக்க வேண்டும். அப்பொழுது தான் நியாயத்தீர்ப்பின் நாளில் எல்லோரும் கணக்கு கொடுக்கும் போது, " நல்லது, உண்மையும், உத்தமுமான ஊழியக்காரனே " என்று கர்த்தர் நம்மைப் பார்த்துக் கூறுவதைக் கேட்க முடியும்.

புதிய ஏற்பாட்டுக் கொடுத்தலை மீட்டமைக்க நீங்கள் உதவி செய்வீர்களா?.

**கேள்விகள்**

1. நமது பாடம் என்ன?
2. தங்க வாக்கியத்தை எழுது.
3. இப்பாடத்தின் நோக்கமென்ன?
4. உங்கள் சிந்தனைக்கானது என்ன?

**முன்னுரை**

1. ஓர் உக்கிராணக்காரனாக இருக்க வேண்டுமா அல்லது வேண்டாமா என்பதை தெரிந்தெடுக்கும் உரிமை ஒரு கிறிஸ்தவனுக்கு உண்டா?
2. அவன் எதை செய்ய தெரிந்தெடுக்க முடியும்?
3. I கொரிந்தியர் 4:7 ல் பவுல் என்ன கேட்டிருக்கிறார்?
4. இந்த உலகத்திலிருந்து நாம் எதைக்கொண்டு போக முடியும்?
5. நாம் எதை நினைவில் கொள்ள வேண்டும்?
6. “ ஹங்கர் போர்டு ” என்பவர் என்ன சொன்னார்?
7. ஓர் உக்கிராணக்காரனுக்கு தேவையானது என்ன?
8. நியாயத்தீர்ப்பு நாளில் நாம் என்ன செய்ய வேண்டும்?

**மோசமான உக்கிராணக்காரன் யார்?**

1. மோசமான உக்கிராணக்காரன் என்றால் என்ன?
2. செய்தித்தாளில் வெளியான செய்தி பற்றி விவரி?
3. அந்த பெண் பார்க்கத் தவறியது என்ன?
4. இவன் ஒரு நல்ல உக்கிராணக்காரனா?
5. ஐசுவரியவான் எவ்வகையான விளைச்சல் செய்தான்?
6. அவன் தனக்குத் தான் என்ன சொன்னான்?
7. தேவன் அவனை எப்படி அழைத்தார்?
8. தேவன் அவனுக்கு என்ன நடக்கும் என்றார்?
9. அவனிடம் தேவன் என்ன கேட்டார்?

**யார் நல்ல உக்கிராணக்காரன்?**

1. ஒரு நல்ல உக்கிராணக்காரனுக்கு இருக்கும் மூன்று வகையான வேலைகள் என்ன?
2. கிழக் கஞ்சனும், பிரசங்கியாரும் கதையை விளக்கு.
3. ஐந்து தாலந்து கொண்ட மனிதனை தேவன் ஏன் ஆசீர்வதித்தார்?
4. ஒரு தாலந்து உள்ள மனிதனை தேவன் ஏன் தண்டித்தார்?
5. எபேசியர் 4:28 ஐ விளக்கு.
6. II தெசலோனிக்கேயர் 3:10 ஐ விளக்கு.
7. ரோமர் 12:11 ஐ விளக்கு.

8. யோவான் 6:12ல் இயேசு என்ன போதிக்கிறார்?

9. II கொரிந்தியர் 12:14 ஐ விளக்கு.

10. நாம் எப்படிக் கொடுக்க வேண்டும்?

11. நாம் எப்படி வேலை செய்ய வேண்டும்?

### ஒரு நல்ல உக்கிராணக்காரன் தேவன் தான் எல்லாம் என்று அங்கீகரிக்கிறான்

1. உண்மையில் எல்லாவற்றிற்கும் சொந்தக்காரர் யார்?
2. பரத்திலிருந்து வருபவை எது?
3. ஆதி கிறிஸ்தவர்கள் எதை உணர்ந்திருந்தார்கள்?
4. அப்போஸ்தலர் 4:32 ஐ விளக்கு.
5. பூமிக்குச் சொந்தக்காரர் யார்?
6. சங்கீதம் 24:1 ஐ விவாதி.
7. ஆகாய் 2:8 ஐ விளக்கு.
8. பர்வதங்களில் ஆயிரமாயிரமாய்த் திரிகிற மிருகங்கள் யாருடையவைகள்?
9. ஏசாயா 43:1 ஐ விளக்கு.

### ஒரு நல்ல உக்கிராணக்காரன் கர்த்தரைக் கனப்படுத்துவான்

1. ஒரு வாடகை வீட்டில் குடியிருப்பவன் நல்லவனாக இருந்தால் என்ன செய்வான்?
2. நமது விளைச்சலின் எந்தப் பகுதியை கர்த்தருக்குக் கொடுக்க வேண்டும்?
3. எல்லாரும் எதை நினைவில் கொள்ள வேண்டும்?
4. நாம் எதை கவனிக்க வேண்டும்?
5. மல்கியா 3:8–9 ஐ வாசித்து விளக்கு.
6. நெகேமியா 13:10–12 ஐ வாசித்து விளக்கு.
7. ஆதியாகமம் 14:9 ஐ வாசித்து விளக்கு.
8. II நாளாகமம் 31:10 ஐ வாசித்து விளக்கு.
9. மக்கெதோனியக் கிறிஸ்தவர்களைப் பற்றிக் கூறு.
10. ரோமர் 12:1 க்கு என்ன பொருள்?

### ஒரு நல்ல உக்கிராணக்காரன் சிறிய காரியங்களில் கூட உண்மையுள்ளவனாயிரு. ரான்

1. லூக்கா 16:10 ல் இயேசு என்ன கூறுகிறார்?
2. ஒரு நல்ல உக்கிராணக்காரன் எதை உணர்கிறான்?
3. எனக்கு லட்சங்கள் இருந்தால் என்று சொல்பவன் எப்படிப்பட்டவன்?
4. நாம் கர்த்தருக்குக் கொடுத்த பின்பு மீதம் வைத்திருக்கும் பணத்தைக் குறித்து கூறு?
5. நியாயத்தீர்ப்பு நாளில் என்ன நடக்கும்?